# TAMIL DRAMAS

## VI

## CONTENTS


1. Kaṭōrgajaṉ karṇaṉ caṇḍai nāṭakam
2. Caundari Kalyāṇameṉṉum
   kūlikkuttāli kaṭṭiya nāṭakam
3. Caṅkuvati kaliyāṇa meṉṉum
   pōrmaṉṉaṉ caṇḍai nāṭakam
4. Vīrabaddiracuvāmi tirumaṇam meṉṉum
   paramaṉ-kāḷi caṇḍai nāṭakam
5. Pārvati iḍabāgam peṟṟa
   makiḍācūra cammāra nāṭakam

ஸ்ரீ தேவி சகாயம்.

துஸ்சாசனன் வதை என்னும்

# கடோர்கஜன் கர்ணன்

## சண்டை நாடகம்.



கடோர்கஜன் கர்ணன்

சொறத்தி கிராமம் நாடக ஆசிரியர்


**வை. வீரப்ப படையாக்ஷி**


விருப்பத்தின்படி.

*


வெளியிட்டவர்

V. K. M. அருணசல செட்டியார் சன்,

புஸ்தக வியாபாரம் & ஜெனரல் மர்ச்சண்ட்

திருப்பாதிரிப்புலியூர்.



காப்பிரைட் ரிஜிஸ்டர்]


[விலை [redacted]

உ

ஸ்ரீ கண்ணன் சகாயம்.

துச்சஷணன் வதை என்னும்

# : : கடோர்கஜன் கர்ணன் : :

## சண்டை நாடகம்.

இவை

புதுவை முத்தியாலுப்பேட்டை போஸ்டு
சோலைத்தாண்டவன்குப்பம நாடகஉபாத்தியாயர்
வி. மு. ஷண்முகம் செட்டியார் இயற்றியதை

பாகூர் கொம்யன் பண்ணித்திட்டு ஆலடிமேடு
நாடக ஆசிரியன்
வே. ஜெ. முனுசாமி நாயகர் அவர்களால்
திருத்தப்பட்டு

கூடலூர் தாலுக்கா திருத்திரையூர் போஸ்டு
கொறத்தி கிராமம் நாடக ஆசிரியர்
வை. வீரப்ப படையாச்சியாருல் அரங்கேற்றப்பட்டு

திருப்பாதிரிப்புலியூர்
V. K M. அருணாசல செட்டியார் சன்,
புத்தக வியாபாரம், & ஜெனரல் மர்ச்சண்ட்
வெளியிட்டது

திருப்பாதிரிப்புலியூர்.
ஸ்ரீ லக்ஷ்மி வாசன் பிரஸில்
அச்சிடப்பட்டது.

காப்பிரைட் ரிஜிஸ்டர்]

விலை [illegible]

உ

செல்வக்கணபதி துணை.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகல அச்சுக்கூடத் ததிபர்களுக்கும் மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துவது யாதெனில்:—புதுவை முத்தியாலுப் பேட்டை போஸ்டு சோலைத்தாண்டவன்குப்பம் நாடக உபாத்தியாயர் வீ. மு. ஷண்முக செட்டியார் அவர்களால் இயற்றிய துக்ஷ க்ஷணன் வதை என்னும் கடோர்கஜன் கர்ணன் சண்டை நாடகம் ஆகிய இப்புத்தகத்தை கொறத்தி கிராமம் வை. வீரப்ப படையாட்சி அவர்களிடம் சகல சுதந்திரமும் பெற்று அடியிற் கண்ட என்னால் அச்சிட்டு வெளிப்படுத்தி யுள்ளேன் இப்புத்தகத்தை மகாகனம் பொருந்திய கவர்மெண்டார் அவர்கள் சட்டப்படி காபிரைட் செய்திருக்கிறேன் ஆகையால் இப்புத்தகத்தை என்னுடைய உத்தரவின்றி யாரும் அச்சிடக்கூடாது என்பதை தெரியப்படுத்தி யிருக்கிறேன்.

இப்படிக்கு,

V. K. M. அருணாசல செட்டியார் சன்ஸ்

புத்தக வியாபாரம் & ஜெனரல் மர்ச்சண்ட் திருப்பாதிரிப்புலியூர்.

---

## நாடக நடிகர்கள்.

| நடிகர்கள்:— | நடிகைகள்:— |
| --- | --- |
| தருமர் | கமலக்கன்னி |
| கடோர்கஜன் | |
| துரியன் | திருவலை |
| சகுனி | |
| கர்ணன் | காஞ்சனமாலா |
| சல்லியன் | |
| பீமன் | |
| அர்ச்சுனன் | |
| கிருஷ்ணன் | |
| துக்ஷக்ஷணன் | |

---

அரங்கேற்றியவர்
வை. வீரப்பன் ஆசிரியர்,
கொறத்தி கிராமம்

இயற்றியவர்
வீ. மு. ஷண்முகம் செட்டியார்
சோலைத்தாண்டவன்குப்பம்.

துச்சாதனன் வதை என்னும்

# கடோர்கஜன் - கர்ணன்

## சண்டை நாடகம்.

---

விநாயகர் துதி

சித்திபுத்தி மணவாளன் சீர்ப்பதமே துதிப்புரிந்து
பத்தியுடனிக்கதை பகர்ந்திட்டேன் நாடகமாய்
சத்தியுமை சாம்பவியாள் ஷண்முகனுங் குருநாதன்
எத்தினமும் காத்திடவே எழிலுர நல்தாள் பணிந்தேன்.

தருமர் கவி

சயத்ரதன் படுபாவி சகுனிசல்யன்
சண்டாளக் கர்ணன் துர்ச்சாதனனுங்கூடி
புயத்தளர் விலாதெனது புத்ரனை
போக்கினர் பதிமூன்றாம் போரிலந்தோ
வியந்துமனம் எவ்விதமாய் தளர்வுற்றேனே
வினைப்பயனால் வில்லம்பை கைவிட்டானே
நயத்தமொழி வாக்குடைய தருமபூபன்
நாடிசபை தேடியிதோ வருகின்றேனே

தரு

தருமப்பூபதி இதோ வந்தேன்     இத்
தாரணி மெச்சிடும்     நாரணன் மைத்துனர் (தரு
தருமப்பூபதி இதோ வந்தேன்
பொறுமைக் குணமும்நல்ல     புகழும்பிரதாபமுள்ள
வருமமில்லாதமைச்சர்     வந்துநற் பதில்சொல்ல
சரு] வாகுவல்லயப்     கேடயந்தன்ன
சாகரம் புவிபுளோர்     தருமர்தா னென்ன
பாவித் துரியன்சேனை     பால வபிமன் தன்னை
ஆவிக் கவர்ந்தார்நேற்று     ஐவர்கள் மனங்குன்ற
சரு] அரசையாளுவா     னென்றிருந்தேனே
முரசுக் கொடியோன்மெய்     தளர்ந்து நொந்தனே
காண்டா வனமெரித்த     காளை விஜயபூபன்
நீண்டாத் திருமேனியாள்     திரௌபதைக் கென்சொல்வேன்
சரு] திக்கில்லைவேறு     இச் செகமதை ஆண்டிட
மக்களை இழந்துநான்     மனத்துயர் பூண்டிட

ஷை கவி

அய்யய்யோ என்னசெய்வேன் ஆதியே துளபமாலே
நய்யுதே எங்களுள்ளம் நான்முகன் சதியிதானே

வையகம் வேண்டேன்பொல்லா விரசதும் வேண்டேன்சக்ர
கையனை நினைந்துநாமும் கருத்தினை கூரலாமே

### தொ. தரு

அரிகரி மாதவா யாதவக் கேசவா
அடியேன் பாதவிக்க விதிவசமோ
சர்கை கிரிகையோக ஞானத் தயாபரனே
சஞ்சல மிகவாகி அஞ்சினேனே
உந்தன் மருமகன் அந்தணன் உலகுக்கு
எந்தவிதம் போனானோ தெரிகிலேனே
செந்தா மலரின்கண்ணா உந்தன்சூது மாயமே
சேவித்தேன் வந்துகாரும் இத்தினமே

### தொ. கவி

கிரிதனைக் குடைபிடித்த கிருஷ்ணனும் துணைஇருந்தும்
வரிசிலை விஜயன்மைந்தன் வாளபி மன்னன்மாண்டான்
தூரியனுக் காகத்தூது சொல்லிநாம் அனுப்பவேண்டும்
கரிகர்ப் புரம்படைத்த கடோர்கஜன் தனையழைப்பாய்

### வசனம்

கேளும் எவ்லாளிகளே கேற்றோடு பதிமூன்றும்நாள் யுத்தம் முடிவுபெற்றது அபிமன்னனும் இறந்துவிட்டான் அவனை கெடிஸ் தளாதிபதியாக வாழலாமென்று எண்ணி இருந்தேனே என் எண்ணங்களெல்லாம் மண்ணாய் போய்விட்டது எல்லாம் ஸ்ரீ கிருஷ்ணன் திருவிளையாடலோ நான் அறிகிலேனே சென்றது போகவும் இன்னும் இருக்கும்படியாகிய ஐந்துநாள் யுத்தத்தையும் நிறுத்தி நாடு கேழ்க்கலாமென்று எண்ணங்கொண்டேன் ஆதலால் வீமனுக்கும் மும்மூலக்கன்னிக்கும் புத்திரனாகிய கடோர்கஜனை சீக்கிரம் அழைத்துவாருங்கள் காவலர்களே.

### பொது வசனம்

இவ்விதமாக பதிமூன்றும்நாள் போர்முனையில் அபிமன்னன் மாண்டுவிட்டானென்று தருமர் துயரத்துடன் கடோர்கஜனை அழைக்க இப்பால் தூது போகவேண்டிய காரணத்தால் கடோர்கஜன் சபாநாடி வருவது

### கடோர்கஜன் கவி

கோடை இடி போல்புஜத்தை தட்டிக்கொட்டி
கொக்கரித்து குஞ்சரம்போ லார்பரித்து
கேடயமும் பிண்டிப்பாலா தனுவும்சூலம்
செதையுடனே வேல்வில்லா யுதங்கள்பூண்டு
வாடைமணம் வீசிடவேப் பணிகள்மின்ன
வைரக்கிய துணைவர்களும் அருகில்பன்ன
பேடைமகி வதனமொழிக் கமலக்கன்னி
பிள்ளைநான் கடோர்கஜனும் வருகின்றேனே.

தரு

அண்டர் யாவரும் கண்டோதுங்கிடவே கடோர்கஜபாலன்
ஆர்பரித்தனன் சபையில் தோன்றிடவே
அரவக் கொடியோனை அடக்கியாண்டிட
அஷ்டகிரியும் மலையுங் குலுங்கிட
சூறம்பெரும் சண்டை சென்றுக் கலங்கிட
சாரும் புஜப்பலக் கீர்த்தி இலங்கிட
பஞ்சப்பாண்டவர் நடுவோனென்தந்தை பலாயனென்றால்
அஞ்சமேஇவ் வுலகெலாம் விந்தை
கஞ்சனின் சிரமும் துணித்த
கங்கைநாதனை தினமும்பூஜித்தே
அஞ்சிடேன் ஜெயம் சமர்க்கெதிர்த்தே
அரக்கி மகனாய் உலகில் குதித்தே
சந்திரன் ஒளிஎன்றும் பேசிடவே சபையினிலுள்ளோர்
கந்தர்வனென்றுங் கூசிடவே
கடினமாகவே தந்தைப்பாதமே
கழலும் மலர் சாற்றினதமே
படியில் ஷண்முக தாசன்கீதமே
பாடி சபையினில் வந்தேன் ஓதுமே

ஷை கவி

அத்தியை உரித்தாய்போற்றி அரவணி நாதாப்போற்றி
சத்திக்கு வாமப்பாகம் தந்திட்டக் கர்த்தாப்போற்றி
பத்திசேர் அன்பர்க்கெல்லாம் பரகதி அளித்தாய்போற்றி
இத்தினம் சபையோர்ப்பாதம் இளைஞனும் போற்றினேனே

ஷை தரு

தந்தையவர் தானழைக்க சிந்தையும் மிகக்களிக்க
கந்தர்வன்போல் வந்துமேவினேன் கடோர்கஜதீரன்
சந்திரன்போல் தோன்றி மேவினேன்
மாயா வித்தைஜாலம் மந்திரத் தந்திரங் கற்றோன்
சாயலாய் நடைநடந்துமே வேடிக்கையாக
ஆயாள் குந்திமகிழத் தொடர்ந்துமே

ஷை தரு வேறு

தந்தையரே உந்தன் தாளிணைதன்னில் போற்றினேனே
கந்தமலர்வில்வம காயாம்புதாமரை சாற்றினேனே

தருமர் தரு

எந்தனின்பாதத்தை வந்துபணிந்திட்ட சுந்திரனே
சிந்தைகளித்துமே மைந்தனே வாழ்குவாய் தந்திரனே

கடோர்கஜன் தரு வேறு

எந்தனை அழைத்ததும் ஏதையா பெரிய
தந்தையே நீர்சொல்லுமையா

குந்தக மில்லாமல் கூறுவாய் இப்போது
இந்திராதி தேவர்கள் இணையில்லா தப்பாது

தருமர் தரு

ஆத்திரப் படவேண்டாம் நில்லுமே இன்று
அறிவிப்பேன் நீபதில் சொல்லுமே
காத்திருள் ளமன்னன் காலன்வதி பூண்டான்
கோத்திரம் கைவிட்டு கொடியவனால் மாண்டான்

கடோர்கஜன் கவி

அய்யய்யோ என்னசெய்வேன் தந்தையாரே
அடியற்ற மரம்போல அண்ணன்மாரை
வையரவன் மகன்விதித்த விதியோபாபம்
படைமன்னர் அருகிருந்து பார்திட்டீரோ
கையிலாகு கொடுத்தவனைக் காக்காவிட்டீர்
காளைவிஜயன் பலாயன் எங்குசென்றார்
நெய்யுருகும் பாவனைப்போல் நின்றிட்டீரோ
நிந்தனைக்கு ஐவர்களும் ஆளானீரே

தருமர் தரு

சித்தம் துடிக்காதே பத்துமூன்றுபோதும் எந்தன்பாலா
அத்தனின் சாட்சியாய் யுத்தம்வேண்டாமடா எந்தன்பாலா

கடோர்கஜன் தரு

விடைகொடு தந்தையே போரேன் என்னை
வெட்டி மடித்தாலும் பாரேன்
படைகுடை சேனைகள் பதினொராம் போரினில்
கடைபிண மாக்கியே காண்டிகள் செய்குறேன்

தருமர் தரு

படைமுகம் போர்செய்ய இடங்கொண்டு வந்தாயோ [எந்தன்பாலா
அடையும் பலன்களில்லை அடக்கியாளவே தூது. எந்தன்பாலா

கடோர்கஜன் தரு

இப்போது துரியனை நானே கட்டி
இழுத்து வருகுவேன் தானே
தப்பித தனங்கொண்டு தமையனைக் கொன்றவன்
அப்படி பாவியை அடியோடு மடிக்குறேனை

தருமர் தரு

பொருத்துக் கொள்ளடா எந்தனபுதல்வா இந்த
பூமியை அரசாளும் முதல்வா
சிருத்தை சென்னுக்கஞ்சி ஜீவனை விடுமோசொல்
பருத்த இரேகமுள்ளப் பாலனே ஒப்புக்கொள்ள

கடோர்கஜன் தரு

தப்புக் கொண்டால்மனம் ஆகுமா — தூரியன்
தாயாதி செய்பகைத் தீருமா
அப்பு மதியணிந்த அரன்போல வொற்றமைந்தன்
அஞ்சன வர்மனை அஸ்வத்தாமா கொன்றான்

தருமர் கவி

பஞ்சவர் கடுவோனு " பலராயனன் மைந்தாகேளாய்
வஞ்சகத் தூரியனென்றும் வாதுகள் புரியவேண்டாம்
அஞ்சலி செய்துபாதம் அன்புடன் வணக்கம்செய்து
வெஞ்சமர் வேண்டாமென்று வேகமாய் சொல்லிவாராய்

கடோர்கஜன் கவி

தந்தையரே இந்தவிதம் கூறலாமோ
தாரணியை அபகரிக்க எண்ணங்கொண்ட
அந்தகன் மகன்தூரிய னிடத்திற்கென்னை
அனுப்புகிறே னென்றுரைத்தீர் அழகதாமோ
சிந்துபதி மகன் அபிமன் தன்னைக்கொன்றான்
சீரோதுப் பாரோது செல்லும்மேது
எந்தனுக்கு விடையளித்தால் இப்போசென்று
எதிரிகளை வதைபுரிந்து வருகுவேனே

தருமர் தரு

மூத்தோர்சொல் மீறாது மூதுபறைக்கூறுது — எந்தன்பாலா
காத்து ரக்ஷிப்பாயென் கடமைசொல் தப்பாது — எந்தன்பாலா

கடோர்கஜன் தரு

உந்தனின் சொல்போல தந்தையே போய்வாறேன் — தூது தூது
இந்தநாள் தப்பாது எந்தனுக்கும் விடை — ஓதுஓது

தருமர் தரு

அரிவினில் மிகுதியான அறக்கிதன் கதனேகேளாய்
தூரியனைக் கண்டுநீயும் தூதநான் வந்தேனென்றும்
பிரியமாய் யுரைத்துஅங்கு பினமூஒன்றும் கேரிடாது
கரியமால் துணையிருப்பார் கடோர்கஜா தூதுபோய்வா

பொது வசனம்

இவ்விதமாக தூரியனிடத்தில் சண்டையை நிருத்தி சமாதானப்படுத்தி இனியாகிலும் காடு கொடுக்க துரியனிடம் கேட்டு வரும்படியாக தருமர் கடோர்கஜனை தூது அனுப்பவும் கடோர்கஜன் தூதுபோகவும் இப்பால் கமலக்கன்னி மைந்தனைக் காணும்படியாக வருவது காண்க.

கடோர்கஜன் தரு

விடைபெற்று நடந்தேனே — கடோர்கஜன்
விடைபெற்று நடந்தேனே

விடைபெற்று நடந்தேனே படைமன்னன் தன்னைக்காண
துடைதட்டி சிங்கம்போல் நடைஉக்ர கிரியென்ன.

கமலக்கன்னி கவி

அத்தனும் கைலைவாசன் அணங்கனை எரித்தயீசன்
பித்தனும் பிறையணிந்த பெம்மானைப் போற்றிசெய்து
மத்துமுக்குத்தி ரத்தினம் நாவடம் தொங்கலாட
உத்தமிக் கமலக்கன்னி உட்னின்று வருகின்றேனே.

தரு

அமல விமலமுக அபிநய நடைகொடி
கமலக் கன்னியிதோ வந்தேன் திருக்
கர்த்தனைப்பாடியே புத்ரனைத்தேடியே [கம
சிமவி கபாலிசூலி நிஷ்களப் பாதம்போற்றி
குமர குருபரக்கு கோடி வந்தனமேற்றி
அருள்] கொஞ்சிடுங் கிளிமொழி கோமளவல்லி
வஞ்சியர் மகிழ்ந்திடும் வடிவுடை சொல்லி
அன்னம்போன்ற நடையாள் அழகு பணிஉடையாள்
சின்னம் சிறந்த இடையாள் நல்ல
செங்கதிர் போலொளி மங்களகாரணி
சிறந்த இங்கிர்தக் கொடையாள்
கன்னல்வில் உபகாரி கமலக்கண்ணன் சோதரி
மன்னும் விமனின்பாரி மைந்தன் தன்னைகோரி
அருள்] மாயாராக்ஷஸி என்றுமே சொல்வார்
காயாம்பு வண்ணனென் கருத்ததை விள்வார்
சாலைசூழும் புதுவை சோலைத் தாண்டவன்குப்பம்
ஷண்முகத் தாசன் கீதமே இந்த
சபையினில் பாடியே சார்ந்தனன் காடியே (ஷ
மாலை இரவுபொல்லா மங்கை சொற்பனக்காண
பாலனுக்கு என்னமோ பத்தினி மனக்கோணேன்
அருள்] பாக்கிமார்களே ஏங்கலாகினேன்
சோங்கிடாமலே வாங்கள்போகலாம்

கமலக்கன்னி கொச்சகம்

கொஞ்சியே அருகிலிருக்கும் கோமளமேஎன் தாதிகளா
அஞ்சிமனம் வாடுதடி அருமையுள்ள என்மகனை தான்நினைந்து
நெஞ்சம் புண்ணாகுதடி நேரிழையாள் சொல்வதற்கு
கஞ்சன் தனைவதைத்த கார்முகிலவண்ணன் அருள் இதுவோ

கடோர்கஜன் தரு

மாதாவேயுந்தன் மலரடி போற்றினேன் எந்தன்தாயே
ஆதரவாகவே அழைத்தவிதமென்ன சொல்லுவாயே

கமலக்கன்னி தரு

போற்றி வளர்த்திட்ட புத்தியுள்ள எந்தன் பாலனே! பாலனே
காற்றினை யறிந்திட நான் ஆசி ரளித்திட்டேன் சீலனே சீலனே

கடோர்கஜன் கவி

அருமையாய் எந்தனையீன்ற அன்னையே சொல்லக்கேளாய்
தருமர் எனது தந்தை தனையனும் எனையழைத்து
பெரும்பாவி துரியனிடம் போர்தனை நிறுத்தியானும்
வரும்பாதி ராஜ்யத்தை வாங்கிப்பின் வருகுவேனே

கமலக்கன்னி தரு வேறு

அப்பனே போகாதே நில்லு பெற்ற
அன்னையர்க்குப் பதில்சொல்லு
ஒப்பிலா மதகரி உத்தமன் புதல்வனே
தப்பிதம் நேருமே தாய்சொற்கேள் முதல்வனே

கடோர்கஜன் தரு

தந்தைசொல் வார்த்தையை மீறனே துரியன்
தன்னிடமே தூது போறனே
கந்தமலர்த்தாயே கழலடிப் போற்றினேன்
எந்தனை மறிக்காதே எடுத்துரை சாற்றினேன்

கமலக்கன்னி தரு

சாற்றினை வெகுபுத்தி பாலா தந்தை
சொல்மீறா தென்றிடாய் சீலா
கூற்றுவன் போலொற்றக் கொடும்பாவி இடம்போனால்
ஆற்றொணா துன்பங்கள் அடைகுவாய் துரியனால்

கடோர்கஜன் தரு

துரியனால் எனைக்கொல்ல முடியுமா தோன்றும்
மதிகதிர் பூமியில படியுமா
சிறியவ னென்றென்னை இக்கதையி லெண்ணாதே
கரிபொருத்த புயம்பெற்ற கடோர்கஜன் குண்ணாதே

கமலக்கன்னி கவி

வஞ்சகத் துரியன்பாவி வாளபி மன்னன்தன்னை
அஞ்சிடாக் கொன்றுவிட்டான் அவனிடம் நீயும்தூது
நெஞ்சினில் போகவேண்டாம் கேட்டும் அதனால்நேரும்
பஞ்சப் பாண்டவருக்குப் பரிகாச மாகுந்தானே

கடோர்கஜன் தரு

பரிகாச முள்ளஐவர் வெரிப்பிடித் தலைந்தாலம்மா
பாறேன் தூது போறேன்
தருமருரைத்தமொழித் தன்னைமீறி யெங்கிலும்
சேரேன் தாயே போறேன்

கமலக்கன்னி தரு

கோரேறமென்று உரைத்த வீரக் கடோர்கஜனே
வாரும் என்னைக் காரும்
சீராய் தாய்சொல்லும் வார்த்தை நேராய்நீ ஒப்புக்கொண்டு
கூறும் பதி சேரும்

கடோர்கஜன் கந்தார்த்தம்

எந்தனை அருமையாக எழில்பெற விடுத்தத்தாயே
மைந்தனைப் பற்றிநீயும் மனத்துய ரடையவேண்டாம்
சிந்தையும் தளர்ந்திடாமல் சிறப்புடன் அனுப்பீராகில்
தந்தையார் சொன்னசொல்லை

தரு

தாக்கீது செய்வேன் சமர்புரிந்த
யோக்கிய முய்வேன்
பாக்கிய வதிநீயே பத்தும் சுமந்தாயே
போக்கிரி அவனென்று புத்திக ளுரைத்தாயே
அருள்] போதும்போதும் நீ ஓதும்வேதமே
காதகப்பழி சூதகந்தானே

கமலக்கன்னி கந்தார்த்தம்

தந்தைசொற் கடவாப்பாலா தாயாதி துரியன்பக்கல்
சந்தோஷங் காட்டிநாட்டை சமர்வேண்டா மென்றுசொல்லி
சிந்தையால வெற்றிபெற்று சிறப்புடன் வருகவேண்டும்
முந்தியே தருமர்வாழ்த்த

தரு

முன்னமே பாலா ஆசீர்வாதம்
மொழிந்தனே, சிலா
கன்னிக் கமலக்கன்னி அன்னை மகிழும்படி
பிணைம் ஒன்றில்லால் என்னைவந் தடைகுவாய்
அருள்] பிரியமாகவே துரியன மாளிகை
தெரியாய்சென்றுமே வருவாயபாலனே

கடோர்கஜன் தரு

தாயாருடன் விடைபெற்று தாண்டியே நடைநடந்து
மாயவதாரனைப் போற்றியே கடோர்கஜ தீரன்
சேயர்கள் குறையை ஆற்றியே
தூதுசென்று துரியனிடம் வாதில்லாஎன் நாட்டைகேழ்க்க
துரிதமுடனே செல்லுவேன் தந்தையார் சொல்போல்
மரியாதையுடனே வெல்லுவேன்

போது வசனம்

இவ்விதமாக கடோர்கஜன் தாயார் கமலக்கன்னியிடம் விடைபெற்றுக்கொண்டு தூதர்க துரியனமாளிகை நாடிவரவும் இப்பால் ராக்ஷசனாகிய துரியன் சபாநாடி வருவது காண்க.

துரியன் கவி

அத்தினா புரத்துவேந்தன் அகமகிழ் மிகவேக்கொண்டு
எத்திசை மதிக்கும்ரத்தின எழில்பெரும் உடைகள்பூண்டு
தத்திமித் திமித்தோமென்ன தக்ததிக் கிடத்தாமென்று
துத்தி மத்தளமுமோங்க துரியனும் வருகின்றேனே

தரு

துர்ச்சாதனன் சகுனி — துரோணர் கிருபர்சூழ
துரியன் கொலுவதாகினேன் — வெகுபுஜ பலஜவுரிய
துரியன் கொலுவதாகினேன்
அர்ச்சனை செய்யும்மாந்தர் — ஆலாத்தி யேந்திடவே
கர்ச்சனைப் புரிகோஷடி — காலாட்படை சூழ்ந்திடவே
சுருள்] கதாகதரகேற்று — சிதர அபிமன்னனை
பதரப் பாண்டவர்மனம் உதரும்படியே செய்தேன்
பஞ்சப் பசங்கள்பேச்சி பதிமூன்றோ டற்றுப்போச்சி
கெஞ்சம் உருதியாச்சி — நிகரில்லை அவர்சிச்சி
சுருள்] கெடியஉலகெலாம் — புடைகள்சூழவே
படைமன்னரெந்தன் — பக்கத்தில்தாழவே
அக்கரையாகவே — அனைவரும் கூடியே
சக்ரயூகம வகிப்போம் — சமர்க்களம் காடியே
சுருள்] சாரியாய் படைரதம் — சேனைகள் சாடவே
பாரிலரசர்கள் — பயந்துமுன் னோடவே

கவி

எந்தனின் அருகிருக்கும் எழில்பெரும் தம்பிமாரே
அந்தர ஜாதிஜவர் அவனியை ஆளஎண்ணி
சிந்தையில் அன்புகொண்டு சிறந்தம்போர் பதினொரும்
முந்தியே சகுனிமாமன் முன்னமே அழைத்துவாரும்

பொது வசனம்

இவ்விதமாக துரியனைக் காணும்படி சகுனிமாமன் சபாநாடி வருவது காண்கவும்.

சகுனி கவி

பதிமூன்று வருடமாக பஞ்சப்பாண் டவர்தன்னை
எதிரில்லா வனத்திலோட்டி எங்கிடச் செய்தத்தீரன்
அதிபதி துரியராஜன் அழைத்தகல் சேதிகேட்டு
சதிர்வித வாத்யமோங்க சகுனியும் வருகின்றேனே

தரு

சாது சர்ச்சனர்புகழ் — ஓதும் வித்தையில்தேர்ந்த
சகுனிமாமனிதோ வந்தேன் — நல்ல
சண்டப்ரசண்ட — உத்தண்டக் கெம்பீரன் (ச
சூதப் பகடையாடு — துரியர்க் களித்தேன்வெற்றி
துர்ச்சாதனனைக் கொண்டு — துகிலை யுரித்தேன்பற்றி

கருள்] துக்கிவேபெரும் வெக்கமாகினர்
சிக்கியேவனக் தன்னிலேகினர்
பச்சை வைடூரியத்தால் பதித்த மணியும்கொஞ்ச
பகலவன் ஒளிவோ என்னவோ நல்ல
பலகலை வேத சாஸ்திர முணரும்
பார்ப்பனர் மறைப் பன்னவே
அச்ச மில்லாதக்காலரின் அறுதினம் திதித்திட
கச்சரவக் கொடியோன் காடியே அழித்திட
கருள்] காதிலே தசங் கீதமாதர்கள்
ஓதும்நாட்டிய தோதுக் கிசைந்தவர்
அஞ்சா நெஞ்சம்படைத்த அபிமன்னன் நேற்றுப்போரில்
அந்தகன் உலகேரினன் வெற்றி
அதிரதர் மகிரதர் பகிர்தர் புகழ்ந்திட (அ
பஞ்சப்பாண்டவர் ஐவர் சஞ்சலங் கொண்டிருக்க
நெஞ்சம் புகழ்த்துரியன் கொஞ்சிக் குலாவிருக்க
கருள்] கேசமாமலர் வாசகம் சூடியே
தாசன் ஷண்முகன தமிழ்மாலைப் பாடியே

விருத்தம் கவி

வாடியே துரியப்பூபன் வருந்தியே இருக்கக்கண்டேன்
கூடியே அவன்பால்சென்று குலமதை அழிக்கஎண்ணி
நாடியே குடிக்கெடுத்தேன் நான்செய்த சபதம்போல
தேடியே இன்றுநாளில் தேருதல் சொல்வேன்நானே

துரியன் தரு

எந்தன் குலக்கொழுந்தே மாமா இன்று
ஏற்றியே மலர்தாள் போற்றியே பணிந்தேன் (எ
இந்தக் குலததோன வஞ்சம் இனியும் விட்டப்பாடில்லை
கருள்] இருந்திடும் ஐவர்தவண் மறந்திட சூட்சி
பொருந்தும் படிசெய்தோம் புலன்பெற ஆட்சி

சகுனி தரு

வணங்க முறையுடைய மன்னா நீர்
வாடிட வேண்டாம் கூடியன்பாக
வாழ்ந்திடுவாய் எந்நாளும் கண்ணா
கணக்கம் கொள்ளுதல்கூடா கனிர்தக் கெம்பீரத்திரா
கருள்] கருதியின் விதிப்படி கருதியே சமர்யுகம்
பருதிசூழ் புவிதனில் துரியனே உன்மயம்

துரியன் தரு வேறு

மாமனே உன்னிரு மலர்ப்பாதம் போற்றினேன்
காமனைவரும் ஒன்றாய்கூடுவோம் இந்த
காடோடி ஐவர்களைத் தேடுவோம்

சகுனி தரு

மருகனென் துரியனே மதிகுலத் தநியனே
மக்களுடன்வாழி சந்திரனே என்றும்
பங்கம்வந் தணுகாதே தந்திரனே

துரியன் தரு

தந்திரச் சூழ்ச்சியால் தனஞ்செயன் மைந்தனை
சயிந்தவன் கொன்றதினால் வெற்றியாமே முன்னம்
பயந்து இளைப்புற்றோம் நாம் மூற்றுந்தாமே

சகுனி தரு

இதுமட்டும் சாகாமல் இருப்பானே யாமாகில்
எமனை அழைத்துவந்து தாக்குவானே நம்மை
எல்லோரையும் திரட்டிப் போக்குவானே

துரியன் கவி

கொஞ்சமும் பயமில்லாமல் கூற்றுவன் போலவந்து
வெஞ்சமர் புரிந்தான்வீர வேஷத்து வேஷங்கொண்டு
அஞ்சிநா மிருந்தோமானால் அலகடம் புரிந்தின்றைக்கு
பஞ்ச பாண்டவருக்கும் பாரெல்லாம் சொந்தந்தானே

சகுனி கவி

மருகனே சொல்லக்கேளாய் மயங்கியே இருக்கொணாது
தருமனைப் பிடித்துக்கட்டி தாக்கினால் எல்லாம்மாள்வார்
அருமையே அரசுவாய்க்கும் அவனி அம்பத்தோர்தேச
பெருமைசேர் மன்னர்போற்ற பெரும்பாலும் வாழ்வாய்நீயே

துரியன் தரு

நல்ல யோசனை செய்தீர் மாமா இந்த
நாடெல்லாம் மாண்டிடப்பூமா
சல்லியன் தருமர்க்கு சமப்பலம் படைத்தவர்
அல்லலில்லாமலே அழைத்துநா மேகுவோம்

பொது வசனம்

இவ்விதமாக துரியனும் சகுனியும் பதிமூன்றும்நாள் நடந்தேறிய சமர் விஷயத்தைப் பற்றியே பேசிக்கொண்டும் இன்று பதினாலாம்நாள் நடந்தேரவேண்டியது எப்படி முடியுமோ வென்று ஆலோசித்துக்கொண்டிருக்கும் சமையம் தருமரால் தூது அனுப்பப்பட்ட கடோர்கஜன் துரியனிடம் வருவது காண்கவும்.

கடோர்கஜன் தரு

பாழும் பணத்தாசையால் வாழும்வாழ்க்கையும் பாழாய்
பாரதப்போர் நாள்குறித்துமே இன்றோடெல்ல
பதினாலாம் போர்புரிந்துமே

நடக்கும் சண்டையை நானே மடக்கி நிருத்தி எங்கள்
நாடதையேக் கேழ்க்கவந்தேனே துரியனிடம்
தாட்டிகமாய்து தூம் வந்தேனே

வசனம்

வாயர்ப்படி காவலாளிகளே நீங்கள் உன் அரசனிடம்
சார்ந்த தருமநந்தர் கட்டளைப்படி கடோர்கஜபாலன் காடு
கேழ்க்கும்படி தூது வந்திருக்கின்றூர் தங்களைக் காண வேண்டு
மாம் என்று சொல்லிவாருங்கள் காவலரே,

கடோர்கஜன் தரு

அரவக் கொடிபடைத்த அய்யாஉன் பாதமலர்
அச்சம் பயத்துடனே இச்சிறுவன் பணிந்தேன்
மருவும் மந்தாறை மல்லி முல்லைமலர்கள் கொண்டு
மாபுகழ்வாய்ந்த திருத்தாளுக்கே செய்தேன் தொண்டு

துரியன் தரு ஆறுமுக வடிவேலவ எ. மெ.

ஏது காரணமாகநீ தூது வருகலானாய்
இன்னதென் றெந்தனுக்கு கூறுமே ஜல்தி
குணனிடாமல் சொல்லி மனந்தேருமே
சருள்] இடும்பிவைமந்தனே என்னநினைந்தனே
தடங்கள் விட்டுமே தாண்டி வந்தனே
எதிரியல்லவோ எங்களுக்குப் பாலனே இங்கு
பதறிவந்த விதமேது சீலனே

கடோர்கஜன் தரு

அரசர் புகழும்கோவே மூரக் கொடியோனென்னை
அனுப்பினூருன்னிடத்தில் தூதுமே வந்தேன்
அதற்குதகக விடைகள்ஓதுமே
சருள்] அஞ்சலிசெய்தேன் பஞ்சப்பாண்டவர்
வெஞ்சமர்வேண்டா மென்றுகெஞ்சினர்
ஆதரிப்பாய் எந்தன்சொல்லை நீருமே மன
வாதனைஇல்லா நன்மொழு கூருமே

துரியன் தரு

தொண்டு புரிவோனென்ற மண்டு பலாயன் மைந்தா
தூது என்னிடம் வரலாகுமா தருமன்
சொல்லுக்குநான் அஞ்சப்போகுமா
சருள்] தோற்றவிட்டனர் தேற்றுகாலையில்
காற்றின்பேரனே வந்தாய்க்காலையில்
துஷ்டனிட கிஷ்டன்செய்யும் சூதுதான் இப்போ
கஷ்டம் வந்தப்போது இஷ்டமேதுதான்

கடோர்கஜன தரு

இஷ்டம்வைத்து பாதிநாட்டை இன்றுநீ தருவாயாகில்
இனிமேலிங்குக் கலகமில்லையே ஐயோ

இறந்தார் அனேகம்பேர்கள் தொல்லையே
சுருள்] ஏதுக்கிஷ்டமோ சூதுக்காரனென்
றேதுமிம்மொழி நீதியாகுமா
இரக்கமென்பது உனக்குவல்லையே சிறுவன்
எடுத்துக்கூறியும் புத்தியில்லையே

சூரியன் கந்தார்த்தம்

ஐவர்கள் நாட்டைக்கோரி அனுப்பிய தூதாகேற்று
பையனும் மாண்டதாலே பதைத்ததோ யாரும்கெஞ்ச
வையகம் தனைப்படைத்த வரனுக்கும் வாக்களிக்கேன்
தையுதே எந்தனுள்ளம்

தரு

நாடுக் கொடுப்பதேதடா கீழே உதிர்ந்த
ஓடுக் கொடுப்பதேதடா
காடுக் கொடுப்பதேது நாசக்காலர்க்கு ஐந்து
வீடுக் கொடுக்கப்போமோ விளம்புவாய் பேய்மகனே

கடோர்கஜன் கந்தார்த்தம்

பேய்பெற்ற மைந்தனென்று பெரும்பாலோர் சபையில்சொல்லா
வாயமதங் கொண்டவஞ்ச வாசலில் காவல்காக்கும்
நாய்மகன் நீதான்கெட்ட கஞ்சனை நெஞ்சில்வைத்து
தாய்க்கிட்ட அழுதில்போடும

தரு

தகபோஜி நீயல்லவோ முன்னம்நீர் செய்த
தாத்பரியத்தை சொல்லவோ
அகம்பாவ மிகக்கோண்டு அறக்கி மகனென்றுயே
பகலவன் தனைநிகர் பாலகனை கொந்தாயே
சுருள்] பஞ்சப்பாதகம் மஞ்சிக்கும்மெத்த
அஞ்சிடாமலே மிஞ்சிப்பேசுராய்

சூரியன் தரு வேறு

ஏகுவாய் மூடா ஏசகம் கேட்ட
இங்கு நிற்காதேபோடா
ஆகாயம் பூமிக்கீழ் ஆனாலும் போனாலும்
அரக்கி மகனேவுன சாக்கினை வெளியாகும்

கடோர்கஜன் தரு வேறு

அரக்கரா யிருந்தாலும் அணவிடை மாட்டோமே
அஞ்சாப் பகடையாடி ஆரண்யம் ஓட்டோமே
பங்காளிக்கே துரோகம் நினைந்திட மாட்டோமே
பகடைகளாடிமண் பரித்திட மாட்டோமே
சங்கை இலான்பக்கல் சார்ந்திட மாட்டோமே
சமுசாரிகளைப் பங்கம் செய்திட மாட்டோமே

குளத்தில் வசிகாட்டி குதிக்கசெய்ய மாட்டோமே
கொடுங்கானக மடைவித்துகொல்ல வெண்ண மாட்டோமே
வலிய சமர்விலக்கும் வாங்கிட மாட்டோமே
வந்தாலும் வீண்வம்பு விட்டிட மாட்டோமே
அரக்கு மாளிகைக்கட்டி அனலிட மாட்டோமே
பொருமை தருமர்மைந்தர் பொய்சொல்ல மாட்டோமே
பொய்சொல்லி மோசங்கள் புவியில்செய்ய மாட்டோமே
புத்தி இல்லாமல்பந்து ஜனங்கள்கொல்ல மாட்டோமே
பூமிப் பொருள்பறிக்க புவியிலாசை விட்டோமே

துரியன் கந்தார்த்தம்

பார்த்தாயா சகுனிமாமா பலஜாதிக் கோத்திரத்தை
கோத்தியாய் சொல்லவந்தான் நிதிபதி இல்லாப்பேயன்
வார்த்தைகள் பலவும்சொன்ன வண்டனை வதைக்கவேண்டி
ஈர்த்தினம் சமர்நடத்த

தரு

இயம்புவாய் மாமா இடும்பிமகன்
எதிரித்தான் பூமா
பயங்காட்டி ஐவர்க்கு பாகம்கேழ்க்க வந்தான்
ஜெயம் பெற்றவன்போல சேதனைத்தால் நொந்தேன்

சகுனி கவி

பக்ஷணம் செய்வானந்தப் பலாயணன் மைந்தன்கூறும்
லக்ஷணம் தன்னைப் பார்த்து சும்மா இருக்கலாமோ
இக்ஷணம் யெமாறு தன் இளையவன் மைந்தன்வுக்கிர
தக்ஷணன் தன்னைக்கொண்டு தண்டிக்க செய்யுவீரே

கடோர்கஜன் கவி

தூதுக்காய் வந்தஎன்னை துரிதத்தில் கொல்லஎண்ணி
தீதுகள் நினைத்தாய்சத்ரு தீனகினை அரிந்தேனிப்போ
பாதுகாத்திடுவீர் என்றே பாகங்கள் கேட்கவந்தேன்
வாதுகள் நினைத்தாய்பாவி வறட்டுமொன் ஒருகைபார்ப்பேன்.

வசனம்.

கேளும் பெரியதந்தையே நான் தூதாகவந்த இடத்தில் சமர் செய்யக் கூடாது சாஸ்திரீக முறைபபடி இவ்வளவு நேரம் கால தாமதம் செய்திருந்தேன் நீங்கள் குறித்த பதினெட்டுநாள் யுத்தத்தையும் ஒரே முகூர்த்த நாழிகையில் முடித்து தருமருக்கு பட்டமளிக்கும் திறமையும் வல்லமையும் வீரமும் எனக்கிருக்கின்றது இப்போதே நினைத்தாலும் மிகுதி இருக்கும் நாலுநாள் யுத்தங்களையும் இக்கணமே முடிக்க ஆண்டவன் அரி அருள்புரிவார் சத்தியம் பிசகேன் நான் வந்தது தூது அதனாலேதான் இவ்வளவு தாழ்ந்த முறையுடன் இருக்கிறேன் தந்தையே கொஞ்சம் யோசித்துப் பாருங்கள் நான் வருகிறேன் தந்தையே.

பொது வசனம்

இவ்விதமாக சூரியனிடத்தில் கடோர்கஜன் நாடு கேட்டு கொடுக்க முடியாது என்று சூரியனுரைக்கவும் சகுனியின் சூட்சியால் கடோர்கஜனை கொல்லவேண்டி துர்ச்சாதனன் புதல்வனாகிய துக்ஷ்க்ஷணனை அழைக்கவும் இப்பால் துக்ஷணன் சபை நாடி வருவது காண்கவும்.

துக்ஷ்க்ஷணன் கவி

மண்டலங் கிடுகிடென்ன மாபெரும் புவியிலுள்ளோர்
அண்டர்கள் அமரர்மற்ற அரசர்கள் நடுங்கிவாட
தண்டம்வேல் கெதைவாள்சூலம் தரித்திடும் க்ஷத்திரியன்தன்னை
துண்டமே செய்ய இன்று துக்ஷ்க்ஷணன் வருகின்றேனே

தரு

வந்தேனே துக்ஷ்க்ஷணன் பாரீர் உக்ர
வாளாயுதம்வில் வேலாயுதம் பிடித்து
செந்தணல் பொறியது பறக்க பொன்னு
தேவேந்திரன் வந்துமே பிச்சைஎன் றிரக்க
செந்திரு வணையீன்றப் பாலன் இந்த
செகமெலாம் புகழ்பெற்ற யுகச்சக்ர காலன்
அந்திரத் தோர்கண்டுப் போற்ற கெடி
அஸ்தினு புரமாளும் தந்தையுறை சாற்ற
எதிரிகள் எந்தனைக்கண்டு வாட இளையோன்
துர்ச்சாதனன் மைந்த னென்றுமே ஓட
பதிஎலாம் ஆண்டிட ஐவர் இன்று
படைகூட்டி வந்தாலும் வதைசெய்வேன் ஓட

ஜோடி தரு (அள்ளி அள்ளி நீர்குடிக்கும் எ. மெ.)

தந்தையரே உனது செந்தா மரைப்பாதம்
மைந்தன் பணிந்தேனே நிதம் மகிழ் இதம்
மைந்தன் பணிந்தேனே நிதம்

சுருள்] மல்லிகை முல்லைநல் வில்வம் ரோஜாகொண்டு
அலரி வெண்தாமரை எல்லாம் மலர்த்தொண்டு
அர்ச்சனை செய்துப்போற்றினேன் தூப மேற்றினேன்
அர்ச்சனை செய்துப் போற்றினேன்

சூரியன் தரு

அர்ச்சித் தெனைமகிழ்ந்தாய் துர்ச்சாதனன் குழந்தாய்
அன்புடன் வாழிவாழியே நீடூழியே
அன்புடன் வாழிவாழியே

சுருள்] ஆதரிப்பாரிலாப் பாதகனானேன்
மாதவத்தால்வந்த மைந்தாஎன் செய்வேனே
அஸ்தினுப்புரி நாசமே வரும் மோசமே
அஸ்தினுப்புரி நாசமே

துக்ஷக்ஷணன் தரு வேறு

மோசம் நம்மை எண்ணிபரி காசமான வார்த்தைசொன்ன
தாரு பதில் கூறு
நாசக்காலர் தங்களைக் துவேஷமாக்கி நான்வருவேன்
பாரு மனங் தேரு

துரியன் தரு

தேருமென் றுரைத்தவீர தீரத்துர்ச் சாதனன்மைந்தா
இன்றே சொல்வேன் சென்றே
ஆருமெதி ரில்லைஎன்ற அறக்கன் கடோர்க்கஜனை
கொன்றே வாரும் வென்றே

துக்ஷக்ஷணன தரு வேறு

அறக்கி மகனவனெங்கே அ அ அ
அவன் ஆடின ஆட்டத்தை இங்கே இ இ இ
பாக்கும்பஞ் சாக்குறேன் படைகுடை சேனையை
இறக்கும் படிசெய்வேன எதிரில்லா யானையை

துரியன் கவி

மாமகனே சொல்லக்கேளாய் மகன்தனை இன்றுபோரில்
நாமனை வோருங்கூடி நலமுடன் அனுப்பவேண்டி
வீமனின் மைந்தன தன்னை விருடியில் கொல்வதாக
சோமன் பஞ்சாக்ஷரத்தை சொல்லியே அனுப்புவீரே

சகுனி கவி

வில்லதி காரம்பெற்றாய் வீராதி வீரமுள்ளோன்
கல்வியில் சிறந்தோனை கண்மணி துக்ஷக்ஷணனே இன்று
வல்லவன் கடோர்கஜனும் வலுவுள்ளோ ணிடதில்நின்று
எல்லையில் ஜெயம்பெற்றேங்க ஏகுவாய் ஏகுவாயே

துக்ஷக்ஷணன் தரு

வாணி அயனமால்தேவர் வரன்மகன் எதிர்த்தாலும்
நாணிடாமல் ரதமேறியே இடும்பிமகன்
நாசம் அடையக்கோரியே
கொச்ச மச்சவிதேச குடகு வங்காளராஜர்
பச்சைப் புரவியேறியே பலாயன்மைந்தன
பாதகன் தன்னைச்சீறியே

கடோர்கஜன் தரு வேறு

தூதுக்கு வந்தவனை காதகம் தான்புரிய
துக்ஷக்ஷணன் தன்னை யேவினன் துரியோதனன்
இக்ஷக்ஷணம் கர்வமாகினன்

துக்ஷக்ஷணன் தரு

கொறிறிடுவேன் இன்றிரவில் நன்றிகெட்ட நாடோடியை
நானே மகிழ் வேனே

சென்றிட விடையளிப்பாய் குன்றிடா ஜெயமேபெற்று
வாரேன் இன்று போரேன்

சூரியன் கவி

அரிவினில் மிகுகியான அமைச்சரே சொல்லக்கேளாய்
கரிபரி காலாள்சேனை கர்ணனும் சகுனிசல்யன்
வரிக்கணை வேல்வில்பாலா வச்சிரா யுதங்கள்பூண்டு
அரக்கியின் மகனைக்கொன்று அன்புடன் வருகுவீரே

துச்சாதனன் தரு

அண்டரெண்டம் தத்தந்தளிக்க அமரரெல்லாங் களிக்க
சண்டப்ற சண்டனெனவே துச்சாதனப்பாலன்
சமர்க்களத்தை நாடிவந்தேனே
கண்டமன்னர் கொண்டாடவே தண்டம்வேல் சூலங்கையேந்தி
கடோர்கஜனைக் கண்டுவெல்வேனே இன்றுபோரினில்
கடுஞ்சமர் புரிந்துக்கொல்வேனே

கடோர்கஜன் விருத்தம்

மோசமுற்றும் நினைத்திட்டான் வஞ்சநெஞ்ச
முராணுக என்னிடத்தில் பலவுங்கூறி
பேசவந்தாய் அழகல்ல பேயனாயே
பீமன் மைந்தன் உந்தனிட சேனைஎல்லாம்
பாசத்தால் கட்டிடவே எமன்வாரான்
பதுங்காதே ஒதுங்காதே வெளியில்வாடா
தாசராஜன் பாணமதை பிரயோகிக்க

தரு

தனுவதை எடுத்தேன் சாமாரியாய்
கணைகளைத் தொடுத்தேன்
பனுநீதி கெதிஇல்லா மற்கடமே உந்தன்
அனுதாப தந்திரம் அறிவேன் அறிவேனடா
ஆடாதே உள்ளே ஓடாதே சும்மா
பாடாதே துணை நாடாதே

துச்சாதனன் தரு

ரத்தசத்து இல்லாத ரணரங்க சூரனே நில்லடா உன்
சித்தங் கலங்கிட செயிக்கிறேன் நீயொரு புல்லடா
தேவாஸ்திர மெடுத்தன் பாரடா
தேரின்மீதே விடுத்தேன் சேரடா
சிக்காதே மனங் கக்காதே
திக்காதே உயிர் வைக்காதே

கடோர்கஜன் தரு

வைக்கிறேன் வில்லினில் வடிகணை பூட்டியே வெல்லுவேன்
திக்கெலாம் இகழ்ந்திடும் துரியோதனன் மைந்தா கொல்லுவேன்

திக்கிறை யாக்கிட விடுத்தேனே
பேய்க்கழு காய்தின்ன கொடுத்தேனே
பேசாதே மனங் கூசாதா
விசாதே சும்மா ஏசாதா

துக்ஷசுஷணன் தரு

ஏசகங் கேட்டுனீ மோசம் நினைத்ததும் ஞாயமோ எந்த
ஆசானிடம் வித்தை கூசாமல் கற்றுவந்தாய் உபாயமோ
அரக்கி மகனே எதிர்நில்லடா
வரிகணை வருகுது செல்லடா
வனத்தி லோடியுன் இனத்தைநாடியே
மனக்குறை தனைத்தீர்ப்பாய் தேடியே

கடோற்கஜன் தரு

தேடியே நான்விட்டேன் கோடி அமோகப்பாணம் சிந்தவே
கூடியே நாய்நரி கோஷ்டங்க ளுனைசெய் துக் கொந்தவே
குக்கலைப்போ லெனனிடத்தில்
எக்கிஎக்கி குலைத்தாலும்
சக்கைசக்கை யாய்பிளந்து
திக்முக்க லாடச்செய்வேன்

துக்ஷசுஷணன் கந்தார்த்தம்

அரக்கிமா மகனே பொல்லா அய்வர்க்காய் தாதுவந்து
சிலக்கவே வார்த்தைசொல்லி திங்கினை நினைத்தாய்ப்பாவி
பறக்கவே சேனையாவும் படுகளந் தன்னிவிட்டே போ
இறக்கவே செய்வேன் பாராய்

தரு

இடும்பிமகனே வாருமே யமன்பதிக்கு
இக்ஷசுஷணம் தங்காது சேருமே
அடங்கொண்டு அஸ்திரம் புரந்தனை இகழ்ந்திட்ட
திடங்கொண்ட துஷ்டனே தீரத்தைப் பார்க்குறேன்

கடோர்கஜன் கந்தார்த்தம்

பார்க்குறேன் பதஷ்டாப்பஞ்ச பாண்டவர் வீமன் மைந்தன்
கூர்க்கதை கரத்தில்கொண்டு குடைப்படை சேனையாவும்
சேர்க்குறேன் நமன்பதிக்கு சிவன்வந்து எனக்குவேண
மார்க்கங்கள் உரைத்திட்டாலும்

தரு

மல்லுகள் நிருத்தப் போகுமா அடடாமூட
சொலலுகள் பிசகலாகுமா
பொல்லாக் காலம்வந்தலால் எல்லாம் உளரலானும்
வில்லா யுதங் களற்று வேந்தனே நீ மாள்குவாய்

துச்சக்ஷணன் தரு

அய்யோ நானென்ன செய்குவேன் இன்று
ஆவிப் பதரும்படி பாவி எனைப்புடைக்க
அய்யோ நானென்ன செய்குவேன்
கையில் பிடித்திருந்த கணையெல்லாம் பரித்தானே
வெய்யோன் வில்லாயுதத்தை வெட்டியே யெரித்தானே
சுருள்] வெட்கமு மாகுதோர் கட்சமும் இல்லையே
அற்ப னிடம்சிக்கி அடைந்திட்டேன் தொல்லையே

கடோர்கஜன் தரு

தொல்லை அடைவதேனடா துரியன் சொன்ன
நல்லமொழி இதானடா
வல்லவன் போரில்நின்று வாய்மதங் கூறிஎன்மூன்
வில்லெடுத் தகம்பாவம் சொல்லுகள் கூறினதால்
சுருள்] வீசினேன் கதையும் ரோஷமாகவே
மோசமாய்சிரம் அற்றுசாகவே

பொது வசனம்

சகுனியின் சூட்சியால் தூதுவந்த கடோர்கஜனை ஒழித்து விடவேண்டுமென்று துச்சக்ஷணனை அனுப்பவும் கடோர்கஜன் பாணத்தால் துச்சக்ஷணன் இறந்துவிடவும் இதுசேதி சாரணர்களால் அறிந்து துரியோதனன் புலம்புவது காண்கவும்

துரியன் கவி

சந்திரன் விழுந்தார்ப்போலும் சாகரம் தாழ்ந்தார்ப்போலும்
மந்திரக் கிரிகள்மோதி மாப்புவி எரித்தார்ப்போலும்
கந்தர்வன் தன்னையொத்த காளைத் துச்சக்ஷணனைபோரில்
அந்தகன் பதிக்குசேர்த்தான் அறக்கிமா மகனுலந்தோ

ஷை தரு புலம்பல்

மாதலத்தினிலே சிறந்திடும் மைந்தன் துச்சக்ஷணனே
தூதுவந்தவன் கொன்றான் துன்ப மிச்சக்ஷணமே
சுருள்] துரியனும்நிலை கலங்கலானேனே
பரிவாய் என்வீரம் மற்றுப்போனேனே
வில்வினுண்மையும் சொல்லின்பான்மையும் விருதாவாய் போச்சே
பிள்ளை இல்லையே எல்லை தன்னிலே பெரியோர்கள் பேச்சே
சுருள்] பேதைமாமதி மாது நிருவனை
வாதைபட்டுமுன் கோதுவாளினை

ஷை கவி

மாமனே என்னசெய்வேன் மங்குதே எந்தனுள்ளம்
காமனை நிகர்த்தக்காளை களத்தில்மாண்டான்
எமன்போல் வந்தானந்த இடும்பிமா மகனும்தூத
நாமதை உணராவண்ணம் நலனற்று தியங்கலானேன்

சகுனி தரு

ஆவதும் அழிவதும் மருமகனே அப்பா மருமகனே எல்லாம்
அரனிட செயலாகும் மருமகனே
பாவலர் புகழ்க்தேற்றும் மருமகனே அப்பா மருமகனே இந்த
படுகளத்தில் ஒப்பாரியேன் மருமகனே

துரியன் தரு

எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினேனே மாமா எ இப்போ
ஏக்கமிக வாகியே குண்ணினேனே
கண்ணன் முன்னமேதூது வந்தந்தப்போது மாமா வந்த பலக்
காரணத்தால் வந்திட்டதே இத்தத்தீது

சகுனி தரு

இடையன் கெடுத்தானென்றாய் மருமகனே எந்தன் மகான்
இருக்கும்போ துனக்கென்ன மருமகனே
மடைதிறந்தால் வெள்ளமும் மருமகனே எந்தன் மஅதை
மரிக்க எவராலாகும் மருமகனே

துரியன் தரு

காலமெல்லாம் உந்தனை நம்பினேனே மாமா நம்பினே சிறு
பாலன் இறந்ததினால் வெம்பினேனே
கோலமுடி மன்னர்களும் குறைகூறுவார் மாமா கு என்னை
கொடுங்கோலன் என எங்கும் அறைகூவுவார்

சகுனி கவி

மனமதும் கலங்கவேண்டாம் மருகனே என்னையன்றி
கனவிலும் நினைவிலுந்தான் காக்ஷிகள் அளித்தார்போல
உனைவிட்டுப் பிரிவதில்லை உயிரதும் போகுமட்டும்
நினைவது இருக்குதப்பா நிந்தைகள் கூறவேண்டாம்

துரியன் கவி

காலுகாள் நடந்தப்பின்னால் காடோடி ஐவரெல்லாம்
கோலூன்றி சுவர்க்கம்செல்வார் கோதைமார்ப் பிள்ளையோடே
பாலும்முக் கனியும்தேனும் பாரதில் தானம்செய்தே
மேலும்நம செங்கோலாட்சி மேன்மையாய் செய்யலாமே

பொது வசனம்

இவ்விதமாக துக்ஷக்ஷணனென்பவன் கடோர்கஜனால் இறந்து படுகளத்தில் கிடக்கவும் சார்ணர் மூலியமாகிய செப்தியறிந்து தாயாகிய திருவணை அதிக துக்கம்மேலிட்டு அழுதுக்கொண்டே படுகளம் நாடியே திருவணை வருவது காண்கவும்.

திருவணைக் கவி

பெருமைமல் பணிகளாடை பேதையாள் அலங்கரித்து
அருமையாய் இருக்கும்போது அருஞ்சுதன் மாண்டானென்று
வருமைசேர் துக்கசெய்தி வஞ்சியும் காதில்கேட்டு
திருவணை புலம்பிஇப்போ திகழ்சபை வருகின்றேனே

தரு

தினகரன் ஒளியொத்த கனகமாம் பணிமிகர்த்த
திருவஹ்ணை மாதுவந்தேன் படுகளம் நோக்கி (தி
மனமகிழ் எந்தன் செல்வன் மாண்ட செய்தியுங்கேட்டு
சுருள்] மாளாத் துயரத்திற் காளாய் நின்றனே
கோளாகலன்சுதன் மீளா சென்றானே
அன்றுப் பத்தினியாளை நின்றுத் துகிலுரிந்தார்
அந்தப் பாபங்கள் சேர்ந்ததோ யாகஜேனியான
அம்மன் சாபங்கள் சேர்ந்ததோ
கன்று இழந்தப்பசுக் கலங்கும் விதத்தைப்போல
சுருள்] கதறியே என்னுளம் பிதறியே வாடவும்
மதகரி மைந்தனால் சிதறியே ஓடவும்
நாட்டை யாண்டிடத் துரோகி காட்டிலோட்டிட ஐவர்
காணயம கெட்டுப்போச்சுதே பாண்டவர் பகை
வேணதும் விளையலாச்சுதே
சோட்டைகட்டி வாழத்தரியன் கொடுத்தானே என் பிள்ளைப்பலி
சுருள்] கொடிய துரோகியின முடியதும் சாந்திட
இடியுர லாகினேன் படிதனில் மாய்ந்திட
தேசம் புகழ்கொறத்தி வாசம் விறப்பன்காதை
தெளிவுர செய்தார் காணுமே ஷண்முகன்பாட
தெருவை யுணர்தல்வேணுமே
வாசம் புகழாலடி வளர்ந்தோங்கும் முனிசாமி
சுருள்] வஞ்சக மில்லாத செஞ்சொல் மொழிதனை
கொஞ்சிக் குலாவியே தஞ்சமென் றடைந்தேன்

கொச்சகம்

ஐயையோ நானென்செயவேன் அரும்பாவி யாகினேன்
வையகந் தன்னிலே வளர்ந்தநல் பாலன்
கைவிட்டேப் பிரிந்தானே காதகி யாகினேன்
கையுதே என் னுள்ளம் கங்கைகரம செல்லுவோமே

ஷை தரு

கண்டீர்களோ கண்டீர்களோ கண்மணியைக் கண்டீர்களோ
காளையந்த துக்ஷணம் கடுஞ்சமர் புரிந்திடவே
சண்டை முனை சென்றப்பாலன் சாந்துவர வில்லையம்மா
சத்திராதி துரியனுக்காய் செத்திட்டானே எந்தன்சீலன்
அததுதேனென் குலேழுமைப்பும் அடியோடு அருந்துப்போச்சே
ஆசையாய்வளர்த்துகார்த்தேன் அன்னைஎன்னைகார்பபானென்றே
பாசவிட்டு தான்மறைந்தான் படுபாவித் துரியனாலே
பாலகனை நானிழந்தேன் பாழும்பொருளாசையாலே
கொள்ளிவைப்பா னென்றிருந்தேன் குடமுடைக்க பாலனில்லை
துள்ளிவிளை யாடும்சேயன் சுவர்க்கப்பதி போயடைந்தான்

ஷை தரு வேறு

அய்யோநா னென்ன செய்வேன் ஆருமற்றப் பாவியானேன்
வையகமும் நகைக்க என்னை வஞ்சியாளும் துரோகியானேன்
செய்யாத செய்கைஎன்ற செய்துநீ மடிந்தாயோடா
பொய்யுடைய துரியன்சொல்போல் போர்முனையில் மாண்டா
போடா]
கண்மணியே நம்பிருந்தேன் கைவிட்டுநீர் சென்றாயோடா
விண்மணியில் லடியும்பட்டு வீழிட்டு அழுதாயோடா
எப்படிநான் வாழப்போறேன் என்னருமைக் கண்மணியே
கைப்பொருள் இழந்ததைபோல் கண்மணியே நானிழந்தேன்

ஷை கவி

கொள்ளைநோய் பிடித்துசேயன் கொடியசண் டாளன்சொற்போல்
கள்வனும் துரியன்சார்பால் கடிகியே சென்றுபோரில்
துள்ளியே பாலன்மாண்டான் துயாதனை ஆற்றல்செய்ய
வெள்ளியங் கிரியோன்பாதம் வேண்டியே தொழுதுவாமே

பொது வசனம்

இவ்விதமாக திருவணை படுக்களம்வந்து மகன் துக்ஷ்க்ஷணனை கண்டு அழுதுபுரண்டு பிரலாபித்துவிட்டு துரியனிடம் முறையிட்டுக்கொள்ள வரவும் துரியன் சகுனி யாவரும் பேசிக்கொண்டிருப்பது காணக.

துரியன் கவி

மாமனே என்னசெய்வேன் மல்லுகள் சேர்ந்திப்போ
காமனை வொருக்கூடி காட்டிய யுத்தந்தனில்
எமனைப் போலப்பாவி இடும்பிமா மகனும்வந்து
காமனைப் போலஎந்தன் காளையை வதைத்திட்டானே

ஷை தரு

என்ன யோசனை செய்யலாம் அந்த
இடுக்கங்கள் சேர்ந்ததே துடுக்கன் கடோர்தஜனால்
ஏது யோசனை செய்யலாம்
மன்னாதி மன்னர்மெச்சும் மாதவப் புத்திரனை
சின்ன பிணைங்களாக சிறைச்சேதம் செய்திட்டானே
அருள்] சிந்தையும்வாடுதே திகரிடலானேன்
இந்தவிதத்திற்கு இனிஎன்னசெய்வேன்

சகுனி தரு

மாமன்உரைக்கும் வார்த்தையே இன்று
மகிழ்ச்சி யுடனேகேள் இகழ்ச்சிகள் வரும்ன்
சேமமுடன் ஈர்க் கீர்த்தியே
தாமதம் செய்யொணுது சல்லியனை இப்போது
காமழைத்தே இரவு காடியே சமர்வினைத்தால்
அருள்] காசக்காலனை மோசமேசெய்யலாம்
பாசமாய்பஞ்சப் பாண்டவர் நையலாம்

திருவணை தரு வேறு

சண்டாளப் பாவிகளா உண்டான என்பிள்ளையை
தாக்கவோ உயிர் போக்கவோ
கண்டால உயிர்விடுவார் அண்டாதக் கோபங்கொண்டு
காதகா பொருளே பாதகா

துரியன் தரு

பாதகன் என்றுஎன்னை வார்தைகள்நீக் கூறவேண்டாம்
பத்தினி புகழ் சித்தினி
ஏதோ அயன்விதிபோல் மாதே நடந்துப்போச்சு
ஏங்கிட எல்லாம் சோங்கி—

திருவணை தரு

சோங்கும் படிக்குமைந்தன் நீங்களும் அனுப்பலாமா
துரியனே கெட்டாய் வெரியனே
போங்காலம் உங்களுக்கு ஏங்காலும் மங்தப்புத்தி
பூரிக்க மனம் பாதிக்க

துரியன் தரு

பாதிராட்டைக் கேட்டானே வாதியான அறக்கிமகன்
பாவையே கேளும் பூவையே
தீதொன் றுரைக்கவேண்டாம் மாதே மனம்பொருப்பாய்
தேரிட மனம் ஆரிட

திருவணை கவி

விதிவசம் தானேஐயா வினைப்பயன் அடைந்துமைந்தன்
பதிதனைக் கடந்துபொல்லா பாழ்நர குற்றானந்தோ
சதிசெயதீர் எல்லாம்கூடி தையலாள் வருத்தமானேன்
கெதியென்று சேருமோதான் கெடுமதிப் பொருளினுசை

பொது வசனம்

இவ்விதமாக துக்ஷணன் இறந்துபோனதைப் பற்றி தாயான திருவணை துரியனிடம் வந்து பிரலாபித்து இருக்கும் சமையம் மாத்திரைதேச அதிபதியாகிய சல்லியப்பூபன் சபாநாடி வருவது காணகவும்.

சல்லியன் கவி

தில்லையில் நடனமாடும் திரும்திரு அரனார்ப்பாதம்
எல்லையில் புகழ்ந்துப்போற்றி எழில்மிகும் பணிகள்பூண்டு
வல்லநல் வீரர்ச்சூழ வாள்கெதை தனுவும்யேந்தி
சல்லியப் பூபன் தானும் சபைநாடி வருகின்றேனே

தரு

சாகரம் புவியாரெல்லாம் ஏகநாயக னென்ன
சல்லியப் பூபன்வந்தேன் சாபணர்சூழ (சல்
ஆக மறைநாலும் அறிந்துணர்வே னென்றும்
வாகுநர்க் கீர்த்தியோரும் வச்சிர வில்லும்வேலும்
சுருள்] வகைவகையாகவே பகைவர்கள் நோகவே

செகம்புகழ்பிரதாப சேனைபின்பேகவே
பச்சைவை டூரியத்தால் வச்சிழைத்தமணி கொஞ்ச
பார்மன்னர் படைச்சூழவே துரியன் இனம்
பார்த்தானென்னிடம் தாழவே
அச்சமில் லாதத்தீரன் அவனிப்புக ழொய்யாசன்
இச்சகம் புகழ்சூரன் இணையில்லா ரணவீரன்
கருள்] இப்பவே துரியனை மெய்ப்புடன்கண்டிட
ஒப்பிலாச்சேதியில் ஒளிவெற்றிக் கொண்டிட

துரியன் தரு

போற்றிப் பணிந்தேன் மாமனே உலகோர்
யேற்றி மகிழும்வல்ல க்ஷேமனே

சல்லியன் தரு

க்ஷேமமுடன் பணிந்த மருகனே என்றும்
சோமனைப் போலவவாழித் துரியனே

துரியன் தரு

துரியன் மனமுங்கெட்டுப் போனதே மகன்
துக்ஷணனன் தன்னால்வாதை யானதே

சல்லியன் தரு

வாதை யடைந்திடென்னக் காரணம் எங்கள்
வல்லவா இன்றுரைப்பீர் பூரணம்

துரியன் கவி

மலையனும் புயமபடைத்த மாமனே சொல்லக்கேளாய்
பலாயனன் மைந்தன் மீது படையெடுத் தேகவேண்டி
சிலைவடிக் கணைகளம்பு சிர்பரிக் காலாள்கொண்டு
பெலமுடன் கொன்றுவீழ்த்தி பெருமையாய் வருவாய்மாமா

சல்லியன் தரு

குடைகூறு வாறுலகில் இரவில் சமர்கள்செய்தால்
கொற்றவா எனக் குற்றவா
சரியல்லவே சொல்வது துரியனேநான் போகலாமா
சாதனை சகுனி சோதனை

சகுனி தரு

வேந்த னுரைத்ததற்கு சாந்த மொழியுரைத்தாய்
தாபனே சல்ய பூபனே
காந்தாரத் தேசமன்னன் சுடிஇக்ஷ கூணம்கொண்டு
போமனே சென்று வாரனே

துரியன் தரு

மாமனே இந்தக்காரியம் காமா உரைசெய்வது
மார்க்கமா கோபம் மூர்க்கமா
ஏமன் கடோர்க்ஜனைத் தாமத மின்றிக்கொல்ல
எகுறேன் போருக்கு போகுறேன்

சல்லியன் தரு வேறு

போவதுசரியல்ல புகழ்பெற்ற மைத்துனு நில்லுநில்லு அந்த
காவல நக்கர்கோன் கர்ணனிடமிதைச் சொல்லுசொல்லு

தூரியன் தரு

சொல்லுவேன் விடியுமுன் கொள்ளைக் கொள்ளுவானே
மாமாமா இரவு]

அல்லலகற்றிட நல்லநேரம்செல்வாய் பூமாபூமா

சல்லியன் தரு

பூமன்கரிபரி சேனைகளோடுகோன் செல்லுவேனே வந்த
வீமன்மா மதலையை விடியுமுன் கான்சிரங் கொய்புவேனே

சகுனி கவி

தூரியன் சார்பால்நாமும் துலைத்திடப் பாண்டவாளை
வெரிகொண்டோம் பாரதப்போர் வெகுண்டுமே சினமிகுத்து
கரிபரி யோடுச்சென்று கடோரகஜன் தன்னைக்கொன்று
துரிதமாய் வருகுவாயே துன்பங்கள் நேராவண்ணம்

சல்லியன் தரு

அண்டகல கண்டம்போற்ற எண்டிசையோர் மலர்த்தூற்ற
சண்டப்ர சண்டனென்னவே சல்லியனென்றால
கண்டவர்கள் மனங் குன்னவே
படைக்குடை சேனைதம் பார்மன்ன ரின்றேஅதம்
தடையில்லா வென்றுபோடுவேன் கடோர்கஜனை
தாக்கியேக் கதையால்சாடுவேன்

கடோர்கஜன் கந்தார்த்தம்

துக்ஷணன் இறந்துபோக தூரியனும் மனம்சிதைந்து
இக்ஷணம் சல்யன் தன்னை இணைஇல்லா சமர்த்தொடுக்க
லக்ஷணத் தோடுவந்தான் காம்சம்மா இருக்கொண்ணுது
பக்ஷணம் செய்வேன்வாடா

தரு

பதுங்கி நுழைந்துஓடாதே சல்லியப்பூடா
வெதும்பி மனதும்வாடாதே
அதிரும் இடிகளோசை அண்டக் கடாகம்முட்ட
சதிராய் கணைகள்விட்டேன் சத்தசா காம்வற்ற
சாடாதே பயக் கோடாதே வாய்
ஆடாதே செபங் கூடாதே

சல்லியன் தரு

அற்க்கிமகனேநீ உறக்கப்பேசுவதென்ன வாருமே இந்த
அகிலத்தோ ரறிந்திட சிகரத்தைப் பறிக்குறேன் பாருமே
அத்தனிடக் கணையொன்று
சுத்தமாய் செபித்துவில்வில்

மத்தகத்தை   தான்பிளக்க
உத்தனே   விட்டேனடா

கடோர்கஜன் தரு

விட்ட பாணத்தை கட்டெரித்தனே வீரனே   நீயும்
கெட்டுப் போகுவாய்   பட்டவர்த்தனச் சூரனே
கதையால்   மோதினேன் சதை
சிதையும்   சல்லியாப்போடா
வதைவாய்   வதைவாயோடா
வந்தவழி   ஓடிப்போடா

சல்லியன் தரு வேறு

இடும்பி மகனே நில்லப்பா   துரியன்
இட்டக் கட்டளைப்படி   கெட்டு மனதுநொந்தேன்
எதுவேன்பதில் சொல்லப்பா
கடும்பகையாகி விட்டதே   காதகத் துரியனால்
தடம்விட்டோடிப்போகின்றேன்   தாட்சண்யம் நீபாருமே
அருள்] தருமர்சொல்லுறை   வருமையைபோக்கிட
இரவினில் வந்திட்டாய்   குறையுமேநீக்கிட

கடோர்சஜன் தரு

தாத்தா பயந்துஓடாதே   போரனிடத்தில
தளர்ந்து மனதுமவாடாதே
கோத்திரத்திற் குரிய   சாஸ்திரத்தைப் பாராமல்
நேத்திரத்தை இழந்த   ஆத்திரத்தான் சொல்லைக்கேட்டு
அருள்] நெடிமுடி மன்னரும்   மடியவேபோகுறார்
முடிவினிலரிகுவாய்   கெடியுரும்தர்மர்கதே

சல்லியன் தரு புலம்பல்

துரியனிட அரியசொல்லால் வெரியனைப்போல்நான் அலையலானேன்
கரிபரியும் சேனைதம் கடோர்கஜனிடம்   விட்டு ஓடலானேன்
வரிவரியாய் சரந்தொடுத்தான்   வாட்டிட்டென் திரேகமெல்லாம்
பூட்டினனே]
அரிஅரியாய் சொரிந்தசரம்   அமோகமான மாயாசித்துக்காரன்
பரித்தடித்தான் படையாதனை   பின்பட்டுநான் அலைலானேன்
முறியடிக்க கடோர்கஜனை   முடியாதப்பாத் துரியனாலே

துரியன் தரு

சகுனிஎன்மாமா கேளுமே   சல்லியபூபன்
சமரில் இளைத்தார் காணுமே
அகங்கொண்டப் படுபாவி   அடித்தானே மிகக்கூவி
அருள்] அலலலாகிய   தொல்லையால்கட்டுப்பட்டு
சல்லியபூபன்   சாய்ந்திட்டார்கெட்டு

சகுனி தரு

வந்ததுப் பெருமோசமே   துரியபூப
வாழும் பதிக்கும் நாசமே

சிந்தைநொந்து வாடாமல் சீக்கிரம் கர்ணன் தன்னை
சுருள்] சேரவேசெய்குவீர் நேரமதாகவே
ஆரவாரம்செய் அறக்கியின் மைந்தன்மேல்

பொது வசனம்

இவ்விதமாக கடோர்கஜனிடத்தில் சல்லியன் அடிபட்டு தோல்வியுற்று விடவும் இப்பால் துரியன் கர்ணனை அழைக்கவும் அங்குதேசத் ததிபதியாகிய கர்ணன் சபாகாடி வருவது காண்கவும்

கர்ணன் கவி

மணிமுடியும் கொடிமிகுத்த வீரனென்ன
மகாபலத்தில் கைதேர்ந்த வில்வீரன்
அணிவகுத்த போர்களத்தில் வெற்றிகொண்ட
அறவக்கொடி துரியனிட சார்பில்நின்றேன்
துணிவுடனே பஞ்சவர்க்கும் யமனானேன்
துரிசமுடனே இரவினிலேப் படையுங்கூட்டி
கணிதத்தில் அடங்காதக் காலால்சூழ
கர்ணனுமே சபைகாடி வருகின்றேனே

தரு

அங்கதேசாதிபதி வந்தேன் நல்ல
அதிரதர் மகாரதர் சமாதர்சூழ்ந்திட (அ
பொங்கும் கடலுலகில் சிங்கம் இவனோஎன்ன
திகழ் வடிவையொத்த தேவனிவனோஎன்ன
சுருள்] தீதில்லாதுரைபதி ராஜமன்னர்கள்
ஓதுவார்நல்பதில் வாதனை இல்லாமல்
தருமத்தில் சிறந்திடும் மாரன் மறை
தத்துவ சாஸ்திரம் மெத்த உணர்ந்திடும்
நிறத்தில் மதனையொத்த வீரன்
கருவங்கொண்ட ஐவரை கானகம் ஓட்டிவைத்தேன்
பருவ மடைந்தயாகப் பத்தினியை சிதைத்தேன்
சுருள்] பட்சாத் துரியனுக் கேச்சகவிலலாமல்
ஆச்சாசெய்முடி அளித்திடுவேன் நன்றாய்
சோலைமா நகரில்வாழும் வாசன் நன்றாய்
சொல்குண முருகையன் நல்குண தவத்தால்
சோபிக்கப் புவியில்தோன்றும் நேசன்
சீலன் ஷண்முகதாசன் பாட்டின் பிழைப்பொறுத்து
சீலமுடனுளுவீர் சிறந்த வீரப்பன்கதையை
சுருள்] செகமது புகழ்ந்திட அசமசிழ் கர்ணன்
மகிழவே சபைதனில் மன்னர்கள் வாழ்த்திட

துரியன் தரு வேறு

அய்யோநான் என்செய்வேன் வையகம் போற்றிடும் அண்ணலே
அண்ணலே சிறு]
பையல் கடோர்கஜன் நையப்புடைத்தானே அண்ணலே அண்

கர்ணன் தரு

இனத்தில்சரியில்லா வனத்தில்குடியிருக்கும் இடும்பி மைந்தனை அறை]
கனத்திலொழித்திட குறையென்றுநேர்ந்தது அடைந்தேன் சிந்தனை

தூரியன் தரு

சிந்தனையாகவே மைந்தன் துக்ஷணன்சிரம் சேதமானதே அதற்கு
உந்தனை யழித்திட்டேன் சூந்தகம் புரியாமல் அருள்புரிவாயே

கர்ணன் தரு

வீண்காலம்போக்காதே விடைகொடுத்தூரியனே சென்றுவாறேன் அந்த]
வான்மதி எதிர்க்கினும் நானதம் செய்துமே கொன்றுவாறேன்

தூரியன் கவி

அன்னகர் அரங்காடும் அரசனும் புகழும்நேசவை
மன்னர்க்கு மன்னரான மாபெரும் பாக்யம்பெற்றாய்
சின்னவன் மகிழ்ந்துரைத்தேன் செய்திக்கும் ஊனமின்றி
என்னைநீ காப்பாயண்ணே ஏகுவாய் வந்தனத்தோனா

கர்ணன் தரு

அதிரத்தனை உதிரச்சிலைகளை கதாப்பதாப போர்கொடுத்திடவே
அங்கதேசத்துக் கதிபன் சிங்காஸ்திரம் முட்டியே
ஆடிடவே ஜெயங் கூடிடவே இனறு
காடிடவே சேனை ஓடிட ஓட்டிவேன்

கடோர்கஜன் தரு வேறு

யாரோஒரு மூடன்வந்து யேடாக்கூடம் பேசுறான்
அகப்பட்டுக் கொள்ளப்போறான் இப்போஇப்போ அவன்
ஊரோ மறந்திடுவான் பாரோர்களென்னைப்போற்ற
உள்ளம் கடுங்கசெய்வேன் கர்ணேனானே

கர்ணன் கவி

கடோர்க்கயா என்னசேதி கர்ணனென்றும் பாரமல்
படோடம்ப மாகநின்று பலுக்கிநீ குலுக்கப்போமோ
விடேனுனைக் காகஅந்த வீமனும் வந்தால்போரில்
கொடேன்கொடேன் கமனுக்காவி கொன்றுயிர்க் கவருவேனே

கடோர்கஜன் தரு

ஆரடா நீபதில் சொல்லடா வந்த
அங்கத்தோனே இங்கு நில்லடா
கூரடாப் படைக்கூட்டி குதூகலம் கொண்டாயோ
நேரடா மூன்னைநான் நிகழ்ந்ததை அறிவாயே

கர்ணன் தரு

அறிந்தேன் அரக்கியின் மைந்தனே இப்போ
அங்கதேசப் பூபன் வந்தனே
பிரிகதிடும் உன் வாழ்க்கை பீமனும் அற்றிட்டான்
தெரிந்து சொன்னேனடா தீக்கணைக் கிரையாவாய்

கடோர்கஜன் தரு வேறு

யீனனென்றுநீ மானங்கெட்டுமே பேசலாகுமா
ஆணவந்தனை அழிக்குறேனென்றுமே கூசலாகுமா
அடடா விடடா நடடா போரில்
கெடடா கணையை தொடடா இனிமேல்

கர்ணன் தரு

இந்திரன் குபேரன்வந் தெதிர்த்திட்டாலும் யீனனேனடா
சந்தோஷமாகவே சமர்செய்ய வல்லவன ஏனேமீளடா
சக்ரயூகம் வகுத்தேன் திக்கெட்டும் பொரிபாக்க
முக்கண்மா லயன்வந்தாலும் இக்கணம் நெறிபிறக்க

கடோர்கஜன் சக்தார்த்தம்

கரும்புதான் தின்னக்கூலி சுயவர்கள் நினைக்கலாமோ
இரும்புதான் செல்லுவந்து இறைபெறிக் குணமுண்டாமே
விரும்பிய துரியன்சொல்லால் வினையதும் அடையப்போருய்
குரும்பினை அடக்கவேண்டி

தரு

கோதண்ட மெடுத்தேன் துரியன்சேனை
மூதண்டம் விடுத்தேன்
பாரண்டம் இலைஎன்ற பாவிக் கொடியோனுக்கு
சீர்கெட்ட மாளிகை சிதைப்பேன் சிதைப்பேனென்று
தேடாதே பயந் தோடாதே கர்ண
வாடாதே என்னை நாடாதே

கர்ணன் சுந்தார்த்தம்

மந்திர சாலக்காரன் மகாபெரும் யுத்தப்போரில்
தந்திரம் செய்துஎன்னை தாழ்த்தினன் என்னசெய்வேன்
சந்திரக் கணைகள்போச்சே சமர்த்தைகான் விட்டுசாக
இந்தால் வேளைதன்னில்

தரு

எடுக்கக்கணையும் இல்லையே இடும்பிமகன்
தொடுத்தக் கணையால் தொல்லையே
நடத்தும் ரதம்சேனையை நாசம்செய்து விட்டானே
தடத்தி லமோகப்பாணம் சரமாரியாய் பெய்தானே
சருள்] சண்டனுக் கிணையென எண்டிசை தன்னிலே
கண்டன் கண்டனே உண்டிலை இவன்போல்

கடோர்கஜன் தரு

சர்ணபி வேதகனும் ஓடினன் கான்
கண்டிட அவனையும் தேடினேன்
வர்ண மேனியுள்ள வல்லி இடும்பியின்
வர்ணய சுதனென்றும் நினையாமல் எதிர்த்தானே

கர்ணன் தரு புலம்பல்

ஆயர்க் குலத்துதித்த மாயா மதுசூதன

அவ்வரைக் காப்பதுபோல் நாராயணா
காயமென்றே அறிந்தேன் அபாயம் கேளாமல்கண்
பார்த்தாதரித் திடுவாயே நாராயணா
மதகரி மைந்தனாலே மடியக் களைந்தெடுத்தான்
மாயா எந்தனைக்காரும் நாராயணா
பதஷ்டன் எந்தனைத் தேடி பார்வனம் அலைகின்றான்
பறந்தாயா இவ்வேளை வாரும் நாராயணா

பொது வசனம்

இவ்விதமாக கடோர்கஜனிடத்தில் கர்ணன் தோல்வியுற்று ஓடிவிடவும் தூதுக்கு சென்றுபோன கடோர்கஜனைக் காணோமென்று தருமர் பிரலாபித்துக்கொண்டு கிருஷ்ணனை தோத்திரிப்பது காண்க.

தருமர் தரு

ஆதிமூலனே ! உத்தம அடைக்கலந்தானே
சோதிநாதனே எங்கும் ஸ்தூலமேகனே
சருள்] அய்யப்பாண்டவர் | வையகந்தனில்
அய்யோ என்றிட அன்று காத்தவா
காளை சமரிலே காளை அர்ச்சுனன்
சாடவெதப்போ எதிரிகளை சாடவெதப்போ
சருள்] காரணஅரி பூரணனைக்
காரணத்துடன் காரும்கந்தனு

பொது வசனம்

இவ்விதமாக தருமர் கிருஷ்ணனை நினைக்க துவாரகை வாசனாகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சபாநாடி வருவது காண்க.

கிருஷ்ணன் கவி

பஞ்சப்பாண்டவர்நாட்டை பாவியுங் கொடாததாலே
கெஞ்சியே கிருஷ்ணன் தானம் கேட்டதை மறுத்ததாலே
வெஞ்சமர்ப் பத்துஎட்டும் வேண்டினா ளிட்டேன்போரில்
அஞ்சிடா மாயக்கிருஷ்ணன் அமர்களம் வருகின்றேனே

தரு

எங்கும் புகழ்படைத்த சங்குசக்ரப்பாணி
விங்காதனன் என்பவர்தானே தருமன்பக்கல்
இங்கனம் துசித்திட வந்தேனே
மங்கைப் பாஞ்சாலித்துயர் மாயவன் தீர்க்கவேண்டி
சங்கையில்லா ஐவர்க்கு சகாயம்புரிந்தேன் தூண்டி
சருள்] சாயுகசயிக்கவன் சிரமறச்செய்தேன்
பரவசமாய்க்கிர் பகலதை ஒளிததேன்
மதிகுலப் பலயன்பெற்ற மைந்தன் கடோர்கஜன் தன்னை
பதிவேண்டு மென்றேத் தூண்டியே தருமர்தூது
பகர்ந்தனுப்பினார் வேண்டியே
சதிகாரப் பாண்டவர்க்கு சமர்கள் இன்றோடெதர்க்கு

விதியரியா தருமர் விளக்கம்செய் வேன்சபைக்கு
சுருள்] விண்டலம்மண்டலம் உண்டவன்தானே
அண்டகடாகமும் நின்றவன்தானே
வாசவன் நான்பாரதம் வரிசையாய் நடத்திட
கேசவ னுகஉதித்தேன் தேவிமிக
பாசங்கொண்டிடத் துத்தேன்
காசக்காலத் துரியன் நாட்டைக் கொடாவிட்டதால
மாசற்றக் கடோர்கஜன் மல்லுத்தம் புரிவதால்
சுருள்] மைந்தன்ஷண்முகன் செந்தமிழ்நாடியே
வந்துவாந்தா வண்ணமால்த்தேடியே

தருமர் தரு

சங்கு சக்கரந்தரித்த செங்கணமாலே உங்கள்பாதம்
போற்றினேன் மலர் சாற்றினேன்
இங்கனம் எனக்குநேர்ந்த பங்கந்தன்னை நீரும்மாமா
பாகம்ம சேழ்க்க சோகம்ம

கிருஷ்ணன் தரு

பொருமைக் குணமேக்கொண்ட தருமப் பூபதிவாழி
எந்தனை நீனைந்தாய் சிந்தனை
வருமை யடைந்ததென்ன வண்ணமலர்க் கண்ணன்முன்னே
வரையுமே சேதி உறையுமே

தருமர் தரு வேறு

இறப்பதும் பிறப்பதும் எங்களுக்கேமாமா எங் எல்லாம்
இதனைப் பலனொன்றில்லை தங்களுக்கே
முராகரி நந்தனு முகுந்தனே வாசவா
அரக்கி மகனைத்தூது அனுப்பினேன் கேசவா

கிருஷ்ணன் தரு வேறு

அஞ்சப்போர் எதற்காக வந்தீர் அந்த
பஞ்சவர்யாகஜனியாலே நொந்தீர்
வெஞ்சமர் விளைவித்த வீரனிடம் தூது
கஞ்சமலர்க் கண்ணன் கண்டேன்நானிப்போது

தருமர் தரு

தூதுக்கு சென்றவன் மாமா வந்து
சேதிச் சொல்லவில்லை சேமா
எதுக்கு என்னிடம் வாதுக்கள் பேசுறாய்
பாதுக் காக்கேனென்று பறந்தாமா யேசுறாய்

கிருஷ்ணன் கவி

திங்கள் தன் குலத்தில்வந்த தீரனே தருமப்பூபா,
செங்கண்மால் மீதுக்குற்றம் செப்பிட ஒன்றுமகானேன்
பங்கமுன் னடைந்தப்போது பாஞ்சாலித் துயிலவிழ்த்தேன
சபையையும் கெட்டுத்தூது சாரியாய் அனுப்பலாமா

தருமர் தரு

கண்ணனே மணிவண்ணா வெண்ணெயுண்ண செங்கண்ணா,
கர்த்தனே கார்த்தருள்வாய் திருமாலே எந்தன்
காளைக் கடோர்க்கஜன்பால் பெருமானே
பெண்ணை தலைமேல்வைத்த பித்தாய் பிறைசூடிக்கு
என்னும் இடைவிடாமல் இருந்தீர் அவர்முத்திக்கு
சுருள்] எங்கள்நாதனே தங்கைப்பாதனே
சங்கமேந்திடும் ரங்கநாதனே

கிருஷ்ணன் கவி

காண்டீபன் சபதமின்றே கண்ணனால் காக்கவேண்டி
தூண்டியப் பதினாலாம்போர் துலைத்திட்டேன் சக்ரந்தனால்
வேண்டியே இரவிலச்சண்டை வகுளியும் துவக்கம்செய்தான்
மீண்டிட்டான கடோர்க்கஜன்பால் மிக்கநாம் செல்லுவோமே

பொது வசனம்

இவ்விதமாக இரவில் சண்டை யேர்ப்பட்டுவிட்டதால் கடோர்க்கஜனைக் காக்கவேண்டி புரப்பட எத்தனித்திருக்கும் சமையம் அர்ச்சுனன் தருமனைக் கணும்படியாக வருவது காண்க.

அர்ச்சுனன் கவி

பரமனின் பாதம்தன்னை பருதிப்போல் மறவாசிலன்
அரமெனும் உரியவாகரு அசைவிலாக்கும் வல்லோன்
கரமதில் பாசுபதாஸ்திரம் பற்றியே சிலைவில்லேந்தி
திரம்பெற்ற சவ்வியசாசி தீரனும் வருகின்றேனே

தரு

பசுபதிப் பாதம்போற்றும் பாலன் குந்தி
பாண்டவரைவரில் காண்டீபனுகிய
விசயபென்னும் வில்வளைத்த வேலன்
சசிகுலந் தன்னில்தோன்றி சாரங்கம் தனுவையூன்றி
வசியம் செய்மாயக்கிருஷ்ணன் வார்த்தை மறவாதன்னி
சுருள்] மாதுகள்பேசிடும் சூதுசெய்துரியனை
தீதுடன் கொன்றுநான் திருமுடிப்பெருவேன்
ஒன்றுப்பதினாலாம்நாள் நின்று மாயன்
ஒளிபெரும் திகிரியால் கலையதை மறைக்க
இன்று சயிந்தவனைக் கொன்று
அன்று யாகஜேனியாள் நன்றாய் இட்டச்சபதம்
குறைற எடுத்தக்கண்ணன் கொடுத்திட்டப் பிரசாதம்
சுருள்] கோரியேகரிபரி தேரினிலேரினேன்
பாரினில் எதிரிகள் இல்லையென்றேரினேன்
நாளைப் பதினைந்தாம்நாள் துரோணர் குரு
நற்றவப பாக்கியர் உற்ற சிலாக்கியர்
காளையோ டெதிர்ப்பேனென்றுக் கூறினார்
வேளைப் பதினைந்து விடியுமுன் சண்டைநோக்க
பாலன் கடோர்கஜன்பால் பகைவர்கள் தன்னைத்தாக்க
சுருள்] பார்த்திபன் சபதமும் பூர்த்தியாய் முடிப்பேன்

கீர்த்தியாய் தருமர்க்கு கிரீடமும் கொடுப்பேன்

கவி

அண்ணனே உங்களோடு அரிகரி துளபமார்பா
வண்ணமா மலர்கள்வைத்து வர்ச்சித்தே னிருவர்ப்பாதம்
எண்ணம்போல் நமதுவாழ்க்கை எழில்பெறச் செய்சகாயன்
கண்ணன்தா னிருக்கும்போது கஷ்டமேன் உனக்குஅண்ணு

கிருஷ்ணன் தரு

விடமில்லைக் காண்டீபனே ஓவிஜயா நான்இசைய நான்
வீணுக்காய் உழைத்தேன்பாவி
அடங்கொண்டத் துரியனால் அழைப்பட்டுக் கடோர்கஜன்
சுருள்] அங்கம்வாடியே மங்கித்தவிர்க்குமுன்
திங்கள் குலத்தவா உங்கள்பெரும்பழி

அர்ச்சுனன் தரு

சூதென்று தானறிந்தீர் ஓய்கண்ணு மணிவண்ணு உன்
சூட்சத்தை நானறிவேன்
சாதகத் துரியனை கண்டிப்பாய் கொன்றுநான்
சுருள்] காலனமாநகர் ஓலமிட்டிட
கோலமாய்கனை மேலும்பூட்டிட

தருமர் தரு

குற்றத்தைக் கார்பாய்மாமா ஓகண்ணு மேகவண்ணு எங்கள்
குறைதனை தீர்ப்பாய்பூமா
பற்றறுக் காமல்நின்று முற்றும் ஜெயமளிப்பீர்
சுருள்] பாரில்துரோபதை கூறியப்படி
வாரிக்கூந்தலை கேரில்முடித்திடு

கிருஷ்ணன் தரு வேறு

குந்திமைந்தருக்காய் நான்வந்து கொடுமையாகினேனே
சந்திரக்குலந் தன்னிலுதித்திட்ட தனஞ்செயாநான் பேயனே

அர்ச்சுனன் தரு

பேயனே இன்று மாயனே என்றும் பிறந்தலர்குமா
ஆயனே உன்னை அன்றிவேர்த்துணை ஆர்சிகாமா

கிருஷ்ணன் கவி

புத்திநான் உங்களுக்குப் புகட்டவும் இல்லையென்றாய்
சத்தியே பாரதத்தில் சார்ந்தனன் ஒருக்காலந்தோ
முத்திதான் அடையவேண்டி மூர்க்கனும் உமக்குசெல்வம்
சித்தியை அளிக்கப்போரான் சிரப்புடன் வாழ்வீரெல்லாம்

பொது வசனம்

இவ்விதமாக எல்லோரும் படைத்துக்கொண்டு புறப்பட எத்தனிதிருக்கும் சமையம் கடோர்கஜன் தருமரைக் காண வருவது காண்க.

கடோர்கஜன் தரு

அரவக் கொடிப்படைத்த துரியன் சேனைகளெல்லாம்

அதஞ்செய்து வந்தேன் காணவே எல்லோருங்கண்டால்
அழுதும் மனதும் காணவே
பறவும் குடைக்கவிய பார்மன்னர் எச்சரிக்க
சூரியன் தன் பேச்சுத்தன்னையே மாநத்துயுத்தம்
தோர்க்கடித்து வந்தேன் முன்னையே

ஷை தரு

மாதவா யாதவா கேசவா நீயிங்கு
மறந்துவந்திட்ட சேதிஎன்ன சொல்லுமே சுவாமி
சிறந்தாப் பாதம்பணிந்தேன் யேற்றுக்கொள்ளுமே

கிருஷ்ணன் தரு

வீரமே பெற்றாய் வில்வித்தைக் கற்றாய்
விண்ணுளும்மண்ணோர் மெச்சிடவே வாழிவாழியே அப்பா
எண்ணம்போலாசீர்வதித்தேன் வாழிவாழியே

கடோர்கஜன் தரு

பாதகன் காதகன் வாதுகள் சொல்லிட
தீதாய் அமர்கள்செய்தேன் கண்டுக்கொள்ளுமே தந்தா
தூதுவந்தேன் என்றப்பனை யேற்றுக்கொள்ளுமே

தருமர் தரு வேறு

கேளடா சுதனே இப்புவிதன்னை
ஆளடா சுதனே
வாளபி மன்னனை வதைத்திட்டான் நேற்றினில்
சூலாயுதங்கொண்டே சூழ்ந்திடப் பார்க்கினில்

அர்ச்சுனன் தரு

போனது என்ன புதுமையான
சேதிகளென்ன
ஆணவங் கொண்டிட்ட அரவக் கொடியோனின்று
மானிலங் கேட்டதால் மார்க்கமென்ன சொல்லிட்டான்

கடோர்கஜன் தரு வேறு

சொல்லிட்டான் பஞ்சவர்க்காகவே காடு
இல்லைஎன் றுரைத்திட்டான் சீராகவே
அல்லலடைந்திட்ட அரக்கி மகனென்றன்
எல்லை எல்லாம்புகழ் வல்லவன் சமர்செய்தான்

கிருஷ்ணன் தரு

சந்தோஷங் கொண்டேனே பாலா தருமர்
இந்த விரச்செய்தார் மேலா
கந்தநாக் குழலியாள் கன்னியாள் சபதத்தை
எந்த விதத்திலநான் ஏற்று முடிப்பது

கடோர்கஜன் கவி

கதிர்மதி குலத்தில்வந்த கர்ணனும் ஓடிப்போனான்
அதிபதி சல்லியன்சகுனி அதர்க்குமுன் பயந்தொளித்தார்
கதிரிறம் பாவமுள்ளக் கடோர்க்கஜன் இன்றிரவில்

சதிசெய்து வருகுவேனே சதுதிநீர் விடைகொடாயே

தருமர் கவி

இரவினில் சண்டைசெய்தால் இடாது வந்துநேரும்
பரதவித் திடவேஜவர் படைகளும் அழிந்துசாகும்
திரமுடன் ஜெகம்நாடி திகழ்ந்துநீ மகிழ்ச்சியாக
உரம்பெற்ற அஞ்சனையோடு உலாவியே வாழ்வாயப்பா

பொது வசனம்

இவ்விதமாக கடோர்கஜன் மாளிகை நாடிவரவும் இப்பால் அஞ்சனமாலா புருஷனைத் தேடிக்கொண்டு வருவது காண்கவும்.

அஞ்சனமாலா கவி

பஞ்சின்மெல் லடியையொத்த யாவைஎன் தாதிச்சூழ
கொஞ்சிய இடைவிடாது கிளிமொழிஇவளோவென்ன
அஞ்சன மைகள்தீட்டி அரும்பெரும் பணிகள்பூண்டு
வஞ்சனை இல்லா அஞ்சனை வல்லியும் வருகின்றேனே

தரு

அரனின் பாதத்தைதினம் மறவாமல் தொழுகிடும்
அஞ்சனமாலை வந்தேன் கணவனைத்தேட (அ
சாம்பூவு தொங்கலாட சார்ந்தப் பாங்கியர்நாட
உரங்கொண்ட சுவதேனன் உள்ளம் பயந்துவாட
சருள்] உத்தமிப்பத்தினி சித்தனிஎன்றிட
சுத்தவர் மற்றவர் கர்ப்பினிதோன்றிட
வாதித துரியனாலே நீதியுள் ஜவர்களும்
வனத்தில் காலங்கழித்துமே பதிமூன்றும்போக
இனத்தைப் பிரித்தொழித்துமே
ஓதியே திருமால்பாதம் ஓங்கும் எனதுநாதன்
சாதிக்க பிறந்தவர் சாசமிக ஓய்யாரன்
சருள்] சங்கதிக்கண்டிட இங்கிர்தமங்கை
அங்கையில்கங்கணம் அழகுரும்கங்கை
அன்னநடை ஓய்யாரி அழகுப் பணிசிங்காரி
அமுர்த மொழிகள்பேசியெ அன்னத்தின்சாயல்
அருவை வந்தேனை கைவீசியே
மன்னும் புதுவைசார்ந்த வன்னம் சோலைமாநகர்
பண்ணும் பர்வதக்கோத்திரம் என்னும் முருகையனீன்ற
சருள்] பாலன்ஷண்முகன் கீதமும்பாடியே
மாலவர்ப்பாதத்தை மனதில்கொண்டாடியே

கவி

என்னநான் சொல்வனடி எந்திழைஎன் பாங்கிகளா
மன்னன் மடிந்திடவே மாங்கல்யம்தான் அறுத்திடவும்
கன்னியாள் கண்டக்கனா கட்டழகி பூவிழந்தேன்
பின்னப்என்ன நேருமோதான் பிரியமுள்ளத் தோழிகள் தோழிக

கடோர்கஜன் தரு

கண்மணியாளே வாருமே சந்திர
கலையை நிகர்த்தசெம்பொன் சிலையிலா மாணிக்க
விண்மணி யாளே வாருமே
கண்மணி யாளே நீரும் கட்டழகனை விட்டே
எண்ணம் துணிந்திருக்க ஏந்திழை யாளேபெண்ணே

அஞ்சனமாலா தரு

மன்ன வந்தனம் செய்தேனே இந்த
மலர்க்கொடி யாளுமே அலர்முக பாதமே
மன்னு வந்தனம் செய்தேனே
மன்னு வந்தனம்செய்தேன் கன்னி என்னைவிடுத்தே
தன்னந் தனியாய்செல்ல என்னமதி மன்னவா

கடோர்கஜன் தரு

கோபமாய் பேசாதே கண்ணே நான்
கோரியக் காரியம் பெண்ணே
ஆபத்து ஐவர்க்கும் அவ்விடம் சேர்ந்தது
சாபத்தை தீர்த்திட இருந்திட்டேனப்போது

அஞ்சனமாலா தரு

தந்தையுன் குறைதன்னைத் தீர்க்கவே நான்
தாலி அறுத்தப்பின் பார்க்கவே
முந்தியே போருக்கு முன்னம்நீ சென்றாயோ
இந்த விதிக்குநான் இருந்திட நின்றாயோ

கடோர்கஜன் தரு

போடிப் பயித்தியக்காரியே உன்
புத்தி மயக்கத்தால் கூறியே
ஆடிக்கூத தாடியே அம்பலமாக்குறாய்
வேடிக்கைப் பேச்சேண்டி வீண்வம்புக் கேக்குறாய்

அஞ்சனமாலா தரு

வம்புக்கு நான்வல்லே மன்னவா கினவு
வாய்த்ததை சொல்லுறேன் முன்னவா
வேம்பக் கசப்புபோல் வேண்டாமல் நின்றிட்டாய்
பாம்பின் பகைவிஷயம் பற்றினீ இறந்திட்டாய்

கடோர்கஜன் தரு

இறந்திட்டேனென்றுமே எண்ணாதே சந்திரி
இருந்தாலும் பயமில்லைக் குன்றாதே
வாரதரும் மாயன்மால் வம்சத்தில் சார்ந்தவன்
சிறந்திட உலகினில் சிறப்புடன் வாழலாம்

அஞ்சனமாலா தரு

கண்டக் கினவது மன்னனே நான்
கம்மண் சாதியானேன் சொன்னனே

எண்டிசை யுள்ளோரும் என்னுடன் கூடியே
சண்டையில் தாவியும் ரெண்டாய் முரிந்ததே

கடோர்கஜன் கவி

கினவதும் பலிக்காதோடி கிரகமே வருவாய்மானே
மனமதும் செம்மையானல் மந்திரம் செபிக்கவேண்டாம்
தினமதில் இருவர்நன்றாய் சிறப்புடன் மஞ்சம்சார்ந்து
தனபதி போலவாழ்வோம் தையலே வந்திடாயே

அஞ்சனைமாலா கவி

குருகுலம் தழைக்கவந்த குற்றமற்றவரே மன்னா
வரும்பழி சுமக்கயாரால் வலுவதும் இல்லைசொன்னேன்
பெரும்பழி துரியன்மோசம் பேசிடும் உலகப்போரில்
ஒருவாரு நீக்கவேண்டும் ஓர்வரந் தருவீர்காதா

கடோர்கஜன் தரு

வரந்தர நானுனக்கு நிறந்தான் நானல்லவோடி
மாயே சாமப் பேயே
இருந்தர சாளந்தந்தை பொருந்தும் சமர்முடிக்க
போவேன் பின்னால் சாவேன்

அஞ்சனைமாலா தரு

சாகஎன்தனைத் தாவி ஏகபோகமாய் சுட்ட
லாகுமா இது பாகமா
யோகந்தானாய் வருகும் போகவேண்டாம் போர்களம்நீ
நாதா குணப் பாதா

கடோர்கஜன் தரு

பெண்டுகளின் வார்த்தைதன்னை கொண்டாடநான் அருளகல்ல
பேனதயே உந்தன் வாதையே
உண்டவனிடத்தில்சொன்னால் தெண்டனிட்டு தாள்பணிவான்
கிட்டியே சரணக் கொட்டியே

அஞ்சனைமாலா தரு

கோபானே கோபததைவிட்டு மாமனே பஞ்சணை வாரும்
கூவுதே யேவுதே
தாமதம் செய்யாதே மன்னா மாமதனின வாதைதீர்க்க
வாருமே வந்து சேருமே

கடோர்கஜன் கவி

சரிசரிஅஞ் சனையாள்மாதே சார்ந்தநாம் இருவர்மஞ்சம்
பிரியம்போல் இருந்துபோசம் பிழைபது கோரவண்ணம்
மரியாதை அத்தர்பன்னீர் மகிழத்தாம் பூலம்போட்டு
குரியதும் அசையாவண்ணம் குலாவிநாம் இருக்கலாமே

பொது வசனம்

இவ்விதமாக கடோர்கஜனும் அஞ்சனைமாலாவும் சம்பாஷித்துக் கொண்டு இருக்கவும் முன் அடிபட்ட கர்ணன் அழுதுக் கொண்டு துரியனிடம் வருவது காண்கவும்

துரியன் தரு

..ர்ணனும் கடோர்கஜனை நிர்ணயம்போல் கொன்றிருப்பார்
வர்ணப்மணி முடிசொலிக்க வாழ்க்கையும் நிலைக்கசெய்வார்

சகுனி தரு

உப்புஞ்சோணம் தின்னக்கர்ணன் எப்படியும் செயித்திடுவான்
தப்புஒன்றும் நேர்ந்திடாது தளபதியே நீத்துரியா

துரியன் தரு

உன்விளக்கும் சோதியாக என்மாளியி லெரியக்கண்டேன்
கன்மவினைப் பாண்டவர்கள் காலன்பதி சேர்க்கவிண்டேன்

சகுனி தரு

நாலுநாளும் கடந்தபின்னால் நாடோடிகளவர்களும்
காலன்பதி சேர்ந்திருப்பார் காட்சிப்பின்னால் காணலாமே

துரியன் தரு

அண்ணன்கர்ணன் அழுகும்சப்தம் ஆரமாய் ஒலிக்குதிங்கே
குண்ணும்படி நேர்ந்தவிதம் குற்றமதை அறிகிலோமே

கர்ணன் தரு புலம்பல்

பட்டப்பாடெல்லால் பாழாய் கட்டாற்றில் விட்டானையோ
பாதவித் திடலானேன் பார்மனமே
கெட்டக் குடிக்குசகுனி இட்டான் அநேகம்பலி
கேட்டான் அவன்சொல்துரியன் பார்மனமே
எட்டி உதைத்தானென்னை குட்டிக்கரணம் போட்டேன்
என்திரேகம் வலிக்குதையோ பார்மனமே
திட்டம் துரியன்சேதி வெட்டா வெளியாய்போகும்
திருவிளை யாடல்தாமே பார்மனமே

துரியன் தரு வேறு

அழுது வருவதும் என்ன அந்த
அதிசயம் சொல்லிடும் முன்ன
பழுதென்ன நேர்ந்தது பகர்ந்திடும் அண்ணனே
வழுவதும் இல்லாமல் வகையுற சொன்னேனே

கர்ணன் தரு

கட்டி அடித்தானே என்னையே என்
கழுத்தும் திரும்பாமல் பின்னையே
எட்டி உதைத்தானே எல்லோரும் ஓடிட
பட்டப் பாடுபோதும் பார்தனில் மூடிட

துரியன் தரு

நம்பி இருந்தேனே அண்ணா என்னை
நட்டாற்றில் விட்டாயே எண்ணா
வெம்பி யழுதிட வேகுதென் நெஞ்சமே
அம்புவி தன்னிலே அரசர்கள் நகைப்பாரே

சகுனி தரு

கைப்பாரென்று சொன்ன சூரியனே இந்த
நாட்டினை ஆண்டிடப் புரியானே
பகைவரைத் துலைத்தாலே பார்முடி யாளலாம்
வகையான வேல்தன்னால் வாட்டி ஜெயிக்கலாம்

கர்ணன் தரு

இனிஎன்னால் முடியாது மாமா சண்டை
இருக்கும் இடம்போகேன் பூமா
கனிவான என்மொழி கருத்தின் உறைத்தேனே
இதிபோகேன் ஒருகாலும் இடரதும் வருந்தானே

சூரியன் தரு

ஆத்திரப் படவேண்டாம் அண்ணனே இந்த
அவனியாள்வோமென்றும் எண்ணினே
கோத்திரம் பாழாகும் கோவிந்தன் நகைப்பானே
சூத்திரம் வேல்கொண்டு சூட்சமாய் அடிப்பானே

சகுனி கவி

இந்திரன் தந்தவேலால் இப்போதுக் கணைஎடுத்தால்
மைந்தன் தான் கடோர்கஜன் மடிவதும் நிச்சயந்தானே
உந்தனுக் குறைத்தேன்சூட்சம் உள்ளது இதனால்வெற்றி
முந்தினீ செல்வாய்கரணா முன்பின்னும் யோசிக்காதே

வசனம்

இநதிரனால் கொடுக்கப்பட்ட வேலாயுதம் இருக்கின்றது அதைக்கொண்டு கடோர்க்கஜன் மேல்விட்டால் கண்டிப்பாக இறந்துவிடுவான் அதுதான் அவனுக்கு வைரியான வரப்ரசாதம் பெற்ற பாணம் முற்றிலும் நமக்கே வெற்றி துணிவுடன் செல் வாய் கர்ணா நீ கைவிட்டால் சூரியன் வாழ்நிலை பாழ்நிலையாகிவிடும் இப்போதே இராசண்டை துவக்கி கடோர்கஜனை ஒழித்து விட்டால் பாரதம் சரிவர முடிந்து நமக்கு வெற்றி முழங்கும் கர்ணா.

சூரியன் தரு

அங்கர்க்கோபதி எங்கும் புகழ்பெற அமர்க்களத்தில் சுற்றியே
செங்கைவேல்கொண்டு திங்கள் குலத்தோனை செத்துமாய்த்திட
வெற்றியே]
மங்கிடாமலே பங்கமேர்ப்பட மடியசெய் கடோர்கஜனையே
எங்கிலும்கெடி ஓங்கிபோற்றிட எழுந்திரும் ஜயப்பேரியே

கர்ணன் தரு

சாரணர்ப்படை பேரில்கட்டியே சமர்க்களம்நான் சென்றிட
வாரணம்பரி யானதேர்ப்படை வரிசை வரிசையாய் நின்றிட
காரணப்பொருளானகடோர்கயன் கண்டுமனமதும் குன்றிட
தீரமாய்த்திரு வேலும்காழில் திருத்திப்பிடித்துவேஊன்றிட

துரியன் கவி

அரவகல் கொடியும்ஓங்கி அவனி ஆகாயம்முட்ட
வரவெற்றி பெருகவேண்டும் வண்ணமே சரண்ணுபாதம்
சரணமே தஞ்சமென்றேன் சமர்வெற்றிப் பெருகவேண்டி
கரணத் தாம்பூலம்தந்தேன் கடிக்கிநீ சென்றிடாயே

கர்ணன் தரு

விடைபெற்று நடந்தேனே கர்ணராஜன்
விடைபெற்று நடந்தேனே
விடைபெற்று நடந்தேனே படைமுகந் தன்னிலே
நடையுக்ர தீரமாய் குடைமன்னன் சமர்செய்ய
கரிபரியுடன்படைச் சூழவே இரவில்சண்டை
கண்டோர் மனதுக்குணிந் தாழவே
அரிஅயன் தேவர்கள் ஆர்பரித் தெதிர்த்தாலும்
பிரியேன பிரியேனசமர் பின்னிடேன் மறித்தாலும்

பொது வசனம்

இவ்விதமாக துரியன் கட்டளைப்படியே கர்ணமகாராஜன் மீண்டும் படைகூட்டிக்கொண்டு கடோர்கஜனிடம் சமர்புரியும்படி ரணக்களம் வந்து சாரணர்கள் மூலம் யுத்தமுரசுக் கொட்டவும் இதையறிந்த கடோர்கஜன் தன் மனைவி அஞ்சனைமாலாவிடம் சொல்லிவிட்டு யுத்தத்திற்கு புறப்படுவது காண்கவும்.

கடோர்கஜன் தரு

நானே சமர்ப்புரிய மானே விடைகொடி
பேரேன் போய் வாரேன்
தேனே யுத்தபரீட்சை தானும் முரசுக்கொட்ட
கண்டேன் வெற்றி கொண்டேன்

அஞ்சனைமாலா தரு

போகவேண்டாம் நாதா பொல்லாங்கு விளைந்திடும் பிராணநாதா
வேகமானப் படை வேகமாய் வந்திருக்கும் பிராணநாதா

கடோர்கஜன் தரு

தடுத்துப்போகாதே கண்ணே விடுத்திடு என்னை இப்போ
தேவி கர்ணன் ஆவி
எடுத்து வருவேன்மாதே கொடுத்திடும் நல்வரமே
கோதையே செய்யாதே வாதையே

அஞ்சனைமாலா தரு

தாலி அருக்கநேரும் கேலிசெயவாருலகில் பிராணநாதா
வேலிக்கு முள்போட்டாலே காலுக்கு ஊனமாகும் பிராணநாதா

கடோர்கஜன் தரு

தந்தையின் குறையதை மைந்தனும் தவிர்க்காமல் இருப்பேனோ
வந்திடும் படையதை சிந்து சிந்தா தாக்கியே வருப்பேனே

அஞ்சனமாலா தரு

பொல்லாத சொர்ப்பனங்கள் எல்லையில் நான்கண்டேன் பிராணநாதா]
செல்லாது உந்தன்வீரம் வல்லவா நீர்மடிவாய் பிராணநாதா

கடோர்கஜன் தரு

போக வேண்டாமென்று போர்க்கோலம் கொள்ளுராய் போடிபோடி]
ஆகாது தடுத்திட அடிப்பேன் இவ்விடம் மோடிமோடி

அஞ்சனமாலா கவி

அருமையாய் எனக்குவந்த அழகுள்ள பிராணநாதா
இருவரும் வாழ்ந்தபாசம் இருந்ததால் உனைமறித்தேன்
மருமலர்க் கொன்றைசூடும் மயேஸ்பரன் துணை இருப்பார்
பொருமையாய் தாம்பூலம்தந்தேன் போர்வெற்றி பெற்றுவாராய்

கடோர்கஜன் தரு

போய்வாரேனடி மானே போரில்சமர்புரிய கண்ணே எந்தன் பெண்ணே]
வாய்விட் டழுதல்வேண்டாம் வருவேன் கொடியிலாளே கண்ணே எந்தன் பெண்ணே

அஞ்சனமாலா தரு

எந்தனுக் கார்துணையோ இருந்திட மாளிகையில் நாதா எந்தன் கா
சிந்தை கலங்கிவாட உந்தன் உனைப்பிரிய நாதா எந்தன் வேதா

கடோர்கஜன் தரு

சந்தோஷம் நீகொண்டிடும் சமர்களம் செல்லுவதால் பெண்ணே எந்தன் கண்ணே]
எந்தன் தந்தைதரும்மர் உந்தனை விடமாட்டார் கண்ணே எந்தன் பெண்ணே]

அஞ்சனமாலா தரு

உனைப் பிரியக்காலம் அன்னவன் செயலிது நாதா எந்தன் நாதா
கன்னிதனைக் காத்திட மன்னவர் வந்துசேர்வீர் நாதா எந்தன் நாதா]

கடோர்கஜன் தரு வேறு

சண்டைக்கு நடந்தேனே சமர்க்களந் தன்னையே நாடிநாடி
அண்டர்வந் தெதிர்த்தாலும் அவர்களை விடுவேனே ஓடிஓடி
கண்டிடக் கர்ணனை செதண்ட மடையசெய்வேன் தேடிதேடி
துண்டத் தனங்கொண்ட துரியன் படைகளை நான் சாடிசாடி

கர்ணன் கவி

சமரதுக் கூட்டிசக்கு சாமாரி பொழிந்தேன் இன்று
அமரது செய்யுங்கோஷ்டி அனைவரும் வரவுங்காணேன்
எமனவன் களத்தில்நின்றான் எங்கியே படைகள்மூற்று
குமரியே ஒளிந்தார்க்காணேம் குணங்கெட்ட பஞ்சப்பயல்கள்

கடோர்கஜன் தரு

கர்ணனே வாடா ஒளியவில்லை
கடோர்கஜ னேடா
கர்ணனே உந்தன்சிரம் கண்டிப்பாய் மண்மீது
நிர்ணயம் உருண்டிடும் நீசெல்வீர் புவிமீது

கர்ணன் தரு

அரக்கியின் மைந்தா அமோகப்பாணம்
அனுப்பினேன் இந்தா
பாக்கும் காற்றினில் பஞ்சு படையும் அவ்விதம் காண்பாய்
மாக்க முடியாய்போரில மடிவாய் எண்ணுவாய்

கடோர்கஜன் தரு

வாட்டங்கண்டு கணை எடுத்தனே அடடாமூடா
வச்சிரவேல் சரம்தொடுத்தேனே அடடா துஷ்டா

கர்ணன் தரு

துஷ்டனே துரத்திவருகுமே எந்தன்பாணம் உன்னை
துளைத்து புவியில் முடியைசாய்த்திடுமே நீ ஓடிப்போடா

கடோர்கஜன் தரு

ஓடிப்போக நானிக்குவல்லை அடா கர்ணனேவா
வேடிக்கையை பார்ப்பேன் சொலலையே நிர் மூடனேகேள்

கர்ணன் தரு

இட்டேன் பலகணைகள் மார்பினில்
இருக்கிப் பிழிந்துமே கொறுக்கிடவே
தொட்டேன் உன் உயிரதும் அற்றிட
துளைத்துமே ஆக்கையில் நுளைத்திடவே
சுருள்] பரிபரியேசினம் வேறுவேறுக்கிட
பாறுமரியாபரி தேரிலொடுங்கிவாட

கடோர்கஜன் தரு

வட்டமிட்டச் சந்திரன்போல காண்
வந்திட்டேன் உந்தனை கொந்திடவே
பட்டம்முடி எட்டிசை தன்னிலே
பாந்திட உதிர்ந்திட இரைந்திடவே
சுருள்] பாரும்பாரும்புவி யாருந்துணை இல்லையே
கோரும்போர்முனை தனில் நேரும்கெடுதிசெல்வாய்

பொது வசனம்

இவ்விதமாக பதினாலாம்நாள் இரவில் கடோர்கஜனுக்கும் கர்ணனுக்கும் சமர் நடந்துக்கொண்டு இருக்கும் சமையம் அஞ்சனைமாலா தருமரிடம் கூறுவது காண்க.

அஞ்சனைமாலா தரு

மாமாவே ஓடியே வாருங்கோ என்
மணவாளன் தன்னையே காருங்கோ

சீமானும் கர்ணன் சீற்றங்கொண் டிப்போது
ஏமாற்ற சண்டையும் எடுத்தான் படைத்தீது

அர்ச்சுனன் தரு

எல்லோரும் ஒன்றாகக் கூடியே வந்த
எதிரியை வாட்டுவோம் ஓடியே
கல்லஇன் றிரவினில் நாடிப்போர் செய்வோனை
வெல்லலாம் வாருங்கள் வேகமாய் கர்சனை

தருமர் தரு

வெற்றியோடு செயங்கொள்ளவே வல்ல
வீரியம் என்முன்னே துள்ளவே
அற்றுத் தரியன்சேனை அழிந்திட மாயனும்
சுற்றி யூகம்வகித்து சூட்சமாய் கொல்லனும்

கிருஷ்ணன் தரு

தாமதம் செய்யாதீர் ஜமத்தனை இரண்டு
சாமனாழியாச்சே பார்க்குணா
வாமதம் பேசாதீர் வந்திடும் என்பின்னே
பூமன் ஜெயந்தாரேன் போர்புரிவீர் முன்னே

அஞ்சனைமாலா தரு

போர்க்களம் நாடியே வந்தோமே அதோ
பார்த்திடும் சமர்செய்யா னந்தமே
சீர்பெற்ற என்னுதன் சீரியே சிங்கம்போல்
ஆர்வ முடன்சமர் அங்கண்மேல் பாய்குறார்

அர்ச்சுனன் தரு

விடவேண்டாம் கடோர்கஜா கொல்லு அவன்
வீரிட்டு ஓடிட வெல்லு
இடம் வந்தவன் இரதம்ஓட்டும் மடையனை
தடம்விட்டு ஓடிட தண்டிப்பாய் கடையனை

கடோர்கஜன் தரு

சத்துசித்துகள் எதுகள்கண்டவன் நானடா ஜெயம்
வெத்தியும் கொணடிட உத்தமன் வந்தேன் தானடா
வெந்தணல் வீசிட எரிந்தேனே
வெக்கிட உன்மனம் அரிந்தேனே
அந்தகன் பதிக்கனை சொரிந்தேனே
அங்கர்க்கோனுனைக்கொல்ல இருந்தேனே

கர்ணன் தரு

பதினாலுநாள்வரை பலமதும்பெற்றாறும் பாரடா இந்த
படுகளம் இரவினில் முடியதும் சாய்ந்திடும் தேடா
பருதி ஆஸ்திரங்கொண்டு நின்றேனே
படையுடன் சிரமாக் கொன்றேனே

குருதிக் களத்திலோடக் கண்டனே
கொடியசத் ராதிப்போடாத் துண்டனே

கடோர்கஜன் தரு

கெட்டிடப்பாண்டவர் துட்டன்துரியனாலே கேளடா அவர்
விட்டநாட்டைப்பெற இட்டக்கட்டளேஇது மீளடா
கிரீட அக்னியாஸ்திரம் விடுத்தேனே
வினைமீன துரியனிடம் அடுத்தோனே
சிரீடப் பாண்டவர்தனைக் கெடுத்தோனே
சிரமற்று விழக்களை தொடுத்தோனே

அர்ச்சுனன் தரு

தூதுவந்தவன்மீதில் பகைவேண்டா மூடனே உங்களை
தாலத்திடும்படி இந்தஇரவினில் கூடினோம் கேடனே
துரியனிடம் அடிமைப் பட்டாயே
தூய அங்கதேசத்தை விட்டாயே
அரிகளை விடுத்தேன் கெட்டாயே
அலரி அழவும் நஞ்சு இட்டாயே

கர்ணன் தரு

இதுவரைஉங்களை பதுமைஎன்றிருந்தேன் செல்லடா நீங்கள்
இரப்பதும் நிச்சயம் இப்போது எதிர்நின்று வெல்லடா
ஈனக் குலத்தில்வந்தாய் கேடனே
இனிசும்மா விடமாட்டேன் மூடனே
காவலன் கானல்லத் தேடனே
கயவரே உன்பங்கில் கூடனே

கடோர்கஜன் தரு

பொழிதுவிடியுமுன் போர்க்களந்தன்னிலே மாளுவாய் பாரி
அழுதுபரண்டுமே அலரியே மண்மீது புரளுவாய்
அங்கதேசாதிபனே செல்லடா
அருச்சுனன் சிரங்களையே நில்லடா
பகை மடைந்துப்போவாய் சொல்லடா
பாண்டவர் ஜெயம்ஜெயம் கொள்ளடா

கர்ணன் சந்தார்த்தம்

அந்திரச் சாதிஜவர் அரிசில்லாஎன் னிடத்தில்வந்தாய்
முந்திபநிலைகாளில் முடிந்தனை மறந்துநின்றும்
சந்திரன் பருதிவாயு சார்ந்துமே தடுத்திட்டாலும்
இந்திரன் தந்தவேலால்

தரு

இப்போதே உன்னைக் கொல்லுவேன் மந்திரஞ்சொல்லி
இராக்ஷச வேலாலே வெல்லுவேன்
முப்புரம் எரித்தயீசன் தொப்பையப்பன் கந்தனோடும்
அப்புடன்மால் பிர்மனுமே அண்டர்வந்தெதிர்த்தபோதும்

ஆகாதே ஜெபம் வேகாதே
போகாதே மனம் நோகாதே
போர்களத்தில் நீர்வடிய கூர்வேல் தனைவிடுத்தேன்
ஆர்வமுடன் சிரம்பூமி அற்றுவிழவே தொடுத்தேன்
ஆருஆரு நீருநீரு பாருபாரு வாருவாரு

அஞ்சனை மாலா தரு மாறடி

மன்னவா என்னசெய்வேன் மங்கையை தனிக்கவிட்டாய்
சொன்னசொல்லை தடுத்துவந்தாய் சோர்விற்றுயே படுகளத்தில்
என்னமாய்கான் இருக்கப்போகிறேன் ஏன்னருமை மாமா மாரே
பின்னம வந்தடையலாச்சே பிராணப்பதி தனையிழந்தேன்
அனைவன் விதிப்பயனே அருத்திட்டான் தாலியதும்
கன்னியாளும விதவையானேன் காளைப்பதி மாண்டாரையோ

கிருஷ்ணன் தரு

ஆத்திரப் பட்டுமே அழவேண்டாம் இவ்விடம் செல்விசெல்வி
கோத்திரம் தழைத்திடும் கொடிபடை முடியுடன் நல்கிநல்கி

அர்ச்சுனன் தரு

பார்ப்பவ ரிந்திட தேர்ப்பாகன் மகன்தன்னை கொன்றுகொன்று
தீர்ப்பதும் தினத்தினில நான்சென்று வென்றுவென்று

தருமர் தரு

பொறுபொறு பதராதே போர்க்களந்தன்னிலே தம்பிதம்பி
இருஇரு ஜெயந்தரும் இடிப்பட்டு அழவேண்டாம் வெம்பிவெம்பி

அர்ச்சுனன் தரு

கர்ணனை மண்மீது கடிகியே வீழ்த்துவேன் நானேநானே
காணவே பதினேழில் தோணவே மடிக்கிறேன் தானேதானே

கிருஷ்ணன் தரு

அஞ்சனை மாலையே அழுதப் புலம்பாதே கண்ணேகண்ணே
வஞ்சனை இதுவல்ல வாழ்நாளும் வலுத்திடும் கண்ணேகண்ணே

தருமர் தரு

வருமத்தை நீக்கியே மருமகளை வீடு செல்லுசெல்லு
பெருமையாய் சுற்றஞ்சூழ் பேசிமகிழ்ந்தின்றுக் கொள்ளுகொள்ளு

அர்ச்சுனன் தரு

சூரியன் கொடிபடை சூரிபட அடிக்கிறேன் இன்றுஇன்று
அரிய துரோணரின அகங்காரம் அடக்குறேன் நின்றுநின்று

தருமர் தரு

பதினைந்தாம் நாள்போரில் பாரதம் முடிவதும் கண்ணுகண்ணு
அதிபதி யாரின்று அமர்தனில் ஜெயிப்பது வண்ணுவண்ணு

கிருஷ்ணன் தரு

பதினைந்தில் துரோணரும் படைக்கூட்டி வருகுவார் பூமாபூமா
விதியது காண்டிபன் வீரிட்ட சபதம்நாள் பூமாபூமா

அர்ச்சுனன் தரு

விடையது தந்தாலே தடையில்லை துரோணரை கொல்லகொல்ல
படைமுடி மன்னர்கள் இடைவிடாப் பயந்தோட வெல்லவெல்ல

கிருஷ்ணன் கவி

கதிரவன் உதையமாச்சு கடுஞ்சமர் முடிவுற்றுச்சு
நிதியது தவா துரோணர் நின்றுமேம் படுகளத்தில்
எதிரியை வருகைநோக்கி எழில்மிகு யூகம்காட்டி
மதிகுலம் தனையழிக்க மகிழ்ச்சியாய் இருப்பார்தானே

தருமர் கவி

மைத்துனா மாயக்கிருஷ்ணா மன்னித்து ஐவர்தன்னை
வெத்தியும் பதினைந்தாம்நாள் வேண்டியே சமரில்நின்று
சித்தியும் அளிக்கவேண்டும் சிரப்புர நமதுப்பக்கம்
பத்தினி யாகஜேனிப் பாவையின் குழல்முடிப்பாய்

கிருஷ்ணன் கவி

சஞ்சலம் அடையவேண்டாம் சமரில்நின்று ஜெயமதாகும்
அஞ்சனை மாலையோடும் ஐவரும்பாசறையைசார்ந்து
வெஞ்சமர் முரசுக்கேட்டால் வெகுண்டுமே காண்டீபன்தான்
பஞ்சவர்ப் பதினைந்தாம்நாள் பார்த்தமன் இருந்துக்கார்ப்பேன்

வசனம்

சேனும் மைத்துனா பதினுலில் சூழ்ச்சியாக சயிந்தவனைக் கொன்றோம் இரவில் துக்ஷணனைக் கொன்றோம் கதிரவன் உதயமாகிவிட்டான் இன்று பதினைந்தாம்நாள் யுத்தம் புரிய துரோணாச்சாரி படையுடன் வருவார் நாழிகையாகிவிட்டது சீக்கிரம் பசி தணிந்து யுத்தக்கோலத்துடனே காண்டீபன் சிகண்டியோடு போர் முனையில் தயாராக இருநதால் அவ்விடம் நான் நின்று காக்கின்றேன் மைந்துனா தருமப் பூபதி சீக்கிரம ஆகட்டும்.

பொது வசனம்

இவ்விதமாக கடோர்கஜன் தூதுபோகவும் அதனுல் கலகம் விளைந்து பதிநாலாம்நாள் இரவிலேயே துர்க்குணத்தோடு மோசடியாக கடோர்கஜனைக் கொல்லவும் இப்பால் துக்ஷக்ஷணன் வதை என்னும் கடோர்கஜன் கர்ணன் சண்டை நாடகத்தை ஆடினோரும் பாடினோரும் காதான்றி கேட்டப்பேரும் ஸ்ரீதிருமால் பிரசாதம் பெற்றுய்வாராகுக. சுபம் சுபம் சுபம்

வாழி வாழி வாழி

துக்ஷக்ஷணன் வதை என்னும்
கடோர்கஜன்—கர்ணன் சண்டை நாடகம் முற்றிற்று.

ஸ்ரீ லக்ஷ்மி வாசன் பிரஸ், 12, அமர்ந்தவாழியம்மன் கோவில் வீதி
திருப்பாதிரிப்புலியூர். கா. 1050. 16—8—50.

## எமது புதிய நாடகங்கள்:—

1 மந்திரவதி திருமணமென்னும்—
கண்ணன் காண்டீபன் சண்டை நாடகம்

2 சுந்தரி திருமணமென்னும்—
அபிமன்னன் அரவான் சண்டை நாடகம்

3 இந்திரன் சூரியன் சாபம் பெற்ற—
நாரதர் மாயா சுயவர நாடகம்

4 விவசூரன் வதையென்னும்—
கார்த்தவீரிய சுவாமி காளி சண்டை நாடகம்

5 துர்த்தன ராட்சசன் துர்முகசூரன் வதையென்னும்
விஷ்ணு விநாயகர் சண்டை நாடகம்

6 **16** நாள் யுத்தம் என்னும் —
வீமனுக்கும் கேமதத்தனுக்கும் சண்டை நாடகம்

7 பழனி க்ஷேத்திர மகத்துவ மென்னும்—
இடும்பாசூரன் சுப்பிரமணியர் சண்டை நாடகம்

8 விசுவகேது நித்யவல்லி திருமணமென்னும்—
சத்திக்கும் சராயுக ராக்ஷதிக்கும் சண்டை நாடகம்

9 துர்வாசகர் கர்வபங்கமென்னும்—
அம்பரீஷன் துவாதசி விரத நாடகம்

10 கர்னன் ஜனனமென்னும்—
தாரு சூரன் விஷ்ணு சண்டை நாடகம்

11 கந்தர் லீலா என்னும்—
சூரபத்மன் சுப்பிரமணியர் சண்டை நாடகம்

எம்மிடம் ஸ்கூல் புத்தகங்களும் நாடக புத்தகங்களும், சிலேட், பென்சில் வகைகளும், இன்னும் மாட்டுக்கு வேண்டிய மணி, கொப்பி, நூல் கயிறுகளும், தாம்பு கயிறுகளும், இன்னும் இதர ஷாப் சாமான்களும் விலை சகாயமாய் கொடுக்கப்படும்.

கிடைக்குமிடம்:—
V. K. M. அருணாசல செட்டியார் சன்,
புத்தக வியாபாரம் & ஜெனரல் மர்ச்சண்ட்
திருப்பாதிரிப்புலியூர்.

---

# ஸ்ரீ லக்ஷ்மி வாசன் பிரஸ்
**12** அமர்ந்தவாழியம்மன் கோவில் வீதி
திருப்பாதிரிப்புலியூர்

இந்த அச்சுக்கூடத்தில் சகலவிதமான அச்சு வேலைகளும் புஸ்தக பைண்டிங் இவைகளும் சுத்தமாக குறைந்த கூலிக்கு சீக்கிர காலத்தில் வேலை செய்து கொடுக்கப்படும்.

சௌந்தரி கல்யாணமென்னும்

# சூலிக்குத்தாலி

## கட்டிய நாடகம்



திரு. C. V. மீனாக்ஷிசுந்தர முதலியார் குமாரர்.

C. T. தாமோதர முதலியாரவர்களது

சென்னை-சூளை. பெரியநாயகியம்மன் அச்சகத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்] [விலை 1. ரூபாய்

உ

கடவுள் துணை.

சௌந்தரிகல்யாணமென்னும்

கூலிக்கித்தாலிகட்டிய

# நாடகம்.

இவை

கொஞ்சிகுப்பம்.

துரைசாமிசமஷ்டியார்மாணுக்கரிலொருவராகிய

கன்னிகோயில்

இ. கேசவபடையாச்சியாரால் இயற்றியது

இஃது,

கூடலூர். வை. வீரப்படையாச்சியாரிடம்

சகலசுதந்தரமும் பெற்றுக்கொண்டு

கூடலூர் புஸ்தகவியாபாரம்

## ம. தி. முருகேசமுதலியார்

வேண்டுகோளின்படி.

திருப்பதி.

## இரத்தினமுதலியார்

அண்டுவெலன் அவர்களது

கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1927.

இதன்விலை] ரிஜிஸ்டர் காப்பிரைட் [அணா 5

உ

கடவுள் துணை.

# விளம்பரம்.

இதனால் சகலமானவர்களுக்கும் அறிவிப்பதுயாதெனில்சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை முத்துகிருஷ்ணன் வீதி 34-வது நெம்பர் வீட்டிலிருக்கும் திருப்பதி. இரத்தினமுதலியார் அண்டுஸன் அவர்களால் சௌந்தரவல்லி கல்யாணமென்னும் கூலிக்கித்தாலிகட்டிய நாடகத்தை அனுசரித்த சகலசுதந்தரமும் பெற்றுக்கொண்டு அச்சிட்டிருப்பதால் இந்த நாடகத்தை யாதாமொருவர் அச்சிடுவார்களாகில் 1867-வது ௵த்து 25-வது ஆக்டின் 20-வதுபிரிவில் 6-வது விதிபின்படி (ரிஜிஸ்டர்காப்பிரைட்) பெற்றிருக்கிறபடியால் இதை அச்சுக்கூடத் தலைவர்களும் மற்றெவர்களும் அடியில் கண்டிருக்கிற என்னுடைய அனுமதியன்றி அச்சிடப்படாதுவேறுபாஷையிலும் மொழிபெயர்த்தும் அச்சிடப்படாது அப்படி சட்டத்திற்கு விரோதமாகச் செய்வார்களாகில் அதனால் நேரிடும் நஷ்டத்தையும் கொடுப்பதன்றி கோர்ட்டின்மூலயமாய் தண்டனைக்குள்ளாவார்கள்.

இப்படிக்கு,

டி. ஆர். வெங்கடேசமுதலியார்.

நெ. 34. முத்துகிருஷ்ணன்தெரு,

மின்ட்பிள்டிங்போஸ்டு, மதராஸ்.

உ

கடவுள் துணை.

சௌந்தரிகல்யாணமென்னும்

# கூலிக்கித்தாலிகட்டிய

## நாடகம்.

---

### விநாயகர் துதி.

சத்திக்கணபதி சதிர்க்கணபதி தாண்டிவரும்
முத்திக்கணபதி முக்கட்கணபதி முளைத்தெழுந்த
பத்திக்கணபதிபாதம்பணிந்தேன் பாலனும்நான்
வெதிக்கணபதி வேண்டினேனான் விநாயகனே.

### நற்குணராஜன்-கவி.

ஆலவட்டங்கள்வீச அருமறைமுனிவர்பாட
ஞாலத்திலுயர்ந்தெழுந்த நன்றாயமர்வாய்மந்திரி
கோலமாய்இந்தியாபுரியை குணமுடன்அரசுசெய்யும்
சீலமாய்சற்குணராஜன் சீர்சபைவருகின்றாரே.

### தரு.

நாதனருளைப்பெற்று    போதமுடனடத்தும்
நற்குணராஜன்வந்தான்    இந்தியாபுரியில்-நற்கு
வேதவிதிப்படிக்கு    மாதைமணம்புணர்ந்து
சு-வெற்றிகள்பெற்றிட    சித்தமுங்களித்திட
பத்தினியென்றொரு    பாவையைபெற்றேன்    நற்

ஐந்துவயதிலே    அன்பாய்கல்வியில்சென்று
தொந்தரவில்லாமல்    தொடுத்தேன்ஞானங்களெல்லாம்
சு-துயரது    துன்பமும்பெருக
வயரதுபெரிய    வந்துதேகாலம்    நற்

இரண்டுபத்துவயதில்    இன்பமாய்விவாகம்செய்து
பிரண்டுஐந்துவயதில்    பிள்ளையைபெற்றெடுத்தேன்
சு-பேதைச்செல்வியை    கோதையாள்பெற்றாள்
வாதையில்லாமலே    வஞ்சியைகாற்றேன்    நற்

யெந்தன்தவத்தில்வந்த    யேந்திழையாள்செல்வி
குந்தகமில்லாகல்வியை    கொடுத்தேன்பரிசைமுதல்
சு-குணமுடன்புருஷன்    இனமுடன்கிடைத்தால்
மணமதுசூட்டியே    வைப்பேனான்பட்டம்    நற்





இராஜன்-தேசவிசாரணை.

மாதமும்மாரிபெய்து மகிக்ஷியாய்பரிசனங்கள்
தீதுகளில்லாமலே சிறப்புடன்வருகின்றாரா
வேதியர்யாவர்களும் வேதங்கள்படித்துக்கொண்டு
நீதியுடன்வருகின்றாரா நேரினில்சொல்லுவீரே
முக்கியமாய்மூன்றாலயம் முழுதும்பூசைகள்தினம்
பக்குவமாய்நடக்கின்றதா பார்த்துசொல்வாய்யெனதுமந்திரி
அவரவர்கப்பணங்கள் அரசுதன்னிலேவந்து
தவறாமல்கட்டுரோரா தானுரைப்பாய்யெனதுமந்திரி

கவி.

அருகினிலிருக்குமந்த அன்புள்ளமந்திரிகேளாய்
பெருகியேஇந்தியாபுரியில் பிரியமாய்நடப்பதாலே
வருமைகளில்லாமல்தான் வந்ததுசந்தோஷந்தானும்
உருமைய்யாய்அரசுதன்னில் உத்தமராமருவீரே.

பொதுவசனம்.

இவ்விதமாக நற்குணராஜன் கொலுவில் வீற்றிருக்க மஹேந்திரகிரிக்கி வடபாரிசத்தில் கன்னமாபுரி பட்டணத்தில் வசிக்கும் நாருயணசாஸ்திரி வருகிறார்.

### நாருயணசாஸ்திரி-கவி.

கன்னமாபுரியில்வாழும் கனத்தவேதியர்குலத்தில்
உன்னிதமாயுதித்து உத்தபர்ஞானங்கற்று
இன்னிகரில்லையென்று யேந்திழையுடனேகூடி
நன்னயமானநாருயண சாஸ்திரிவருகின்ருரே.

### த ரு.

மஹேந்திரகிரிக்கி
வடபாரிசத்தில்வாழும்
மனன்வேதியநானே
நாருயணசாஸ்திரி மன்

புகழேந்தியசொன்னும்
போற்றஉலகமெல்லாம்
சு-புத்தியில்மிகுத்திடும்
சத்தியவானே
உத்தமவேதியன்
இத்தரையில்தானே

ஆறசாஸ்திரமுதல்
ஆராய்ந்துபார்த்தவல்லோன்
நீராய்கலைக்கியானங்கள்
திசழும்புராணங்களெல்லாம்
சு-தீவிரமாகவே
தெரிந்தவன்நானே
யேவியேவருவாய்
யென்னிடம்தானே மன்

சோதிடத்தில்மிகுத்து
சூழும்உலகந்தன்னில்
வாதிகளில்லையென்று
வருத்துரைப்பேன்மேலே
சு-வந்திடமுரமைய
நிந்தனையில்லா
சிந்தைகளித்திட
சேதியைஉரைப்பேன் மன்

யெந்தன்தேவியவள்
இன்பசெயலக்ஷ்மி
சிந்தைகளிக்கசெய்வேன்
சிவனது அருளாலே
சு-தேடியேசாஸ்திரம்
பாடியேசொல்வேன்
வாடிநிற்போற்கு
வருத்தமும்வையேன் மன்

### க வி.

யென்னிடதோழமாரே இன்பமாய்சொல்லக்கேளாய்
நன்னிகர்புவனந்தன்னில் நானுமேசாஸ்திரம்சொல்ல
கன்னியாள்மனதரிந்து கடினமாய்செல்லவேண்டும்
அன்னவள்ஜெயலக்ஷ்மியை அழைத்துநீவருவாயப்பா.

### வசனம்.

கேளுங்களப்பா தோழமார்களே நாமென்ன உலகத்தில் சாஸ்திரம்சொல்லி ஓர்காசளவும் வாங்குவது வழக்கமில்லை ஆனதால்இன்றையதினம்சோதிடம்சொல்ல செல்லவேண்டும் யெனது தேவியாகிய செயலக்ஷ்மியை அழைத்துவாருமப்பா தோழர்களே.

### ஜெயலக்ஷ்மி-கவி.

நாதனுர்அழைத்தசேதி நங்கையும்காதில்கேட்டு
நீதுகளென்றுமில்லா ஜெயலக்ஷ்மிமாதுதானும்
வாதுகள்வந்திடாமல் வஞ்சியர்படைகள்சூழ
கோதிலாயயிர்முடித்து குணமுடன்வருகின்ருளே.



தரு.

அதிகசுந்திரவதனரூபி அன்பாய்ஜெயலக்ஷிமி
அன்பாய்ஜெயலக்ஷிமி அருவைமாதர்களுடன்
ஆடிபாடியே தேடிவந்தேனே
நாடிநாதனை கூடியாடவே-அதி

வஞ்சியர்கதம்பம்பூசி வாசம்பரிமளிக்க
கொஞ்சியேநான்விளையாடகோதையரேவாதையில்லாமலே-அ

மல்லிகைமுல்லையுஞ்சூடி மன்னவர்பதத்தைதேடி
வல்லியும்ஜெயலக்ஷிமிவந்தேனிதோ சிந்தைகளித்திட-அதி

சாஸ்திரமிகுந்தவல்லோன் தர்மகுணநாதரவர்
சூஸ்திரம்தன்னைக்காண தோகையிதோநாடிவாரேனே-அதி

காலமெல்லாம்சாஸ்திரத்தை கண்டபடிஉளரி
ஞாலம்துதிக்கபின்னை நாணயமாயில்லையோடி-அதி

மன்னவரழைத்தாரென்று மங்கையாளும்கேள்வியுற்றேன்
அன்னவர்பதம்பணிய அன்பாய்நாமும்செல்வோம்வாராய்-அதி

ஜெயலக்ஷிமிதரு-கண்ணிழந்தமெட்டு.

மன்னனுடன்னிருபாதம் மங்கைபணிந்தநான்நீகம்
கன்னியெந்தனைகாரும் கடைக்கண்வைத்துமேபாரும்
என்னையன்பாய்நீரும் யேனழைத்தாயேகூறும்

நாராயணசாஸ்திரி-தரு.

கூறுமென்றாயேபெண்ணேயெந்தன் கோதைவாழியேமுன்னே
பாருலகந்தன்னில் பலசாஸ்திரம்சொல்லயெண்ணி
வேரில்லையேபெண்ணே வேதியன்சொன்னேன்கண்ணே

ஜெயலக்ஷிமி-தரு.

கண்ணேயென்றுமேசொல்லயென்ன காரணமோயிதுவெல்ல
எண்ணமற்றுமேவாட மனம்யேங்குதேபொருள்தேட
அன்னீதமாய்காட உனக்காகுமோசாஸ்திரம்பாட

நாராயணசாஸ்திரி-தரு.

சாஸ்திரம்சொன்னலென்ன தர்மமோநமக்குப்பின்னல்
ஆத்திரப்படாதே அரனருளை கைவிடாதே
பாத்திரம்நமக்குண்டு பாவையேநீயும்விண்டு

ஜெயலக்ஷிமி-கவி.

பாத்திரமிருந்துமென்ன பாவையாளொழிந்தாலென்ன
நேர்த்தியாய்செல்வமிருந்தால் நெருங்குவாரெல்லாம்நம்மை
ஆத்திரப்படாதேயென்றாய் ஐயையோயார்மதிப்பார்
சாஸ்திரம்சொல்லப்போன சம்பாதனைபோதும்நாதா.

வசனம்.

கேளும் நாதா தர்மமேசெயமென்று சொல்கிறீர் தர்மமிருந்தால் நம்மை யார்மதிப்பார் செல்வமிருந்தால் யெல்லாரும் நற்றுவார் அப்படியிருக்க சதாகாலமும் சோசியம் சொன்னது போதும் இனிமேலாகிலும் பொருள் வாங்கிவாரும் நாதா.

நாராயணசாஸ்திரி-தரு.

பணமென்றால்பிசாசு பெண்ணே-அடி
பாவைபோஉயிர்கொல்லி கண்ணே
குணமாகஇருந்தாலே சேருவார்நம்மையும்
தனமென்றவார்த்தையை தள்ளிவிடும்பெண்ணே

ஜெயலக்ஷிமி-தரு.

தள்ளிவிடுமென்று சொன்னாய்-நீரும்
சாஸ்திரம்கற்றுமே யென்ன
கள்ளிக்கூடநம்ம கண்டோர்நகைப்பாரே
உள்ளதைப்போலவே உத்தமாவாங்குவீர்

நாராயணசாஸ்திரி-தரு.

வாங்கிடுமென்றுயுரைத்தாய் செத்தால்
வருமோநமக்கு புரத்தால்
யேங்கிநீவாடாதே யேந்திழையேதள்ளு
தாங்கிவேரோநீயும் சந்தோஷமாய்கேளும்

ஜெயலக்ஷிமி-தரு.

கேளுமென்றசொன்ன நாதா-யெந்தன்
கெம்பீரமழுந்துதே போதா
ஆளஒருபிள்ளை அன்பாகயில்லையே
நாளும்துதிக்கவே நானுமேசொல்லுவேன்

நாறுயணசாஸ்திரி-கவி.

மகிழுவெனென்றுசொன்ன மங்கையேசொல்லக்கேளாய்
புகழுவெபனக்குமுண்டு புத்திரனில்லாதாலே
இகழுவேபாலனிருந்தால தீக்ஷண்யமாகும்பெண்ணே
இகழுவேயிருப்பதைப்போல் எப்போதும்யிருந்திடாயோ.

வ-ம். சேரும்பெண்ணே ஜெயலக்ஷிமி புத்திரனில்லாததினல் எனக்கும் கவலைதான் அப்படியிருக்க பாலன் பிறக்கும்படி சோசியம் பார்த்தேன் பார்க்குமளவில் பாலன்பிறந்தால் யேதாகிலும் தீக்ஷண்மாய்விடும் ஆனதால் இப்போது இருப்பதைப்போல எப்போதும் இருந்திடும் கண்ணே.

ஜெயலக்ஷிமி-கொச்சகம்.

இருந்திடுமென்றுசொன்னீர் யெந்தனுசையைவெருத்து
பொருந்திடுமோபிள்ளையில்லா போசனமும்யெந்தனுக்கு
வருந்தியபாலன்வந்தால் வந்திடும்பாவமென்றீர்
திருந்தயெனக்கரியநீரும் சீக்கிரம்உரைப்பீர்நாதா.

நாறுயணசாஸ்திரி-தரு.

பாலன்பிறக்கும்படி பக்குவமாய்சாஸ்திரம்
பார்த்தேன்காணும் பார்த்தேன்
ஞாலந்தனிலேபிள்ளை நலம்பொஇராது
யெந்தன்பெண்ணே யெந்தன்

ஜெயலக்ஷிமி-தரு.

இருக்காதுயென்றுசொன்னீர் பெருக்கமுலகந்தன்னில்
நாதாபிராண நாதா
திருக்கேளென்னசொல்லும் வெருக்கமனதிலிப்
போதாயெந்தன் போதா

நாறுயணசாஸ்திரி-தரு

வெருக்கமனதிலிப்போ வேதியன்சொல்லுவேன்
கங்கைகாசி கங்கை
நருக்காய்பதினெட்டு வயதில்மடிந்திடுவான் நங்கை

ஜெயலக்ஷிமி-தரு.

மடிந்திடுவானென்று மங்கையரியசெல்ல
நீரும்முன்னே நீரும்
கடிந்துயென்பிள்ளைகவி கண்முன்னேதீர்ந்திட
நேரும்சுவாமி நேரும்

நாறுயணசாஸ்திரி-கவி

முன்னாலேயென்றுசொன்ன மொய்க்குழல்மாதேகேளாய்
யென்னாலேகுற்றமில்லை இருக்குரார்பாமன்தானும்
பொன்னனபாதம்போற்றி பூவையேஅளித்தேவரிப்போ
உன்னாலேயானமட்டும் உத்தமிவளர்த்துகொள்வாய்

பொதுவசனம்.

இவ்விதமாக நாருபணசாஸ்திரி பரமசிவத்தின் கிருபையால் புத்திரசந்தானம் அளிக்க அந்த வரத்தை பெற்றுக்கொண்டு பத்து மாதமும் சுமந்து ஜெயலக்ஷிமி கெற்பவேதனை படுகிறது.

ஜெயலக்ஷிமி-தரு.

அம்மாநான்யென்னசெய்வேன் தாதிமாரே
அவதிக்குள்ளாகுதடி சகிமாரே
யெம்மாலேமுடியாதடி தோழிமாரே
யிடுப்பைகடுக்குதடி சகிமாரே
காலுங்கடுக்குதடி அம்மமாரே
களையாய்வருகுதடி சகிமாரே
பாலன்வெளியாக அம்மமாரே
பரிசுத்தமாச்சுதடி தோழிமாரே

வேறு-தரு.

பாலன்பிறந்தானம்மணி இந்தப்பாரினில்
அதிவிதமாரனும் இல்லையென்று-பால

பாலன்பிறந்தானம்மா பாலசுப்ரமண்யன்போலே
சிலமாயிக்குழந்தை தெரிசிக்ககிடைத்ததே-பால

காலுங்கரமழகும் கமலமுகத்தழகும்
வேலும்பிடித்தவல்லோன் விமலர்திகரில்லையென்று-பால

ஜெயலக்ஷிமிவயற்றில் செல்வனும்அவதரித்தாய்
நயமாய்நாதருக்கு நாமேகாண்பிக்கவேண்டும்-பால

ஆரியர்குலத்தில்வந்த அன்புள்ளநாதாநீரும்
சரியாய்பாலனுக்கு தரவேண்டும்நாமதேயம்-பால

நாருயணசாஸ்திரி-கவி.

பாலனுப்பிறந்தானென்ற பாவையேசொல்லக்கேளாய்
சிலமாய்நாமதேயம் சிறப்புடனவைக்கவேண்டும்
ஞாலத்தில்துதிக்கயிப்பால் நாரணன்கிருபையாலே
பாலனும்குருசாஸ்திரியென்று பாவையேவைத்திட்டேனே.

பாலகுருசாஸ்திரி-கவி.

சாஸ்திரம்மிகுந்தவல்லோன் தந்திடும்பாலன்தானும்
சூஸ்திரம்தனைதெரிந்து சுருக்குடன்ஆடைபூண்டு
ஆத்திரப்படாதேயென்று அமைத்துமேதாயார்பக்கல்
பாத்திரம்தனையெடுத்து பாலகுருசாஸ்திரிவருகின்றாரே.

தரு.

நாராயணசாஸ்திரிமைந்தன் நலமுடன்வேதங்களை
பாராயணங்கள்செய்து பாலகுருசாஸ்திரிவாறார்-
வேதமுறைப்படிக்கி வேதியர்கடன்முடித்து
ஓதமந்திரம்பேசி உத்தமர்வாறார்
நாலுவேதங்களையும் நன்றாய்ஆராய்ந்துபார்த்து
சாலம்செய்யாமல்சாஸ்திரி தந்தைமுன்-வாறார்
தாயார்ஜெயலக்ஷிமி தந்திடும்பாலகுருசாஸ்திரி
வாயாரவாழ்த்திபோற்றி வண்மையாய்வாறார்
தந்தையைப்போல்சாஸ்திரங்கற்று தன்மையதிகம்பெற்று
விந்தையாய்குணத்தில்வாய்ந்த வேதியர்வாறார்
யெந்தனுக்குவயது இன்பமாய்பதினாறாக
தொந்தரவுசெய்யாமல் சேர்த்தேன்செல்வங்களெல்லாம்

கவி.

யென்னிடதாயேஉந்தன் இருபாதம்போற்றிசெய்தேன்
குண்ணியேமனதுவாடி கோபமாயிருப்பதென்ன
துன்னியேயெனதுதந்தை துன்பமும்செய்தாரோதான்
இன்னிலம்தனிலரிய யெடுத்துநீஉரைசெய்வாயே.

வ-ம். கேளும்தாயே இதுகாலமில்லாத முகாரவிந்தம் இன்றை தினம்வாடி யிருக்கவேண்டியதென்ன யென்தந்தையார் வைதாரா சொல்லும் தாயே.



ஜெயலக்ஷிமி-தரு.

சொல்மனதுவஞ்சியே யெனதுபாலா-சொ
அல்லல்பட்டேனே அன்பாய்நான்பெற்றேனே
இல்லரம்தன்னிலே யெக்காலம்இருப்பாயே

பாலகுருசாஸ்திரி-தரு.

இருப்பாயோவென்றுகேட்டாயே யெனதுதாயே
இருப்பாயோவென்று நீவெருப்பாய்பேசாதே
சிரிப்பாய்நீயெந்தனுக்கு கெலிப்பாயுரைப்பாயம்மா.

ஜெயலக்ஷிமி-தரு.

யுரைப்பேனான்கேளுமயனே யுன்னிடம்நானும்
யுரைப்பேனான்கேளும்தந்தை யுன்னைசெனிக்குமபோது
குறைப்படுமேயென்று கோர்ணார்யென்சொலவேன்

பாலகுருசாஸ்திரி-தரு.

என்னநான்செய்வேனென்குறீர் என்னதாயே
குண்ணுதேயிருமே குழந்தைமுன்னேசொலவாய்
உங்களெண்ணம்போலேநடப்பேன் எந்தன்தாய்தந்தைக்கு

ஜெயலக்ஷிமி-கவி.

உன்தந்தையார்உரைத்தவார்த்தை தளமெல்லாம்நடுங்குதேப்பா
விந்தையாய்யென்வயறுபற்றி யெரியுதேயென்னசெய்வேன்
சுந்திராநீபிறந்தாயானால் தொடுக்குமேபதினெட்டுவயதில்
சுந்தரம்சருத்துகங்கையில் கடினமாய்மாள்வாயென்றார்.

வ-ம். கேளுமப்பா குமாரச்செல்வம் யெனக்கு வெகுநாளாய் புத்திரசந்தானமில்லாமல் இருந்து உன்னை யீன்றெடுத்தேன் உன்னுடைய சோசிய கனிதத்தைப் பார்த்தோம் பார்க்குமளவில் உன் தந்தையார் உரைத்தார் உனக்கு பதினெட்டுவயதில் கெங்கை கரையில் மாள்வாயென்று இருக்கிறதென்றார் ஆனதால்-இப்போது பதினாறுவயது ஆகிறபடியால் இன்னம் இரண்டுவயது வருமளவும் பார்க்கபோகிறோம் மருப்படி பார்க்கப்போகிறோமா யென்று யெண்ணமாயிருக்கிறேனப்பா குமாரச்செல்வம்.

பாலகுருசாஸ்திரி-தரு.

ஆகாயிதுவென்ன ஆச்சரியம்-உனக்கு
ஆர்பார்த்தாரிந்த சாஸ்திரம்
ஓகோநீருமிப்போ உண்மையென்றுயெண்ணி
பாகாமல்யென்னை பார்த்தழுகிறாய்

ஜெயலக்ஷிமி-தரு.

அழவேண்டாம்யென்குறாய் மைந்தா யென்
அங்கபதருதே யெந்தா
பழுதுவந்திட்டால் பாவிநானென்செய்வேன்
விழலுக்குயிறைத்த விணைப்போலானேன்

பாலகுருசாஸ்திரி-தரு

ஆவதும்அழிவது ஒன்று-அதை
அறிந்தநீபாருமே இன்று
போவதுநிச்சயம் புதுமைநீகாட்டாதே
நாவாலறியவேநன்றாய் உரைக்கவந்தாய்

ஜெயலக்ஷிமி-தரு.

உரைக்கநானல்லவோ பாலா-அப்பா
உன்தந்தையைக் கேளும்நீசிலா
கருக்காயுரைத்தாரே நானிலமறியவே
இருக்கவேசாஸ்திரம் யெடுத்துப்பாரும்லோலா

பாலகுருசாஸ்திரி-தரு.

சாஸ்திரத்தி லென்னகுற்றம்
தந்தையே சொல்லும்பித்தம்
ஆத்திரமில்லாமல் அமர்ந்தநீபாருமே
பூர்த்தியாயெந்தனுக்கு புகழ்ந்தநீசொல்லுவாய்

நாராயணசாஸ்திரி-தரு.

அப்பாமகனேசாஸ்திரம் பொய்யோ-நீரும்
அறிந்துபார்இப்போது மெய்யே
இப்பாருலகத்தில்யென்னை செயிப்பாரோ
தப்பிதமல்லவே தானெடுத்துசொல்வேன்

பாலகுருசாஸ்திரி-தரு.

சொல்லவந்ததுசெடுமதியே சோதிடம்
சோதித்துபாருமே விதியே
யெல்லாகிரகமும் இடமாறியிருக்கவும்
பொல்லாதசாஸ்திரம் புகட்டுராயென்னிடம்

நாராயணசாஸ்திரி-தரு.

புகட்டநானல்லவே மைந்தனே-நான்
புத்திமாறியே சொல்லிகொண்டேனே
மூட்டுத்தனமாக முடியாதயென்றுயே
இராட்டெல்லாம்வெளிச்சமாய் இப்போதெரிந்துகொள்வாய்

பாலகுருசாஸ்திரி-கவி.

தெரிந்துநீர்கொள்ளுமென்ற தேவரீர்பதம்பணிந்தேன்
வருந்தியேநீங்கள்பெற்ற மைந்தன்மேல்வருத்தம்வேண்டாம்
பொருந்தியதந்தைபார்த்த சாஸ்திரம்பொய்யேயென்பேன்
இதமிந்துநீங்கள்இல்லரத்தில் இன்பமாய்வீற்றிருப்பீர்.

வ-ம். கேளும் தாயே நீயாதொன்றுக்கும் விசனம்வேண்டாம்என் தந்தை பார்த்தகனிதம் பொய்யாயிருக்கிறது நான் பார்க்குமளவில் மெய்யாக தோற்றப்பட்டது ஆனால் இல்லரத்தில் வீற்றிருப்பீர ஒரு ஆலோசனை என்னவென்றால் இவாள் எதிரியே நாம் இப்போ மானால் ரொம்பவும் விசனப்படுவார்கள் எங்கையாகிலும் சென்று மடிந்துவிட்டால் கேழ்வியில்லை தந்தையே ஒருவார்த்தை.

பாலகுருசாஸ்திரி-தரு.

தேசதேசங்கள்சுற்றி காசிநதியைக்கண்டு
வாறேன் வாறேன்
ஆசபாசமதாக நேசனுக்குவிடை
தாரும்விடை தாரும்

ஜெயலக்ஷிமி-தரு.

போய்வாறேனென்றுரைத்த புத்தியுள்ளயென்து
மைந்தாயென து மைந்தா
வாரமும்சரியாச்சே வந்திட்டதோகாலம்
நொந்தே நான்நொந்தே

பாலகுருசாஸ்திரி-தரு.

நொந்துநீயழவேண்டாம் வந்தவிதியைவெல்லப்
போமோவெல்லப் போமோ
உந்தன்மனமிரங்கி மைந்தனையனுப்பிடும்
ஆயேயிது ஆயே

காருயணசாஸ்திரி-கவி

அனுப்பிடுமென்றுசொல்ல அங்கம்பதருதடா
கண்ணேஎன் கண்ணே
குணப்படுமேஉன்னை கூட்டியனுப்பிவிட்டால்
முன்னேகண் முன்னே

பாலகுருசாஸ்திரி-தரு.

முன்னோராெனன்றுசொன்னீர் முருகுந்தனருளிருந்தால்தந்தை
அன்னிதம்ஒன்றும்வாராது அருளும்பரமனைப்போல்விந்தை

ஜெயலக்ஷிமி-தரு.

பரந்தாமனைகோரி பாலகாஉன்னைப்பெற்றேன்
இதற்கோபாவி இதற்கோ
இறந்தாலும்தோஷமில்லை எங்கள்கண்ணின்முன்னேபாலா

பாலகுருசாஸ்திரி-தரு.

சாவதுநிச்சயமோ தாயேநீசொல்லுவது
ஆமோயிது ஆமோ
ஆவதுஅழிந்துவிட்டால் அல்லாம்பின்வருகுமோ
போபோ நீரும்

நாருயணசாஸ்திரி-தரு.

வருகுவேனென்றுசொன்னாய் பாலாவென் — வள்ளலருளிருந்தால் பாலா
பெருகுமசெல்வமுண்டு சீலாவென் — பெருங்கீர்த்திதானுமுண்டு சீலா

பாலகுருசாஸ்திரி-கவி.

கீர்த்திகளுண்டென்று தெப்பிரமாகசொன்னீர்
சாஸ்திரங்கற்றதந்தை தன்மையாய்ஓராண்டுகாலம்
க்ஷேத்திரயாத்திரைசெய்து நின்றுமேஸ்தலங்களெல்லாம்
பார்த்துநான்வருவேன்தாயே பக்ஷமாயனுப்புவாயே.

ஜெயலக்ஷிமி-கவி.

சென்றுநான்வாரேனென்ற செல்வனேகேளும்சொல்வேன்
இன்றுநான் அனுப்பிவிட்டு யெப்போதுகாணப்போறேன்
அன்றுநான்பெத்தவப்பரும் அங்கமேபதருகையோ
நின்றுமேபுத்திரசோகத்தால் நிலத்தினில்வீழ்ந்திட்டேனே.

பொதுவசனம்.

இவ்விதம் ஜெயலக்ஷிமியும் நாருயணசாஸ்திரியும் துயரங்கொண்டிருக்க பாலகுருசாஸ்திரி காசிக்குப் போகிறார்.

பாலகுருசாஸ்திரி-கவி.

விடையதுபெத்துக்கொண்டு வேதியன்மைந்தன்தானும்
தடையில்லையென்றுசொல்லி தாசனைப்போலேதானும்
இடையினில்காவிவஸ்திரம் இன்பமாய்அணிந்துகொண்டு
படிதனில்சுத்தவேதான் பாலகுருசாஸ்திரிவருகின்றாரே.

தரு.

ராமராமாராமாவென்று — நாடியேமனதில்கொண்டு
வாமனஅவதாராவென்று — வந்தேன்தேசத்தைநாடி
காசியாத்திரைசெல்ல — காவிவஸ்திரம்தானணிந்து
பேசியாங்காரமென்று — பிரியமாய்வாருர்
தேசதேசங்கள்சுற்றி — தெரிசிக்கவிஸ்வநாதரை
பாசமுடன்இந்தியாபுரி — பட்டணம்வாரேன்
காடுமலைகள்தாண்டி — கடினமாய்வந்ததாலே
காடுசோகத்தினாலே — நான்திண்ணையில்வீழ்ந்தேன்

கவி.

வந்தநான்பட்டணத்தில் வண்மைசேர்இந்தியாபுரியில்
இந்தசோர்மனையைநாடி இருந்திடுவோமேயென்று
அந்தமாய்கதிரோனுந்தான் அஸ்தமாய்போனதாலே
துந்திரமாயமர்ந்து சயனித்துக்கொள்வேன்பாராய்

பொதுவசனம்.

இவ்விதமாக பாலகுருசாஸ்திரிநெடுந்தூரங்கடந்துசோகத்தினால் ஓர்மந்திரி திண்ணையில் நித்திரையாகயிருக்கஅப்போது அன்னகரத்தையாளப்பட்டகற்குணராஜன்கொலுவுக்குவருகின்றவிதங்காண்க

கற்குணராஜன் - கவி.

யென்னிடஅருகிருக்கும் இன்பமந்திரியேகேளாய்
நன்னகர்தன்னையாண்டு நாமுமேவருஷிப்பால்
சொன்னதோர்முகளுக்குதான் சுகமுடன்விவாகம்செய்து
மன்னவர்புகழ்ந்துபோற்ற மாசபைவருகின்றேனே.

தரு.

இந்திராபுரியையாண்டு இமையவர்பதத்தைவேண்டி
விந்தையுடன்வந்துமேவினான் நற்குணராசன்
சந்தோஷமாய் வந்துமேவினான்
வீணைதம்பூருபாட ஞானக்கீதங்கள்போட
வேடிக்கையாய்வந்துமேவினான் நற்குணராஜன்
காசினியோர்களெல்லாம் பேசிஎன்பேரைசொல்வார்
ஆசையுடன்வந்துமேவினான் நற்குணராஜன்
நேசமுடன் கொலுவாகினார்
புத்திரனில்லாதகாலே போற்றிவெண்பாதத்தை
எத்திசையோர்கள் துதிக்கவே சிவனைவேண்டி
எந்திழையை பெற்றெடுத்தேனே
அருமையாய்யென்குதித்த அன்புள்ளசெல்விதனக்கு
வருமையில்லாமல்செய்யவே திருமணமும்
வண்மையுடன் வந்துமேவினான்
புத்திரியைக்கொடுத்து சித்தம்சப்பட்டக்களித்து
பூரிப்பாய்நான்கொண்டுவருவேன் யெந்தன்முன்னே
தேரிப்பாய் மனதில்தேருவேன்
யென்வயதுமுதுமையீளனை நோய்கொண்டதினால்
யெல்லாம்பழிப்புக்காகுமே யென்றுசொல்லி
நல்லார்புகழைப் பாருமே
மானகர்புகழ்கின்ற மந்திரிகுணமுள்ளோனே
மனதையரியவேண்டுமே விவாகம்செய்
மார்க்கமாய்நீர் கொண்டுவாருமே

குணமுள்ளமந்திரி - கவி.

அரசனும்அழைத்தசேதி அன்புடன்காதில்கேட்டு
துருசுடன்பணிகள்பூண்டு தோகையர்கண்களிக்க
வரிசையாய்வாளுமேந்தி வள்ளலார்பதத்தைபோற்றி
நெரியுடன்குணமுள்ளமந்திரி நேரினில்வருகின்றேனே.



தரு.

நற்குணராசனுக்குநர்பார் குணமுள்ளமந்திரி
நாடிபிதாவாரேனே அரசன்முன்னே
தேடியிதோ வாறேன்
அற்புதமங்கையரை அரிவையைவிவாகம்செய்ய

சு-ஆவல்கொண்டுமே யேவல்செய்திட
தாவியெந்தனை கூவியழைத்தாரோ - நற்

யெந்தராசர்க்காகிலும் அவர்யேந்திழையைதந்து
இன்பம்அதுவேகொண்டு தென்பாயெனையழைத்தார்
சு-யிணையடிபோற்றியே துணையில்லாவாழ்க
குணமுள்ளமந்திரி கூறுவேன்நானே-நாடி

நாளுக்குநாளாக நற்குணராஜனுக்கு
ஆளும்நன்மையில்லா அவஸ்தைகள்வந்தநேர
சு-அரசுபேதந்து பரிசைகள்கொடுக்க
திருசுடன்யென்னை வரிசையாய்அழைத்தார்

மங்கைசௌந்தரியை மன்னர்க்கொடுக்காமலே
நங்கையையென்மகனுக்கு நானேசூட்டியேவைப்பேன்
சு-நற்குணன்செல்வியை அற்புதமாக
கைப்பொருளாக கடினமாயேக

மந்திரி-தரு

மன்னவரேஉந்தனிரு உந்தனிருமலரடிக்கே
மிகயான் யான்சரணம்
யென்னையிங்கு அழைத்ததென்ன
இன்பமாகநீரும் ஓதுவீர்

நற்குணராஜன்-தரு.

ஓதுமென்று சொல்லவந்த
உண்மையுடன் குணமுள்ளமந்திரி
வாதுகளில்லாமலே யில்லாமலே
வருத்துரையும் மெனதுமந்திரி

மந்திரி-தரு.

உரையுமென்று நீருரைத்திர்-நீரு
உத்தேசம் மென்னசொல்வீர்
அரையுமேமுன்சொன்ன வார்த்தை-முன்சொ
அன்பாயெந்தனுக்கு உண்டய்யனே

நற்குணராஜன்-தரு.

உண்டென்றுசொல்ல வந்தாய்-சொல்ல
ஒருமனதாயெனக்கு யில்லையப்பா
கண்டோர்நகைத் திடவே-நகை
காலமதுயெந்தனுக்கு வந்துதையோ

மந்திரி-வேறுதரு.

வருத்தம்நீர்கொள்ளாதீர் வஞ்சியைதருகவே
மன்னர்மன்னர்கள் வந்தால்தந்திடுவோம்-நீரும்
நன்னயமாய் அரசில்இருந்திடுவீர்

நற்குணராஜன்-தரு.

இருந்திடுமென்றுநீர் திருந்தவேசொல்குறாய்
வருந்தியென்மருமகன் வல்லவல்லையேயெனக்கு
பொருந்தியபட்டமது மிகதொல்லையே

மந்திரி-தரு.

தொல்லையென்றுநீரும் துயரங்கள்படவேண்டாம்
நல்லமனதாஒன்று சொல்வேன்கேளுமேமகள்
வல்லவனுக்குத்தர நீரும்விள்ளுமே

நற்குணராஜன்-தரு.

விள்ளுமென்றுநீரும் கள்ளமாய்பேசுராய்
யெல்லையில்பழுப்பாரும் மென்னசெய்வேன்தேவி
அல்லலைஒழித்துமே நன்றுஉய்குவேன்

மந்திரி-கவி.

அல்லலும்வந்தாலென்ன அவதிகள்நேர்ந்துமுன்னே
யெல்லையில்புருஷனுண்டோ யீசனார்செயல்போலாகும்
வல்லவன்மைந்தனுக்கு வஞ்சியைதந்திட்டாலே
நல்லதுசொன்னேன்சொன்னேன் நலம்பெறலாகுந்தானே.

நற்குணராஜன்-கவி.

சொன்னதுமெய்தான்மெய்தான் சுந்திரமானதேவி
அன்னவள் அன்புஜமாதுஆத்திரப்படுவாள்சொன்னேன்
இன்னகர்மெச்சவேதான் யேந்திழைதனையழைத்து
நன்னயமாகக்கேட்டால் நவிலுவாள்சொல்வேன்மந்திரி.

அன்புஜமாது-கவி.

நாதனாரழைத்தசேதி நங்கையும்காதில்கேட்டு
தீதுகளொன்றுமில்லா திகழொளிபணிகள்பூண்டு
சூதுகள்தெரியாமாது தோகையும்அன்புஜமாது
மாதவள்நாதரைக்காண மங்கையும்வருகின்றாளே.

தரு.

அரிவையமூர்தகுணை திருவுமுகவதனி
அன்புஜமானமாது அன்புடன்வாறாள்
தருவைநிகர்த்தருபி சந்திரனைப்பழித்தமேனி
வருமைகளில்லாமல்தான் வஞ்சியும்வாறாள்
முத்துசரமேலணிந்து மோகனக்கல்மாலைபூண்டு
இத்தலம்துதிக்கமாது யேந்திழைவாறாள்
பச்சைவைடூரியக்கல் பதக்கமும்மேலணிந்து
அச்சமில்லா அனபுஜமாது அரிவையும்வாறாள்
கச்சணிந்தகொங்கைமீதில் காந்திபளபளென்ன
மெச்சும்புகழ்மாதுமே மெல்லியும்வாறாள்
பாமன்பதத்தைக்கோரி பாவையாள்சௌந்தரியை
திரமுடன்பெற்றெடுத்த சேயிழைவாறாள்

அன்புஜமாது-தரு.

சருணம்சருணம் யெந்நாதா-தேவி
சாற்றிபோற்றுவேன் தினம்வேதா
அருணஉதையம்பேர்லே அமர்ந்திட்டாய்அரசினில்
தருணமிதுவேயென்று தையல்யான்பணிந்தேனே

நற்குணராஜன்-தரு.

பணிந்தாகின்றயெந்தன் தேவி-நானும்
பாவியாய்போனேனே மேவி
துணிந்துயென்மகளுக்கு சொல்லவும்வல்லையே
கனிந்துமேபுருஷனும் காசினில்இல்லையே

அன்புஜமாது-தரு.

இல்லையென்றுசொல்லும் நாதா-உலகில்
இறைத்துபிடித்திட்டார் வேதா
அல்லல்படவேண்டாம் அருமைமகளுக்கேத்த
யெல்லையில்புருஷனும் யிருப்பாரேபரமனாலே

நற்குணராஜன்-தரு.

பரமனுலேஇக்செதி யாச்சே-இந்த
பாரில்நகைக்கரசு போச்சே
திரமானுல்மந்திரி செல்வமகனுக்கிப்போ
தருமனுலேப்போலே தந்திடுஓமிப்போ

அன்புஜமாது-கொச்சகம்.

தந்திடுமென்றுநீரும் தந்திரமாய்பேசவந்தீர்
யெந்தனை பழிக்கவேதான் இவ்வார்த்தைசொல்லலாமோ
அந்தகனுந்தனுக்கு அமைத்தாரேமிந்தபுத்தி
குந்தகம்வந்ததேநீரும் கூருவேன் கூருவேனே.

நற்குணராஜன்-கொச்சகம்.

கூருவேனென்றுசொன்ன கோதையெந்தன் மாமயிலே
ஆருமேதுணையுமில்லை அருமைமகளைத்தருவதர்க்கு
பாருமேயெந்தனுக்கு பாதகம்வந்திடாமல்
வேருநீசொல்லிடாமல் மெல்லிசையைதருகுவாயே

அன்புஜமாது-தரு.

மன்னுபுமக்குபுத்தி யில்லையா-யிது
மார்க்கமாயுனக்கிது சொல்லையா
நண்ணுகாசர்கள் நம்மைமதிப்பாரா
யென்னுசொல்வேன்ஊழியன் இவனுக்குதரலாமோ

நற்குணராஜன்-தரு

தருவேனேயென்குறுய் பெண்ணே-இனி
தாளாதுயென்னுயிர் கண்ணே
ஒருமையாய்நீதந்து ஒத்துமணம்புரிந்தால்
வருமையில்லாமலே வஞ்சியைகாண்பேனே

மந்திரி-தரு.

பார்ப்பேனென்றுசொல்லும் மன்னு-இந்த
பாரில்ராஜருண்டோ முன்னுல
ஏற்பானமகளுக்கு இப்போதுகிடைக்காது
காற்பானேமகளுக்கு கன்னியைதந்திடு

அன்புஜமாது-தரு.

தந்திடுமென்றுநீ சொன்னுல்-அடா
சதிகாரப்பாவியே முன்னுல்
யீந்திடுவேன்ராஜர்க்கு யெவர்க்காகிலும்பார்த்து
சாந்தமுடனே தயவுடன்வந்தாயோ

நற்குணராஜன்-தரு.

தயவுடன்வல்லையே பெண்ணே-யெனக்கு
தவரிப்போகுதே என்கண்ணே

வாயாடாதேநீயும் வருத்தம்வந்துவிடும்
ஆயாசம்கொள்ளாதே அன்புஜமாதே

அன்புஜமாது-தரு.

கொள்ளாதேயென்று புரைத்தாய்-வஞ்சியை
கொடுமென்று நீயுமுரைத்தாய்
வள்ளலைவேண்டி நான் வருந்திநான்பெற்றேனே
செல்விமனமது தீராதுயென்செய்வேன்

மந்திரி-கவி.

தீராதுயென்றுசொன்ன சேயிழையென்தாயே
ஆராதுயாத்தைநான் ஆத்திடுவேன்இப்பொழுதே
பாரோர்புகழநீரும் பாவையற்குசொல்லிவையும்
நேரில்நான்சென்றுயிதோ நேரிழை அழைத்துவாரேன்

சௌந்தரவல்லி-கவி

கானகமயிலைப்போலே கன்னியும்புகழ்ந்துபேசி
நானிலம்துதிக்கவேதான் நற்பணியணிகள்பூண்டு
தானுமே அலங்கரித்து சௌந்தரியானமாது
மானிலம்புகழமாது மங்கையும்வருகின்றாளே.

தரு.

சந்திரன்ஒளியைப்போலே விந்தையாய்பிரகாசம்துன்ன
சௌந்தரிமாதுவாறாள் தந்தையைக்காண-சௌ
இந்தஉலகத்தோர் யென்னைப்புகழ்ந்துபோற்ற
சு-யேந்திழையாளுமே சாந்தகமுடனே
காத்திரமாகவே கண்மணிவாறாள்-சௌ

அன்னநடையிலங்க சொர்னபணிதுலங்க
அரிவையிதோவந்தனள் தந்தைதாய்முன்னே-அ
மின்னிடையொட்டியாணம் மெல்லியலங்கரித்து
சு-மிஞ்சியேபுகழ் கொஞ்சியேபேசி
ரஞ்சிதவசிகரி வஞ்சியும்வாறாள்-சௌ

கல்விழைத்தமூக்குத்தி கைதனில்கங்கணமின்ன
காரிழையிதோவாறாள் சௌந்தரிமாது-கா
வல்லிக்கொடிபோல்இடை செல்விஅன்னம்போல்நடை
சு-வானவர்மோனவர் தானவர்பாட
மேனகரம்பையும் முன்னிட்டோட-சௌ

தந்தையழைத்தவிதம் விந்தையறியவேண்டி
தையல்சௌந்தரிவாறாள் ஒய்யாரமாக-தை
குந்தகமில்லாதயார் குணமுடனேயென்னை
சு-கூறியழைக்கவே நாடியேவந்தேன்
வீரியமாகவே மெல்லியும்வந்தேன்-சௌ



சௌந்தரவல்லிதரு-நைநோலமாரி.

தந்தைதாயார்உங்கள் தாளிணைபணிந்தேன்
யெந்தையேமுகம்வாடி யிருப்பதென்னசொல்வீர்
யேதுயித்தனை வாதுவந்தது
சூதையறிகிலேன் ஓதுவீர்களே

கற்குணராஜன்-தரு.

ஓதுவேன்சேளுமே உத்தமிசெல்வியே
வாதுகளொன்றுமில்லை வந்துதேதுன்பமும்
வஞ்சியேயுன்னையும் கொஞ்சியோராஜன்
மிஞ்சியேமணமாலை சூட்டவும்யில்லை

சௌந்தரவல்லி-தரு.

யில்லையென்றுதந்தையேநே துன்பபடுகுறாய்
வல்லிக்கியீசன்மணவாளன் அமைத்திடுவார்
வருத்தங்கொள்ளா திருத்தமனதே
பொருத்ததாயார் வருத்தமென்னமோ

அன்புஜமாது-தரு.

வருத்தமில்லையம்மா வள்ளலார்செயலாலே
பெருத்தஉலகந்தன்னில் பிரியமாய்பெற்றெடுத்தேன்
பேசிமணமும் கூசிடாபல்
மாசிபோலவே மாலைசூட்டுவாரில்லையே

சௌந்தரவல்லி-கவி.

சூட்டுவாரில்லையென்று துயரமுங்கொள்ளவேண்டாம்
காட்டுவார்பரமன்தானும் கன்னியைசெனித்தபோது
காட்டுவார்புருஷனப்போ கானிலமரியஇங்கே
கூட்டுவார்வருவார்சொன்னேன் குணமுடன்அமர்ந்திருப்பீர்.

நற்குணராஜன்-கவி.

இருப்பீரென்றுசொன்ன யேந்திழையென்னாசெய்வேன்
குருப்புடன்பெந்தனுக்கு குணமதுமாருதையோ
வெருப்புமாய்சொல்லவந்தாய் வேந்தனேவிவாகம்செய்தால்
கருப்பில்லாகண்முன்னாலே கண்டுநான்மகிழ்வேனம்மா.

சௌந்தரவல்லி-தரு.

மன்னரெனக்கு யெங்கேபார்த்தீர்
மாலைசூட்டவேநீரும் கோலங்காட்டவே
யென்னாபுதுமைசொல்லவந்தீர் எந்தன்முன்னாலே
தந்தைசிந்தை நொந்தாலே

நற்குணராஜன்-தரு.

புதுமையொன்றுமில்லையம்மா பொற்கொடிமாதே
யெந்தன் சொற்படிகேளே
இதுவும்உந்தன்தாயாரை நீஇன்பமாய்சேளும்
மகளே தென்புதாய்மீளும்

சௌந்தரவல்லி-தரு.

யெந்தன்தாயேயெந்தன்தந்தை யெடுத்துசொன்னதை
நீயும் அடுத்தாவிள்ளதை
குந்தகம்வருவதுண்டோ கூருவீர்முன்னே
மனம் தேருவீர்பின்னே

அன்புஜமாது-தரு.

கூருமென்றுநீயும்கேட்ட கோதைமகளே
மனசாதுவாய் கேளே
பாரில்அரசரில்லையென்று பரிவாய்கொந்தாரே
மந்திரிக்கி ஊரிசிந்தாரே

சௌந்தரவல்லி-தரு.

தந்தாரென்றுவார்த்தைசொல்ல தாயேசம்மதமோ
இதுவாயாக உன்னிதமோ
யெந்தாயிவர்என்னைக்கொடுக்க எங்கேஅடுக்குமோ
மாலைமங்கை முடிக்குமோ

அன்புஜமாது-தரு.

முடியாதென்றுசொல்லவேண்டாம் மொய்க்குழல்மாதே
பருவ பக்குவகோதே
மோசமதுவந்துவிடும் முகுந்தனருளால்
தந்தைக்கு தகுந்தபொருளால்

நற்குணராஜன் - தரு.

தந்தைதாயார்உயிரிருக்க தாயேகொள்ளுமே
விவாகம் சேயேவிள்ளுமே
சாற்றுவதுநல்லதல்ல யேற்றகணவவன்தான்
உனக்கு பார்த்துவந்தேன்யான்

சௌந்தரவல்லி-கொச்சகம்.

பார்த்துவந்தேனென்றுரைத்தார் பாசமுள்ளயெனதுதந்தை
யேற்றவார்த்தைதடுத்து யெப்போதும்சொன்னதில்லை
கார்த்துயென்கணவருமே கண்முன்னேவந்தாராகில்
பார்த்துநான்சொல்லுவேனே பாவைமனமுடித்திடுவீர்.

நற்குணராஜன்-கவி.

செல்வியுமுரைத்தபோது சிறப்புடன்சந்தோஷமானேன்
நல்மனதாகஓடி நற்குணமுள்ளமந்திரிமகனே
வல்லவிமாலைசூட்ட வரிசையாய்அலங்கரித்து
அல்லலில்லாமநீரும் அன்புடன்கொண்டுவாரும்

மந்திரி-தரு

ஆனந்தசந்தோஷம் கொண்டுமேமந்திரி
அன்பாய்யெழுந்தான் இல்லாய்நாடி-மகனே
இன்பமாய் அலங்கிர்தம் செய்யவேஓடி
யெந்தன்மனதைப்போலே இவ்வுலகிலுண்டோ
சந்தோஷங்கொண்டுமிக நடந்தானே-மைந்தன்
சௌந்தரியைமுடிக்க தொடர்ந்தானே
நற்குணராசன் புத்திரியைமைந்தனும்
நன்றாய்முடித்துக்கொண்டால் நமக்குபட்டம்பின்னால்
நாளுமே ஆண்டுவரலாம் யென்றுமேகோஷ்டம்
இப்போதுராஜனுக்கு இருக்கின்றகுணமது
தப்பிதமாய்வந்துவிடும் தாண்டிசெல்லுவோம்-மைந்தன்
யெப்படிகன்னியைமணம் தாண்டிவிள்ளுவோம்

சோமசுந்திரம்-கவி.

தந்தையாரழைத்தபேசி தனயனும்காதில்கேட்டு
குந்தகமில்லா குணமுள்ளமந்திரிமைந்தன்
சந்தோஷமாககாண சரிகைவேஷ்டிகள்பூண்டு
விந்தையாய்சோமசுந்திர வேந்தனும்வருகின்றானே.

தரு.

சோமசுந்திரன்பாலன்யானே மந்திரிமைந்தன்-சோ
காமன்போலேவடிவம் கந்தர்ந்துயெந்திரேகமதிக
தாமதப்பட்டுயிப்பால் தந்துகள்வந்ததைப்போல-சோ
வேசிகள்மேல்பிரியம் விருப்பமில்லாமல்கொண்டேன்
காசிக்கொடுத்தாலும் இக்கடமையபெற்றுக்கொண்டேன்

கக்கல்யிரும்பல்முதல் கிரந்திவெள்ளநோய்கொண்டு
பக்குவமாய்பார்த்தும் பாரில்நகைக்கலாச்சே
யிளநோய்கொண்டுயான் யெடுத்தேன்பழிப்புக்கு
வேலையில்ஒருவிதமாய் விளங்குதேயெந்தனுக்கு
யிப்படியாவிருக்க யெந்தன்தந்தையவர்
மைப்படிகன்னியை மணம்கூட்டவாரூரே

சோமசுந்திரன்-தரு.

வந்தனம்தந்தேனே அய்யா-யென்னை
வரவழைத்ததென்ன மெய்யா
சிந்தைமகிக்ஷியாய் சீக்கிரமாய்ஒடி
யெந்தனைநாடியே யேனிங்குவந்தீரோ

மந்திரி-தரு.

வந்தேனென்றுசொல்லும் பாலா-யிப்போ
வாதியுனக்குதந்தேன் லோ
இந்தவிதிவசம் யென்தலையில்போட்டான்
அந்தகன்இவ்விதம் அமைத்தானேயுமக்கிது

சோமசுந்திரன்-தரு.

அமைத்ததினாலென்ன தந்தை-நீரும்
ஆத்திரப்படாதே விந்தை
நினைத்துவந்ததென்ன நீயிங்கேசெல்வாயே
குணத்துடன்நீருமே கூருவீரிப்போதே

மந்திரி-தரு.

கூருவேன்கேழ்ப்பாயே துஷ்டா-ஒரு
கோதையைபார்த்தேனே பதஷ்டா
ஆருக்கும்கிடைக்காத அரசுபட்டந்தன்னை
நேருக்குசொன்னேனே நிந்தனையாச்சுதே

சோமசுந்திரன்-தரு.

நிந்தனைவராது தந்தை-யெனக்கு
நீர்மணம் செய்திடுமவிந்தை
அந்தகன்னியைநான் அணையாமல்இருப்பேனா
யெந்தவிதமானாலும் யிதோபோரேன்தந்தையே

மந்திரி-கவி.

போரேனென்றுசொன்ன போக்கிரிபையலேகேளாய்
நோய்நீசென்றாயானால் நேரிழைமதிக்கமாட்டாள்
பாரோர்கள்உன்னையென்னை பழிப்புக்குஇடமுமாச்சே
ஆரார்கள்அனுபவிப்பார் அரசுதான்யென்னசெய்வேன்.

பொது வசனம்.

இவ்விதமாக மந்திரிகுமாரனை தூஷித்துவிட்டு விசனமாயிருக்க அச்சமயத்தில் பாலகுருசாஸ்திரி நித்திரைவிட்டு யெழுந்திருக்க மந்திரிபார்த்து சொல்வது.



மந்திரி-தரு

ஆரய்யா இவ்விடத்தில் தூக்கம் மனையேக்கம்
அரிய உரைப்பாய்சொல் கேழ்க்க

பாலகுருசாஸ்திரி-தரு.

கேழ்க்கும்பதில்வார்த்தையென்னமோ அதில்முன்னமே
கெம்பிரனுகலந்த வன்னமோ

மந்திரி-தரு.

வண்ணமொன்றுமில்லை அய்யா இதுமெய்யா
உன்வார்த்தையை கேழ்க்குறேன் துய்யா

பாலகுருசாஸ்திரி-தரு.

துய்யாபதில்வார்த்தைசொல்லவோ நீரும்வெல்லவோ
தலை தூரத்திலிருந்துவந்தேன் மெள்ளவே

மந்திரி-தரு.

மெள்ளநீரும்சொல்வாய்வீரும் உந்தன்பேரும்
கள்ளமில்லாமலே நீகூறுவாய்

பாலகுருசாஸ்திரி-தரு.

தேர்வதினலென்னகுற்றமா யெனக்குபித்தமா
தேசாந்திரியாய் வந்தேன்சுற்றமா

மந்திரி-தரு.

சுற்றமாய்தாய்தந்தையில்லையோ அதுதொல்லையோ
திண்ணையில்சோகமாய் வீழ்ந்தீரோசொல்லய்யா

பாலகுருசாஸ்திரி-தரு.

சொல்லதாய்தந்தைஇறந்துமேகான் துறந்துமேகடந்து
சோகமாய்வீழ்ந்தேன் கடந்துமே

மந்திரி-தரு.

கடந்தநீரும்செல்குதீர் அதைபுல்குவீர்
கண்டுயரியவே புகருவீர்

பாலகுருசாஸ்திரி-தரு.

நில்லுமென்றசொல்லயேது யிதுவாதுநான்
சோரப்காசி கெங்கைக்குஓது

மந்திரி-கவி.

காசிக்கிபோறேனென்ற கருத்துள்ளபாலாகேளாய்
வேசியர்தரிசனங்கள் வேந்தனேஉண்டோசொல்வாய்
தாசிகள்வீடுஉண்டு தானுமேஅமைத்துவைப்பேன்
நேசித்துநீர்கலந்து நின்றுநீசெல்லலாமே.

பாலகுருசாஸ்திரி-கவி.

அய்யய்யோவென்னபாவம் ஆகாதவார்த்தைசொன்னாய்
நய்யவேயெந்தன்காதில் நாறுசம்விட்டாப்போலே
வையகத்தோர்களெல்லாம் வழிமரித்துமேயென்னை
பையவேஉதைக்கநீரும் பாற்பதைபோலஆச்சே.

மந்திரி-தரு.

அப்படிநீயெண்ணவேண்டாம் இப்போ
அரைகுறேன்ஒருவார்த்தை கேளும்
தப்பிதமில்லாமல் தாலிதரிக்கவே
இப்பொழுதேகூலி யெடுத்துதருகிறேன்

பாலகுருசாஸ்திரி-தரு.

தருகிறேனென்றுமேசொன்னால் கூலிக்கு
தாலிதரிப்பாரோ பின்னால்
வருங்கெதியடைவாரோ வருத்தம்எனக்குவேண்டாம்
ஒருமையாய்காசிக்கு உத்தமாசெல்லுவேன்

மந்திரி-தரு.

செல்லாதேசெல்லாதே பாலாவிவாகம்
சேயிழைமுடித்திடும் சீலா
அல்லலொன்றுமில்லை ஆயிரம்பொன்தருவேன்
வல்லவிவையகூடி வாங்கிகொள்ளும்பாலா

பாலகுருசாஸ்திரி-தரு.

கொள்ளுவேனேதடையில்லை யென்று
கூறுவீர்பின்னாலே தொல்லை
யெள்ளுக்குள்யெண்ணைபோல் யிருக்கிறார்யீசனும்
நல்லதுநல்லது நான்வாரேன்கடவுள்கள்

மந்திரி-கவி.

சந்தோஷம்கொண்டேனப்பா சாஸ்திரிமகனேகேளும்
விந்தையாய்நீரும்சென்றால் மெல்லியின்பேரில்கையை
தொந்தரவுசெய்யாமல்தான் சகமுடன்வந்தாயானால்
தந்திரமாக்த்தாரேன் தயவுடன்வாங்கிசெல்வாய்

மந்திரி-கந்தார்த்தம்.

பென்னிடதோழமாரே யின்பமாய்சொல்லவேண்டும்
நன்னகர்மதிக்கவேண்டும் நற்குணராஜன்செல்வி
அன்னவளை விவாகம்செய்ய அன்புடன் அலங்கரித்து
இன்னகர்மெச்சவேதான் என்னுடன்வருகுவாயே.

தரு.

யேகுவோமே மணஞ்செய்ய　　யேகுவோமே
நாசரீகத்துடன்　　நன்றாயலங்கரித்து
வேகமாயேயடியே　　வேந்தன்முன்வந்தோமே

மந்திரி-கவி.

நன்னகராண்டுவந்த நற்குணராஜேகேளும்
உன்னிடஇஷ்டம்போலே உத்தமன்கொண்டுவந்தேன்
மன்னர்கள்மகிழவேதான் மாங்கல்யம்சூட்டவேண்டும்
அன்னவள்சௌந்தரிமாதை அலங்கிர்தம்செய்குவாயே.

நற்குணராஜன் தரு.

இத்தனைவடிவமுள்ள　　புருஷன்
யேன்மறைத்துவைத்தீரோ　　தான்மறைத்துவைத்தீரோ
அத்தன் இவனேயென்று　　அமைத்தானேபிர்மதேவன்
சுத்தமுள்ளமாதுபுருஷன்　　தோகையேகண்ணால்பாரும்

அன்புஜமாது-தரு.

பாராய்கனியைசீராயென்ற　　பாலனை நான்பார்க்கவே
மேலோர்புகழ்ந்து　　யேற்கவே
நேராய்நீயிதகாலம்　　நேரில்கொண்டுவாராமல்
சீராய்மறைத்துவைத்தாய்　　சேயிழையேபராயம்மா,

சௌந்தரவல்லி-தரு.

எனக்குதகுந்தமன்னவனோ　　யிவரோயென்றுசொல்லுவேன்
தவர்தலையொன்று　　விள்ளுவேன்
கணக்குடன் அமைத்தாரே　　காயனைப்போல்நாதன்வேறு
நினைக்கவேவேண்டாமம்மா　　நேரிழையைவிவாகச்செய்வாய்.

பாலகுருசாஸ்திரி-தரு.

செய்வாயென்றுதானுரைத்த சேயிழையும்அதுதானே
காரிழையும் யிதுதானே
நய்புதேமனம்வாடி நங்கையாளை விவாகம்செய்வீர்
உய்யவேமாதுதன்னை உத்தமரேகொண்டுவாரும்

மந்திரி-தரு.

வாருமென்றுரைத்தபாலா வருத்தநீயும்கொள்ளாதே
பொருத்தமாக விள்ளாதே
தாருமாறாய்பேசாதே தந்திரமாயமர்ந்திருப்பாய்
வேருவிதநினைக்காமலே வேதியனைவாங்கிசெல்வாய்

நற்குணராஜன்-கவி.

ஆசையாய் அருகிருக்கும் அன்புள்ளமந்திரிகேளாய்
நேசமாய்வேசியரெல்லாம் நின்றுமேகோஷ்டங்கள்பாட
வாசமாயிருவர்தன்னை மணக்கோலத்துடனேகொண்டு
தேசராசர்கள்மதிக்கச் செய்வாய்நீயென்றுமந்திரி



மந்திரி-தரு.

அந்தணமாரெல்லாம்கூடினார் திருஆனந்தகூத்துகளாடினார்
மந்திரமறையவர்பாடினார் மல்லிகைபூபந்தல்சூடினார்
சாலுங்கரகமும்நாட்டினார் தந்திரமாகவேகாட்டினார்
மேலும்சௌந்தரிக்குமீட்டினார் மெல்லியைமாலையும்சூட்டினார்
நற்குணராஜன்புதல்வியை நாமும்மாலைசூட்டஎண்ணம்உதவியே
பக்குவமாககொண்டேனே பாரோர்புகழவேவிண்டேனே
யெப்பொழுதும்போலிருக்கவே யேந்திழைமனம்பொருக்கவே
தப்பிதம்செய்யாமல்நீருமே தாலித்தரிக்கவேபாருமே

நற்குணராஜன்-கவி.

தரித்தோம்மாலைசூடி சௌந்தரிமகளுக்கிப்பால்
குரித்துமேகிரகந்தன்னில் குணமுடன் அமைந்திருப்பீர்
பிரித்துமேசோபனங்கள் பிரியமாய்செய்யவேண்டும்
மரித்துநீசொல்லவேண்டாம் மங்கையேஅனுப்புவாயே.

பாலகுருசாஸ்திரி-தரு

ஆகாதான்யென்னென் றுரைப்பேன் இந்த
அரிவையைப்பார்க்கவே ஒருமனதாயில்லையே
ஓகோயிவளைப்போலே உலகத்தில்கண்டதில்லை
உருகுதேயெந்தன் மனம்வாடி
பாகார்மொழியுடைய பாவையைசேராவிட்டால்
பரந்துபோகுமே யெந்தனுவி
வாகானமொழியுரைக்கும் மந்திரிவார்த்தைக்குபதில்
மருத்துசெய்ய வேணுமேதடி
பொருத்துபார்ப்பசென் ஹேடி
குறித்துபஞ்சணைமீதில் நாடி
லஞ்சியமே கொஞ்சிடவும்
மிஞ்சியேநான் வந்தேனடி-ஆ

சௌந்தரவல்லி-தரு.

யென்னருமைநாதனே இன்பமுடன் வாருமே
உன்னிடபாதத்திற்கு உத்தமிபணிந்தேனே

பாலகுருசாஸ்திரி-தரு.

பணிந்துநின்றமாதேநீயும் பாவையேவாழியே
துணிந்துயென்னைத்தொடாதே தோகையேநீசெல்லுவாய்

சௌந்தரவல்லி-தரு.

சொல்லுவாநீயென் றுரைத்தீர் சேயிழைமேல்குற்றமோ
நல்லதல்லஉந்தன்மேல் நருமலரைவிசினேன்

பாலகுருசாஸ்திரி-தரு.

வீசவும்ஆசைநான்கொண்டேன் மெல்லியேவருவாயே
பாசமாகபஞ்சணைக்கு பாவையேவருவாயே

பாலகுருசாஸ்திரி-கவி.

மந்திரிசொன்னசொல்லை மரித்துநான்பார்ப்பதாலே
இந்தநேர்வயதில்கரும்பு இம்மாதைசேராவிட்டால்
குந்தகம்வந்துசேரும் கோதையாவள்தானுந்தனுக்கு
சந்தோஷமாகச்சேர்ந்து தாவியேசெல்லுவேனே.

சௌந்தரவல்லிதரு.

நாதாஇன்னந்தாமஷம் மேன்காதா
கன்னிகையைசேரும் பங்கம்வாராமலே-நா
ஆதாவாகயுக்தன் அடியிணைபோற்றிசெய்தேன்
வேதவித்பபடிக்கி மெல்லியைநீசேர்ந்திடுவாய்

பாலகுருசாஸ்திரி-தரு.

சேரத்தடையுமில்லை உன்னைசேர
சித்தம்களித்து உத்ரமிசெம்ப்பாய்-சே
தாராய்பூங்குழலே தாவியேமோகத்தினல்
கோரயென்னிடத்தில்வர கிந்தனைகளாச்சுதையோ

சௌந்தரவல்லி-தரு.

ஆச்சுதேயென்றுசொல்ல ஆச்சுதே
அங்கம்பதரியே பொங்கமாய்பேச-ஆ
பேச்சுகள்பலவாருக பிரியமாய்பேசிருந்தால்
காசுஷிகொடுப்பாரைப்போல் கைகலந்தீர்போம்வாருய்

பாலகுருசாஸ்திரி-கவி.

கூடியேஇருவர்காமும் கோதையேமகிஷிபானேம்
தேடியேமாளிகைக்குசீக்கிரம்செல்லவேண்டும்
ஓடியென்தாயார்தந்தை உத்தமர்தன்னைபார்த்து
நாடியேவருகின்றேனே நங்கையேஅனுப்புவாயே.

பாலகுருசாஸ்திரி-கவி.

கூலிக்குதாலிகட்டி கோதையைபுணர்ந்தேன்பிர்மா
ஆலிக்குமொருடுவேருண் டாக்கினதாச்சரியம்
தாலியைதரித்துவிட்டு தனியேகாண்பேகும்பாவம்
யிளைநோய்கொண்டோனுக்கோ கூலியீய்ந்தோனுக்கோசொல்.

பொது வசனம்.

இந்தகவியை யெழுதி சௌந்தரியிடத்தில்தந்து முன்சொன்ன மந்திரியிடத்தில் வந்துசொல்வது.

பாலகுருசாஸ்திரி-கவி.

உந்தன்சொல்படியேநானும் உகந்துமேவிவாகம்செய்தேன்
யெந்தன்சொல்படியேபொன்னை யெடுத்துமேதருகவேண்டும்
குந்தகமொன்றுமில்லை கோதையாள்பேச்சுமில்லை
வந்தனம்தந்தேன்காசி வகையுடன்சென்றுவாரேன்.

மந்திரி-வசனம்.

ஆனால் அப்படியே பொன்னைத்தந்தேன் காசிக்கி சென்றுவருவாய் காம்னைத்தகாரியம் முடிந்துவிட்டபடியால் நமது மைந்தனாகிய சோமசுந்திரனை அலங்கரித்து சௌந்தரியிடம் அனுப்பவேண்டும் வாருங்களப்பா அமச்சமாரே.

பாலகுருசாஸ்திரி-தரு.

கூலிக்கிதாலிகான்கொண்டுமே கட்டியேவாரேன்
குலிசபாவியேதோகையே காத்திடப்போரேன்
அன்னைதந்தையருஞ்சொன்ன கணிதப்படி ஆச்சேயெனக்கு
முன்னேபதினருவயதுமே தாண்டியேபோச்சே
காசிக்கங்கையைநான் பூசிப்பதாகவேதேடி
நேசிக்கும்விஸ்வநாதரை காணவேஓடி
கண்டேனேகாசியில் கெங்கையருகினில்வந்தேன்
ஔவையார்உண்டான வீட்டினில்
தெண்டம்சமர்ப்பித்து அமர்ந்தேன்

மந்திரி-தரு.

சோமசுந்திரபாலரே நீவாருரயோ
சுந்திரமாமனைவியை சேருயோ
தாமதங்கள்நீசெய்யாமல் கேருயோ
சந்தோஷமாயணைக் கோலங்கள்பாருயோ
ஆனையின்பேரில் அம்பாரிபூட்டியே
அலங்கரித்துநீசேனையை யோட்டியே
பாணம்மத்தாப்பு வெடியுடன்காட்டியே
பார்த்தோர்தியங்க கொடியுடன்நாட்டியே

மந்திரி-வசனம்.

கேளுமப்பா குமாரகா உன்மனைவியாகிய சௌந்தரியிடத்தில் போகும்படியாக அலங்கரித்துக்கொண்டு வந்தாய் முந்திமுதல் உன்மாமி மாமனை பணிந்து பின்னால் தேவியிடம் செல்லுவாய் ஆனபடியால்மகனே.

சோமசுந்திரன்-தரு.

தந்தையருரைத்த மொழிகேட்டு
தாவியேபரிகளை அதட்டியோட்டி
விந்தையாகற் பணிகள்பூட்டி
மெல்லிசௌந்தரி மயங்கிடக்காட்டி
ஆனையின்மேலம்பாரி அனேவோருமெச்சவே
வீரியங்கூரி மார்னிலம்புகழ்ந்திடதேரி
மன்னவர்கண்டு மகிழ்ந்திடநேரில்

வந்தேனே மாமன்மாமியார்
வரிசையாயிருக்கவே பரிசுடனோராய்
தந்தேனே வந்தனமென்று
தையல்மனங்களிக்க அய்யமும்கொண்டு-தன

சோமசுந்திரன்-வேறுதரு-காந்தி

மாமாஉன்பாதம்போற்றி மலரடிதனிலேயேற்றி
தாமதமொன்றமில்லா தையலைவிவாகம்செய்தேன்
நேமமாயர்ன்செய்த நேரிழையர்ள்பாக்கியந்தானோ

நற்குணராஜன்-தரு.

வந்தனம்செய்தமருமகனே நீவாழிகண்ணே
அந்தமுடனேவந்த அழகுள்ளமருமகனே
குந்தகமில்லாசெல்வியை கூடியேநீவாழ்குவாயே

சோமசுந்திரன்-தரு.

அத்தையேஉன்பாதம்மிக அன்பாய்போற்றினேன்மாமி
யித்தரைமீதிலே யென்னைப்போல்கிடைப்பாருண்டோ
உத்தமகுணசீலன் உண்மையாய்பணிந்துகொண்டேன்

அன்புஜமாது-தரு.

பணிந்தவுன் நீரேமருகா பண்பாய்வாழியேமாது
துணிந்துநான்பார்க்கும்போது தோஷைபுருஷனல்லவே
கணிந்துரிக்கண்மயக்கமாகுதே நானென்னசெய்வேன்

அன்புஜமாது-தரு.

நாதாவென்னமோகுது நானறிகிலேன்-வேதா
யேதோபுதுமையாயிருக்குதே பார்க்கபார்க்க
வாதாகவந்துநேரும் வல்லவரேவந்துபாரும்

நற்குணராஜன்-தரு.

பாரும்பாவையே செல்விக்குப்தாவில்லையே-இவர்
நேரும்நேற்றையதினம் நேரிழைதிஷ்டிபோலே
வேருவிதமாய் கார்த்தாண்டி
வேந்தனே அரண்மனைசெல்வாய்

சௌந்தரவல்லி-பொதுவசனம்.

இவ்விதமாக மாமன்மாமியாருக்கு பணிந்து அரண்மனைக்குச் செல்ல அப்போது தாதிகள்ஓடி சௌந்தரிக்குச் சொல்லசௌந்தரி சோமசுந்திரனைப்பார்த்து சொல்வது.

சௌந்தரவல்லி-சீசபத்தியம்.

மன்னவர்வந்தாரோ மங்கையேசொல்கிறாய்
மாதுநான்சந்தோஷம் மிகவேகொண்டேன்
அன்னவர்அரண்மனை அன்பாகஇருக்கையில்
அவர்க்குநான்பணிவிடை செய்யவேண்டும்

கன்னகர்மெச்சவே நங்கையாள்பாலகியும்
நாதருக்களிக்கவே நானும்கொண்டேன்
இன்னிலம்யென்னுதர் யெங்குகிடைப்பாரோ
யேந்திழைக்கிடைத்தது அருமைதானே
கன்னியும்சொல்வேன் கண்டுகொள்வீர்
காமனைப்போலவே அமர்ந்திருவீர்
என்விடநாதரும் இவரேயல்ல
யீளநோய்கொண்டுமே யிருக்கின்றாரே.



தரு.

என்னடி அதிசயங்கள் யெந்தனுதனல்லவே
அன்னீதமாயிவரைப்பார்த்தால் ஆரோவென்றறிகிலேன்

சோமசுந்திரன்-தரு.

ஆரோவென்றுயெண்ணாதே அறிவையரேகுண்ணாதே
நேராநேற்றையதினம் நேரிழையேஉனக்குமாலைசூட்டினேன்

சௌந்தரவல்லி-தரு.

சூட்டினவரல்லவே அவர் சோமசுந்தரக்கடவுளைப்போல்
காட்டினார்தன்முன்னே காரிழைக்குமுன்னாலே

சோமசுந்திரன்-தரு.

முன்னாலேநான்வந்தாலே பின்னாலேநீபாருமே
யென்னுமகிமைகெட்டுதே யேந்திழையேசொல்வாய்

சௌந்தரவல்லி-கந்தார்த்தம்.

மதியதுகெட்டோமென்று மங்கைநான்பார்க்கும்போது
விதியது அல்லசொல்வேன் வேந்தன்மேல்நாற்றங்கொண்டு
நிதியுடன்சௌந்தரியங்கள் நிலையில்லா திருப்பதாலே
இதருதூ அறியவேண்டும் எந்தனுக்கருளுவீரே.

தரு.

இப்போயெடுத்தேன்பாராயோ வாளையுருவி
கைப்பிடியாய்சொல்வேன் நேராயோ
தப்பில்லாமல்சாற்றும் வரலாற்றை
அப்போஉன்னைவிடுவேன் ஆணைதுசொன்னேன்-சொ

சோமசுந்திரன் தரு.

உள்ளதைசொல்லுவே னம்மா-யென்னை
உயிர்கொலைசெய்யாதே சும்மா
கள்ளனானல்லவே கபடமாய்வல்லையே
யெல்லாம்பழிக்கவே யென்பாவம்வந்துதே

சௌந்தரவல்லி-தரு.

வந்தேனானென்றுயே மூடா-நீயும்
சிந்தைதுணிந்தாய் குடிகேடா
எந்தஉலகத்தில் இச்சேதிஅடுக்குமோ
விந்தைஉன்பேரைச்சொல்ல மெல்லியும்வாட்டுவேன்

சோமசுந்திரன்-தரு.

வாட்டவருகின்ற தாயே-யென்னை
வருத்தப்படுத்தாதே நீயே
காட்டிக்கொடுத்துதந்தை கடக்கபோகின்றாரே
காட்டினிலரியவே நான்போறேனம்மா

சௌந்தரவல்லி-தரு.

போறேனென்றுசொல்லும் பாவி-யெந்தன்
புகழைக்கெடுக்கவந்தாய் மேவி
பாருமல்நீருமே பத்தாவென்றுவந்தாய்
சீறுய்உன்வரலாற்றை சிரப்புடன்சொல்லுவாய்

சோமசுந்திரன்-தரு.

சொல்லுவேன்கேளும் நேரே-அம்மா
சோமசுந்திர யெந்தன்பேரே
வல்லவர்யென்தந்தை மந்திரிமைந்தநான்
சொல்லதைப்போலவே தோகையேவந்தேனே

சௌந்தரவல்லி தரு.

சோமசுந்திரனென்ற பேரும் உனக்கு
சொல்லிவைத்தாரு கூறும்
ஆமேயுனக்கிது அரைகுவேன்கன்னத்தில்
தாமதப்படாமல் தட்டியேதள்ளாடி.

சோமசுந்திரன்-தரு.

தள்ளநீசொல்லாதே அம்மா-நான்
தாவியேபோகிறேன் சும்மா
மெள்ளவேஉயிர்பிச்சை மெல்லியேதருவாய்
அல்லல்செய்யாமலே அன்பாய்நான்போகிறேன்

சௌந்தரவல்லி-வசனம்.

அடாவடா மூடப்பயலே இனிமேல் இந்தத்கஷ்டத்தை எங்கேயாகிலும் செய்யப்போகிறாய் தப்பித்தோமென்று ஓடிப்போடா மூடப்பயலே.

மந்திரி-வசனம்.

வாருமப்பா தோழமார்களே யென்மகன் சோமசுந்திரம் மனைவியிடம் சென்றவன் அலங்கோலமாய் வருகிற காரணம் யாது.

தரு.

தேவியோடிடியேசென்றாய் இங்கே
சீக்கிரம்காடியே நொந்தாய்
ஆவிபதறுதே அழுகாதேமகனேநீ
யேவிநேர்ந்தாயே யென்னென்றுசொல்லுவாய்

சோமசுந்திரன்-தரு.

போரும்போருமிது அய்யா-யெனக்கு
பெண்பார்த்த குறையிதுமெய்யா
தாருமாறுகவே தட்டிக்கொட்டிவிட்டாள்
ஆராலுமுடியுமோ அவஸ்தைபடுவதற்கு

மந்திரி-தரு.

படுவதேயென்னமோ துன்பம்-நீயும்
பதறுதேசொல்லுமே இன்பம்
செடுமதிநினைத்தாலே கீர்த்தியுள்ளபாலா
விடுதிக்குசெல்லவே வேகமாய்வந்தாயோ

சோமசுந்திரன்-தரு.

வந்ததுயென்சொல்வேன் கேழ்க்க-நானும்
வழிதப்பிவந்தேனே பார்க்க

பெந்தனுக்குபோருமே யெனக்குபார்த்தபெண்ணு
இந்தவுயிரைவைத்து இருப்பேனோபுவிமேலே

மந்திரி-தரு.

பதறாதேபதறாதேபோரும்போரும் பாலா-இந்த
பாரில்நங்கைப்பாரே சீலா
சதாவேயிப்போது கன்னியைசெய்குறேன்
சிதராமல்கிரகத்தில் சிறப்பாகஅமர்ந்திடும்

தோழிகளுக்குச்சௌந்தரவல்லிசொல்-கவி.

தையலேசொல்லக்கேளும் தலையினில்விதித்தவாரோ
னையவேயெந்தநாதன் நவின்றிடும்கவியைப்பார்த்தால்
உய்புதேமனமும்வாடி உத்தமியென்னசெய்வேன்
வையகத்தோர்கைக்க வைத்திட்டான்பிர்மன்தானும்

தரு.

என்னசெய்குவேன்தாதிமாரே ஏதுசெய்குவேன்
கன்னியாளைமணம் கண்டுசெய்யமணம்
உன்னிதமாயெங்கே உத்தமர்சென்றாரோ
வன்னிதரித்தா மழுமானைபிடித்தவா
அன்னீதமாய்மந்திரி அனியாயம்செய்தானே
ஆதியேஉன்செயல் வேரில்லைகாணேனே
காலகாலனே கரியையுரித்தகோலனே
சீலம்தன்தன்னை யெரித்தயீசன்
தேவர்க்கும்அன்பர்க்கும் அளித்தவாசனே-எ
யெந்தனுதரும் யெங்குசென்றுநானறிவேன்
இந்தஉலகத்தில் யெங்குநான்தேடுவேன்
பைந்தார்குழலி பார்வதியெநாடுவேன்.

கவி.

நாதனார்சென்றாரோ நங்கையைதனியேவிட்டு
யேதுநானறியேனம்மா யேந்திழைதாதிமாரே
வாதுகளொன்றுமில்லா வல்லவிமாலைசூட்ட
தீதுகள்வந்திட்டதே தேவியைகாருமம்மா.

தாதி-வசனம்.

கேளுமம்மா தாயே நீயாதொன்றுக்கும் பயப்படவேண்டாம் உன்நாதன் வருவதற்கு ஒருஉபாயம் சொல்கிறேன்காசிக்குபோகப் பட்டவழியில் அன்னசத்திரம் கட்டிவருபவர் இடத்தில் இந்தக்கவி யைக்காட்டி இதற்கு பொருள் தெரிவித்தால் அவர்களைக் கொண்டு வரும்படி யாக்யாபித்து நீ கௌரி நோன்புசெய்தால் பார்வதி மன மிரங்கி புருஷனைத் தருவாரம்மா.

பொது வசனம்.

இவ்விதமாக சௌந்தரியம்மன் அன்னசத்திரம் கட்டி வைத்து கௌரிசோன்புயிருக்க அச்சமயத்தில் பாலகுருசாஸ்திரி வருகிற விதங்காண்க.

பாலகுருசாஸ்திரி-கவி.

அம்மையார்வீட்டில்நாமும் அனேககாளாயிருந்தோம்
செம்மையாய்பெனக்குவய திரொட்டுமேனுனதாலே
நம்மையேபார்த்திருப்பார் நாமுமேசெல்லவேண்டும்
கம்மென்றுஸ்நானம்செய்து காக்ஷியைபெற்றுசெல்வோம்

த ரு.

வந்தநாள்முதல்கொண்டு இந்தகாசிசெங்கைக்குழுழ்த
யெந்தவிதமானுலும்யென்னை நீகார்த்திடும்தாழ்த்தினேன்
மிதமிதமுஉந்தன் பொன்னடியைமரவேன்நாதரே
யிதமாகநீரும்பதமாக அனுப்புவீர்போதரே
தந்தைதாயிவர்கணித்த சணிதப்படிவந்தேன்
குந்தகம்வருகுமோகோவிந்தா என்செய்வேன்நொந்தே
வழக்கத்தின்பிரகாரம் வந்தேனேசெங்கைக்குயீசா
பழக்கப்பதினெட்டு பாலனிருக்கவும்சர்வேசா

க வி.

திரும்பிநான்போவதுண்டு தினம்தினம்பூசைசெய்து
வரும்கெதியின்றைக்குநான் வகையொன்றுமரிகிலேனே
தருமசெங்திதவரிட்டதோ தந்தையார்சொன்னதைப்போல்
பொருமென்றுவந்தேனேயோ போகுதேஉயிருந்தானும்

பாலகுருசாஸ்திரி-தரு.

அய்யய்யோயென்ன செய்வேன்-யெனக்கு
ஆரும்கெதியில்லை உய்வேன்
வையகத்தில்வந்து வகைமோசம்போனேனே
தையலொன்றையும்கட்டி தாலிக்கூலிவாங்கினேன்
காசிவிஸ்வேசாயென்னை காரும்ஜெகதீசா
மாசியைப்போலவே மைந்தன்யான்வந்திட்டேன்
மாதாபிதாவுக்கு குரையென்னசெய்தேன்
விதியுப்முடிந்துதே தந்தை-வேதவிதிப்படி
இசவிதமரியாமல் யேகியேவந்தேனே
சதியதுநேர்ந்துதே தயாபராயென்செய்வேன்
மாரடைக்குதே கெங்கைக்கரையில்
மயக்கம் தோனுதே
தேரோடும்வீதியில் தெருவில்நின்றதைப்போலே
தேசிகாயென்னுயிர் வருகநீகாருமே

சௌந்தரவல்லி கௌரிநோன்பு-கவி.

யீசனுர்பக்கலீயும் யின்பமாய்யிருந்ததாயே
வாசமாய்கௌரிநோன்பு வஞ்சியாள் இருக்கயிப்பால்
நேசமாயொ,தனுக்கு நேரிழையனமிரங்கி
பூசைக்குவந்தீயும் பூவையைக்காத்திடாயே.

பொதுவசனம்

இவ்விதமாக சௌந்தரி கௌரிநோன்பு இருக்க பார்வதியம் மன் தபத்திரங்கி வருவது.

பார்வதி-கவி.

அஞ்சலாதாதிமார்கள் அருகினில்சூழ்ந்துநிற்க
கொஞ்சியேகைலேவிட்டு குலாவியேபூலோகம்நாடி
மிஞ்சியேமயிர்முடித்து மீதினில்அரியவேதான்
சஞ்சலம்தனையகற்ற தையல்பார்வதிவருகின்றளே.





தரு.

பஞ்சுமெல்லடிபொத்த
பார்வதாதேவிவாருள்
ரஞ்சிதபூஷணி
நாடியிதோவந்தனள்
கௌரிவிரதமென்றுகண்டு
காக்ஷிகொடுக்கவல்லவள்
சௌந்தரியானமாது
தான்துதிக்கவாருள்

மிஞ்சும்புகழ்படைத்த
கைலேவிட்டு-பா
கங்கையருடனேகூடி
தேடிபூலோகமஓடி-பஞ்
துதித்தவாக்கு
பார்வதியாளும்
தன்மனதில்ஒது
பூசைக்கிரங்கி-தா

கவி.

ஆசையும்அன்புவைத்து அரிவையேசௌரிநோன்பு
பாசமாய்நுதித்ததாலே பாவையேமனமிரங்கி
வாசமாய்வந்தேன்யானும் வரமதுயென்னவேண்டும்
நேசமாய்நீருமிப்போ நேரினில்சொல்லுவாயே.

சௌந்தரவல்லி-தரு.

அம்மணிஉன்பதம் பணிந்தேன்-நானம்மணி
ஆசைக்கொண்டேன் பாசம்விட்டேன்
அரிவையாள்உன்பதம் காணநொந்தேனே

பார்வதி-தரு.

பாதமேதரிசனங்கள் தந்தனே
பத்தியாக உத்தமியே
பாவையேவேண்டும் வரம்கூறுமே

சௌந்தரவல்லி-தரு.

மங்கில்யம்மிழாமல் வரய்வேண்டுமே
மன்னவனார் சொன்னப்படியே
மாதுநான்கண்ணில் பார்க்கவேண்டுமே

பார்வதி-தரு.

கேட்டதோர்வரமுந் தந்தேன்-கிளிமொழி
கீர்த்தியாக பார்த்தமன்னனும்
கேடுகள்வராதுசொன்னேன் போய்வாரேன்

பொதுவசனம்.

இவ்விதமாக பார்வதி சௌந்தரிக்கு வரம்கொடுத்து செல்ல அச்சமயத்தில் நாரதர் வருவது

நாரதர்-கவி.

திரிலோகமெங்கும்சுத்தி திரிந்துமேநாரதன்தான்
விரிவானஉலகந்தன்னில் வேண்டியகலகம்செய்ய
பரிவானதம்பூர்வீணையுமமைத்துக்கொண்டு
செரியானபார்வதியம்மன் நேரினில்வருகின்றேனே.

தரு

சத்திசிவன்பாதம் பத்தியரிந்தவல்லோன்
தவமுனிநாரதர் வந்தனனே
முத்திவழிகளை முழுதும்தெரிந்துசொல்வேன்
முனிநாதரிதோவாரூரே நாரதமுனி
காவிவஸ்திரம்பூண்டு கனத்ததெண்டுமேந்தி
காரிமைமுன்வாரூரே நாரதமுனி-கர்
மேவிசௌந்தரிக்கு மெல்லியாள்வரந்தர
மீதினில்அரியாத தாவிநடைநடந்து





நாரதர்-வேறு-தரு.

| | |
|---|---|
| இதுவேகலகம்யென்றுமே | நாரதமுனி |
| இன்ப்மாகஒடிவாருரே | தந்தானத்தானெ |
| இந்தியாபுரிபட்டணத்திலே | நற்குணராஜன் |
| யீய்நதிடும் | சௌந்தரியாளுமே-தந் |
| மந்திரிசெய்கரு துமார்க்கத்தால் | தாலிகட்டிட |
| மன்னவர்யெங்கே | சென்றுரொன்றுமே-தந் |
| அன்னவள்கௌரியை | நோக்கியே-தபமிருக்க |
| அளித்தாள்வரமும் | புருஷன் உண்டென்று |
| அவள்மன்னவன் மடிந்திருக்கவே | காசிகெங்கையில் |
| மாதாள்தந்தவரமும் | யெங்கையோ |
| காக்கைகழுகுபிடிங்கிதின்னவே | மூன்றுதிசையாய் |
| காரிகையாள்மன்னு | வாடவே-தந் |
| பார்க்கபார்வதி | தேடிவாரேனே-நாரதமுனி |
| பத்தினிக்கே | வரமும்பலிக்கவே-தந் |
| சென்னல்ஓங்கும்கன்னியக்கோவில் | வன்னியக்குலத்தோன் |
| சிருவன்கேசவன் | பாடினேனிதையும் |
| மன்னர்புலவர்மனம்பொருக்கவே | பிழையிருந்தால் |
| மலரடிதனில்யான் | பணிகுவேன் |

நாரதர்-தரு.

| | |
|---|---|
| வந்தனந்தந்தேன் | அம்மாநாரதன் |
| வல்லவிடன்பாதம் | அம்மா |
| யெந்தையேநீருமிப்போ | யெங்குசென்றீரம்மா |
| விந்தைவாடிநொந்து | சீக்கிரமாய்போரசேதி |

ஈஸ்பரி-தரு.

நாரதமுனிவனே வாழி-இந்த
நானிலமரிய நீடூழி
சீரதாய்சென்றுவந்த சேதிசொல்லவோ
மாராசௌந்தரியும் மங்கைதபமிருந்தாள்

நாரதர்-தரு.

தபத்துக்கிரங்கிசென்ற தாயே-நீரும்
தந்தவரங்களென்ன நீயே
ஆபத்துபாபமில்லை அய்யோநீசென்றமே
சாபத்துக்காளாகுவாய் தாயேநீசொல்லிடுவாய்

பார்வதி-தரு.

மங்கிலியபிச்சையும் தந்தேன்-அவள்
மன்னவனிரக்காமலே வரம்தந்தேன்
இங்கேயரிந்துயென்னை இன்பமாய்கேட்டதாலே
தங்கும்படியேசொன்னேன் தயாபரிசென்றுவாரேன்

நாரதர்-வேறுதரு.

போகாதேபோகாதே அம்மா-உந்தன்
புகழ்யைபேசாதேநீ சும்மா
ஆகாதுஉங்களுக்கு ஆரனிடதேவியென்று
சாகாமல்வரந்தந்திர் தையல்புருஷனுக்கு

பார்வதி-தரு.

தந்ததிலுலென்ன குற்றம்-நாரதா
தாவிஉரைத்தாயே பித்தம்
எந்தவரம்தந்தாலும் யெக்காலும்பழுதுண்டோ
சிந்தைதுலிர்துநீ சிறுமையாய்சொல்லாதே

நாரதர்-தரு.

சொல்லாதேயென்ற தாயே-வரத்தை
சோதித்துபாரும் நீயே
பொல்லாதகாலத்தால் அவள்புருஷனிறந்தானே
யெல்லாம்தந்தவரமும் யெங்கேநீசொல்லுவாய்

பார்வதி-தரு.

பொய்சொல்லவேண்டாமே நாரதா-யெ
புளுகாதேயென்னிடம் சீரதா
அய்யய்யோயிதுவென்ன அனியாயவார்த்தைகள்
மெய்தானோநீசொல்வாய் மெல்லிநானரியவே

நாரதர்-கவி.

அரியவேகாண்பிப்பேனே அம்மணிபார்த்துக்கொள்வாய்
உரியவேகெங்கைக்கரையில் உத்தமர்மாண்டிருக்க
பிரியமாய்நாமிருவர் பிசகில்லாதெழுப்பிவிட்டு
தெரியாமல்சென்றிடுவோம் சீக்கிரம்வாருமம்மா.

பார்வதி-கவி.

உத்தமிகௌரிநோன்பு உண்மையாய்செய்ததாலே
இத்தைநான்அரியாமல்தான் இன்பமாய்வரமுந்தந்தேன்
மெத்தவேஅமுர்தகலசநீரை தெளித்தெழுப்பிவிட்டு
சத்தியும்சிவன்பாதத்தில் சார்ந்துமேமரைந்திட்டாரே.

பொது வசனம்.

இவ்விதமாக பார்வதியும் நாரதரும் யெழுப்பிவிட்டு மரைந்துவிட இறந்த பாலகுருசர்ஸ்திரி யெழுந்து வருகிறவிதங்காண்க.

பாலகுருசாஸ்திரி-கவி.

நித்திரைதெளிந்தவன்போல் நின்றுமேயெழுந்திருந்து
உத்தமன்சாஸ்திரத்தை உகந்துநாள்பகர்ந்துபார்க்க
பத்தினிகௌரிநோன்பு பண்புடன்செய்ததாலே
இத்தரைமீதில்நானும் இன்பமாய்பிழைத்திட்டேனே.

பொது-வசனம்.

இவ்விதமாக பாலகுருசாஸ்திரி நித்திரை தெளிந்தவன்போல் யெழுந்து யோசித்து பார்த்திருக்கும்போது சௌந்தரி ஏற்படுத்தி வைத்த அன்னசத்திரம்நாடி சங்கமர் வருகின்றார்.







சங்கமர்-தரு.

சம்போசங்கராசிவனே அரகரா-இந்த
சாணுள்ளவயருக்கு பிழைப்பொன்றுங்காணோன்
குமபலாகூட்டம்கூடி ஊரில்
கோவென்றகூவியே பேயென்றுவந்தோம்
வம்புதம்புகளாகுதே பசியால்
வருந்திஞேம்அன்னம் அளிப்பாரோகாணும்
என்னவிதமோ அரியோம்-யீசா
எங்களைகாப்பாற்ற உங்களைதொழுதோம்
அன்னசத்திரமிதுவோ கூட்டம்
அன்பாககட்டிய பண்டாரமிதுவோ
மன்னவர்நற்குணராஜன் மகள்
மங்கைசௌந்தரி கட்டினதிதுவோ
இன்னிலமரியவந்தோம் அம்மா
யேத்திழையேபிக்ஷை போடுவாருண்டோ

சௌந்தரவல்லி-தரு.

சுவாமிசங்கமரே உபகாரம்செய்தவரே-வாரும்
வாமிபாகனை துதிக்கும் வல்லவரேபுல்லவரே
தாமதப்படவேண்டாம் தையல்நானமுதளிப்பேன்

சங்கமர்-தரு.

அம்மாபசிக்குதே யெந்தனங்கம்வாடுதே-சோர்ந்து
சும்மாநீசொல்லாமலே தோகையேபோட்டிடுவாய்
கம்மென்றுப்சிகளாரி காரிழையேநடந்திடுவோம்

சௌந்தரவல்லி-தரு.

கல்வியுண்டோதான் கவியைபார்ப்பதுமுண்டே-சொல்வீர்
நல்லதுஇதற்கர்த்தம் நன்றாய்உரைத்திராணல்
வல்லியாள்புருஷன் வந்திடுவாரென்றுசொல்வேன்

சங்கமர்-தரு.

படிப்பில்லிருந்தவன்-கவியை பார்க்கதெரியேனே
துடிப்பானவார்த்தைசொல்ல தோகையேவல்லையம்மா
யெடுப்பாளுஇதற்கர்த்தம் யெவ்வாறுமுடியாதம்மா

சௌந்தரவல்லி-கவி.

அப்படியானால்நீங்கள் அமர்ந்துமேகொள்வீரிப்போ
இப்பவேபோசனங்கள் இன்பமாய்அளித்தேன்பாரும்
கொப்பெனவாங்கிக்கொண்டு கூட்டமாய்கூடிசெல்வீர்
மைப்படிகன்னியாளும் மனையினில்அமர்ந்திட்டேனே.

பொதுவசனம்

இவ்விதமாகவந்த சங்கமர்க்கு அமுதளித்துவிட்டு தாதியிடத்தில் கவியைதந்து யாராகிலும் இதற்கர்த்தம் சொல்பவர் வந்தால் இட்டுவரும்படியாக சொல்லிவிட்டு தன்மனைக்குச்சேர்ந்திருக்க அச்சமயத்தில் பாலகுருசாஸ்திரி சொல்லுகிற விதங்காண்க.

பாலகுருசாஸ்திரி-தரு.

காசிகாவடிதூக்கி நேசித்தவரைநோக்கி
கண்டுநான்வாரேனே தேவியாளிடம்
கொண்டுநான் வாரேனே
பூசித்துகெங்கையில் நேசித்தவரைநானும்
பூரிப்புமிககொண்டேனே இல்லரம்நாடி
தேரிப்புமிக விண்டேனே
தந்தைசோசியப்படி சலத்தினில்மாண்டேனே
தாயாகயெழுப்பிவிட்டாள் யெனதுதேவி
யாளால்பிழைத்து விட்டாள்
அன்னசத்திரம்காடி அன்பாய்ஓடிவந்தேன்
அளிப்பாருண்டோசொல்வீர் பசிகள்தீர
களிப்பாருண்டோ சொல்லுவீர்

தாதி-வசனம்.

ஆரய்யா அமுதளிக்க தடையில்லை இந்தக்கவிக்கு அர்த்தம் தெரியுமா.

காட்டுபார்ப்போம்.

பாலகுருசாஸ்திரி வசனம்.

அம்மா இந்தக்விக்கு பொருள் தெரிவிக்கிறேன்.

தாதிவசனம். ஆனால் என் பின்னாலே வாரும்.

அம்மா தாயே யாரோ ஒருவர் நீர் காண்பித்தகவிக்குப் பொருள் தெரிவிப்பதாக தெரிவிக்கிறார் அவர் இதோவருகிறார்பாரும்.

சௌந்தரவல்லி-தரு.

தந்தையரேவாரும்வாரும் இந்தவீதிவருகிறார்
தாண்டியேஅவர் தாண்டியே
யெந்தனையேவந்தயிவர் இன்பமாலை
சூட்டினார்போல் காணுதே

நற்குணராஜன்-தரு.

மன்மதவடிவம்போலே மாலைசூட்டவந்தவர்தான்
மங்கையே செல்விநங்கையே
இன்னகரைசுத்திபார்த்து யேந்திழையேவாருமம்மா
இங்கையே பாருமங்கையே

அன்புஜமாதுதரு.

ஆசையுள்ளமருமகன் அவர்தானேயார்கண்டார்
அரியேனே ஒன்றுந்தெரியேனே
பாசமுள்ளமகளுக்கேத்த பத்தாவைப்போல்யிருக்குதே
உரியனே நான்பிரியேனே

பாலகுருசாஸ்திரி-தரு.

காசிக்குநான்சென்றயிதோ காவடிசுமந்துகொண்டு
வாரேன் கொண்டுவாரேன்
மாசிக்குநிகரில்லாத மங்கையாள்கவியைச்சொல்ல
போரேன் யானும்போரேன்



சௌந்தரவல்லிதரு.

எந்தனுதாயெங்கேசென்றீர் யென்னைநீர்மாலைசூட்டி
யேவியே நீரும்தாவியே
உந்தனைநான்காணுமலே உத்தமிதபங்கள்செய்தேன்
கூவியே நானும்கூவியே

பாலகுருசாஸ்திரி-தரு.

கூவிநீரும் அழுகவேண்டாம் கோதையரேயானும்
சொல்லிக்கூறுமே மனம் தேறுமே
பேவிகாசிகெங்கைக்கு இன்பமாசென்றவர்தேன்
பாருமேகிட்ட வாருமே

நற்குணராஜன்-தரு.

இத்தனை வடிவமுள்ள உத்தமமருமகனே
விட்டுமேயானும் விட்டுமே
சித்தசன்போலேயிவர் செல்விமகனை தாலி
கட்டுமேதாலி கட்டுவே

அன்புஜமாது-தரு

திருஷ்டிகள் பட்டுதே செல்விபுருஷனுக்கு
தேருமேமனம் தேருமே
கஷ்டப்பட்டுமேஇவர் களைப்பட்டுவந்தாரோ
வாருமேநீரும் வாருமே

சௌந்தரவல்லி-தரு.

மன்னுவுன்வார்த்தையை இன்னாள் அறியவேண்டும்வம்புவே
நன்னாகஇக்கவியைநவின்றால் நாதனென்றுநம்புவேன்

பாலகுருசாஸ்திரி-தரு.

சொல்லுவேன் தடையில்லை சந்திரமேயெந்தன்
பெண்ணேயெந்தன் கண்ணே
நல்லதோர்மந்திரியை நல்மாயமழைத்துவாரும்
முன்னேகண்ணின் முன்னே

மந்திரி-தரு.

அரசனழைத்தவிதம் துருசுடன்காதில்கேட்டு
அன்பாய்நான்ஓடிவாரேனே அதிவேகமாய்
தென்பாய்நான் ஓடிவாரேனே
மைந்தன்சோமசுந்திரன் மனைவியைசேராவிடில்
மன்னன்கோபித்துக்கொள்வாரோ நமதுபேரில்
என்னவிதமென் றறிவாரோ
மங்கைசௌந்தரியை மாலைசூட்டினமுதல்
மார்க்கம்இதுநாளில்லையே சம்மந்தமாட

தீர்க்கபெருந் தொல்லையே
சொந்தசம்மந்தியாச்சே துரோகம்நினைக்கலாமோ
குந்தகம்வந்ததென்னமோ நேரில்வந்தேனே
கூருவீ ரெந்தனுக்குமே

நற்குணராஜன்-கவி.

வந்தடிபணிந்துநின்ற மந்திரிசொல்லக்கேளாய்
இந்ததோர்ஆசனத்தில் இன்பமாய்அமர்ந்திருப்பாய்
அந்தமும்குணமுமுள்ள அரிவையர்க்குகந்தேவா
சந்தோஷமுடன்கவிக்கு சாற்றுவீர்பதிலுமிப்போ

பாலகுருசாஸ்திரி-அகவல்.

சொல்லுவேன்கேளும் சுந்திரசபையோர்
கன்னமாபுரியில் கனத்தவேதியர்குலத்தில்
நன்னகர்மெச்சும் நாருயணசாஸ்திரி
மன்னவர்தந்த மைந்தனேயாகும்
காசிக்குசெல்ல கண்டுநான்வந்தேன்
நேசிக்கும்திண்ணையில் நித்திரையாகினேன்
மந்திரிகண்டு இந்தமங்கையைசொன்னான்
தந்திரமாகவே தாலிகள்கட்ட
கூலியும்கொடுப்பேன் கோதைமேல்அஸ்தம்
மேலினில்போடாமல் விரைவுடன்வந்தால்
ஆயிரம்பொன்னும் அன்புடன்தருவதாய்
சொன்னதைகேட்டு சுருக்குடன்வந்தேன்
மங்கைசௌந்தரியை மாலையும்சூட்டி
நங்கையரிடத்தில் நானுமேயிருந்தேன்
கவியைநான்யெழுதி கைதனில்தந்து
செவியுடன்சொல்லி சீக்கிரம்வந்தேன்
மந்திரியைக்கண்டு வாங்கினேன்பொன்னை
அந்திரர்போற்ற யாத்திரைசென்றேன்
ஆகையினாலே ஆயிரம்பொன்னை
ஆருக்குத்தரலாம் அறிந்துநீர்சொல்வீர்.

பாலகுருசாஸ்திரி-கவி.

கூலிக்குதாலிகட்டி கோதையேபுணர்ந்தேன்பிர்மன்
ஆலிக்குமொருடுவேருண் டாக்கினதாச்சரியம்
தாலியைத்தரித்துவிட்டு தனியேநான்யேகும்பாவம்
ஈனோநோய்கொண்டோனுக்கோ கூலியீய்ந்தோனுக்கோசொல்

வசனம்.

ஆகையினுல் இந்த மந்திரியானவன் ஆயிரம்பொன் கூலிகொடுத்து இப்பெண்ணை விவாகம்செய்துபின்னுல் அவளைத் தொடாதேயென்று தெரிவித்தான் அதைகவனியாமல் இந்தபெண்ணை அனேகவித ஆலிங்கனத்தினுல் அணைந்து யிருந்த ஆச்சரியப்பட்டேன் யேனென்றல் இவளை அணைய ஒருபுருஷன் இனிமேல் அவளைவைத்துஆள ஒருபுருஷன் சிருஷ்டித்தாரே வெகுஆச்சரியம் நான் மந்திரியிடம் ஆயிரம்பொன் கூலிவாங்கிக்கொண்டு தாலியைதரித்துவிட்டுத் தனியேசான் போகின்றேனே இந்தபாவமானது யாரை சம்பவித்தது யிளைநோய்கொண்ட மந்திரிகுமாரனுக்கு சம்பந்தப்பட்டதா அல்லது கூலிகொடுத்த இந்தமந்திரிக்கு சம்பந்தப்பட்டதா அல்லது யெனக்கு சம்பந்தப்பட்டதா இதுயாருக்கு சம்பந்தப்பட்டதென்று கேட்டதே தவிர வேறொன்றுமில்லை.



மந்திரி நற்குணராஜன் சௌந்தரவல்லி அன்புஜமாது

நற்குணராஜன்-தரு.

அப்பேர்க்கொத்த பாவியேநீ-யென்
அருகினில்இருக்காதே முன்னே
தப்பிதம்செய்தாயே தருதலப்பயலே
இப்பொழுதேவாளால் யெடுத்துமேவாட்டுரோன்

மந்திரி-தரு.

யெப்போதும்செய்த தில்லையே-நான்
இப்போதுசெய்தது தொல்லையே
குப்புறத்தள்ளியே கொண்டுஉதைக்குநீர்
அப்பனேஉன்பாதம் அன்பாய்பணிகுவேன்

அன்புஜமாது-தரு.

யெந்தன்மகளை கெடுக்கநீரும்-அடா
யெங்கிருந்துவந்தாய் கூறும்
குந்தகம்செய்தாயே குலைக்காரபடுபாவி
யிந்தயோர்வார்த்தைகள் யெங்கேயடுக்குமோ

மந்திரி-தரு.

யெந்தன்மகனுக்கு பார்த்தேன் அவன்
மீளநோய்கொண்டானே யேர்க்தேன்
அந்தவார்த்தைகண்டால் அரசன்கோபிப்பாரென்று
இந்ததந்திரம்செய்தேன் என்னைநீர்இடிக்காதீர்

சௌந்தரவல்லி-தரு.

இடிக்காதேயென்றுயே மூடா-நீரும்
யென்னைக்கெடுக்க வந்தாய்கேடா
தடிக்குதேதிரேகமும் தோகைநோய்கொண்டோர்க்கு
படிக்குள்புகழைப்பேசி பங்கமாய்வந்தாளே

பாலகுருசாஸ்திரி-தரு.

பதறாதேபதறாதே தேவி-நம்மை
பார்ப்போர் நகைப்பார்கள்கூவி
சிதறவேபாலனை சீக்கிரம்கொண்டுவா
யெதிராகின்றமே யென்னென்றுஅறிகுவோம்

மந்திரி-தரு.

சோமசுந்திரகண்ணே மைந்தா
சொகுசுடன்வாடா யென்பின்னே
யேமனைப்போலவே யெட்டிஉதைக்குறார்
தாமதப்படுகிறேன் தனையனேயிப்போது

சோமசுந்திரன்-வேறு-தரு.

அப்பாயிதென்னகாலமோ உனக்கியிது
ஆர்செய்தார் யிந்தகோலமோ
இப்பாருலகத்தில் யெங்கேயடுக்குமோதான்
கைப்பிடியாய்பிடித்து கட்டியடிக்கலாமோ

சௌந்தரவல்லி-தரு.

அடிக்கசலுவைவந்தியா பையலேநீயும்
ஆங்காரம்கொண்டு நொந்தாயே
துடிக்கயென்னிடம்நீயும் துன்மார்க்கம்மேசினுயே
இடிக்கநான்உன்னையிப்போ. யேந்திழைவந்தேனே

சோமசுந்திரன்-தரு.

பட்டஉதைபோதும்போதுமே உன்காலில்நானும்
பாதம்பணிந்து வீழ்வேனே
எட்டிஅடிக்கவேண்டாம் யிதோபோறேன்யில்லத்துக்கு
மட்டிதந்தையினுலே வந்தேன்உய்யிடம்நானே

அன்புஜமாது-தரு.

மருமகனுகவந்தாயே யெந்தனுக்கு
மலரடிதனில் பணிந்தாயே
உருகுதேயெங்கள்நெஞ்சம் உத்தமைநினைக்கவே
வருகும்சொத்தையெல்லாம் வாங்கிதின்னபயலேநீயும்

சோமசுந்திரன்-தரு.

தந்தையார்செய்தகுற்றமே வேறேஒன்றும்
தவரிநான் செய்ததில்லையே
இந்தவியாதியோடே யெனக்குயென்பெண்சாதி
குந்தகம்வந்ததே கோடிசரணம்செய்தேன்

மந்திரி-தரு.

கூட்டமாய்கூடிநீங்களும் யென்பிள்ளையை
கொல்லத்துணிந்திர் தாங்களும்
வாட்டமாவல்லையே வருத்தநீர்செய்யவேண்டாம்
மேட்டினிலரியவே மெல்லியேவிட்டுவிடும்

நற்குணராஜன்கவி.

இப்படிசெய்வோமென்று யெண்ணியேயிருந்தோன்தன்னை
தப்பிதம்வந்திடாது தள்ளியேசிரச்சாலைதன்னில்
கொப்பெனபோட்டுநீங்கள் கூருவீர்யெந்தனுக்கு
மைப்படிஎனதுகன்னிபை மருமணமதுகூட்டுவாயே.

வசனம்.

இவ்விதமாய் துரோகம் செய்தவனை சிரைச்சாலையில் போட்டு விடுங்கள் ஆனால் இனிமேல் விவாகம்செய்யவேண்டும் அதைப்பற்றி உன் தாய்தந்தையரை வரவழைத்து இராஜர்கள் முன்னிலே மருபடியும் மணம்செய்வோம் வாரும்.

பொதுவசனம்.

இவ்விதமாக மந்திரியை சிரைச்சாலையில் அடைத்துவிட்டுபால குருசாஸ்திரி தாய்தந்தையை வரவழைத்து இராசர்கள் முன்னிலே விவாகத்தை முடித்துவிட்டு இந்தியாபுரி பட்டணத்தை பாலகுரு சாஸ்திரிக்கு பட்டத்தை தரித்து அவாளவாள் யெதாஸ்தானம் போய்ச்சேர்ந்தார்கள்.

சௌந்தரிகல்யாணமென்னும்

கூலிக்கித்தாலிகட்டியநாடகம்.

முற்றிற்று.

---

உ

சிவமயம்.

மகாமகுத்துவம்பொருந்திய கும்பமுனிவர்
திருவாய்மலர்ந்தருளிய
உமாமஹேஸ்வர சம்பாஷணையாகிய

# ஈஸ்வர நாடி சோதிடம்.

---

## இந்த ஓர் அருமையான சோதிட நூல்.

அன்பர்காள்!

உலகில் ஜனனமான மானிடர்கள் வாழ்நாட்களைகுறித்து சோதிடசாஸ்திரமென்பது சகலருக்கும் தெரிந்தவிஷயம் இவைகளின் பலாபலன்களை உரைக்கும் பலவிதமான சோதிட சாஸ்திரங்கள் வெளிவந்திருப்பினும், உமாமஹேஸ்வர சம்பாஷணைரூபமான "ஈஸ்வரநாடி" என்னும் சோதிடம் இதுவரையிலும்வெளிவராதிருந்தன தற்சமயம் நாங்கள் சில மடாலயங்களிலிருந்த ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு தக்கசோதிடர்களால் சீர்திருத்தபெற்று வெளிவந்திருக்கின்றன. இதில் பிதுர்காரகனாகிய சூரியகாண்டம், மாதுர்காரகனாகிய சந்திரகாண்டம், சகோதரக்காரகனாகிய குஜகாண்டம், வித்தியாகாரகனாகிய புதகாண்டம், புத்திரகாரகனாகிய குருகாண்டம், களத்திரகாரகனாகிய சுக்கிரகாண்டம், ஆயுள்காரகனாகிய சனிகாண்டம், ஆகிய சப்தகாண்டங்களையும் வாங்கி வாசித்தவர்களுக்கு சோதிடவிபரம் தாங்களே சரியாய் கவனித்துக்கொள்ளப்படும் ஆகையால், இந்தசோதிடநூல் அநேககாலமாக வெளிவாரா திருந்தமையால் அனேகசோதிடவல்லபர்கள் வெளிப்படுத்தும்படி கேட்டுக்கொண்டமையாலும் எங்களால்வசனரூபமாய் அந்தஅந்தலக்கணங்களுக்கு சக்கரங்களை ஏற்படுத்தி காண்டம் ஒன்றுக்கு 720 - சக்கரங்கள் அமைத்து தற்சமயம் வெளிவந்துலாவுகின்றன.

### காண்டங்களின் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| 1-வது, சூரியகாண்டம் விலை ரூபா | 2 0 0 | | |
| 2-வது, சந்திரகாண்டம் | 2 0 0 | 5-வது, குருகாண்டம் | 1 8 0 |
| 3-வது, குஜகாண்டம் | 1 8 0 | 6-வது, சுக்கிரகாண்டம் | 1 8 0 |
| 4-வது, புதகாண்டம் | 1 8 0 | 7-வது, சனிகாண்டம் | 1 8 0 |

7 - காண்டமும் ஒரேதடவையில் மொத்தமாய் வாங்குபவர்களுக்கு விலை ரூபா. 7 0 0

எமதுவிலாசம்;—

ஷ. கோவிந்தராஜு முதலியார்.
நெ. 34 முத்துகிருஷ்ணன்தெரு மின்ட்பில்டிங்போஸ்ட் மதாராஸ்.

# நாடகப்புத்தக விளம்பரம்.

விற்பனையில் ரூ.

| நாடகம் | ரூ. |
|---|---|
| பாண்டவர்வைகுந்த நாடகம் | 1 |
| கூலிக்குத் தாலிகட்டிய நாடகம் | ,, |
| பிரம்மா சிறைவைத்த நாடகம் | ,, |
| அக்குமாதேவி சரித்திர நாடகம் | ,, |
| கௌரிமோக்ஷ நாடகம் | ,, |
| கிருஷ்ணலீலைநாரதர்பங்கநாடகம் | ,, |
| அம்பரிஷி-நாரதர் பங்க நாடகம் | ,, |
| (60-பிள்ளை)நாரதர்பங்க நாடகம் | ,, |
| மாரியம்மன் உற்பத்தி நாடகம் | . |
| தருமர் பட்டாபிஷேக நாடகம் | ,, |
| தக்கன் வேள்வி நாடகம் | . |
| பார்வதி கல்யாண நாடகம் | .. |
| சாரங்கதாரா நாடகம் | . |
| மதுரை வீரப்பன் நாடகம் | . |
| ஸ்ரீராமபட்டாபிஷேக நாடகம் | .. |
| சவுந்திரவல்லி மோக்ஷ நாடகம் | . |
| ஆரவல்லி சூரவல்லி நாடகம் | . |
| ஜலந்திராசூர சம்மார நாடகம் | . |
| தர்மசனன் சண்டை நாடகம் | 1 |
| கெட்டதம்பி நாடகம் | . |
| கிருஷ்ண சொர்வபங்க நாடகம் | .. |
| தருமர் இமயகிரி தபசு நாடகம் | .. |
| ந். மு க. இயக்கப்பாடல்1005 | ரூ |

அச்சில்

எம்பிரான் சதகம்
சந்திரன் சொர்வபங்க நாடகம்
பதுமாசுர நாடகம்
சத்தியாவதி கலியாண நாடகம்
மணிக்கிரூபன் ஜலக்கிரீடை நா
அனுசூயாசுற்பு நாடகம்
தாருகாசுர பங்க நாடகம்
ஸ்ரீ கண்ணன் ஜலக்கிரீடை நா
பாதாளமயில்ராவண மோட்ச ந
தமயந்தி நாரதர் கலியாணநாடக
ஜர்கபர மேஸ்வரி நாடகம்
சதகிரீபராம பங்க நாடகம்
யஜ்ஞசிய நாடகம்
தாராக்ஷமந்திர நாடகம்
திரிபுர சம்மார நாடகம்
பட்டணத்தார் நாடகம்
பாரிக்ஷித்து தூர்வி நாடகம்
அர்ச்சனன் தபசு நாடகம்
வீரவன்னியர் நாடகம்
பரதர் பட்டாபிஷேக நாடகம்
கண்ணப்பநாயனார் நாடகம்
பவளக்கொடி பங்க நாடகம்
பிரம்மதேவன் பங்க நாடகம்
சூர்ப்பனகை பங்க நாடகம்
ஈஸ்வரன் பிறந்த சிறப்பு நாடகம்
இராவணன் உற்பத்தி நாடகம்
பாசெட் மாந்திரிக ஆசான்
விநோத ஜாலக்கண்ணாடி நாடக
கந்திவாக்கியம் பாகம்
முருகத்தியானம்
காம்பு சிலந்தி நாடகம்
போகர்பாகட் கொக்கோகம்

அச்சாகிறது! "வாதாபி சூரசம்மாரமென்னும்"

## வீரவன்னியர்

## நாடகம்

மேற்கண்ட நாடகங்களும், இன்னும் இதர தமிழ்ப்புத்தகங்களும் எங்களிடம் கிடைக்கும். கேட்லாக் வேண்டுவோருக்கு இலவசமா அனுப்பப்படும்

எமது விலாசம்:—


## C. M. தாமோதர முதலியார்,

ஸ்ரீ பெரிய நாயகி அம்மன் அச்சகம்.

சங்குவதி கலியாண மென்னும்

# போர்மன்னன்

## சண்டை நாடகம்



திரு. C. V. மீனாக்ஷிசுந்தர முதலியார் குமாரர்.

C. M. தாமோதர முதலியாரவர்களது

சென்னை-சூளை, பெரியநாயகியம்மன் அச்சகத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிடர் காபிரைட்] [விலை ௨ ரூபாய்

வீரபாஞ்சாலி துணை.

சங்குவதி கலியாண மென்னும்

# போர் மன்னன் சண்டை நாடகம்.



கடலூர் தாலுக்கா
வரிஞ்சிப்பாக்கம். ச. வேடப்படையாக்ஷி குமாரன்
கோதண்டராம உபாத்தியாயரால்,
இயற்றியது.

சி. வே. மீனாக்ஷிசுந்திர முதலியார் குமாரர்,
C. M. சுப்பிரமணியமுதலியாரவர்களது,
சென்னை—கூ
பெரியநாயகி அம்மன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்) 1955. (விலை [illegible] ௨

# உரிமை அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் அறிவிப்பது யாதெனில் :—

எனது தகப்பனாரும், சென்னை ஆனை ஸ்ரீ பெரியநாயகியம்மன் அச்சக உரிமையாளருமான திரு. சி. வே. மீனாக்ஷிசுந்தர முதலியார் அவர்கள், கோதண்டராமஉபாத்தியாயர் இயற்றிய போர்மன்னன் நாடகமென்னும் இப்புத்தகத்தை சுத்த கிரயத்திற்கு சகல உரிமையுடன் பெற்று ரிஜிஸ்டர் காப்பிரைட் செய்திருக்கிறபடியால், எமது அனுமதியின்றி யாரேனும் பெயர்மாற்றியாவது, முன் பின் சங்கதிகளை புரட்டியாவது அச்சிடுவாராயின், 1867வது (வரு) 25வது ஆக்டின் 20வது பிரிவின், ரிவைஸ் விதியின்படி நஷ்டத்திற்கு உத்திரவாதிகளாகியும், பினல் கோர்ட்டாரவர்கள் சட்டத்திற்கு விரோதஸ்தர்களுமாவார்கள் என்று அறிக.

இப்படிக்கு,
சி. மீ. சுப்பிரமணிய முதலியார்.


# "போர்மன்னன் சண்டை நாடகம்"

## நடிகர்கள்.

ஜவாராஜர்கள்
தருமர்
கிருஷ்ணமூர்த்தி
வீமன்
விரகுதலையன்
போர்மன்னன்
உக்கிரபானு மந்திரி
வரதாச்சாரி ஐயர்

## நடிகைகள்.

பாஞ்சாலியம்மன்
தாக்கிழவி
விசயாம்பாள்
சங்குவதி

உ

ஸ்ரீ வீரபாஞ்சாலி துணை.

சங்குவதி கலியாணமென்னும்

# போர்மன்னன் சண்டை நாடகம்.

---

### விநாயகர் கவி.

மாதவை வலமாய்சுற்றி மாங்கனி தன்னைப்பெற்ற
வேதாந்தம் தனைவுணர்ந்த வித்தைக்கு முதல்வாபோற்றி
சீதான் மருகனான சித்தியின் மணாளாபோற்றி
காதலாய் போர்மன்னன்சரித்திரம் கணேசர்தம்பாதங்காப்பே.

### பொது வசனம்.

இவ்விதமாக அஸ்த்தினாபுரி பட்டணம் பாண்டுபுத்திர மகா ராஜன் குமாரர்கள் ஐவராஜர்களும் தர்பார் நாடி வருவது.

### ஐவராஜர்கள் வருகிற கவி.

பாண்டுபுத்திர ரளித்த பாண்டவர் ஐவர்கூடி
வேண்டிய விருதுபூண்டு விண்ணவர திசயிக்க
தாண்டியே நடைநடந்து தளபதி மந்திரிசூழ
ஆண்டவன் தனைதுதித்து ஐவர்கள் வருகின்றாரே.

### தரு.

பகரும் அஸ்தினாபுரி — நிகரில்லா அரசாளும்
பாண்டவர்கொலுவதாகினார்
நல்லபரிஉள்ளமாதர்கள் — இருபுரம்நெருக்கிட (பாண்டு
ஆண்டவன்பாதந்தனை — அனுதினமுந்துதித்து
தூண்டாமணி விளக்காய் — துரோபதை அருகில்சூழ
சரு — துத்தரிமல்லாரி — வெத்திகள் பாட
அத்தன்மாலயன் — திருவடிதேட (பகரு
ஆனைசேனை ரதமும் — அணியணியாய்நெருங்க
வானவர் கவிவாணர் — வந்து ஆசீர்வதிக்க
தீதில்லா அந்தணர்கள் — ஜெபதபமும்படிக்க
ஆதிநாராயணனை — அனுதினமுந்துதிக்க
சரு — அண்டரும்எந்தனை — கண்டுதுதித்திட
குண்டலஞ்செவிதனில் — மண்டி ஜொலித்திட (பக
ஆரக்கேயூரமாலை — கக்கணங் கடகந்துள்ள
அணியுங் கிரீடந்துன்னவே — நவரத்தினமிழைத்த (அணி
பாராவில் வாளுங்கையில் — சிருடனே துலங்க
சரு — பத்திப்பத்தியாய் — ரம்பையராட
ததிமிதிமியென — மத்தளம்போட (பகரு
பங்காளி செய்தசூதால் — அங்கம் மெலிந்துவாடி
தம்பி [illegible]ருந்திடுவோம் — தம்பிமார்களே நாமும்

பைங்கிளி பாஞ்சாலியாள் பாவையருடன் கூடி
சரு தார்வனமிந்தையை பாரிதோமகிக்ஷியாய்
பேர்பெரும்நூதனபுரி சர்காக்ஷியை (பகரு

தருமர் கவி.

ஐவரைக் கார்த்தகாயா அரிகரிமுகுந்தா போற்றி
பையரா வணிந்தமார்பா பரந்தாமா போற்றிபோற்றி
நையுதே யெந்தனுள்ளம் நவநீத கோபிமாரா
ஐயனே அபரகற்றி துரோபதை தன்னைகார்ப்பாய்.

பாண்டவாள் வசனம்.

வாருங்கள் தம்பிமார்களே சமதுபங்காளியாகிய துரியோதிரன் செய்த வஞ்சகத்தால் சூது, சொக்கட்டான் ஆடி நாடு ராஜியத்தை தோற்றுவிட்டு, வரப்போ-தலைக்காணி வாய்க்காலோ-பஞ்ச மெத்தையாய் வனம் வந்து நூதனபுரியில் இருக்கின்றபடியால் இன்றையத்தினம் ஸ்ரீகண்ணபிரானுனவர்நமது பேரில் கிருபைகூர்ந்து இன்னும் வரவில்லை இன்று நடக்கவேண்டியது இன்னது இனியதென்று ஏற்படவில்லை நாமெல்லோரும் ஸ்ரீ கண்ணபிரானை நோக்கி தவஞ்செய்வோம் தம்பிமார்களே.

தருமர் தரு

கண்ணா மனமுமில்லையோ ஐவர்கள் மீதில்
இன்னும் தயவில்லையோ
வெண்ணெயுண்ட மாயவா வேணுகோபால கிருஷ்ணா
சரு வெத்தியோயிது கத்திகதவும்
சத்ராதிதுரியனால் தத்திதளும்பவும் (கண்
பாஞ்சாலி வுன்தங்கை பகர்ந்திட்ட சபதத்தால்
பாண்டவர் ஐவர்கள் பாரவனம் வந்தோம்
சரு பகருஞ்சபதமும் மெனறும்முடியுமே
கிகரிலாமுடிசூட்டி யாள்வனோ (கண்
அச்சுதானந்தா கோவிந்தா யெங்கள்மேல்
பக்ஷம்வுனக் கில்லையோ
கச்சனி கோபியர் வண்ணனே
கரிமுகில் கன்னியர் மணவாளா
சரு கபடநாடகம் தன்னைமுடித்தவா
கோபியர்சேலையை மரத்திலொளித்தவா (கண்
தரணியைமூன்றடி யாகஅளந்தவா
இரணியனைக்கொன்று உலகத்தை ஆண்டவா
சரு ஏழைமீதினில் வர்மமாகுமா
ஆழிகடல்தன்னிலே பள்ளிகொண்டவா

பொது வசனம்.

இவ்விதமாக பாண்டவாள் நூதனபுரியில் வந்து ஸ்ரீ கண்ண

பிரானை நோக்கி தவஞ்செய்ய கண்ணபிரானவர் பாண்டவாளைக் காணும்படியாக தர்பார் நாடி வருவது.

கிருஷ்ணமூர்த்தி வருகிற கவி.

அச்சுதன் ஆதிமாயன் ஆயர்பாடியில் வளர்ந்தோன்
கச்சணி கோபிகாஸ்திரி காதலைத் தீர்த்துவைத்தோன்
நச்சரவத்தின் மீதில் நடனமாய் பள்ளிகொண்டோன்
பச்சநிறமாயவனும் கெருடனேரி பரந்தாமன்கொலுவாவரு

தரு. (கின்றனே

ஆயர்குலந்தழைக்க மாயவனும்பிறந்து ஆடுமாடுகள் மேய்ததேன்
கானக மெங்கும்வேணு நாதங்கள் செய்தேன்
சாயல் நடையுடைய தாயார் யசோதையிடம்
தந்திரமாகச் சென்றேன் உரலேறி தயிர்பால்
சந்தோஷமாக வுண்டேன்
சரு தந்திரமாகவே கோபியர் தாங்கையில்
விந்தையாய்காமத்தை தீர்த்துமகிழ்ந்தேன் (ஆயர்
இரணியன் யெனை இகழ்ந்துபேச பிரகலாதன்
தரணியில் அரியோ வென்று நோக
கரைக்காண நரசிம்ம ரூபமாய் தூணில்நின்று
கண்டகன் அவனுயிரை சண்டனிடங் காட்டினேன்
சரு கத்தியேகதரிட சற்றுமஞ்சாமலே
பற்றிவிரலினால் குத்தியேயிழுத்தேன் (ஆயர்
சாந்தீபர் குருதக்ஷணைக்கேழ்க்க சுதன்கப சாந்தன்
தன்னை யெழுப்பி ஆவல் தீர்க்க
வேந்தன் பிரபஞ்சன சூரன்தனை பிடித்து
சரு வீரிடகொன்றுமே ஆழியில்சங்கதை
சீருடன்யெடுத்துமே சங்கதை தந்தேன் (ஆயர்
சிருஞ் சிறப்புற்றோங்கும் பாரில் வரிஞ்சிகர்
சீலன் வேடப்பனீன்ற பாலன்கோதண்டராமன்
சரு பாடுஞ்செந்தமிழ் பாவிடவுலகினில்
தேடியே அன்பர்கள் சிந்தைமகிழ்ந்திட (ஆயர்

கிருஷ்ணமூர்த்தி கவி.

சங்கரன் கதைகோதண்டம் சாரங்கம் சங்குமேந்தி
அக்கரை யாகஐவர் அழைத்திட்ட விபரந்தன்னை
இக்கணம்நாமுஞ்சென்று யெழில்தூதனு புரிக்கு
பக்குவமாய் ஐவருக்கு பகருவாம் பகருவாயே.

வசனம்.

கேளாய் மாதவா நாம் இன்றையதினம் பாண்டவாளிடம் செல்லவேண்டும் ஆகலால் சீக்கிரஞ்சென்று பாண்டவாளுக்கு தெரிவித்து வாரும் மாதவா.



தருமர் தரு.

ஆதியேசரணம் ஐவரைக்காத்த ஜோதியே சரணம்
பாதிமதியணிந்த பரமர்க்கு மைத்துனா
நீதியில்லாத தருமர் சிரங்குனிந்தேன் சுவாமி (ஆதி

கிருஷ்ணமூர்த்தி தரு.

தாளடி பணிந்த தருமபூபா நாளுமேவாழி
எதுவிதத்தினால் என்னை அழைத்தீர்கள்
ஓதுவீர் விபரமாய் சதிகளறிந்திட (தாள

தருமர் வேறு தரு.

நாங்கள் பிழைக்கும்வகை மைத்துனரே ஓகோ மைத்துனரே
தாங்கள் யெனக்குரைப்பீர் மைத்துனரே
மாதுபாஞ் சாலிதுயர் மைத்துனரே
மனக்குறை தீர்க்கவேண்டும் மாயவரே (நா

கிருஷ்ணமூர்த்தி தரு.

மனக்குறை வந்ததென்ன மைத்துனரே ஓகோ மைத்துனரே
மாது துரோபதைக்கு வெற்றிவீரரே
மன்னர் இருக்கையில் மாதுபாஞ்சாலிக்கு
எனக்குறைவந்தது எங்களுக்கு ஓதிடுவீர் (மன

தருமர் தரு.

நீரத் துயராகி நெடுமாலே — ஐவர் திரிந்தோமோ
கானகத்தில் — மாயவரே
பாரவனத்தில் வந்து — மாயவரே நாங்கள்
பரதவித் திட்டோமோ — மைத்துனரே (நீ

கிருஷ்ணமூர்த்தி தரு.

பரதவித் திடவேண்டாம் ராஜர்களே — ஓகோ ராஜர்களே
பாரதம் முடிக்கவேண்டும் — பாண்டவரே
தரைபுகழ் வுலகத்தில் — தங்கை பாஞ்சாலிதன்னை
ஐலுதியாய்கொண்டுவாரும் — ராஜர்களே (பர

தருமர் கவி.

மைத்துனன் துளசிமார்பன் மாது பாஞ்சாலி தன்னை
வெற்றியா அழைத்தாரென்று விண்ணவ ரதிசயிக்க
சித்தத்தில் அன்புகூர்ந்து தெரியவே நீங்களேகி
பத்தினி யாகசேனி பாவையை கொண்டுவாரும்.

தருமர் வசனம்.

கேளாய் மந்திரி சீக்கிரம் அரண்மனைக்குச் சென்று யாகசேனி யாகிய பாஞ்சாலியை நாம் அழைத்தோம் என்று அழைத்து வாருங்கள் மந்திரிமார்களே.

பாஞ்சாலியம்மன் வருவது கவி.

மன்னவர் அழைத்தாரென்று மங்கையர் கூறக்கேட்டு
அன்னம்போல் நடைநடந்து அழகுபட்டாடைதன்னை
கன்னியர்க் கெல்லாம்மேலாய் கர்ப்பினி லுயர்ந்தமாது
பன்னியே வார்த்தைகேட்டு பாஞ்சாலி வருகின்றாளே.

பாஞ்சாலியம்மன் தரு.

பச்சநிற மாயவன் — அச்சுதன் தங்கையான
பாஞ்சாலியம்மன் வந்தாள் — யாகசேனியாள் (பாஞ்
இச்சையுடனே நாதர் — யெந்தனை அழைத்தசேதி
உச்சங்களை அரிய — உத்தமிவந்தாள்

உம்பர்கள் யெந்தனை கண்டு மகிழ்ந்திட
கரு அன்பர்களெல்லாம் அடியினை போற்றிட (பச்ச
கன்னியெந்தன் சேடிகளா கண்ணுள ரழைத்தவிதம்
இன்னது இனியதென்று யேந்திழையே கேட்டுவாடி
கரு வந்திழையேபதில் இக்ஷணங்கூடி
வேந்தனைக்கண்டுநீ விபரத்தைகேளடி
சந்திரப் பிரையுங்கம்மல் விந்தையாய் பணிசொலிக்க(பச்ச
கந்தம் களபம்வீச கன்னியும் வந்தாள்
கரு கங்கணங்கட்டகமும் செங்கையில் இலங்கிட
நங்கையர் இருபுரம் கவுரிகள் விசிட (பச்ச
குறத்தி நகரில் வாழும் பாலன்
வைத்தியலிங்கன் கோருந்தபத்தில் வந்தசீலன்
சிரத்தையாய் வீரப்பனுங் குறித்த நாடகங்கேழ்க்க
கரு சிறுவன்நான்கோதண்ட ராமனும்பாடினேன்
பெருமையாய்கண்ணன் திருவடி தேடினேன் (குற

பாஞ்சாலியம்மன் தரு.

நாதாசரணம் சதுர்மறை வேதாசரணம்
நாதாவுன் பாதத்தில் நல்மலர் கொண்டு
தோதா அர்ச்சனைசெய்தேன் தோகையை ஆதரி (நாதா

தருமர் தரு.

வாழிநீ மயிலே பாஞ்சாலன்பெற்ற மயிளிளங்குயிலே
ஆழியில் ஆலிமீதினில் அமர்ந்திட்ட
அச்சுதன் தங்கையே பக்ஷமுடனே யென்றும் (வாழி

பாஞ்சாலியம்மன் வேறு தரு.

யேதுக்குயெனை அழைத்தீர் பிராணநாதா யெந்தன்பிராணநாதா
இன்பமுடனுரைப்பீர் திவ்யபாதா
மாதுநான் அறிந்திட மகிக்ஷியுடனெனக்கு
நீதான வார்த்தையென்ன செப்பிடுவீர்யெந்தனுக்கு (யேது

தருமர் தரு.

ஓதுகிறேன் கேளடி நீபெண்ணே யெந்தன் பெண்ணே அடி
உத்தமியே கவனமாய் கண்ணே
ஆதிமால வுந்தனண்ணன் அழைத்திடும்படி சொன்னார்
சேதிகளை வுரைதேன் சேழிழையே கேட்டுவாடி (ஓது

பாஞ்சாலியம்மன் தரு.

யேதுக்கு யெந்தண்ணன் பிராணநாதா யெந்தன் பிராணநாதா
என்தனை அழைத்திட்டாரோ திவ்யபாதா
பேதாபேதமில்லா பெண்ணுனெனக்கு நீதான்
ஓதிடுவீர் யெந்தனுக்கு உத்தமியாளறிந்திட (யே

தருமர் தரு.

மன்னன்பாஞ்சாலன்பெற்றபெண்ணேமாதுபாஞ்சாலியானகண்ணே
பன்னிடும்வார்த்தைதன்னை பாவையேநானறியேன்
உன்னிதமுடன் சென்று உத்தமியே கேட்டிட (மன்

பாஞ்சாலியம்மன் தரு.

அண்ணா சரணம் பச்சமணிவண்ணா சரணம்
அண்ணாவென் திருவடி யென்னாளும் அடியவள்
வெண்ணில்லாமலர்சாற்றி இருகரங் கூப்பினேன் (அண்

கிருஷ்ணமூர்த்தி கவி.

என்னுடன் பிரவியான எழிலான வெனதுதங்கா
மன்னவன் வீமசேனன் மதகரிதன்னையழைத்து
இனனிலர் தோர்மதிக்க இளஞ்சிங்கம் போல்கர்சித்து
அன்னவன் விறகுவிற்றால் யாவுமே முடிக்கபோமே.

வசனம்.

ஆனால் கேளுமம்மா தங்கையே உன் மூத்தாராகிய வீமசேனனை அழைத்துவர்தால்நடக்கும் விதத்தை தெரிவிக்கின்றேன் தங்கையே.

பாஞ்சாலியம்மன் தரு.

ஐயையோ படுபாவி ஐவருக்கென்னை கொடுத்து
அலைகுரேனே கானகத்தில் அண்ணாவே அண்ணா
பாஞ்சாலன் யாகம்தன்னில் பாவிநான் பெண்பிறந்து
பரதவிக்க விட்டாயே அண்ணாவே அண்ணா
பாவிதுரியன் தம்பி துர்ச்சாதனனும் என்னை
பத்தினியயை துகிலுறிந்தான் அண்ணாவே அண்ணா
ஐவர்களில் நடுவோர் அர்ச்சுனரை மாலையிட்டு
அலையுரேன் வனமெல்லாம் அண்ணாவே அண்ணாவே
என்று துரியன்பாவி மாண்டுமடிவானோ
அன்று கூந்தல் முடிப்பேன் அண்ணாவே அண்ணா
பாவிபழு வெலும்பை பகர்ந்து சிப்பாகசீவி
பாரில்கூந்தல் முடிப்பேன் அண்ணாவே அண்ணா (ஐயை

கிருஷ்ணமூர்த்தி தரு.

அலறிநீ அழவேண்டாம் யாகசேனியே ஐவர்
ஆளுவார் அஸ்தினாபுரம் பாஞ்சாலியே

கலகக்கார துரியன் கடுஞ்சமரில் மடிவான்
கதரிநீ அழவேண்டாம் தங்கையரே [அலறி

பாஞ்சாலியம்மன் தரு

என்று மடிவான்பாவி அன்றுகூந்தல் முடிப்பேன்
எனக்குத் தெரியச்செல்லும் அண்ணாவே
நன்றல்ல வுனக்கிது நாங்கள் படுந்துயரம்
நலமாகுமோ வுனக்கு அண்ணாவே அண்ணாவே (என்

கிருஷ்ணமூர்த்தி தரு.

பதரி அழுகவேண்டாம் பாவித்துரியனவன்
பதினெட்டா நாளில்மாள்வான் தங்கையரே
மதகரி வீமன்தன்னை தங்கையரே அம்மா
ஐவுதியாம் கொண்டுவாரும் தங்கையரே (பத

கிருஷ்ணமூர்த்தி வசனம்.

கேளுமம்மா தங்கையே உன் மூத்தாராகிய வீமசேனனை அழைத்துவந்தால் இனிநடக்கவேண்டிய சமாச்சாரங்களை தெரிவிக்கிறேன் தங்கையே.

பொது வசனம்.

இவ்விதமாக கண்ணபிரானுகைப்பட்டவர் தனது தங்கையிடத்தில் வீமசேனனை அழைத்து வரும்படி தெரிவிக்க வீமசேனன் தர்பார் நாடி வருவது.

வீமன் வருகிற கவி.

மாயவரும் அழைத்தவிதங் காதில் கேட்டு
  மதகரியும் வீரமுடன் யெழுந்திருந்து
ஆயர்மான் தன்னைநிதமும் மனதிலெண்ணி
  அடங்காத யிளஞ்சிங்கம் போலசீறி
தூயநவமணி பணிகள் அலங்கரித்து
  துரோபதையை இன்றுநான் காணவேண்டி
நேயமுடன் மதவீமன் சபையைநாடி
  நிகரில்லா கெதையுடனே வருகின்றேனே.

வீமன் தரு.

தனதனனு தனதனனு தனனுதான தனத்தந்த் தனதனனு.

வந்தானே மதவீமசேனன்-நல்ல
வாகன புயமதிலே மாலையிலங்க
இந்திரன் யெனைகண்டு ஓட-நல்ல
கடில்லா கைதனிலே கதையதைபிடித்து
குந்திதேவி ஈன்றபாலன்-இந்த
குவலயந் தனிலொருவர் நிகரில்லா சூரன்
செந்திருவதனக் கெம்பீரன்-நல்ல
திருமாலின் பாதத்தை மறவாத சீலன்
சந்திரகுலவதன ஒய்யாரன்-நல்ல
தையல் பாஞ்சாலியவள் மகிழுஞ்சிங்காரன்

தூயகவமணி பணிகள் துன்ன-ஜூகா
தாத்தாரி முரசுகளும் கிடுகிடுவென்ன
கெதையினால் ஜலமதை அடிப்பேன்
கேசரி மார்க்கமாய் வார்த்தை திறப்பேன் (வர்

வீமன் தரு.

அண்ணா சரணம் செந்தாமரைக் கண்ணா சரணம்
அண்ணாவுன் பாதத்தில் யெண்ணாளும் மதவீமன்
எண்ணில்லா மலர்கொண்டு இருகரங் கூப்பினேன் (அண்

தருமர் தரு.

வாழ்குவாய் தம்பிவீமசேனா வாழ்குவாய் தம்பி
வாழ்குவாய் யென்நாளும் தாழ்வது வாராமல்
வாழ்வினை தீர்த்து ஒருவரெதிரில்லாமல் (வாழ்



வீமன் தரு.

அழைத்ததை சொல்வீரண்ணா என்னை அழைத்ததை சொல்வீர்
அழைத்த விபரமதை யெடுத்தெனக் குரைத்தாலே
செழித்திடும் வனஞ்சென்று செங்கனி கொண்டாரேன் [அ

தருமர் தரு.

சொல்லுவேன் வீமா அழைத்தவிதம் வல்லவாகேளாய்
அல்லும் பகலும்நம்மை ஆதரித்த மாயன்
நல்ல மனதாக நாற்பதம் பணிகுவாய் [சொ

### வீமன் தரு.

மணிகுவேன் அண்ணு அரியின்பாதம் பண்புடன்பெறும்
இணையில்லா மலரடி யென்னுளுந் துதித்துதான்
பணிவிடை செய்குவேன் பரந்தாமனைக்கண்டு (ப

### வீமன் கவி.

மாயவா வுனதுபாதம் மலரடி தன்னில்வீமன்
சேயன்தான் மலர்கள்கொண்டு திருவடி தன்னில்சாற்றி
நேசமால் வெற்றிவீமன் நெடிமுடி தன்னைத்தாழ்த்தி
காயாம்பு வண்ணுவுந்தன் கழலடி பணிந்திட்டேனே

### வீமன் வசனம்.

சரணம் சரணம் பரந்தாமா தங்களுடைய பொற்பாத கமலங்களுக்கு வீமசேனன் அநேக வந்தனம், யென்னை அழைத்த சமாச்சாரங்களை தெரிவிக்கவேண்டும் சுவாமி.

### கிருஷ்ணமூர்த்தி கவி.

அழைக்கவிதம் வுரைத்திடுவேன் வெற்றிவீமா
அன்புவைத்து கவனமதாய் கேழ்க்கவேண்டும்
செழித்தோங்கும் சிவநந்தா புரிக்குசென்று
திசைநடுங்கும் போர்மன்னன் வைத்திருக்கும்
அழகிய பண்டார பெட்டிதன்னை
அபகரித்து கொண்டுவந்தால் பதினெட்டாநாள்
பிழையில்லா சமர்புரிந்து துரியனையும்வென்று
பட்டமதை தருமருக்கு சூட்டுவேனே

### கிருஷ்ணமூர்த்தி வசனம்.

ஆனல் கேளுமப்பா வீமசேன உன்னை அழைத்த சமாச்சாரம் யென்னவென்றால் நீங்கள் பங்காளிகளிடம் சூது சொக்கட்டாடி நாடு ராஜ்ஜியத்தை தோற்றுவிட்டு வனம் வந்து இன்றோடே பதின்மூன்றுவது வனம் ஆய்விட்டது. ஆகையால் நாம் சும்மாயிருந்தால் ஒன்றும் கூடிவராது உங்களுக்குள் யேற்பட்ட பத்துயெட்டு பதினெட்டா நாள் யுத்தம் முடிவு பெறுது யாகசேனியாகிய பாஞ்சாலிக்கு வீரசாட்டி, வீரம்பை, வீரகெந்தகம், வீரமல்லாரி, பண்டார பெட்டி வேண்டும், இதுகளெல்லாம் யென்தங்கையிடம் யிருந்தால்தான் பதினெட்டா நாள் யுத்தங்கெலித்து யாகசேனி மயிர் முடிக்கலாம் அன்று தான் நீர் கையால் ஜலம் அருந்தலாம். அதற்காக சிவனந்தபுரி பட்டணத்தில் போர்மன்னனிடம் வீரசாட்டி, வீரம்பை இருக்கிறது கைப்பற்றவேண்டும் நீ விறகுதலையனுக விறகையெடுத்து சிவானந்தாபுரி பட்டணம் செல்லவேண்டும், போர்மன்னன் தனது முதல் மந்திரியாகிய உக்கிரபானு மந்திரியைவிட்டு

கூப்பிடுவேன், நீ செல்லவேண்டும். சென்று விரகை மதிளின்மேல் சாத்தவேண்டும் சாற்றின உடனே மதிலிடிந்துவிடும் உன்னைப்பிடித்து சிறைச்சாலையில் அடைத்து விடுவான் அதற்கு ஒன்றும்பேசாமல் இருக்கவேண்டும் உடனே நான் தாய்க்கிழவியாகவும் அர்ச்சுனன் விஜயபெண்ணாகவுமுன்னைத் தேடிவருவோம் வந்துஉன்னை சிறை மீட்டுபோர்மன்னன் வைத்திருக்கும்வீரசாட்டி, வீரபம்பை, வீர கெந்தம், பண்டாரப்பெட்டியை கைப்பற்றி போர்மன்னனை பாடத் தலைவனாகவைத்திருந்தால்தான் சமர் செயிக்கலாம் வீமசேனா

வீமன் தரு.

செல்லுவோம்இருவருமாய் மாயவரே ஓகோமைத்துனரே
சிவனந்தா புரிநகர் மைத்துனரே

கிருஷ்ணமூர்த்தி தரு.

இந்தவுருவாக சென்றாலே போர்மன்னன்
கொந்தத்தால் மாய்த்திடுவான் வீமசேனா

வீமன் தரு

யெந்தவுருவமதாய் சென்றாலே போர்மன்னன்
சொந்தக்காரன் மைத்துனரே

கிருஷ்ணமூர்த்தி தரு.

விறகு தலையனைப்போல் உருவமெடுக்கவேண்டும்
மறுரூபம் மாற்றிவாரும் வீமசேனா

வீமன் தரு.

விறகை தலையில்வைக்க ஆதிமூலமே-அயன்
சிரசில் எழுதினானே பரந்தாமனே

கிருஷ்ணமூர்த்தி தரு.

பஞ்சவர் ஐவர்களால் பட்டதுன்பம் போரும்போரும்
முஞ்சியே துவாரகைக்குப் போறேன் போறேன்

வீமன் தரு.

போகவேண்டாம் நில்லும்நில்லும் பச்சவண்ணனே-ஐவர்
பிழைக்கும் விதத்தைசொல்லுவீர் நீலமேகனே

கிருஷ்ணமூர்த்தி தரு.

வீமா விரகெடுத்து வீதிவீதியாய்சுற்றி
விறகை போர்மன்னன் மதிலில் சாறவேண்டும்

வீமன் தரு.

மாயவரே விறகை மதிலோரஞ் சாற்றினால்
சாயுமே மதிளெல்லாம் பரந்தாமா

கிருஷ்ணமூர்த்தி தரு.

மதிலிடிந்தால் போர்மன்னன் மதகரியே
வைப்பான் சிறையிலுன்னை வெற்றிவீமரே

வீமன் விருத்தம்.

சிறையிலுன்னை வைத்திடுவா னென்றுரைத்த
திருமாலே உந்தனுக்கு தகுதியாமோ
அரிகரியே வுன்செயலே அயனெழுத்தோ
அவதிபட போர்மன்னன் யெனைவாட்ட
மறுபடியும் நீரெங்கன் சிறையைமீட்டும்
வகைவிபர மடியேனுக் குரைக்கவேண்டும்
பருவமுக மாதர்கற்பை அழித்திட்டேனோ
பாவிநான் துன்பப்பட அயனெழுத்தோ.

வீமன் வசனம்.

கேளும் பரந்தாமா நான் இதுபரியந்தம் என் தலையில் சுமையை வைத்ததில்லையென்னை விறகுவிற்கும்படி தெரிவித்தீர் இதற்கென்ன செய்யப்போகிறேன் தங்களிஷ்டப்படி விறகுதலையனாக வரசந்தோஷமாகினேன் சுவாமி.

இவ்விதமாக ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியானவர் வீமனை விறகுதலையனாக வரும்படி தெரிவிக்க வீமசேனன் தன் உருவத்தைமாற்றி விறகுதலையனாக தர்பார்நாடி வருவது.

விறகுதலையன் வருகிற கவி.

வீமனுமே விரகனைப்போல் உருவைமாற்றி
விண்ணவர்கள் அதிசயிக்க சுமையைக்காட்டி
தாமதங்களில்லாமல் தெருவில் சென்று
தரணிபுகழ் சிவனந்தா புரியைநாடி
சேமமுடன் வீதிகளில் விறகுவிற்று
நிந்தையில்லா ஜீவனமும் கழிக்கவெண்ணி
பூமிபுகழ் தாய்கிழவி யீன்றெடுத்த
புதல்வனுமே கொளுவாக வருகின்றானே.

விறகுதலையன் தரு.

அரசர் வீதிகள்தோறும் சாசமுடனே செல்லும்
விரகன் கொளுவதாகினேன் சந்தோஷங்கொண்டு (விர
கரத்தில் கோடாலியோடு கயிரை யெடுத்துக்கொண்டு
சட்டுகட்டி விறகை திட்டமாய் தலையில்வைத்து

சுரு காட்டுவிரகதை நீட்டியேகத்தியால்
கூட்டியேவொன்ருய் கும்பலாய் வெட்டிடும் (அர
பாழும் வயர்வளர்க்க பார்வனங்களெல்லாம்
ஆழமாக பரித்து அடியோடே வெட்டுவேன்
சுரு அலைந்து நான் ஊர்களில் திரிந்துவிரகதை
நலமுடன்விற்றுமே தினம்வயர்வளர்ப்பேன் (அர
தாயாரும் தாய்கிழவி தங்கைவிஜயாம்பாளும்
நேயமுடனே என்னை நினைத்து தேடுவார்களே
சுரு நிந்தனை படுவார் யெந்தனைத்தேடி
வந்துநான் இன்றோடே மூன்றுநாளாளாச்சுதே (அர
அந்தணரே அம்மம்மாரே ஆராகிலும் வாங்கிடுங்கள்
சிந்தையில்மகிழ்ச்சியாக செல்லவேண்டும்யென்நகரம்
சுரு தேவையோ இல்லையோ சீக்கிரஞ்சொல்லுங்கள்
பாவியென் தலையெல்லாம் பற்றியெறியுதே (அர

பொது வசனம்.

இவ்விதமாக விரகன் தலையில் விரகு சுமையைக் கட்டுக்கட்டி விற்கும்படியாகசிவானந்தாபுரி பட்டணத்தை நாடிவர ! அந்தச்சமயத்தில் சிவானந்தா புரியை ஆளப்பட்ட போர்மன்னமகாராஜன் தர்பார் நாடிவருவது.

போர்மன்னன் கவி.

பட்டயமும் பரிசையுடன் பாலாயீட்டி
பலபல விருதுகளை அணிந்துக்கொண்டு
கட்டிட்டு சல்லடமும் கச்சைகட்டி
தாண்டியே இளஞ்சிங்கம் போல்கர்சித்து
அட்டில்லா வீரசாட்டி பம்பையோடும்
அருகினிலே பண்டார பெட்டிகொண்டு
கட்டழகன் வுற்ற கோபங்களோடு
கனகசபைக்கு போர்மன்னன் வருகின்றனே.

தரு.

தனதன்ன தனதன்ன தனனதான தனத்தந்த தனதன்ன தனன

வந்தானே போர்மன்ன ராஜன்—நல்ல
வாகன புயமதிலே மாலையுமிலங்க
செந்திரு வதனக் கெம்பீரன்—ஆகா
ஜெகதாடு கச்சைகளும் அணியும் ஒய்யாரன்
ஆரஞ் சரப்பளிகள் பூண்டு—நல்ல
அணிந்திடும் மார்பினில் பதக்கமு மிலங்க
காலினில் சதங்கைகளும் கொஞ்ச-நல்ல
கடகமணி கைதனிலே கத்திகளு மிஞ்ச
இடையினில் கட்டாரி சூரி-ஆகா

இன்பமுடன் பாலாவும் தோமர பிடித்து
யெதிரில்லா பேர்பெற்றஞான்-நல்ல
இஷ்டமுடன் சிவனந்தாபுரி ஆளும்வீரன்-ஆகா
ஆரம் மோகன மாலையாட-நல்ல
அண்டத்தில் புவியோர்கள் யெந்தனைதேட
துத்தாரி முரசுகளும் பாட
அடியிடை மாதர்களும் சாமரைபோட (கை

போர்மன்னன் கவி.

ஆகமும் நீதிவாழ்க ஆரியர் மறையோர் வாழ்க
யோகிகள் முனியோர்வாழ்க உத்தம ஸ்திரிகள் வாழ்க
நாகரீகங்க ளோடும் கற்றவர் குடிகள் வாழ்க
ஏகநாயகன் பொற்பாதம் யென்னாளும் செழித்துவாழ்க

போர்மன்னன் பூசை தரு.

பூசைபுரிந்திடுவேன் கேமஇஷ்டை பொன்னடிகண்டிடுவேன்
ஆசையுடனே நான் அரும்புமலர் கொண்டு
ஈசாஜெகதீசா யென்றுநான் கரங்கூப்பி (பூசை
மாசில்லா ஜெகதீஸ்பரி உன் பாதம்
மவுனமாய் வாய்மூடி கைகட்டி தபஞ்செய்வேன்
நேயமாய் சிவனந்தாபுரியாளும் போர்மன்னன்
நெடிமுடி சாய்துநான் அகோர தபஞ்செய்தேன்
பாலிகா பூஷணி நீலி சகோதரி
பங்கம் வராமலே இங்ஙனம் வந்தருள் (பூசை

பொது வசனம்.

இவ்விதமாக போர்மன்னதுரை பூசைசெய்து வருகின்றபோது விறகுதலையன்விறகையெடுத்துவிற்கும்படியாகவிறகைவிலை கூறுவது

தரு

விரகோ விரகுவிரகு விரகு வாங்கள்யோ
காட்டு விரகிது காய்ந்த விரகிது
காக்சாம் விரகிது வாங்குங்கள் வாங்குங்கள் (விர
ஆச்சாவிரகிது ஆலம்விரகிது அம்மையற்குந்தி யெரிக்கும்விரகிது
தீச்சல் பற்றுகிது தியதிக மாளுல்
ஆச்சியர் வாங்குங்கள் காசுக்குபால்மாறு (விர
புங்கம்விரகிது புளியம்விரகிது அங்கத்தைகாப்பாற்றுஆத்திவிரகிது
பங்காளியால்வந்த பாழும்விரகிது (விர
ஆருமத்த வரோ அரசர்களில்லையோ
சீராக சிரசெல்லாம் நீராக பற்றுதே
ஆராத் துயராகி ஆதரவா ரில்லையோ (விர

போர்மன்னன் தரு.

மந்திரிமாரே கேளீர் மந்பான வேளைதன்னில்
சிந்தையுங் கலங்கிபாரோ தெருவினில் விரகோவென்று
வெந்தணல் தன்னில்வாடி விரகென்று கூவக்கண்டேன்
தந்திர வுக்ரபானு தன்னைநீ அழைத்துவாரும் (மந்

வசனம்.

கேளாய் மந்திரி யாரோ ஒருவன் விரகை தலையில் வைத்துக் கதிரோனுகிய வெப்பத்தினுல் விரகு விரகு வென்று கதருகின்றான் அவனைப்பார்த்தால் விகாரமான கருப்பு ரூபமாக இருக்கின்றான் அவனை அழைக்க உங்களால் முடிவுபெறாது சீக்கிரஞ் சென்று யெனது முதல் மந்திரியாகிய உக்ரபானு மந்திரியை அழைத்து வாரும் மந்திரி.

பொது வசனம்.

இவ்விதமாக போர்மன்ன ராஜன் தனது மந்திரியாகிய உக்ரபானுவை அழைக்க உகாபானு மந்திரி தர்பார் நாடி வருவது.

உக்ரபானு மந்திரி கவி.

அரசன் போர்மன்னனுமே அழைத்தசேதி
அதிவிரைவாய் தூதர்கள் உரைக்கக்கேட்டு
சிரசுதனில் நவரத்தின மகுடமின்ன
சிந்தையில் மகிழ்ச்சியாய் காணவேண்டி
திறமையிடன் ஆயுதமும் பாலாயிட்டி
தோமுரமுங்கதி கேடயமிலங்க
அரம்புகழு சிவனந்தா புரியைநாடி
அதிபன் வுக்ரபானு மந்திரிவருகின்றனே.

தரு.

உதிக்குங் கதிரவன்போல் திரத்தில் வலிமையுள்ள
உக்ரபானு மந்திரியுந்தானே விராதிவீரன் (உதி
அதிக சந்தோஷமுடன் அரசன் சமுகங்காண
பதிபுகழ் சிவனந்தாபுரியில் சேவகஞ்செய்யும்
சரு பாதநாட்டியம் பாவையராட
திரமையாய்மறையவர் கோஷ்டங்கள்பாட (உதி
முரசுயெக்காளம் பேரி மோது மல்லாரிபாட
சரசமுடைய மந்திரி தாளடி பணிந்திட
சரு தண்டைவெண்டையம் மண்டிஜொலித்திட
அண்டரும்வானவர் யெந்தனைதேடிட (உதி
இருண்ட குண்டலங்காதில் இருபுரஞ் சொலித்திட
தவண்ட மல்லாரிபம்பை தாளசங் கீர்தம்பாட
சரு தரணியில் அதிபல வலுவுள்ள தீரன்

அரணமனதில் துதித்திடும்லோலன் (உதி
பச்சவட்டம்முத்துமாலை கச்சையும் இருக்கக்கட்டு
அச்சமில்லா மாதர் அருகில் சாமரைபோட
சரு ஆரியவேத வேதியர்சூழ
நேரினில் அன்பர்கள் கண்டடி தாழ (உதி

உக்ரபானு தரு.

புவியுள்ளோர் போற்றிமகிழ் துரையேயென்னை
பிரியமாய் அழைத்தவிதம் உரையும்
சருணம்புரிந்தேன் மலர்தனைநான் காங்கூப்பி
கிரணவடிவழகா கெம்பீரனே யெனழைத்தீர் (புவி

போர்மன்னன் தரு.

பாதம்பணிந்த மந்திரி ஓதுவேன் அழைத்ததிம்
பக்ஷமுடன் கேட்டிடுவாய் மந்திரி யெந்தன் மந்திரி
தாதவிழ் சிவனந்தர்புரி தனில் விரகரோ
கூறுகிறன் விலையை கொண்டுவாரும் யென்பதிக்கு (பாத

உக்ரபானு தரு

சென்று விரகன் தன்னை கண்டு அழைத்துவா
இன்று விடையெனக்குத் தாரும்போகபோக
நன்றாய் பதில் உததாரம் கூறும் (செ

விரகன் தரு.

விரகுதனை வாங்கலியோ வெற்றியுள்ள ராசர்களே
வேந்தர்களே யெந்தனிட (விர
அரசரிடவீதியிலே விரகுதன்னை யாருமே வாங்கலியோ
காட்டில் வெட்டினதிது காயவைத்து கொண்டுவந்தேன்
நாட்டாரசர் வாஙகியிதை நன்றாய் எரித்திடலாம் (விர
மன்னியர் வீதியிலே விரகுதன்னை வாங்குவாரில்லையோதான்
இன்னகரமெங்கும் விரகை யெடுத்து திரிந்துவந்தேன்
மன்னர்களே வாங்கலியோ விரகுதனை வலுவாகக்கொண்டுவந்தேன் (வி

உக்ரபானு தரு.

ஆரடா விரகு விற்கும்வீரனே உன்னை அரசர்
அழைத்து வருகசொன்னார் வாடாகூடவாடா
சீருடன் விரகுவிலை கூரடா நானறிந்திட
ஏடாகூட மில்லாமல் யெந்தன்கூட வந்திடுவாய் (ஆர

விரகன் தரு.

அரசனென்றால்யெனக்கு அடுப்புக்கொதிக்குமோடா
மூடா யெட்டப்போடா

யெரிச்சலாகவே பற்றி யெரியுதென் சிரசெல்லாம்
வரமுடியாதெனக்கு வம்புசெய்யாமல் போடா

உக்ரபானு தரு.

கூடவந்தால் விரகை சீருடன்வாங்கியே பணந்தருவார்
ஏடாகூடங்கள் செய்தால் யெந்தன் கைவாளால்
உன்னை வாட்டுவேன் சிறை போட்டுவேன்

விரகன் கந்தார்த்தம்.

வாட்டுவேன் யென்றுரைத்த மந்திரி வுக்ரபானு
காட்டினில் விரகுவெட்டும் கசடனென் றெண்ணிடாதே
ஆட்டுவேன் பம்பரம்போல் அலரியேபதரிவோட
தீட்டியே யெந்தன் வாளால்

தரு.

சிதரக்கர வாட்டுவேன் திசைநடுங்க
உதிரம்சிதர ஆட்டுவேன்
தரணியுள்ளோர் நடுங்க கனுவில் பாணத்தைபூட்டி
சர்மாரி பொழிந்தாப்போல் அள்வில்லாபாணம்விட்டேன்

சரு தாக்குவேன் வுன்னுயிர் போக்குவேன்
சீக்கிரம்வுன்னைநான் பார்க்குறேன் (சித

உக்ரபானு கந்தார்த்தம்.

தரணியோர் யென்னைக்கண்டால் தயங்கியே மயங்குவார்கள்
விரகனே நீதான்கற்ற வித்தையை யென்னிடத்தில்
திறமையை காட்டவேண்டாம் சிதரவேபாணத்தாலே
கரங்களை யொன்றாய் சேர்த்து.

தரு.

கட்டினேனேஉந்தனை இப்போ ஆட்டினேனே
காட்டில் விரகுவெட்டி கலங்காமல்
தாஷ்டீகமாகநீ சமருக்கு வந்தாயோ
சரு தண்டைவெண்டயம் மண்டி ஜெயித்திட
கொண்டுவுந்தனை சிறையிலடைத்திட

விரகன் கவி.

விரகதை யெடுத்துவந்தேன் யெந்தலைக ளெல்லாம்
எரியுதே அனலாய்பற்றி யிரக்கிட யிடத்தைக்காட்டு
சரசரென் றெடுத்துயேகி சராசரம் நடுநடுங்க
தரைபுகழ் வுலகோர்போற்ற சாற்றினேன் மதிளின்மீதில்

விரகன் வசனம்.

ஐய்யய்யோ தெய்வமே நான் வயிற்றை வளர்க்க விரகெடுத்து விற்கும்படியாக வந்தேன். யென்னை மந்திரியானவன் அழைத்து மதிளில் மீதில் சாற்றும்படி தெரிவித்தார். விரகை சாற்றினேன் கோட்டையின் மதிள் அடியோடே இடிந்துவிட்டதே இதற் கென்ன செய்வேன் தெய்வமே.

போர்மன்னன் கவி,

ஆரடா வுக்ரபானு அரண்மனை தன்னிலிப்போ
பாரடா சத்தமென்ன பதிலெனக் குரைக்கவேண்டும்
பேரிடி யிடித்தாப்போல பெருமதின் இடிந்ததென்ன
சீரதாய் விரகன்தன்னை சிறைதன்னில் அடைத்துவாராய்.

போர்மன்னன் வசனம்.

கேளாய் யெனது முதல் மந்திரியாகிய உக்ரபானு இந்தவிரகு தலையன் விரகை மதிளின்மேல் சாற்றினபடியால் மதிலானது அடியோடே இடிந்துவிட்டது. ஆகையால் இவனை விடாமல் கொண்டு போய் சிறைச்சாலையில் அடைத்துவிடுங்கள் மந்திரிமார்களே.

பொது வசனம்.

இவ்விதமாக போர்மன்ன ராசன் விறகு தலையனைச் சிறைச் சாலையிலடைக்க. இந்த சமாச்சாரம் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி கண்டிருந்து விறகு தலையனை சிறைமீட்கும்படியாக தாக்கிழவியாக ரூபங் கொண்டு தர்பார் நாடி வருவது.

தாக்கிழவி வருகிற கவி.

மாயவரும் தாக்கிழவி ரூபங்கொண்டு
 மகிபதிதான் போர்மன்னன் வைத்திருக்கும்
தூயமணிவிரம்பை தனைபரிக்க
 துடைநடுங்கி கோலூன்றி தாண்டிதாண்டி.
நேயமுடன் தருமருக்கு பட்டஞ்சூட்ட
 நெடியமால் மனதிலே கருத்துகொண்டு
சாயலுடன் நடைநடந்து சபையைநாடி
 தாக்கிழவி கொலுவாக வருகின்றாளே.

தாக்கிழவி தரு.

தலைாடிங்கியே பப்பரக்கொட்டியே தாக்கிழவியும் வந்தனளே
கலகலென்றமே தாக்கிழவியும் களரிதன்னிலேவந்தனளே
அருமையுள்ள யெனதுமகனை தெருத்தெரு வாய்தேடியே
கரியமாலுங் கிழவியாகி களரிதன்னிலே வந்தனளே
திக்கில்லாத பாவியாச்சே தெரிந்திருந்தா பாாத்தவர்
அக்கரையாக யென்தன்மகனை ஆரும்பார்க்க வில்லையோ

கூனும்முதுகும் சப்பாவாயும் குளரிகுளரி பேசியே
கானமயிலைப் போலக்கிழவி களரிதன்னிலே வந்தனளே

தாக்கிழவி கவி:

ஆரடி அருகிருக்கும் அருமையென் பேத்திவாடி
கூரடி விசயாம்பாளை குணமுடன் அழைத்தேனென்று
சீரதாய் நீதான்சென்று சீக்கிரம் மகளைத்தேடி
நேராய் சபைமுன்பாக நிமிஷத்தில் கொண்டுவாடி

தாக்கிழவி வசனம்:

அடிவாடி யென் பேத்தி யென் அருமை மகன் விருது விற்க சென்று இன்றோடே மூன்றுநாள் ஆய்விட்டது மகளை இன்னம் வரக்காணோம் ஆகையால் யென் மகள் விசயாம்பாளை நானழைத்த தாக அழைத்துவாடி பேத்தி.

பொது வசனம்.

இவ்விதமாக தாக்கிழவி தனது மகள் விசயாம்பாளை அழைக்க விசயாம்பாள் தர்பார்நாடி வருவது.

விசயாம்பாள் வருகிற கவி.

தாயாகுர் தாக்கிழவி அழைத்தசேதி
தையலாள் விசயாம்பாள் காதில்கேட்டு
நேயமுடன் ஆயர்மகன் தனைநினைத்து
நிகரில்லா பட்டாடை தானணிந்து
காயாம்பு வதனப் பிரகாசியான
காரிகைமார் இருபுரமும் சூழ்ந்துநிற்க
சாயலுடன் நடைநடந்து சபையைநாடி
தாதியர்கள் புடைசூழ வருகின்றாளே

தரு.

விளங்குஞ் சந்திரனைப்போல் களங்கமில் லாதமாது
விசயாம்பா ளென்னும்மாது மெல்லியும் வாறாள்
அளகா பரணமீதில் ஆடை பரிமளிக்க
இளங்குயில் நடையுள்ள யேந்திழை வந்தாள்

சரு இன்னிலந்தன்னிலே கன்னியென் தமயனை
பன்னடிசென்றவர் இன்னமும்காணேன் (விள
சடைப்பில்லை ராக்கடியும் தரித்தவொட் யாணமின்ன
நடையில் அழகுடைய நங்கையும் வந்தாள்

சரு நடனஒய்யாரி மட்டமயிலான
கட்டவிழ்தன்னிலே கனத்த மைதீட்டி (விள

அருமையெனது அண்ணன் விரகுவிற்க சென்றாரே
அவஸ்தைகள் நேரிட்டதோ இன்னம் வரவுங்காணேன்

சரு அஞ்சுகமேமனம் அலையுதென் ஆவி
குஞ்சரவதனியே குறையதுமேவி (விள

தாயார் அழைத்தசேதி நேயமுடனரிய
தையல்சிகாமணிவந்தாள் அழகுடைய

சரு தண்டைகொலுசுகள் சதங்கைகள்கொஞ்ச
கொண்டநிகர்மொழி மாதர்களஞ்ச (வின

விசயாம்பாள் கவி.

செந்திருவதனியான தாயேவுன் பாதம்போற்றி
யெந்தனை அழைத்தசேதி யேந்திழையாளே சொன்னல்
கந்தங் கஸ்தூரியோடு கன்னியாள் விசயாம்பாளும்
விந்தையாய் மலர்பாதத்தில்மெல்லியாள் பணிந்திட்டேன்.

விசயாம்பாள் வசனம்.

ஆனல் கேளும் அம்மா தாயே யெழில்நிறைந்த பொற்பாத கம லங்களுக்கு விசயாம்பாள் அநேக வந்தனம் என்னை அழைத்த சமாச்சாரம் அடியாளுக்கு விபரமாக உரையும் தாயே.

தாக்கிழவி கவி.

அருமையென் மகளே அம்மா அண்ணனும் விரகுவிற்க
தெருவினில் சென்றபோது தீங்குகள்நேர்ந்ததோடி
சரிசரியெனக் குதித்த தனஞ்செய விசயாம்பாகேள்
தெரியவே நாமுங்கூடி தேடியேவருவோம்வாடி

தாக்கிழவி வசனம்.

அடிவாடி யெனக்கு அருமையாக உதித்த விசயாம்பாள். உன் அண்ணன் விரகு தலையன் விறகு விற்கச் சென்றவனை இன்றுடன் மூன்றுநாளாய் வரக்காணேம். ஆகையால் நாம் இருவரும் சென்று தேடிவருவோம் வாடியென் அருமைமகளே.

தாக்கிழவி தரு.

பாலனைகண்டீர்களா விரகுவிற்கும் பாலனைகண்டீர்களா
பாலனும் விரகுவெட்டி காலையிலே கொண்டுவந்தான்
சீலனைகண்ணினல் கண்டால் செப்பிடுங்க ளம்மம்மாரே (பா
ஒருபிள்ளை தானெனக்கு உற்றதுணை ஆருமில்லை

அருமையுள்ள ஆச்சிகளா யென் பாலகனை
ஆராகிலும் கண்டீர்களா (பா

காக்சாம் விரகொடித்து கட்டுகட்டி கொண்டுவந்தான்
பேசத் தெரியாப்பிள்ளை அருமைமகன்
பெண்டுகளா சொல்லுங்கடி (பா

திக்கில்லா பாவியானேன் பாலனைவிட்டு
தெருவில்நின்று தேங்கலானேன்
பக்ஷமுள்ள பெண்மகனை பார்த்திருந்தால் சொல்லுங்கடி (பா

விசயாம்பாள் தரு:

அண்ணைகண்டீர்களா விருவிற்க ஆச்சிகளா சொல்லுங்கடி
அண்ணனும் விறகுவிற்க பெண்ணிவந்தார் இத்தெருவில்
விண்ணுணங்கள்பேசாதிடி ஓமெல்லிகளா விட்டிட்டி என்பிரப்பை
அந்தணர்கள்வீதியிலேயெனண்ணன்வர அம்மம்மார்கண்டீர்களா
விந்தையுள்ள யென்பிறப்பை வந்திருந்தால்சொல்லுங்கடி
வன்னியர்வீதியிலே விறகுவிற்க வந்திருந்தால் சொல்லுங்கடி
கன்னிகளா யென்பிறப்பை கண்டிருந்தால் சொல்லுங்கடி
அன்னீதமாய் மூன்றுநாளாய் ஆரோ மடக்கிக்கொண்டார் (அண்
வாணியர்வீதியில் விறகுவிற்க வந்திருந்தால் சொல்லுங்கடி
சேணியர்கள் தேவிகளா செட்டிதெரு அம்மகளா
செம்படவர்வீதியிலே விறகுவந்தால் சொல்லுங்கடி அம்மம்மாரே
(அண்

தாக்கிழவி புலம்பல் தரு:

அப்பாமகனேயுன்னை யெப்போகான் காண்பேண்டா
அருமையாய் வந்துதித்த கண்மணியே
இப்புவி லெந்தனை யார்மதிக்கப் போறார்கள்
ஏங்கிமனம் வாடுரண்டி சேடிகளா
இன்றோடே மூன்றுநாளாய் யென்மகனை காணமலே
ஏங்கிமனம் வாடுரண்டி சேடிகளா
தையலெந்தன் சேடிகளா மெய்யுந்தளர்ந்துவாடி
ஈயம்போ லுருகுதடி சேடிகளா
ஆரோ மடக்கிக்கொண்டார் அன்னீதமாய் யென்மகனை
சோருதடி யெந்தனுள்ளம் சேடிகளா
பாராளும் ராசர்களே பாலகன் விறகுவிற்க
பார்த்திருந்தால் சொல்லிடுங்கள் ராசர்களே

போர்மன்னன் கவி.

மந்திரி விக்ரமாது வாய்விட்டு தெருவிலாரோ
சிந்தையுங் கலங்கிவாடி தேடுறாள்விரகன்தன்னை
கந்தார் குழலாளான காரிழை யாளையின்று
சந்தோஷமுடனே சென்று அதயிலே கொண்டுவாரும்.

கேளாய் மந்திரி அதோ தெருவில் யாரோ ஒரு கிழவி தன் மகன் விறகு விற்கச் சென்றவனை காணோமென்று புலம்புகிறாள் அவளை சீக்கிரம் அழைத்து வருவாய் மந்திரி.

உக்ரபானு தரு.

ஆரடி தாக்கிழவி அரசன்போர் மன்னதுரை
அழைத்து வரவுஞ்சொன்னார் வாருமடி

சரு ஆசையாய்வுந்தனை நேசமுடனவர்
காசினிதன்னிலே கன்னியே அழைத்தார் (ஆரடி

தாக்கிழவி தரு.

பாலனை பரிகொடுத்து பதரி அழுகும்போது
பாராளும் ராசர்யென்னை யேனழைத்தார்

சரு பத்துதேயென்வயர் சித்தங்கலங்கியே
கத்திக்கதரியே மெத்தவேவாடுரேன் (பால

உக்ரபானு தரு.

கத்திக்கதர வேண்டாம் புத்திரன் தன்னைராசர்
வெத்தியுடன் தருவார் வாரும் வாருங்கூட (சத்

தாக்கிழவி தரு.

வந்தால் அருமைமகன் சிந்தை மகிழும்படி
வருவானோ கண்ணெதிரில் மந்திரியே (வந்

உக்ரபானு தரு.

அரசன் மனதுவைத்தால் அருமைமகன் வருவான்
அழவேண்டாம் ராசன்தன்னைப் பாரும் பாரும் (அ

தாக்கிழவி தரு.

வந்தனம் வுந்தன் மலரடிக்கே சுவாமி மலரடிக்கே
யெந்தனை அழைத்தவிதம் யென்னக் காரணம் (வந்

போர்மன்னன் தரு.

அழைத்த விபரமதை ஆவலுடனுரைப்பேன்
அழுதுப் புலம்பும்விதம் யென்னக் காரணம் (அ

தாக்கிழவி தரு.

அருமையான யென்மகன் விரகுவிற்கச் சென்றவன்
ஆரோமடக்கிக் கொண்டார் ராசதுரையே (அ

போர்மன்னன் தரு.

நாடுநகர் ஊர்பேரும் நன்றுயெனக் குரைத்தால்
தேடியே உன்மகனை சீக்கிரந் தருவேனடி (நா

தாக்கிழவி தரு

ஊருதேசம் நாடுநகர் கண்டு நாதனறி
உரைத்திட்டேன் யென்மகனை எங்கு காட்டுவீர் (ஊ

போர்மன்னன் தரு.

பக்கத்தில் உன்கூட நிற்கின்ற பெண்ணொரு
பகருவாய் யெந்தனுக்கு பாட்டியரே (பக்

தாக்கிழவி தரு.

ஆசையுடனெந்தனுக்கு பாசமுட னுதித்த
அருமையான யென்மகள் ராசதிரா (ஆ

போர்மன்னன் தரு.

பாட்டிநீ யிந்தப்பெண்ணை பதிலொன்றும்தெரிவிக்காமல்
மேட்டிமையுடனேவுந்தன்மகளையும் யெனக்குத்தந்தால்
வாட்டமா யுனக்குவேண்டும் வகையதை நானளித்து
நாட்டமாய் மணமுடிக்க நல்லவாக்கு வுரைத்திடாயே.

போர்மன்னன் வசனம்.

கேளாய் பாட்டி இந்தப் பெண்ணை யெனக்குத தந்தால் உன் மகன் விரகனைத் தருகிறேன் நீ கேட்ட பொன் பூஷணம் ஆடை ஆபரணாதிகளையுந் தருகிறேன் சீக்கிரம் பதில் சொல்லாமல் கலியாணம் நடத்த பதில் சொல்லும் பாட்டி.

தாக்கிழவி தரு.

மகன் விரகனைக்கண்டால் மகள் விசயாம்பாளை நான்
மணமாலை சூட்டிவைப்பேன் ராசதுரையே (ம

போர்மன்னன் தரு.

விரகை சாற்றிமதிலே அடிபோட்டே இடித்ததால்
சிறையிலடைத்தேன் உன்மகனை (வி

தாக்கிழவி தரு.

பெண்ணை வுனக்களிக்க யெண்ணம் மனதில்வைத்தேன்
கண்ணின்முன் யென்மகனை காட்டிடுவாய் (பெ

போர்மன்னன் தரு.

மகனைசிறை விடுத்தேன் மகிழ்ச்சியுடன் உனக்கு
மாணிக்கம் கோமேதகம் வாரிதருகுவேன் (ம

தாக்கிழவி தரு.

பெண்ணொன்று புவிதனில் யென்று பிறந்திட்டாளோ
அண்ணனல்லவோ புருஷன் பார்க்கவேண்டும் (பெ

போர்மன்னன் தரு.

என்னென்ன பூஷணங்கள் இன்னம் வுனக்குவேண்டும்
கன்னியரே வேண்டுவதை கேட்டுக்கொள்ளடி (எ

தாக்கிழவி தரு.

இன்றோடே மூன்றுநாளாய் நான்யெங்கிலுந் தங்கவில்லை
அன்ன ஆகாரந்தன்னை அரிவையர் அருந்தவில்லை
பன்னியே வார்த்தைக் கொன்றும்
பதிலொன்றும் உரைத்திடாமல்
மன்னவா ராஜகோவே மகிழ்ந்தெனக் களிக்கவேண்டும்

தாக்கிழவி வசனம்.

ஆனால் கேளும் போர்மன்ன துரையே மூன்று நாள் ஆறு பொழுதாக என் மகனை தேடித்தேடி மகன் விசனத்தாலே அன்ன ஆகாரம் அருந்தவில்லை சீக்கிரம் பதில்சொல்லாமல் சாதமளித்தால் சாப்பிட்டு தாங்கள் கேழ்ப்பதற்கு பதில் சொல்லாமல் தருகிறேன் துரையே.

போர்மன்னன் தரு.

சாதம் அளித்திடுவேன் சாப்பிட்டு இளைப்பாறி
தையல் விசயாம்பாளை தாரும் தாரும் (சா

தாக்கிழவி தரு.

ஆசையுள்ள ராசதீரா பூசை புரிந்திடாமல்
போசனம் செய்வதில்லை செங்கள் வழக்கம் (ஆ

போர்மன்னன் தரு.

நேசமுடனாதியில் பூசை புரியவீங்கள்
பாஷமுடன் பண்டார பெட்டி தாரேன் (நே

தாக்கிழவி கவி.

பண்டாரப்பெட்டிவீரச் சாட்டியும் யென்க்களித்தால்
எண்டிசைபோர் மெதிக்க இக்ஷணம் பூசிச்செய்து
கண்டவர் யாவுமதிக்க கன்னியாள் விசயாம்பாளை
உண்டுதாம் பூலம்மாற்றி உடனேநான் மணமுடிப்பேன்.

தாக்கிழவி வசனம்.

கேளாய் ராசனே என்மகன்வந்து மூன்றுநாள் ஆறுபொழுதாக பூசை செய்யவில்லை பூசை பெட்டியை மகன் விசனத்தினால் ஞாபக மில்லாமல் வீட்டில் வைத்துவிட்டு வந்துவிட்டோம் யென்னமோ நாங்கள் செய்த பூசாபலம் தாங்கள் பூசைபெட்டி வீரஜாட்டி, வீரப்பத்தை, கொந்த கொடிசீலை முதலானதும் ஒன்றும் தவராமல் கொடுத்தால் பூசை முடித்து மூணேமுக்கால் நாழிக்குள் வந்து சேர்கிறோம் போர்மன்ன துரையே.

போர்மன்னன் கொட்டிச்சிந்து திரு.

சந்தோஷம் மனதில்கொண்டு போர்மன்னன்
விந்தையுள்ள பூசைப்பெட்டி வீரச்சாட்டியை
முந்தியே கரத்தாலெடுக்க ஓடுதே
கோபமுடனே பிடித்தேன் ஓடி தூரத்தி
கொந்தக்கொடிசீலை வீரபம்பை
கொலுமுகத்தில் இருந்த ஆயுதங்களே
சிந்தையில் மகிழ்ச்சியாக விசயாம்பாளை
திருமணம் முடிக்காமல் உயிர்தரிப்பேனோ
யெத்தனைநாள் காத்திருப்பேன் கொலுமுகத்தில்
யென்தனுக்கு கலியாணம் செய்யாதிருப்பேன்

சுத்தமுடன் வாரியெடுத்தேன் கரத்தினல்
சொல்லுதே பூசைபெட்டியும் தடுத்திடுதே

கல்யாணம் நடந்திடுமோ யென்முன்னே
காரிழையாள் விசயாம்பாள் வந்திடுவாளோ

வல்லவா நாங்கள்போனல் பட்டணமெல்லம்
புல்லும்முளைத்திடா புழுதியாகுமே தத்தோம்தனதந்தன
தனத்தத்த தனதன தன.

போர்மன்னன் கவி.

நெடுநேர மாகயென்முன் நிற்கையாய் பூசைபெட்டி
கடுமொழி கூரியென்முன் கதருதே யென்னசெய்வேன்
படுபாவி யென்றுவீர சாட்டியும் பம்பைகூடி
தடுக்குதே வுன்கரத்தால் சடுதியில் பெற்றுக்கொள்வாய்.

கேளாய் பாட்டி உனக்கு நான் பூசைப்பெட்டி, வீரசாட்டி, வீரகொந்தம், வீரமல்லாரி இதுகளை கொடுக்கும்படி எடுத்துவரும் போது தடுத்து கூக்குரலிட்டு அழுகின்றது. இதுகளெல்லாம்போனல் யெனக்கொரு அலக்ஷியமல்ல கல்யாணம் நடந்தால் போதுமானது சீக்கிரம் உன் கரத்தை நீட்டி பெற்றுக்கொண்டு பூசை முடித்து வந்து கல்யாணத்தை நடத்திவையும் பாட்டி.

தாக்கிழவி தரு.

ஆசையுள்ள நீதிமன்ன பூசைப்புரிய வந்தன்
தேசத்தில் இடம்இல்லே சென்றுசெபஞ் செய்துவாரேன் (ஆ

போர்மன்னன் தரு.

சென்று பூசைமுடித்து நன்றாய்தபண்ணே சோடித்து
சீக்கிரம் வந்திடுவாய் அத்தையரே (ஆ

தாக்கிழவி தரு.

மூணேமுக்கால் நாழிக்குள் நானே வருகாவிட்டால்
காணுமல் கோட்டையெல்லாம் இடித்து நிரவி நீர்தான்
கடும்பரித்தி ஆமணக்கு விரைத்து வருவாய் (மூ

போர்மன்னன் தரு.

கோட்டையெல்லாம் இடித்து கொத்தி ஆமணக்கிட்டு
ந்தன்வீட்டை தேடிவாரதெங்கே மெல்லியேவுரைத்திடடி (கோ

தாக்கிழவி தரு.

நாதனுபுரி யென்றால் சாதினமாய் யெங்கள்நகர்
நீதொன்றுமில் லாமல்வந்தால் சீக்கிரம் மணமுடிப்பேன் (நா

போர்மன்னன் தரு.

தேசத்தை தேடிவந்தால் ஆசையாய் மணமுடிக்க
சிலவெனக்கு வேண்டாமோதான் அத்தையரே (தே

தாக்கிழவிதரு.

சிலவெல்லாம் நானேபோட்டு நலமாய் மணமுடிப்பேன்
சீக்கிரம் வந்துசேர்வாய் ராசா சேகரா (சில

போர்மன்னன் தரு.

பெண்ணே விசயாம்பாளே கண்ணே வுந்தன்முகத்தை
யென்றுநான் கட்டி முத்தந்தரப்போரண்டி
உன்னையெந்தன் கரத்தால்தொட்டு அணைகுவேனடி (பெ



விசயாம்பாள் தரு.

கண்ணாளா யெந்தன்நாதா என்னைவிட புருஷன்வேதா
விண்ணுலகில் கிடைப்பாரோ வருகிறேன் நாமும்
வேந்தனே இருவருமாய் சேருவோம் போதா (க

போர்மன்னன் தரு.

சீக்கிர மணமுடித்து அத்தையரே யெந்தன் அத்தையரே மகளை
சாக்கிரதையாககூட இட்டுவருவாய் (சீக்

தாக்கிழவி தரு.

யென்ன வேலைகளங்கே தன்னந்தனி யாகநாங்கள்
இருப்பமோ பூசைசெய்து வந்து சேர்கிறேன் (யெ

போர்மன்னன் கவி.

அப்படி வருகாவிட்டால் அரிவையே வந்துசேர்வேன்
தப்பிதம் வொன்றில்லாமல் தையலே மணம்முடித்து
செப்பிய வார்த்தையெல்லாம் திரமதாய் இருக்கவேண்டும்
இப்பவே பயணமாகி இருவரும் சொல்லுவீரே.

போர்மன்னன் வசனம்.

ஆனல் கேளும் அத்தையே பெண்ணே விசயாம்பாள் நீங்கள் இருவருஞ்சென்று மூன்றேமுக்கால் நாழிகைக்குள் பூசைமுடித்து வரத்தவறினல் சிவனந்தாபுரி பட்டணத்தை இடித்து கொத்தி உழுதுபுழுதியாக்கி ஆமணக்கு பருத்தி விரைத்து படலடித்து விட்டு நீங்கள் இருக்கும் நூதனபுரிக்கு வந்துசேருவேன் போய் வாரும் அத்தையே.

தாக்கிழவி தரு.

பூசைப்பெட்டி வீரசாட்டி பொற்கொடியே பெற்றேமடி
போகலாம் நூதனபுரி கூடவாரும் யென்மகளே
சுரு பூந்துளிர்வதனியே பூவையேவாடி
வேந்தர்கள் ஐவர்கள் இருப்பிடந்தேடி

விசயாம்பாள் தரு.

அருமையுள்ள எந்தன் தாயே ஐவர்கள் தனைதேடி
தெரியவே யெந்தன் கண்ணில் காட்டிடு வாயம்மா
சுரு செந்திருவதனியே கந்தளர்க்குழலியே
விந்தையாய்யெந்தனை காற்றிடுநீயே

தாக்கிழவி ஓடி தரு.

நூதனபுரிநகர்சேருவோம் இருவருமாய்வாரும் அம்மாவாரும்

விசயாம்பாள் தரு.

சேருவோமிருவருமாய் சிந்தையில்மகிழ்ச்சியோடு தாயே அம்மா (தாயே.

தாக்கிழவிதரு.

நடக்களன் கால்களெல்லாம் துடிக்குதே
யென்ன செய்வேன் மகளே யெந்தன் மகளே

விசயாம்பாள் தரு.

வந்தோமிருவருமாய் விந்தையுள்ள பட்டணத்தைநாடி நாமுங்கூடி

தாக்கிழவி தரு.

தருமரிருக்கும் நகர்தையலே நாம்வந்தமடிகளே யெந்தன்மகளே

பொது வசனம்.

இவ்விதமாக கிருஷ்ணமூர்த்தி தாக்கிழவி ரூபத்தை மாற்றி சுயரூபமாகவும், அர்ச்சுனன் பெண் ரூபத்தை மாற்றி சுயரூபந் தரித்துதருமாசர் இடத்தில் நடந்தசமாச்சாரங்களைதெரிவிப்பது.





கிருஷ்ணமூர்த்தி கவி.

மைத்துன தர்மபூபா வந்திட்டோம் முன்பால்
வெத்தியாய் விசயனோடு விரைவாக நானும்யேகி
யெத்திசை யோர்நடுங்க இருந்திடும் போர்மன்னாசன்
வைத்துமே பூசைசெய்த பெட்டியை பரித்துவந்தோம்.

கிருஷ்ணமூர்த்தி வசனம்.

ஆனால் கேளுந் தர்புத்திர மகாராசனே நானும் அர்ச்சுனனுஞ் சென்று போர்மன்னன் வைத்திருந்த பூசை பெட்டி, வீரகெந்தம்,

வீரமல்லாரி, வீரசாட்டி கொந்தங் கொடிசீலை இதுகளை யெல்லாம் கைப்பற்றி வந்தோம் மைத்துனா.

தருமர் தரு.

ஐவர் பிழைக்கும்வகை உந்தனாலே சுவாமி
ஆவதும் யெங்களாலென்ன ஆதிமாலே

சுரு அண்டத்தை வாவுண்ட செவ்வாயா
கொண்டல் வண்ணனே குறைகளைதீரும் (ஐவர்

கிருஷ்ணமூர்த்தி தரு

பொருமைக் குணங்களுள்ள தர்மபூபா ஓகோ தர்மபூபா
போர்முகத்தில் நீரிருந்தால் வெற்றியாமா

சுரு பொய்யுறையாத் புண்ணியாநீரும்
தையல்யென் தங்கையும் தரணியில்வாழ்வாயே (பொ

போர்மன்னன் தரு.

பெண்ணே தமரசமே விசயாம்பாள் என்மேல்
யெண்ணத்தை மறந்திட்டாயோ இளந்தேனே
கண்ணே வுன்னைக் காணுமல் உயிர்தரிப்பேனோநான் தான்
கத்திக் கதருராண்டி உத்தமியாளே

சுரு கதித்த இடையுடைய கற்கண்டே செந்தேனே
அதிகவடிவமுள்ள அறிவையர் வருவாளோ (பெண்

சித்திரமே செண்பகமே சேல்விழியே ரத்தினமே
பத்தரை மாத்துத்தங்கம் பாவைப் பசுங்கிளியே
புத்திவேறாகுதேயான் கத்திக் கலங்குரேண்டி
சத்ராதி மன்மதனென்னை சித்ரவதை செய்குராண்டி

சுரு சகைையில்லாமலே மங்கையாள் யென்முன்
இங்கிதமுடனே இனிவருவாளோ (பெண்

இன்னம்வரவில்லையே கன்னியாள் பூசைமுடித்து
அன்னீதமாய் மோசஞ்செய்து அலையவிட்டாளேபாவி
தன்னந் தனியாகநான் தவிக்கிரண்டி செந்தேனே
என்னை வஞ்சகஞ்செய்து யெங்கேபோய் ஒளித்தாயோ

சுரு இறக்க மில்லையோ யேந்திழையாளே
பதைக்குதேயென்மனம் பாவையேவாடி (பெண்

அஞ்சுகமே ரஞ்சிதமே ஆனசக்கிசைந்த கண்ணே
மிஞ்சுதடி மாரன்கணே மெல்லியே வுன்னைக்காணமல்
சஞ்சலம்வுன் மீதில்மைத்து தத்தி தளும்புராண்டி
தஞ்சம்வுன் திருவடிக்கு தாணியில் வுன்னல்மடிவேன்

சரு தாரணியை ஆண்டிட சம்மதமில்லையோ
அரசனிடசெயலோ அலைகிறேன்தொல்லையே (பெண்

போர்மன்னன் கவி.

சீமையும் பூமிவேண்டாம் செங்கோலும்யெனக்குவேண்டாம்
நேமித்த விசயாம்பாளை நிமிஷத்தில் பார்க்கவேண்டும்
தாமத மில்லாமந்திரி தளரவே வுழுதுகொத்தி
பூமியில் ஆமணக்கு போட்டிட சந்தோஷித்தேன்.

போர்மன்னன் வசனம்.

ஆனல் கேளும் மந்திரிமார்களே எனக்கு செங்கோலும்வேண்டாம் அரசும் வேண்டாம் கோட்டைக் கொத்தளத்தை இடித்து ஆமணக்கு பரித்தி விரைத்துவிட்டு விசயாம்பாளை எங்கே யிருந்தாலும் தேடிபிடித்து கல்யாணம் முடிக்கவேண்டும் மந்திரி.

போர்மன்னன்நொண்டிச்சிந்து தரு.

அண்டரண்டம் இடுகிடென்ன போர்மன்னன்
ஆண்டிடுஞ் சிவனந்தாபுரி இடித்து
சண்டனும் நடுநடுங்க பட்டணத்தை
தளரவுழுது கொத்திதத்தி புழுதிஆக்கி
ஆரடா வுக்ரபானு மந்திரி
ஆமணக்கு பரித்தியை சேர்த்துவிரையுங்கள்
பாரடா கொல்லையைசுற்றி அண்டை
வெட்டிபட லடித்துவிடுங்கள் சீக்கிரஞ்செல்வோம்
கார்மேகம் பொழிந்தாப்போல் போர்மன்னன்
கண்டதுண்ட தோமாமுங் கையில்பிடித்து
தாக்கிழவி வுரத்திட்ட நகரத்தை
சந்தோஷமாய் வந்துகண்டேன் விந்தையுடனே
ஆனந்தசந் தோஷம்கொண்டு கிழவிகூட
அழைத்துவந்த பெண்ணவளை கண்ணில்காணேன்
நானே நகரமெல்லாம் சுற்றி சுற்றி
நடக்க முடியாமனம் யேங்கினேனே
தடிபயல் கிரகன்தன்னைக் கண்டால்
தப்பாமல் யென்வாளால் இப்பவேகொல்வேன்

போர்மன்னன் கவி.

ஐயோநானென்ன செய்வேன் அரியாமல் இழிவார்த்தை
மெய்யென்று நம்பிபாவி மதிமோசம்போனேனையோ
தெய்வமே யிதற்கென்செய்வேன் சீமையும்பூமிதோர்த்தேன்
தையலால் விசயாபாளை தனிமணஞ் சூட்டுவேனே.

போரமன்னன் புலம்பல்.

ஐயோ தெய்வமேயிந்த அபக்கேடு வருமென்று
ஆர்சொன்னார் யெந்தனுக்கு தெய்வமே
வையகத்தில் யென்னைப்போல
வாய்பேச்சை நம்பினவர் மாபாவி
யாருமுண்டோ தெய்வமே
நாடுநகர்சீமைபூமி நால்வகை சேனைபோலும்
தேடிவிசயாம்பாளை யென்றுகாண்பனே.
பாசமுடன் பூசைசெய்யும் பண்டார பெட்டிதன்னை
பாவிநான்வகைதெரியாமோசம் போனேனேஒதெய்வமே
ஈசாஜெக தீசாநான்தான் யேக்கி தவித்திடவும்
யெந்தன்மேல் தயவில்லையே சர்வேசா

தருமர் கவி.

தம்பியே வெற்றிவீமா தாணியை ஆளுமன்னர்
தேம்பி அழுவதென்ன சீக்கிரம் நீதான்சென்று
சரசமாய் ராசன்தன்னை தாளாத துயரையாற்றி
கும்பலாய்நீங்களோடி கொண்டுமே வருவீரே.

வசனம்.

ஆனல் கேளுந்தம்பி வீமசேனா யாரோ ஒரு அரசன் வீதியில் அழுது புலம்பிக்கொண்டு போகிறான் அவன் இன்னானென்று தெரிந்துவாரும் தம்பி

தருமர் தரு.

எந்ததேசம் யெந்தநகரம் யெங்கிருந்து யெங்கேபோறாய்
சொல்லும் யெதிர் நில்லும்
விந்தையுள்ள ராசதீரா உந்தனுக்கு வந்தகுரை
யேது நன்றாய் ஓது
ஈரு வித்தகாவுன்மனம் சித்தங்கலங்கியே
கத்திக்கதரிடும் காரணமென்னவோ (எந்

போர்மன்னன் தரு.

பட்டணம்பதியின்பேரும் எட்டநின்று கேழ்க்கவேண்டாம்
வாரும் பதில் கூறும்
கட்டழகா யெந்தன்நகர்கிட்டே இருக்கும் சிவனந்தா
புரியே சொல்வேன் தெரிய (பட்

சரு காரணமாகவே தாரணிமன்னரே
பாரினில்விபரமாய் கூறினேன்தெரிய (பட்.

தருமர் தரு.

பாராளும் அரசர்கள் பதறி அழுதால்மனந்
தாளுமோ மனந் தாளுமோ

சரு அங்கம்பதறியே அழுதுபுலம்பியே
யென்குவந்தீரோ இக்ஷணங் கூறுவீர் (பார

போர்மன்னன் தரு.

கூறுவாய் வுனதுநகர் கூட்டமாக கூடிவந்த
காரணம் யென்னக் காரணம்
தாராளமாய் யெந்தனுக்கு தகுந்தபதில் சொல்வீர்
ராசரே ஓகோ ராசரே

சரு தப்பிதமில்லா இப்புவிமன்னரே
செப்பிடுவீரதை சீரதா அரிய (கூறு

தருமர் தரு.

பாண்டுபுத்திர மைந்தர் பஞ்சவர்கள் பெயர்கள் யெர்
சொல்லுவேன் பதில் விள்ளுவேன்
மீண்டிடும் பகடைசூதால் தாண்டியே ஐவர்கள்
கூடிவந்தோம் வனம் வந்தோம்

சரு மீளவே அஸ்தினபுரி நகர்சொந்தவூர்
ஏளினஞ்செய்குவீர் யென்குறைச் சொன்னால் (பா

போர்மன்னன் ஜம்பை தரு.

ஐயோயிது மாய்கைசூது ஐவர்செய்த மதிமோசம்
வையகத்தோரே யிவர்க்கு மாறுவேஷந் தானதொழில்
காட்டில்கனி பறித்துதின்ற காரணத்தைக் கண்டறிய
ஆட்டியெந்தன் பட்டணத்தை ஆமணக்கு விரைக்கச்சொல்லி
மாய்கையான தாக்கிழவி மாயனுயிருக்க வேண்டும்
மாமியாரைப் பெண்டாண்ட வழக்கமதைக் காட்டினனே
சண்டாளப் படுபாவி சத்ராதி இடப்பயலே
உண்டோடா வையகத்தில் உந்தனிடசூதும்வாதும்
கண்டறியா பாவியும்நான் கண்தெரியா மோசம்போனேன்

தருமர் கவி.

பொரு பொரு பதரவேண்டாம் போர்மன்ன ராசதிரா
நெருப்பென்றால் வாயைப்பற்றி நீராகி போகுமோதான்
கரிமுகில் வண்ணக்கண்ணா கம்சனை வதைத்ததேவா
வருமையை இவர்க்குமாற்றி மணமாலை சூட்டுவாயே.

தருமர் வசனம்.

கேளாய் போர்மன்னன் துரையே நெருப்பென்றால் வாய்வெந்து விடாது, பொருமைக்கு ஒருபோதுந் துன்பம்வராது பதரவேண்டாம் ஏபரந்தாமா இந்த போர்மன்னதுரைக்கு கோபத்தைமாற்றி பத்தும் எட்டும் பதினெட்டாம் நாள் உத்தரக்கதில் படைத்தலைவனா யிருக்கும்படி உத்தரவளிக்கவேண்டும் சுவாமி.

கிருஷ்ணமூர்த்தி கவி.

மைத்துனா தர்மபூபா மனம்வாடி தியக்கவேண்டாம்
சத்துரு துரியாசன் சமரது செலிக்கவேண்டும்
தத்தியாய் வுடன்பிறந்த மெல்லியாள் வுனதுதங்கை
உத்தமி சங்கோதியாளை உடனேநீ கொண்டுவாராய்.

கிருஷ்ணமூர்த்தி வசனம்.

கேளுந் தர்மபுத்திர மகாராசனே துரியோதனனை ஜெயிக்க உங்களுக்கு படைத்துணைவேண்டும் ஆதலால் உன் தங்கை சங்குவதியை அழைத்து போர்மன்ன துரைக்கு கொடுத்து படைத் தலைவனாக வைத்துக்கொள்ளலாம் சீக்கிரம்சங்குவதியை அழைத்து வாரும் மைத்துனா.

பொது வசனம்.

இவ்விதமாக தர்மபுத்திரமகாராசன் தனது தங்கையாகிய சங்குவதியை அழைக்க சங்குவதி அம்மாள் தர்பார்நாடி வருவது.

சங்குவதி வருகிற கவி.

பலகலைவுணர்ந்த அண்ணன் பண்புடன் அழைத்தானென்று
நலமுடன் சேடிகூர நங்கையாள் காதில்கேட்டு
இலய பணிகளாட இருகண்ணில் மையைத்தீட்டி
தலமிசை துதிக்குஞ் சங்குவதியிதோ வருகின்றாளே.

சங்குவதி தரு.

சந்திர பிரையுங்கம்மல் விந்தையாய் பணிசொலிக்க
சங்குவதி யென்னும்மாது தையலாள் வந்தாள்
கந்தங்களம்பம்பூசி கன்னியர் அருகில்சூழ
மாந்துளிர் வதனியான வஞ்சியும் வந்தாள்
பஞ்சவர் யெனது அண்ணன் மிஞ்சியே அழைத்தசேதி
சஞ்சலங் களை அரிய தையலும் வாராள்
இடையில்லொட்டியாணந்துன்ன இலகிய பணிகள்மின்ன
நடையில் அழகுடைய நங்கையாள் வந்தாள்
பாரோர்புகழ் வரிஞ்சிப் , பாக்கம் நகரில்வாழும்
பாலன்கோதண்ட ராமனைப்பாடி பாவையாள் வந்தாள் (சங்

(ஆண்டிப்பண்டாரம் என்ற வர்ண மெட்டு).

சங்குவதி தரு.

அண்ணாவுன்பாதம் தங்கையாள் அடிபணிந்தேனே (அ
குண்ணுத மணமுடைய கோதை சங்குவதி
என்னக்காரணத்தினுல் எந்தனை அழைத்தீர் அண்ணு (அ

தருமர் தரு.

அழைத்த விதமதை தங்கையே அறிவிப்பேன்வுனக்கு அ
செழித்துவுலகிலென்றும் செல்வமாய் வாழ்ந்திருப்பாய்
தழைக்கவுனை அழைத்த சங்கதியை வுரைத்திடுவேன் (அ

சங்குவதி தரு.

என்னக்காரணம் அழைத்ததை இன்பமாய்வோது (எ
தன்னந் தனியாகவே தாதியருடனிருந்தேன்
இன்னதென்றழைத்தவிதம் இளங்கொடியாள் அறியச்சொல்வீர் (எ

தருமர் தரு.

சொல்லுவேன் தங்கா உனக்கு சூக்ஷமாக அம்மா (சொ
அல்லல்சூழ் கானகத்தில் அரும்பாவி துரியோதிரன்
வல்லவியேவோட்டிவைத்தான் வந்தோமிந்தஇருள்வனத்தில் (சொ

சங்குவதி தரு.

பதாதே அண்ணு துரியன் பாதகன்மாள் வான்சமரில் (பத
சதிகாரக்கொடுந்துரோகி தையல்பாஞ் சாலியினுல்
கதிமடிவான் அண்ணு கலங்கவேண்டாம் மனதுகுண்ணி( பத

தருமர் தரு.

பாதகன் மடியும்வழி பாரும்நீ தங்கா அம்மா (பா
சிரேன் வுரைத்தபடி சிவனந்தா புரியாளும்
ஓதுகிறேன் போர்மன்னனை உத்தமனை மணம்புரிய (பா

சங்குவதி கவி.

ஐயையோ யென்னமோசம் அறியாத வயதிலென்னை
வையத்தோர் பழித்திடாரோ வந்தவர் மாலைசூட்ட
பையர வணிந்தமார்ப்பா பரந்தாமா கோபிரசமா
தெய்வமே யிதற்கென்னசெய்வேன் சிரசினில் யெழுதினையே.

தருமர் தரு.

பருவக்கால மானப்பெண்ணை . தங்கையரே யெந்தன் தங்கையரே
பாரில்வைத்திருந்தாலே தங்கையரே
மருமலர்க்குழலியே மங்கையே புவியோர்கள்
குரவான வார்த்தைச்சொல்வார் குற்றம்அதினாலே நேரும் (பரு

சங்குவதி தரு

அஞ்சண்ணன் மாருடனே அண்ணாவே யெந்தன் அண்ணாவே
அருமைப்பெண் நானிருந்தால் அண்ணாவே
அபதங்கள் நேரிந்திடாது அண்ணாவே அண்ணா
அரிவையாள் நானிருந்தால் அண்ணாவே (அஞ்

தருமர் தரு.

பாரில் துரியன்செய்த தங்கையரே அம்மா தங்கையரே
பகையை முடிக்கவேண்டும் தங்கையரே
போர்மன்னதுரையைநீ தங்கையரே அம்மா தங்கையரே
பிரியமாய் திருமணம் சூட்டிக்கொள்ளுவாய் (பா

சங்குவதி தரு.

போர்மன்னதுரையைநீ கண்ணில்காட்டினால்
யெந்தன் கண்ணில்காட்டினால் அண்ணா
பிரியமாய் திருமணஞ் சூட்டிக்கொள்வேன் (போ

தருமர் தரு.

வந்திருக்கிறாரள திரில் யெந்தன்தங்கையே அம்மா எந்தன்தங்கையே
அவரைமணமாலைசூட்டிக்கொள்வாய் விந்தையாகவே (வந்

போர்மன்னன் தரு.

நேரமானால் வேரப்பெண்ணை பார்த்துக்கொள்ளுவேன்
மணஞ்சூட்டிக் கொள்வேன்
நிந்தனைகள் செய்யவேண்டாம் சென்றுவருவேன் (நே

தருமர் தரு.

போகாதிர் நில்லும் நில்லும்
மைத்துனரே ஓகோ மைத்துனரே
பொருமைக்கு தாழ்வொன்றில்லை மைத்துனரே (போ

போர்மன்னன் தரு.

சாமநேரமாகவந்து தாமதமென்ன
இங்கே தாமதமென்ன
தையிலேமணம்முடித்தால் சேர்வேன்கண்முன்னால்

கிருஷ்ணமூர்த்தி கவி.

போர்மன்னன்ராஜதீரா பூங்கொடிதங்கையாளை
சீர்பெறவுந்தனுக்கு திருமணஞ்சூட்டிவைப்பேன்
பார்புகழ்மன்னரஞ்ச பதினெட்டாநாளுத்தத்தில்
கார்மேனிச் செங்கண்ணன்முன் கைபோட்டுத்தருகுவாயே.

கிருஷ்ணமூர்த்தி வசனம்.

கேளாய் போர்மன்ன துரையே உனக்குத் திருமணம் முடிக்கச் சந்தேகமில்லை ஆனால் என்மனதில் ஒரு கருத்து அதாவது யென்ன வென்றால் துரியோதிரனுக்கும் பாண்டவர்களுக்கும் பத்தும் எட்டும் பதினெட்டா நாளைய உத்தரங்கத்தில் நானேபடைத் தலைவனுகயிருந்து சமர்செலிக்கிறேனென்றும் சத்தியம் செய்துதர வேண்டும் போர்மன்ன துரையே.

போர்மன்னன் விருத்தம்.

இஷ்டமுடன் யெந்தனுக்கு மலைபோல்பொங்கல்
இன்பமுடன்குண்ணதுபோல் மாவுவேண்டும்
பக்ஷமுடன்பனைபோல ஆட்டுக்காவு
பரந்தாமாயெந்தனுக்குத் தருகவேண்டும்
கஷ்டமில்லாவுன்மனம்போல் இருந்துநான்தான்
கண்ணனேபதினெட்டாம் நாள்வரைக்கும்
துஷ்டர்களைசிஷ்டசெய்து போர்புரிந்து
துணிவுடனேமுன்காவல் புரிகுவேனே.

போர்மன்னன் வசனம்.

ஆனால் கேளும் பரந்தாமா தங்கள் இஷ்டப்படி பாண்டவர்களுக்கும் துரியோதிரனுக்கும் நடக்கப்போகிற பத்தும்யெட்டும் பதினெட்டாநாள் யுத்தத்தில் ஆகாயவாணி பூமாதேவி சாக்ஷியாக நானே படைத்தலைவனாய் இருந்து செலித்து தருமருக்கு பட்டஞ் சூட்டுகிறேன் தங்களிஷ்டப்படி நடக்க சம்மதித்தேன் யென்மனபிஷ்டப்படி பதில் சொல்லாமல் நான் கேட்டுக்கொள்வதை தவராமல் கொடுக்கிறேனென்று தாங்கள் சத்தியஞ்செய்து கொடுக்க வேண்டும் திருமாலே அதாவது யென்னவென்றால் மலைப்போல பொங்கலும் குண்ணதுபோல் விளக்குமாவும் பனைமர உயரம் ஆட்டுக்கிடாவும்கொடுத்தால் தாங்களிஷ்டப்படி இருக்கிறேன் சுவாமி.

கிருஷ்ணமூர்த்தி கவி.

மனயிஷ்டம்போலுனக்கு மலைபோல்பொங்கல்வைத்தேன்
பனைபோல ஆட்டுக்காவு பாக்கியமாய்வுனக்குத்தந்தேன்
சினமிதுமிகவேகொண்டு சீக்கிரம்விளக்குமாவை
அனல்போலஎட்டிதாவி ஆக்ரஷங்கொள்ளுவாயே.

கிருஷ்ணமூர்த்தி வசனம்.

கேளாய்போர்மன்னா உன்மனஇஷ்டம்போல் மலைபோலபொங்கலும் குன்னைப்போல விளக்குமாகவும் பனைமரம்போல் ஆட்டுக்கிடாவும் தந்தேன்காவு கொண்டுவந்தால்தருமர் தங்கைசங்குவதியை, உனக்குத் திருமணம் முடிக்கிறேன் சீக்கிரம் காவு கொள்ளும் போர்மன்னா.

கிருஷ்ணமூர்த்தி தரு.

மலைபோலபொங்கலும் குன்னைப்போல்தினைமாவும்
மனம்போலப்படைத்திட்டேன் ஒப்புக்கொள்வாய்
பனைபோல ஆட்டுக்கிடா காவுதந்திட்டேன்
பார்த்துநீகாவுகொள்வாய் போர்மன்னா மலை

போர்மன்னன் தரு,

பதருதேதிரேகமும் சிதருதேயென்மனம்
சீக்கிரம்விடைதாரும் பரந்தாமா
நான்தான்தின்றுகளைகளார தாமதமா பத

கிருஷ்ணமூர்த்தி தரு,

தினகராவுன்மனம் பதராமல்சீக்கிரம்
தின்றுகளைகளாருவாய் போர்மன்னா தி

போர்மன்னன் தரு,

விடைதாரும்திருமாலே தடையொன்றில்லாமலே
படைத்தலகர்த்தனாக நானிருப்பேன் வி

கிருஷ்ணமூர்த்தி தரு.

சரிசரிபதினெட்டா நாள்வரையிருந்துநீ
துரியன்சேனைகள்முன்னே போர்புரிவாய் சரி

போர்மன்னன் தரு,

முப்பத்துமுக்கோடித்தேவர் முதல்சாக்ஷியாய்
முன்னின்றுபோர்ஜெயிப்பேன் பரந்தாமா மு

கிருஷ்மூர்த்தி தரு.

சென்றிடுஇஷ்டப்படி தின்றிடுகாவுதன்னை
திரும்பிவந்துநீமணஞ் செய்துக்கொள்வாய் செ

கிருஷ்ணமூர்த்தி வசனம்.

ஆனால்கேளாய் போர்மன்னாசீக்கிரம் காவுகொண்டு திரும்பி வந்தால் திருமணம் முடித்துவைக்கிறேன் போர்மன்னா.

போர்மன்னன் தரு.

அண்டரண்டந்தானடுங்க எண்டிசையுந்தத்தளிக்க
ஆக்கரித்துவுக்ரமாகினேன் போர்மன்னதுரை
சக்கரம்போல்சுழன்றுமீறினேன் அ
மிக்கமலைமீதில்தாவி சக்கரைப்பொங்கலைகண்டேன்
திக்கின்றுதிகிலடைந்தேனே போர்மன்னதுரையே
தியங்கிமயங்கிநின்றேனே அ
சண்டாள இடையன்தன்னை கண்டாலேயென்கண்ணெதிரில்
துண்டமாகச்சாடுவேன் போர்மன்னதுரை
தும்சஞ்செய்துவாட்டி ஆட்டுவேன் அ
அண்டையில்யிருக்கும்குண்ணில் கண்டேனேவிளக்குமாவை அ
ஆக்ரஷங்கொண்டுமேதாவினேன் போர்மன்னதுரை
யேங்கிமனங்குண்ணிவாடினேன் அ
கண்டேனேபனையின்மீதில் கட்டியஆட்டுக்கிடாவை
கழுத்தைமுறித்துநின்றேனே போர் மன்னதுரை
ரத்தகாவுதன்னைக்கொண்டேனே அ
பத்தாதகாவுகொடுக்க யெத்தனைநாள்காத்திருந்தான்
பரந்தாமனைக்கண்டாலே போர்மன்னதுரை
பதாக்கதரவாட்டுவேன் அ

பொதுவசனம்.

இவ்விதமாகபோர்மன்னன் காவுகொண்டது போராமல் மனம் தியங்கி மயங்கி ஸ்ரீ கண்ணபிரானிடத்தில் வந்துசேர கண்ணபிரானவர் சந்தோஷங்கொண்டு போர்மன்னனுக்கு கலியாணம் முடிக்க எண்ணங்கொண்டு புரோகிதரையழைக்க புரோகித வரதாச்சாரி தர்பார் காடி வருவது.

வரதாச்சாரி ஐயர் கவி.

பரந்தாமனழைத்தசேதி பட்டாசாஸ்திரியுங்கேட்டு
சிறந்தனில்நாமமிட்டு சீதரன்தனைதுதித்து
தரணியில்அரசர்களெல்லாம்சதுர்வேதம்தனை போதிக்கும்
வரதாசாஸ்திரியெழுந்து வருகின்றார் சபையைநாடி.

தரு.

வையகம்புகழ்நூதனுபுரியில் பஞ்சாங்கம்செய்யும்
வரதாச்சாரியும்நானே சாஸ்திரம்வோதும் வர
மெய்யில்பூணூலிலங்க வேதசாஸ்திரம்வோதி
சரு மேதினியோர்க்கெல்லாம் சாரதம்செய்திடும்
ஆதிமால்தன்னை அனுதினம்துதித்திடும் வை
கையில்பஞ்சாங்கம்கொண்டு மெய்யில்திருநாமமிட்டு
ஐயர்வரதாச்சாரி அன்புடன்வந்தார்

சரு. அந்தணர்வந்தனர் விந்தையாக
சிந்தையில்மகிழ்ச்சியாய் சீக்கிரம்போக வை
காலைசந்தியானங்களைமுடித்து வேதங்களோதி
நீலமேகவண்ணனை துதித்து
சாலமில்லாதெழுந்து தாண்டித்தாண்டிநடந்து
சரு சங்கரன்மைத்துனன் தன்னையேமனதில்
பொங்கமதாகவே பூரிப்பாய்தினம்தினம் வை
தர்ப்பாசனத்தைக்கையில் கொண்டுதினந்தினமும்
சாதஞ்செய்திடுவேன் சென்று
கற்பகத்தைநிகர்த்த் கனகவெண்பட்டுடுத்தி
சரு காதினில்குண்டலம் சோதியாய்துன்ன
நீதியாய்அந்தணர் தோழமார்பன்ன வை

வரதாச்சாரிஐயர் கவி,

பலகலைவேதசாஸ்திரம்பரிவுடன்கற்றுணர்ந்த
நலமுள்ளமறையோரேகேள்நாமுமேதீர்த்தமாடி
இலகியகண்ணன்தன்னை இடைவிடாதுதிகள்செய்தோம்
தலைமிசையோர்துதிக்க தங்கியேசெல்லுவோமே.

வரதாச்சாரி ஐயர் வசனம்.

கேளுங்கள் அந்தணர்களே நாமெல்லாம் இன்று காலையில் யெழுந்து தீர்த்தமாடி பூசை செபதபங்களை முடித்தோம் ஆகை யால் ஸ்ரீ கண்ணபிரான் நம்மை அழைத்தபடியால் அவரிடம் நாம் வந்ததாக தெரிவித்து வாருங்கள் சிஷமார்களே.

கிருஷ்ணமூர்த்தி தரு,

அந்தணரே வரதாச்சாரியரே
இங்கேவாரும் சுவாமிவாரும்
அரசன்போர்மன்னதுரை முகூர்த்தம்நடத்தவேண்டும்
பாரும் மனம் பாரும் அ

வரதாச்சாரிஐயர் தரு.

போர்மன்னதுரைக்கு நான்சீராய்மணம்
முடிக்கவாரேன் கூடவாரேன்
யாரிடபெண்ணெனக்கு தீரமுட்னெனக்கு
கூறும் நன்றாய் கூறும் போ

கிருஷ்ணமூர்த்தி தரு.

தருமரிடதங்கையாள் சங்குவதிபெண்ணுக்கும்
சொன்னேன் தெரியச்சொன்னேன்
மருமங்களில்லாமலே மணமுகூர்த்தம்முடிக்க
வாரும் சுவாமி வாரும் தரு

வரதாச்சாரி ஐயர் தரு.

வருநத்தடைகளில்லை சரிசரிசீக்கிரமாய்
செல்வோம் கூடிச்செல்வோம்
கருமுகில்வண்ணநாமும் கடுகநடந்துவந்து
கண்டோம் நகரைக் கண்டோம் வரு

போர்மன்னன் தரு.

உண்மையாய்சொல்லிடுங்கள் கல்யாணமில்லையென்று
வாரேன் நானும் வாரேன் உ

கிருஷ்ணமூர்த்தி தரு.

குந்தியிருசற்றுநேரம் விந்தையுன்கல்யாணம்
கட்டுவேன் மாலைசூட்டுவேன்
விந்தையுடன்றூதனுபுரி நகர்பட்டமது
கட்டுவேன் முடிசூட்டுவேன் குந்

கிருஷ்ணமூர்த்தி கவி.

அந்தணர்மறையோரேகேள் அரிவைக்கும்போர்மன்னருக்கும்
விந்தையாய் பொருத்தம் பார்த்து விரைவினிலுரைக்க வேண்டும்
சந்தோஷமுடனேநீர்தான் சாஸ்திரம்பார்த்துரைத்தால்
சிந்தையில் மகிழ்ச்சியாக திருமணஞ்சூட்டுவோமே.

கிருஷ்ணமூர்த்தி வசனம்.

கேளும் வரதாச்சாரியரே சங்குவதிக்கும் போர்மன்னதுரைக்கும் பொருத்தம் பார்த்துச்சொன்னால் நல்லவேளையில் முகூர்த்தம் நடத்திவையும் மறையோரே.

வரதாச்சாரி கவி,

பெண்ணுக்கும்போர்மன்னருக்கும்பொருத்தந்தான்பிசகொன்றில்லை
விண்ணவர்வுலகோர்மெச்ச வெகுநாள்வாழ்குவார்கள்
குண்ணமல்மனதுவாடி கோதையாள்தனையழைத்து
வெண்ணையையுண்டகண்ணா விரைவினில் நடத்தலாமே.

வரதாச்சாரிஐயர் வசனம்.

கேளுஞ்சுவாமி பரந்தாமா போர்மன்னதுரைக்கும் சங்குவதிக்கும் இசைபொருத்தம் கழுத்துப்பொருத்தம் ஒன்றும் பிசகாமல் இருக்கின்றது சுவாமி.

வரதாச்சாரி கவி,

செந்திருவண்ணகண்ணா திருமணம்முடிக்கும்வேளை
விந்தையாய் முகூர்த்தநேரம் விஷவேளை வருகுமுன்னே
குந்தியேவைக்கவேண்டும்கோதைமார்தன்னைக்கூவி
சந்தணநலுங்குவைத்து சலுதியாய்கொண்டுவாராய்

வசனம்.

கேளும் பரந்தாமா முகூர்த்தவேளை தப்பி போய் விடும் விஷ வேளைவருவதற்கு முன் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் சந்தன நலங்கிட்டு சீக்கிரம் கொண்டுவாரும் சுவாமி.

வரதாச்சாரியார் கல்யாணம் நடத்தும் தரு.

மூலப்பொருளை முதல்வனைக்கொட்டிகொட்டிக்
கொள்ளுவீர் கொட்டிக்கொள்ளுவீர்
முகூர்த்தவேளை தப்பிபோகுது
சீக்கிரம்வாருங்கள் மனையில்குந்துங்கள்
ஆலிலைமேல்பள்ளி கொண்டிடுங்கிருஷ்ணனை
கூவுங்கள் கொண்டுவாருங்கள்
அரசாணிகால்நாட்டு அலங்காரவிளக்கேற்றி
வையுங்கள் வைத்துதாண்டுங்கள்
அம்மிகுழவியும் அரைத்தமஞ்சள்கொண்டு
வாருங்கள் கொண்டுவாருங்கள்
ஆலங்கரைத்து சகுவந்தன்னில்
கொண்டுவாருங்கள் கொண்டுவாருங்கள்
கங்கணங்கட்டிட கொம்புமஞ்சள்
கொண்டுவாருங்கள் கொண்டுவாருங்கள்
மஞ்சள்காப்பிட்டுமே மாலைகழுத்தினில்
போடுங்கள் நீங்கள் போடுங்கள்



கன்னிக்கரிந்தவன் மூன்றுபேர்பெண்களே
கூவுங்கள் சக்தியில்கூவுங்கள்
கங்கணங்கட்டுவேன் பிரேபமிருந்தாலே
கேளுங்கள் கேட்டுவாருங்கள்
சாலுங்கரகத்தில் சலந்தன்னைக்கொட்டி
நில்லுங்கள் அங்கேநில்லுங்கள்
தாணிமன்னர்களே மாங்கல்யத்தைதொட்டு
கூறுங்கள் ஆசிகூறுங்கள்
எட்டுதிக்குவமன்னர் தொட்டுவந்ததாலி
கட்டுவீர் துரையேகட்டுவீர்
இருவர்முந்தாணியுஞ்சேர்த்து ஒத்தப்பணம்
முடிகுவீர் சேர்த்துமுடிகுவீர்
எந்திழைசங்குவதியே அருந்ததி
கண்டளா அம்பாகண்டளா
இளஞ்சிங்கமே போர்மன்னதுரையே
அருந்ததிகண்டளா துரையேகண்டளா மு

பொது வசனம்.

இவ்விதமாக போரமன்னனுக்கு தர்மர் தங்கைசங்குவதியை கொடுத்து பாஞ்சாலியம்மனுக்கு மூன்றேடும் பிள்ளைமுதல் சேவகளுக வைத்துவிட்டு அவரவர்கள் ஸதாஸ்தானம் சென்றார்கள்.

வாழி விருத்தம்,

சீர்பெற்ற சரித்திரந்தன்னை. சிரத்தையாய் உணர்ந்தோர்வாழி
பார்மிசையுலகோர்வாழி பாடினோர்கேட்டோர்வாழி
பேர்பெற போர்மன்னனசண்டை பிரபல்யமாகவாழி
கூர்மவதாரங்கொண்ட கோபாலன்வாழிவாழி.

மங்களம் சுபம் மங்களம்.

சங்குவதி கலியாண மென்னும்

# போர்மன்னன் சண்டை நாடகம்

முற்றுபெற்றது 25—9—57

பெரியநாயகி அம்மன் அச்சகம், குன்னூர், சென்னை-7.

# நாடகப்புத்தக விளம்பரம்

விலைப்பட்டியல் ரூ. | பெயர்

பாண்டவர் வனவருத்த நாடகம் 1
கலிக்குத் தாலிகட்டிய நாடகம் ,,
பிரமராக்ஷதை வெத்த நாடகம் ,,
அக்ரூபாதேவி சரித்திர நாடகம் ,,
கோவிமோக்ஷ நாடகம் ,,
கிருஷ்ணலீலா நாரதர்பங்க நாடகம் ,,
அம்பரீஷ நாரதர் பங்க நாடகம் ,,
(60-பின்னா) நாரதர்பங்க நாடகம் ,,
மாரியம்மன் உற்பத்தி நாடகம் ,,
தருமர் பட்டாபிஷேக நாடகம் ,,
தக்கன் வேள்வி நாடகம் ,,
பார்வதி கல்யாண நாடகம் ,,
சாரங்கதார நாடகம் ,,
மதுரை வீரப்பன் நாடகம் ,,
ஸ்ரீராமமந்திர நாடகம் ,,
சவுந்திரவல்லி மோக்ஷ நாடகம் ,,
ஆரவல்லி சூரவல்லி நாடகம் ,,
ஜலந்திராசுர சம்மார நாடகம் ,,
[illegible] நாடகம் 1
கெட்டதம்பி நாடகம் ,,
கிருஷ்ண கெர்வபங்க நாடகம் ,,
தருமர் இமயகிரி குவக நாடகம் ,,
தி. மு. க. இயக்கப்பாடல் 1005 ரூ

[illegible] ! "விரதர்
சூர சம்மார மென்னும்"

## விரவல்லியர்

## நாடகம்.

எம்பிரான்சதகம்
சந்திரன் கெர்வபங்க நாடகம்
பதிவிரதை நாடகம்
சந்திரமதி கல்யாண நாடகம்
[illegible] நாடகம்
அநுசூயா நாடகம்
துருவாச பங்க நாடகம்
ஸ்ரீ கண்ணன் ஜலக்கிரீடை நாடகம்
[illegible] மோக்ஷ நாடகம்
தமயந்தி நாரதர் கலியாண நாடகம்
அர்கபர வெள்ளி நாடகம்
சதியபாமா பங்க நாடகம்
மகிஷாசுர நாடகம்
சாரங்கமந்திர நாடகம்
திரிபுர சம்மார நாடகம்
கட்டுணத்தார் நாடகம்
பராசக்தி எனும் நீலி நாடகம்
அர்ச்சுனன் தேர்பட்ட நாடகம்
விராவன்லியர் நாடகம்
பரதர் பட்டாபிஷேக நாடகம்
கண்ணப்ப நாயனார் நாடகம்
புலைக்கொடி பங்க நாடகம்
பிரம்மதேவன் பங்க நாடகம்
சூர்ப்பனகை பங்க நாடகம்
ஈஸ்வரன் பிறந்த விற்ற நாடகம்
இராவணன் உற்பத்தி நாடகம்
பாகெட் மாந்திரீக ஆசான்
விநோத ஜாலக்கண்ணாடி நாடகம்
சந்திராக்கியம் பாகம்
முருகத்தியானம்
கரும்பு சிலந்தி நாடகம்
போகர்பாகட் கொக்கோகம்

மேற்கண்ட நாடகங்களும், இன்னும் இதர தமிழ்ப்புத்தகங்களும் எங்களிடம் கிடைக்கும். கேட்டார்க் வேண்டுவோருக்கு இலவசமாக அனுப்பப்படும்.

எம்விலாசம் :—

## C. M. தாமோதர முதலியார்,

ஸ்ரீ பெரியநாயகி [illegible] அச்சகம்,
112, [illegible] கோவில் தெரு, [illegible] சென்னை-1

உ

ஸ்ரீ தேவிசகாயம்

# வீரபத்திரசுவாமி திருமணமென்னும்

# பரமன் - காளி

## சண்டை நாடகம்



திருப்பாதிரிப்புலியூர்
ஸ்ரீ வாணி விலாச புத்தகசாலையின்
வெளியீடு.

காப்பிரைட்] [விலை ௨—00

உ


ஸ்ரீ தேவிசகாயம்

# வீரபத்திரசுவாமி திருமணம்

என்னும்

# [illegible]-காளி

## சண்டை நாடகம்



இஃது

பிள்ளையார்க்குப்பம் கணித சோதிடம்

சிவலிங்க நாயனுர் கதையின்படி

பாகூர் கொம்யன் பண்ணித்திட்டு

ஆலடி மேடு கிராமம்

வெ. ஜெ முனிசாமி அவர்களால்

எழுதப்பட்டது


திருப்பாதிரிப்புலியூர்,

ஸ்ரீ வாணிவிலாச புத்தகசாலை

வெளியீடு

1965



காப்பிரைட்]


[விலை [illegible]—00

உ
கணபதி துணை

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகல அச்சுக்கூட தலைவர்களுக்கும் புத்தக வியாபாரிகளுக்கும், தெரிவிப்பது யாதெனில்:- பாகூர் கொம்மியன் பண்ணித்திட்டு ஆலடிமேடு கிராமம் நாடக ஆசிரியர் வெ. ஜெ. முனிசாமி அவர்களால் எழுதிய வீரபத்திரசுவாமி திருமணம் என்னும் பரமன்-காளி சண்டை நாடகம் ஆகிய இப்புத்தகத்தை சகல சுதந்திரம் பெற்று அடியிற் கண்ட என்னால் அச்சிட்டு வெளிபடுத்தியுள்ளேன் இப்புத்தகத்தை மகா கனம் பொருந்திய கவர்மெண்டார் அவர்கள் சட்டப்படி காபிரைட் செய்திருக்கிறேன். ஆகையால் என்னுடைய உத்திரவின்றி யாரும் அச்சிடக்கூடாது என்பதை தெரியப் படுத்தியிருக்கின்றேன்.

இப்படிக்கு,
பொ. இராமலிங்க செட்டி
உரிமையாளர்.
ஸ்ரீ வாணிவிலாச புத்தகசாலை, திருப்பாதிரிப்புலியூர்.

## நாடகப் பாத்திரங்கள்

| நடிகர்கள்:- | நடிகைகள்:- |
|---|---|
| பிர்மா | ஞானத்திரைவி |
| பகவ முனிவர் | கன்னிகா (ஆதி) |
| நீதி ஐயர் | |
| நாரதர் | |
| காந்தமகாரிஷி | உருவை |
| பரமர் | பார்வதி |
| மகிடாசூரன் | காளி |
| வீரபத்திரர் | |
| திருமால் | |

(இயற்றியவர்)
ஆலடிமேடு, பண்ணித்திட்டு நாடக ஆசிரியர்
வெ. ஜெ. முனிசாமி,

உ

ஸ்ரீ தேவிசகாயம்.

# வீரபத்திர சுவாமி திருக்கல்யாணம்

## என்னும்

# பரமன் - காளி

## சண்டை நாடகம்

ஸ்ரீ விநாயகர் துதி கவி

அழகுநல்வீரபத்திரர் அரும்மன்றல் காதைதன்னை
செழுமைசேர் பரமன்காளி சமர் நாடகமும்பாட-எழில்மிகும்
மங்களகௌரி மைந்தனும் ஏகதந்தன்
தங்கமலர்ப் பாதம் காப்பு.

பிர்மா கவி

கரிமுகிலோன் உந்திப்பூத்தோன் கருணையோங்க
 கவிமறையோர் புலவர்களும் தினமும்போற்ற
விரிமறையோர் நான்கினையும் விளங்கவேந்தி
 விளங்கிடவே எவ்வுயிரும் படைத்துகார்த்தேன்
பிரியமுறக்கலைவாணி நாவில் கொண்டேன்
 பிர்மகுலம் தழைத்திடவே-விளக்கம் செய்தேன்
அரியமலர் சூடிப்புகழ் சபைமுன்பாக
 அயனுமேக்கொலுவாக வருகின்றேனே

தரு

அமரர்முனிவர் தேவர்
அரிபிர்ம தேவன் வந்தேன்
அரிபிர்ம தேவன் வந்தேன்
சுமைதாங்கிடப் புவியை
சுரர்முனி தேவர் சித்தர்
சுருள்] சுத்தசைதன்னிய
 முத்தியளித்திடும்
நாட்டினிலெல்லோர்க்கும்வழி
நாரதன் தன்னை விடுத்தேன்
பாட்டிசைக்கவி வாணர்கள்
பனுவலாட்டுயை மணம்
சுருள்] பந்தபாசமுடன்
 சிந்தைகொண்டுளம்
முத்தர் சித்தர்கள்தினம்
மூவரிலொருவராகி நின்றேன்
தேவர்கள் குறையைதீர்க்கச்சென்றேன்
அத்திமுகவனுக்காய்
வெத்தியுடனளித்து

இளமையவர் தினங்கொண்டாட
சகல ஜீவனைபடைத்த

சூக்ஷ்மாய்படைத்து கார்த்தேன்
சுப சோபனங்கள் வாழ்த்த
அத்விதமாயை
சத்தியரன் மருகன்
காட்டியே மகிழ்ச்செய்ய

பாக்கியமளிக்கும் தாயார்
பாரினில் முடித்தேன்நன்றாய்
எந்த நாளிலும்
மகிழ்ந்தேன் வாழ்விலும்
நத்தியென்னடிவணங்க
அவுணர்பகையதைநீக்கி

சித்திப்புத்தியாள் தன்னை
வேணமட்டும் விடுத்தேன்

சுருள்] வேதநாதமொடு ஓதும் மறைவர்
கீதம்புகழ்பெற பாதகம் தீர்க்கும்

கவி

சத்தியம் ஜெயமன்றோதும் சன்மார்க்க மந்திரிக்கேளீர்
நித்தமும் ஜீவன்தன்னை நிதிமுறைப்படி படைத்தேதன்
வெத்தியாய் கலைகலோதும் வேதத்தின் முதல்வியான
பத்தினி பனுவலாட்டி பார்சபையாழைத்துவாரீர்

பொதுவசனம்

இவ்விதமாக பிர்மதேவரைக் காணும்படியாக சரஸ்வதி சபா நாடி வருவது

ஞானத்திறைவி கவி

மோனத்தின் வடிவாம்பித்தன் மொழிக்கிளியெனவே போற்றும்
ஏனத்தின் மருகியானேன் எழில்பெரும் கலையேவீணை
கானத்தில் மகிழ்ச்சிகொள்ளும் கலைமகள் களபம்பூசி
ஞானத்திரைவியாளும் நற்சபை வருகின்றேனே

தரு

குறைவன் தனக்குப்பாரி மறைக்குள் நின்றுடும் நாரி
குற்றமில்லாத மங்கையாள் ஞானத்திறைவி
யுற்றகசலைமடைந்தையாள்
பரமன் தனக்குசெல்வி பாரோர்தனக்கு கன்னுள்
நிரம்முகில் மேனியொத்த நிமலிவெள்ளை நிறத்தால்
சுருள்] நின்று மயில்நடை சென்று நடந்திடும்
கண்டு தரும்நெறி என்று மளித்திடும்
மணிமந்திரக்காரரிடம் துணிவுக் கொண்டாடும் தாயார்
மகிழ்ந்துயெந்தனைப் போற்றவே கவிவாணரும்புலவரும்
புகழ்ந்து மலர்கள் சாற்றவே
அணியில்சிறந்தக்கூந்தல் அலங்கல்பிரகாசமேனி
பணிபுரியுக்காயத்திரி பதகமடைகள்மின்ன
சுருள்] பாக்கியவதிக்குண சிலாக்கியநயமொழி
யாற்கும் புகழ்மதி போக்கிடும் உளமதில்
எந்தநாளிலும் மாதர் சொந்தகணவனோடு
எழிலுர வாழ்க்கைநடத்தவே பாழ்தணமதை நீக்கி
வழியோடில்சிறம் நடத்தவே
அந்திரவானோர்கள்மேலூர் அள்ளியே வாரி இறைப்பார்
கந்தம் மணக்கும்கற்பே கார்பதும் கடமைப்பெண்கள்
சுருள்] கருத்தினில் நினைத்திட கணவனே தெய்வம்
நிருத்தியே தொழுதிடில் நிறைமதியொளிரும்

ஷை தரு

(என்னை கைவிடலாமோ — என்ற மெட்டு)

படைப்பதனில் முதல்வோனே நின் பதமலர் பணிந்தேன்
பரந்தாமன் புதல்வோனே
பாராய்ப் புவியண்டமும் கண்டிட
காராய்த்திருமன்றயதை கொண்டிட
நோாய்திருவடியறைப் பணிந்திட
நேர்த்தியாய் போற்றினேன் கார்த்திடும்நாதனே

பிர்மா தரு

வெண்டாமரை மகளே புவியோர்களும்போற்ற
வேதாந்த முதல்வியாளே

கண்டோர்தினம் தொழுதுமே போற்ற
களிவாணர் வாழ்த்துடன் யேற்ற
எண்டோளியின் கதையுமென்றேற்ற
எந்தன்நல்லாசியும் தந்தேனே சண்மணி

ஞானத்திறைவி தரு

மங்கையெனையின்று நாதனே — நீர்
மகிழ அழைத்திட்டீர் வேதனே
நங்கையாளறிந்திட — நன்மாற் சேதியை
இங்கன முறைத்திடும் — இல்லற நீதியை

பிர்மா தரு

கங்கைமதி சூடும் யீசனே — தந்தக்
கட்டளைக் கைலையோன் வாசனே
அங்கம் குளிர்ந்திட — அவ்வை நீராகவும்
எங்கெங்கும் புகழ்ந்திட — ஏந்திழைப் போகவும்

ஞானத்திறைவி தரு

ஏந்திழைத்தனியாக போகவும் — நாதா
என்மனம் வேதனை யாகவும்
பூந்தளிர்மேனியா — புலன் நன்றாய் தெரியவே
சாந்தம் மொழிக்கூறும் — ஜனங்களும் மரியவே

பிர்மா தரு வேறு

திருவள்ளுவராக ஜெனிக்கவே போகின்றேன் கண்ணே கண்ணே
வருதுவாய்யென்முன்னே வஞ்சியாளவ்வையாய் பெண்ணே
[பெண்ணே

ஞானத்திறைவி தரு

அவதாரம் இருவரும் அடைந்திடும் பலனென்ன வேதா வேதா
தவரின்றிக்காரணம் தன்னைமுன் கூறிடும் நாதா நாதா

பிர்மா தரு

மதுரையின் தமிழ்ச்சங்கம் மழித்திடக்காரணம் மானே மானே
பதுமையென் தேவியே பரமன் சாபத்தாலே தானே தானே

ஞானத்திறைவி தரு

சங்கத்தின் கொடுமையும் சங்கடந்தன்னைமுன் கூறும் கூறும்
பங்கைய வதனனே பாரியுணர்ந்திட நீரும் நீரும்

பிர்மா தரு

கணக்கையன் மகனாலே காரணம் விளைந்தது கேளும் கேளும்
பிணக்குகள் நேர்ந்ததை பிழைநீக்கிட யிந்த நாளும் நாளும்

ஞானத்திறைவி தரு

பங்கம்விளைத்திட சங்கத்தையழித்தாலே மன்னா மன்னா
உங்களுக்கென்ன உதவியிருக்குது சொன்னா சொன்னா

பிர்மா கவி

நற்கீரன்சங்கந்தன்னின் நாட்டமாய் செற்வங்கொண்டு
அற்பமாய் மர்தர்தன்னை அலட்சியம் செய்ததாலே
தற்பரன், கைலையாளி தன்னைமுன் சொரூபம்காட்டி
போற்புடன் சங்கமழிய பொல்லாத சாபமிட்டார்

வசனம்

கேளும் பெண்ணே சரஸ்வதி மதுரையம்பதியிலே பாண்டியன் தமிழ்ச்சங்கத்தில் கணக்காயன் மகன் நற்கீரன் அதிக கற்வங்கொண்டு எல்லாக் கவிப்புலவர்களையும் தாழ்த்தி பங்கப்படுத்தி வருகின்றான்

பெண்களின் கூந்தலில் இயற்கை வாசனை இல்லை செயற்கைவாசம் மட்டுந்தான் இருப்பதாக சங்கத்தில் கூறவும் பரமருக்கு கோபம் உண்டாகி மாதர்குல மாணிக்கமாகிய மங்கையாளின் கூந்தலில் இயற்கைவாசனை உண்டென்று பரமன் மருத்துக்கூற அதையும் மதியாமற்படி குற்றமே குற்றமென்று பரமனிடத்தில் கூறவும் அரசனுக்கு கோபம் பெருகி தமிழ்ச்சங்கமழியக் கடவது என்று சாபமிட்டு என்னை திருவள்ளுவராகவும் உன்னையே ஔவைப் பிராட்டியாகவும் இடையிலேயும் கடையிலேயும் சங்கத்தை அழித்துவரும்படி கட்டளையிட்டார் அதன்படியே நாம் இருவரும் பவனமுனிவருக்கும் கன்னிகா என்ற அம்மையற்கும் புத்திரர்களாக ஜெனிப்போம் வாரும் பெண்ணே சரஸ்வதி.

ஞானத்திறைவி கவி.

அருமையென் பிராணநாதா அறநெறி அன்புமோங்க
பெருமையும் நமதுநாட்டில் பேசியேப்புகழவேண்டும்
மருமலக்குழலியாளும் மறைவிதிப்பிசகாவண்ணம்
வருகின்றனேன் புறப்படீரே வைகுந்தன் வாச மைந்தா

பொது வசனம்

இவ்விதமாக பிர்மா சரஸ்வதியும் செல்லவும் இப்பால் பெருஞ்சாகரனுக்கும் புங்கனூர் புலச்சிக்கும் பிறந்த பகவமுனிவர் சபாநாடி வருவது காண்க

பகவமுனி கவி

புவியுளோர் புகழ்ந்துப்போற்றும் புலமையில் சிறந்தஞானி
மவுனியாய் ஞானசித்தன் மறைவிதி முறைபோல் சாஸ்திரம்
தவறில்லாதுணர்ந்த நல்லோன் தரித்தமுப்புரிநூலாட
பவமதையருத்தயோகி பகவமுனி வருகின்றேனே

தரு

பரமன் திருநாமத்தை மரவாதினந்துதிக்கும்
பகவமுனிவர் வந்தனே நல்லமறை பொருளறிந்த
பகவமுனிவர் வந்தனே
அறநெறிவழுவாத அருந்தவக் குணவல்லோன்
பெருஞ்சாகரனுக்குமேபிள்ளையாய் பிரந்தநல்லோன்
சுருள்) பெருமையில் சிறந்திடும் குருமுனிக்கூட்டமே
அருமைசேர் நாட்டினி லன்புகொண்டாட்டமே
ஆவிக்குள்ளடக்கமான அந்துப்பூதங்கள் தன்னை
அறிவினால் மடக்கிகட்டியே அந்தஆணவமாய்கையை
அறிவினால் மடக்கிக்கட்டியே
பாவியான ஜென்மத்தை படைத்தார்ப்புவியில் யேனு
தாவியே காசியாத்திரை தரணியில்செல்லயானே
சுருள்) தத்துவமுறைப்படி வெத்தியுந்தோனே
இத்தரைதன்னிலே நான் முத்தியுங்காண
காசிவிஸ்வநாதரை கண்டுதரிசனம்செய்து
விகாயுடையணிந்துமே தீர்த்தக்காவடிக்கட்டி
மேவியே வருவேன் கொண்டுமே
மாசிலா குணமுடையோன் மலரும் ஆராதாரத்தின்
வாசியால் கண்டறியும் வாய்ப்பின் திரத்தின்மோலோன்
சுருள்) வஞ்செழுத்தோதியே நெஞ்சினில் பதிப்பேன்
சஞ்சலம்போக்கிட சடாக்ஷரம் துதிப்பேனே

கவி

அன்பெனும் சாந்தம்கொண்ட அருமையென் சிஷியாகேளீர்
இன்பமே இல்லறத்தின் இருள்தனைக் கடக்கவேண்டி
என்னுளம் கொண்டதாலே ஏகியே நான் காசியாத்திரை
நன்மையாய் சென்றுவாறேன் நலமுடன் இருந்திடாயே

ஷை - தரு

வாசியையடக்கியானே காசியாத்திரையடைவோ மென்று
மாசில்லாதப் பகவமுனி மறைவிதிப்போல் தானடைந்தேன்
பூவுலகம் தன்னில்யானே பாவியான ஜென்மம் போக்க
நாவினல் திருமந்திரம் நாளேஒதியே தான்நடந்தேன்
உரையூர் சத்திரம்கண்டேன் உள்ளமும் மெலிந்து நின்றேன்
உண்டு யிளைப்பாரியானும் உடனே காசியாத்திரை செல்வேன்

பொது வசனம்

இவ்விதமாக பகவமுனியானவர் உரையூர் சத்திரத்தில் தங்கி சமையல் செய்திருக்கும்சமயம் உரையூர் பெரும் சரும் பறையனல் வளர்த்துவரும்படியான சிறு குழந்தையாகிய கன்னிகாவானவள் முனிவர் சமையல் பாத்திரத்தை தொட்டு விடவும், கையில் வைத்திருந்த சட்டுவத்தால் குழந்தையின் தலையில் அடித்து விடவும், ரத்தக் காயத்துடன் கன்னிகா அழுதுக்கொண்டே ஓட வும் பெரும்பறையன் பகவமுனியை திட்டவும்; காசியாத்திரையின் பலன் இடையிலே கிடைத்துவிட்டதென மனச்சஞ்சலத்தோடு உரையூர் சேரி நாசமாகக் கடவது என்று சொல்லிக்கொண்டே பகவமுனியானவர் காசிக்கு செல்வது.

பகவமுனி தரு (திரிபுடைசம்பை)

நான் சுமந்தப் பாபந்தன்னை நாட்டினிலற வொழிக்க
நாடிவந்தேன் காசியாத்திரை நற்சுகமும் காண்பதற்காய்
தென்னகத்தின் தேவாலயம் தெரிசனமும் செய்துவந்தே
என்னுளம் பதற பறையன் ஏசவும் நாளேடிவந்தேன்
காசி விஸ்வநாதன் சேவை கண்டிடவே வந்திட்டேனே
மாசிலாக் காசி நதியை மகிழ்ச்சியோடு கண்ணல் கண்டேன்

ஷை கவி

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
யோதுவார் தமை நன்னெறிக்குய்ப்பது
வேதநான் கினு மெய்ப்பொருளாவது
நாதனும் நமசி வாயவே

ஷை கவி

நரகமேழ்புக நாடின ருயுனு
முரைசெய்வாயின ராயினுருத்திரர்
விரவியேபுகு வித்திடு மன்பரால்
வரதனு நமா நம சிவாயமே

பொது வசனம்

இவ்விதமாக பகவமுனிவர் காசிதீர்த்தமாடி விஸ்வநாதரை தரிசனம் செய்துக்கொண்டு தீர்த்தக் காவடிக் கட்டிக்கொண்டு புறப்பட்டு வருவது

பகவமுனி கந்தார்த்தம்

கீர்த்தியும் புகழும் கண்டேன் கிருபையானந்தம் கொண்டேன்
தீர்த்தக்காவடியும் கட்டி திரும்பிநான் வருகவேண்டி

கார்த்தருள் புரிந்தா ரீசன் கருணையும் சேவைபெற்றேன்
பார்த்தவர் மகிழ்ச்சியோங்க

தரு

பாருள்ளோரெனைக் கொண்டாடவே தீர்த்தகாவடிக்கட்டி
பாக்கியம் மடைந்தேன் வேண்டவே
கூறும் வேதகாமத்தின் குறையில்லாத் தொழுதுமே
கோரும் சேவையும் பெற்று கொண்டாடி வருகின்றேன்
சுருள்] குற்றம் நேர்ந்த உரையூரைக்காண நான்
பற்றுதே வயர் உற்றதென்னமோ

வசனம்

ஆகா இதுஎன்ன ஆச்சர்யமாக இருக்கின்றதே நான் வந்து தங்கிய காலத்தில் இந்த உரையூர் பட்டிணம் எவ்வளவு அழகாக இருந்தன நான் காசிமாநகரம் சென்று சுவாமி தரிசனம் செய்துகொண்டு வருவதற்குள்ளாகவே இந்த சில நாளைக்குள்ளாகவே இந்த ஊரானது மண்மேடாக இருக்கின்றது ஊரில்உள்ள மக்களும் அழிந்து விட்டார்களே அய்யோ சிவசிவ இந்த சத்திரம் மட்டிலும் தான் புண்ணியம் செய்த தோசரி இதிலே தங்கி இருப்போம்.

பொது வசனம்

இவ்விதமாக பகவமுனியானவர் சத்திரத்தில் தங்கி இருக்கவும் உரையூர் சேரியிலிருந்த கன்னி அக்ராகாரத்தில் வளர்ந்து பருவமாகி நீதி ஐயரின் கட்டளைப்படி ஜலம் கொட்டிச்செல்ல கன்னிகா வருவது

கன்னிகா கவி

திடகரம் வளையல்சூட்டி திருவழகுடையாள் மாது
கடக கங்கண முத்தாரம் காரிருள்கற்றும்மேனி
மடமயில் திலர்தம்பூசு மங்கையர்க்குலம்விளங்க
நடனசிங்காரி கன்னிகா நற்சபை வருகின்றேனே

தரு

காசிவிஸ்வநாதரை பூஜித்து துதிக்கும்மங்கை
கன்னிகா மாதிதோ வந்தேன் பலமன்னர் கண்கூச
கன்னிகா மாதிகதா வந்தேன்
மாசில்லாக் குணமுடையாள் மதியின் ஒளிப்பிரகாசி
மறைகுலம் புகழ்ரதியாள் மங்கையர் குலம்விஸ்வாசி
சுருள்] மாந்தளிர்மேனியும் காந்தியும்மின்ன
சாந்துகள் பூசிடும் சரசியாளென்ன
பறையரைவோர்குலத் பாலகியாகத்தோன்றி
மறையோர்குலம் விளங்கவே
உறைநாள் வளர்துசிற்க நிறைமதிபோல் நிறைந்தேன்
தரையுள்ளோர் தான்மதிக்க தையலும் குடமெடுத்தேன்
சுருள்] தண்ணீரும் மொண்டிட வண்ணமாய் நடந்தேன்
கண்ணுறுதல் பாக்கியம் புண்ணியமடைந்தேன்
காரிகை மங்கையர்கள் கற்பைமனத்தால் காற்க
கணவனே தெய்வமாகுமே பொன்பூஷணமாகிடும்
கணவனே தெய்வமாகுமே
வாருதிக்கரையும் சூழ்ந்த வளர்ந்தசெந்தமிழ்நாடு
சீருரைப்புகழும்வாய்ந்த சிறந்த ஆலடிமேடு
சுருள்] சின்னவன் முனிசாமி சொன்னசொல் பிழைதனை
தன்னையாட்கொண்டும் மன்னிப்பீர் சரணமே

கவி

வண்ணமாய் குடமெடுத்து வைகையை நாடிச்சென்று
தண்ணீரு மெடுத்துச்செல்ல தையல்மார் எல்லாம்கூடி
கன்னியமாகக்கீதம் கவிதையும் கதைகள்சொல்லி
எண்ணம்போல் எல்லாமொன்றாய் ஏகலாம் ஏகலாமே

தண்ணீர் குடமெடுத்தே தோழி
தையலே யெல்லோரும் சென்றிடலாம்
வண்ணமொழிக்கீதம் தோழி
வஞ்சியே யெல்லோரும் பாடிடலாம்
அன்னநடைப்போல் தோழி
அசைந்தோடி யென்பின்னே வாருமோடி
கன்னியெல்லோரு மொன்றாய் தோழி
கதைசொல்லி ஜலமொண்டு செல்வோமோடி

பகவமுனி தரு வேறு (தனி)

காரிருள் மேகமும் சாயுதே அய்யோ
கனத்தமழையதும் பெயுதே
நாரியர் வைகையில் நனைவாரே பாவமே
நல்லிருளாக எல்லைப்ரதாபமே

கன்னிகா தரு

காற்றும் மழையதைப் பாராய் சேடி
கலையாமல் யென்பின்னே வாராய்
ஆற்றில் பெருவெள்ளம் அடித்தோடிப்போகுமே
அய்யய்யோ ஓடிவா அடையலாம் சத்ரமே

பகவமுனி தரு

உழைப்பின் பலனதைக் கண்டேனே ஆகா
உள்ளத்தில் ஆனந்தங் கொண்டேனே
மழையில் நனைந்துமே மங்கையரிவ்விடம்
நுழைந்தவிதமென்ன நோக்குறாய் எவ்விடம்

கன்னிகா தரு

நீதி அய்யர்மகள் நானைய்யா மழையால்
நின்றிடவந்திட்டோம் தானைய்யா
வாதியாக நீங்கள் வஞ்சிப்பதென்னமோ
ஓதியருளுவாய் ஒய்யாரி முன்னமே

பகவமுனி தரு

ஒய்யாரி உன்கண்ணைக் காணவே மனம்
ஓடியே மிரட்டுதே நாணவே
சையோககாலத்தில் சவுரியமில்லாமல்
அய்யோ இருக்காதே ஆனந்தங்கொள்ளாமல்

கன்னிகா தரு

கண்சாடைக்காட்டியே பேசுறாய் என்
கருத்தையறியாமல் வீசுறாய்
கண்மூடித்தனமாக கருதியே வீண்வார்த்தை
எண்ணுநீர் யென்னிடம் ஏய்க்காதீர் மறுவார்த்தை

பகவமுனி தரு வேறு

என்னருமன்பிற்குகந்த கன்னிகாமானே தேனே
உன்னைநம்பி இங்கிருந்தேன் உத்தமியே நீர்காருமம்மா
தன்னந்தனியாக யிந்த வன்னமாளிச் சத்திரத்தில்

என்னைமுன்கட்டியணைந்தால் ஏகாந்தமடைவாய் கண்ணே

கன்னிகா தரு

மதங்கொண்டமுனிவரே நில்லுமே உன்
மரியாதைகெட்டிடும் செல்லுமே
அதமமான வார்த்தை அய்யரேகூறுதீர்
பதனமாய் இருந்திடும் பரிகாசம்பண்ணுதீர்

பகவமுனி தரு

வாலிபப்பருவக்காலம் கேலிசெய்யவேண்டாமோடி
ஜாலியாகசத்திரத்தில் தையலே கல்விசெய்வோம்
பாலியத்தின் காதல்மோகம் பார்வையென் பசுங்கிளியே
பைங்கொடியோர் முத்தம்தாரும் பஞ்சாமிர்தத்தேன்கனியே

கன்னிகா தரு

முத்தம்தரச்சொன்னமுடனே இங்கு
முட்டாளே நில்லாதீர் கேட்டனே
எத்துக்கள் பேசுறீர் ஏமாற்றும் கள்ளனே
சித்துக்கள் செல்லாதே சீர்கெட்டகுள்ளனே

பகவமுனி தரு

காமமும் தலைமீதேறி கண்கள் ரெண்டும் தான்சிவந்து
கலையும் மீறுதடி என்மானே கரத்தருள் புரிவாளென்னை
மாமதன் விடுங்கணையால் மார்பையுந் துளைக்குதோடி
மருவியே அணைந்தபோரும் மானேஒருமுத்தந்தாரும்

கன்னிகா கந்தார்த்தம்

இந்திரன்முதல் ராவணனும் காமந்தன்னால்
இருடி முனிதேவர் சித்தர் ரிஷிகளெல்லாம்
சந்திரனும் மாய்கையைதால் கெட்டுதேய்ந்தான்
சனகாதி முனிவரெல்லாம் இம்சைப்பட்டார்
வெந்தனலாம் காமத்தீயே வேண்டாம் போபோ
வெறுத்திடுவாய் சிற்றின்ப ஆசையென்றும்
எந்தனையும் நிந்தித்திடாதே பாபம் பாபம்

தரு

என்னுமதியுங்கெட்டதோ நீதிமொழிகளைதவிர்க்க
ஏனுமதியுங்கெட்டதோ
கன்னிகாசாபம்பொல்லாது கருத்தில்நிறுத்திக்கொள்ளும்
மின்னும் அக்கினிசுருபம் தன்னையே வெறுத்துநில்லும்
சுருள்] மீளாதொருபோதும் கேளாதுன்செவியோ
காளான்போல் நின்றுமே ஏளனம் செய்கிறாய்

பகவமுனி கந்தார்த்தம்

மரியாதையாகசொன்னேன் மறைகுலம் தழைக்கஇன்பம்
சரியாக வைத்துக்கொண்டேன் சரசசிங்காரிமானே
அறியாமை தனத்தால் நீயும் அன்னமே சினமிகுந்தாய்
குறியான உன் பார்வைகண்டேன்

தரு

குற்றம் வராது நில்லம்மா என்குணவதி கனிமொழி
கூறும் வாக்கியம் கேளம்மா
கற்றவமுனிவரோடு நடத்திநால் இல்லறந்தன்னில்
பற்றுதல் நன்மார்க்கமுண்டு பரலோக தரிசனத்தின்
சுருள்] பாக்கியமடைய சிலாக்கியமாகுமே
வாக்கியம் கேளம்மா வஞ்சியிதாகுமே

கன்னிகா கவி

மன்னிப்பீர் மனமகிழ்ந்தேன் மனையறம் தழைக்கவேண்டி
என்னை நீ சத்திரத்தில் எழிலான காதல் கொண்டாய்
தன்னை நான் தெரிந்துநின்றேன் தையலும் இசையேன் சுவாமி
அன்னையின் பிதாவின் சொல்போல் அடையலாம் வந்தாலென்னை

பகவமுனி கவி

அறநெறி அன்புமோங்க அன்னமே உனது வாக்கியம்
திறவுகோல்போல் உள்ளம் திறந்திடமதியுங்கண்டேன்
மறவாமல் மன்றல்செய்ய மங்கையென் மணிவிளக்கே
உறவாகத்துணைபுரிவாய் உன்னருள் கிருபைதானே

பொது வசனம்

இவ்விதமாக பகவமுனியும் கன்னிகாவும் கலியாணம் செய்துக் கொள்வதாக உறுதி கூறிக்கொண்டு நீதி அய்யரிடம் செல்லவும் இப்பால் நீதி அய்யர் வருவது

நீதி அய்யர் கவி

மறையவர் குலம் விளங்க மனுநீதியறிந்த வல்லோன்
உறைநாளும் ஓங்கிவாழ்க உள்ளத்தில் சிவனைக்கோரி
கறைக்காரு கடவுள் சேவை கடாக்ஷமும் பெருகவேண்டி
நிறைமதியழகை யொத்த நீதி அய்யரும் வருகின்றேனே

தரு

நீதி அய்யரும் வந்தனர் — மறையோர்க்குலம்
நீதி அய்யரும் வந்தனர்
நீதி அய்யரும் வந்தேன் — சூதில்லாசன் மார்க்கநேயன்
காதிலணிக்கடுக்கன் — சோதிப்ரகாசம் மின்ன
கருள்] கருத்தினில் மந்திரம் — நிறுத்தியே துதிப்பேன்
வருத்தமில்லாப்பாரி — வாழ்க்கையிரு மதிப்பேன்
அப்பனீசன் பாதங்கொண்டாட — எந்தன்மார்பினில்
முப்புரிநூலுமசைந்தாட
ஒப்பிடும் மறைகள் நான்கும் — ஓதிடும் தவக்குணன்
செப்பிடுமாதி லக்ஷமி — சேயிழைத் தன் மணாளன்
கருள்] செல்வியாள் கன்னிகா — செய்தவப் பலனும்
வல்வினைபோக்கிட — வந்தது நலமே
பட்டுப்பீதாம்பரம் வேட்டியுங்கட்டி — பஞ்சாங்கமும்கொண்டு
தட்டியே நடந்தேன் கொள்கையைகொட்டி
அட்டியில்லாமலென்னை — பட்டத்தாரிகள் கண்டால்
கட்டியே வணக்கம் செய்து — காட்சியும் ஆசீர் பெறுவார்
கருள்] காலங்கண் குறைத்திடும் — வேலையே சோதிடம்
மாலயணளித்திட்ட — மறைகுலமோதிடும்

கவி

என்னரும் தவக்கொழுதாள் எழில்பெரும் வதனம்மிக்க
கன்னிகா ஜலம்திரட்ட கடிகியே சென்றாள் செல்வி
இன்னமும் வரவும்காணேன் இழுக்குதான் என்னவாச்சோ
தன்னைமுன்னறிய வேண்டும் தையலே வந்திடாயே

பொது வசனம்

இவ்விதமாக நீதி அய்யரைக்காணும்படிக்கு திரிலோக சஞ்சரி நாரதர் வருவது

நாரதர் கவி

மாதவக்கொழுந்தாய் எங்கும் மன்றகுலம் தழைக்க வந்தேன்
வேதனும்மளித்த மைந்தன் வேணுகோபாலன் பேரன்
பாதகமறுக்கும் மந்திரம் பஞ்சாக்ஷரம் தினந்துதித்தேன்
நாதநாதாந்தங்கொண்ட நாரதன் வருகின்றேனே

தரு

சப்தரிஷியில் ஒருவன்நானே பிர்மாச்சாரிஎன்ற
சாரதாம்பாள் புத்திரன் தானே
அப்புப்பீரிதி தேயுவ் வாயு ஆகாய மென்னும்
செப்பும் பஞ்சப் பூதத்தை சேர்த்து அடக்கி ஞானம்
சுருள்] சென்றுகலகம்தைக் கண்டுமகிழ்பவன்
என்றும் திருமந்திரம் நின்று துதிப்பவன்
சூரப்த்மாய்ற்காய்தானே அரன் நுதலில்
குட்சமாய் முருகன்தன்னை நானே
கோரசம்பவங்காட்டி கொன்றிட்டேன்ரக்கர்கர்தன்னை
ஆரிருக்கரத்தோனாலே அமரர்கள் குறையைதீர்த்தேன்
சுருள்] அண்டர்தேவர்முதல் கண்டிடும் கோளன்
தண்டுமாய்க்கர்வியும் தரித்திடும் தோளன்
அரிபிர்மனுதி சிவன்தன்னை அனுகுனைக்கு
அருஞ்சிசுவாக செய்தேன்முன்னே
சரிகை கிரிகையோக ஞனம் நான்கையும் கண்டு
உரிமை திறமையானே உலகின் போக்கையும்கொண்டு
சுருள்] உள்ள முறைப்படி என்னளவேனும்
கள்ளமில்லாததிருக் கலகமுங்காணும்
வண்டுகீதங்களிசைப்பாடும் மயில்நடனம்
கொண்டலாத்திக்கின்னைத் தாளம்போடும்
தண்டமிழ் முழங்குமாடு தழைத்தப்பண்ணித்திட்டுர்வாசன்
பண்டுமொழிக்கவிதைப் பாடும்புலர்வர்க்கன்பன்
சுருள்] பாலன் முனிசாமி ஞாலம் தனிலுன்ரை
கோலம் புனிக்கவி யானும் சரணமே

கவி

என்னுள்ளம்மகிழ்வந்த எழில்பெரும் சிஷியர்க்கேளும்
முன்னம்நான் கலகம்செய்ய மூண்டிட்ட தக்கன்சாபம்
தன்னைமுன் துலைக்கவேண்டி தரைப்புகழுலகந்தனில்
கன்னிகா நினவைகண்டேன் கலகத்திற்கே துவாச்சே

தரு

ஓட்டமும் நடையுமாக உறையூர் பட்டணம்நாடி
வாட்டமாய் கலகம்செய்ய வந்தேன் அக்ரகாரம்தேடி
மீட்டியே யாழிசைக்கர்ட்டிக் கூட்டியே சங்கீதராகம்
பாட்டிசைப்பஜனை கோவிந்தம் பாடியே முன்னோடிவந்தேன்

நீதிஅய்யர் தரு வேறு

குருகுலமறையோரே போற்றினேன் கரம்
கூப்பியே மலர்மாலை சாற்றினேன்
வரும்பாவப்பிணியதை வாழ்நாளில் கழித்திட
தரும்சேவையிப்போதே தந்திடுங்களித்திட

நாரதர் தரு

மாராப்புகழுடன் நீயே இந்த
மானிலத்தில் வாழுவாயே

காரார்குழலியும் கன்னியுன் தேவியும்
களிப்புர யில்லறம் கண்டுநீர்புரியவும்

நீதி அய்யர் தரு

ஏழையைநாடியே அய்யனே தேடி
எதற்காக வந்திரோ மெய்யனே
வாழையடி வாழை வளர்ந்திடக்கண்பாரும்
மாழைப்பொதுநடன மாமுனியருள்தாரும்

நாரதர் தரு

உறையூரும் மண்மேடாய் போனதோ இங்கு
உள்ளவரில்லாமலானதோ
பறையறைசேரியும் பாழாகி விட்டதோ
மறையோரேகூறுவீர் மக்களும் கெட்டதோ

நீதி அய்யர் தரு

வாசிமுடித்தவர்க் கோபமே அவர்
வாயாலளித்திட்டச் சாபமே
காசியாத்ரைவாசி கருத்துபோல் மண்மேடாய்
தாசிப்படிந்துமே துலைந்ததேக்குடிகேட்டாய்

நாரதர் தரு

அகங்கொண்டோர்தன்னையே நீதி பெரிய
ஆறஅடித்துப்போம் மோதி
சுகம்காணமுடியுமா கருதிப்பொய்யாகாது
புகழுமழியாதுப்புலவர் பொய்ப்போகாது

நீதி அய்யர் கவி

எனக்கொருசெல்வியுண்டு எழில்சேரும் வதனமிக்காள்
மனக்குறையாகுதய்யா மணமதும் செய்யாதாலே
தனக்குறைதன்னைஒழிந்த தரித்திர திசையில்நின்றேன்
உனக்கதையுரைத்தேன்தேவா உதவியும்செய்குவீரே

நாரதர் கவி

கன்னிகா தனக்குமாலை கடினமாய் முடியப்போகும்
இன்னுளும் வருகுதப்பா இரவி சூழ்மதியுங்காண்
என்னு சீர்ப்பொய்யாகாது ஏழைதான் வரனும் சாது
உன்னைமுன் நாடினுல் நீர் உடன்மணம் செய்குவாயே

பொது வசனம்

இவ்விதமாக நீதி அய்யருக்கு நாரதர் உபமானம் கூறிவிட்டு செல்லவும் இப்பால் ஜலம் திரட்டிக்கொண்டு கன்னிகாவும் பகவ முனிவரும் நீதி அய்யரிடம் வருவது

கன்னிகா தரு

தந்தையாரே எந்தன் தந்தையாரே
தண்ணீரும் எடுத்துவந்தேன் விந்தை நேரே
தந்தையாரே யெந்தனுக்கு இந்த நாள் மணம்முடிக்க
எந்தனுக்கருள் பாலிப்பீர் என்னருமைத் தந்தையாரே

நீதி அய்யர் தரு

காலம் வந்தாலம்மா காலம் வந்தால்
கலியாணம் முடித்துவைப்பேன் வேளையொத்தால்
காலமும் வந்திட்டாலம்மா கண்குளிர மன்றல் செய்தும்
கோலமும் நான் பார்ப்பேன் கண்ணே கோவிந்தனருளாலென்று

பகவமுனி தரு

வந்தனமே சுவாமி வந்தனமே
வந்தடிப் பணிந்தேன் காரும் என்தந்தனமே
வந்தனம் பணிந்தேன் காரும் எந்தனை முன்னுண்டிடுவாய்
உந்தன் மகள் கன்னிகாவை சிந்தையோடெனக்களிப்பாய்

நீதி அய்யர் தரு

நகைத்திடவே வந்தாய் நகைத்திடவே
நாட்டினில் யெல்லோரும் கூடிப் பகைத்திடவே
நகைத்திடவே தேடிவந்தாய் நாணங்கெட்டமாப்பிள்ளையே
சிகைபிடித்தடிப்பேன் போடா சீச்சீங்கு நில்லாதேடா

கன்னிகா தரு

நில்லாதே என்றுமே தந்தையே என்முன்
சொல்லாதீர்வரையென்
எல்லாமவன்செயல் ஏற்றுமே நடக்கனும்
நல்லவர்தானப்பா நாம்தானே காக்கனும்

நீதி அய்யர் தரு

மதியதும்மாறியே போச்சுதா அம்மா
மருந்தினால் மயங்கிட லாச்சுதே
விதிவினையொருபோதும் வீணாகாதென்பாரே
சதியினைமறந்திடும் சகலரும் நகைப்பாரே

கன்னிகா தரு

நிதியுங்கணவனும் தந்தையே கேளும்
நேர்படினும் எந்தையே
விதியின்பயனே பயனென்றும் சொல்லுவார்
மதியு மிழக்காதீர் மறைகுலம் கொள்ளுவார்

நீதி அய்யர் தரு

கருத்திற்கிசைந்திட்டேன் நானே உன்னை
கன்னிகாதானமாய்த் தானே
விருத்தியடைந்திட விண்புகழ் புத்தேளிர்
பொருத்தருள் புரிந்திட பொற்காதல் மணவாளர்

பகவமுனி தரு

மாறுப்புகழாகும் மையா எந்தன்
மணமதும் முடிந்தாலே மெய்யா
தோராவடிவழகி தோகையாளுடன் நான்
பேரானந்தமுடன் பெருமையும் தருகுவேன்

நீதி அய்யர் தரு

கலியாணம் முடித்தேனே வேதங்களோத
கலியாணம் செய்துவைத்தேன் கன்னிகா என்னும்பெண்ணை
வலிய பகவமுனிவர் வாழ்க்கைப் புரிவதற்காய்
சுருள்] வண்டராதிபர் கொண்டுமாமலர்
விண்டுவாசியும் கண்டு சாற்றவே

பொதுவசனம்

இவ்விதமாக பகவமுனிவருக்கும் கன்னிகாவுக்கும் நீதி அய்யரால் கலியாணமுடித்து வாழ்க்கை நடத்தும்படி விடுக்கவும் இதையறிந்த பிர்மா சரஸ்வதி இருவரும் புத்திரர்களாக பிறக்கும்படி வருவது காண்கவும்

பிர்மா தரு

கல்விக்கரசியே வாரும்மே என்
கருத்தும் மாறும்லே நீருமே
செல்வர்களாகவே சென்றுமே பிறந்திட
நல்மொழிக் கூறுவாய் நானில மறிதிட

ஞானத்திறைவி தரு

எந்தயிடந்தனில் நாதனே நாமும்
ஏகியேப்பிறப்பதும் வேதனே
அந்தந்தரகசியம் அறிவிப்பாய் இப்போதே
சிந்தைகளித்திடச் சிறப்புரைத்தப்பாதே

பிர்மா தரு

நீதி அய்யர்மகள் தானே குற்றம்
நீக்கியே யென்பின்னேமானே
ஓதுமருள்மங்கை உத்தமிப்புதல்வியாம்
சூதில்லாக்கன்னிகா சூக்கும்தன்னிலே

ஞானத்திரைவி தரு

கன்னிஎன்ற நல்மங்கையே நாதா
காணலாம் சென்றுநாம் அங்கையே
வன்னசிசுவாக வளர்ந்துமே நாட்டிலே
உன்னிதமாகவே உத்தமி வீட்டினில்

பிர்மா கவி

தவறில்லைபெண்ணே கண்டாய் தவமுனிப்பாரியான
சிவனருள் மங்கையற்கும் சிறந்தநல்புதல்வியான
பவவினைத்தன்னைப்போக்க பார்தனில் கன்னிகாவும்
அவளிடம் பகவனியும் அடைந்தால் பிறக்கலாமே

ஞானத்திரைவி கவி

பரமனுரளித்தசாபம் பார்தனில் பலிக்கவேண்டி
வரம்பெற்றக்கன்னிகாவின் வயிற்றினில் சிசுவதாக
நிறம்மாறி பிறக்கநாமும் நீள்புவியுலகோர்போற்ற
திறமுடன் செல்வோம் வாரீர் திசைமுகா எந்தன்நாதா

பொது வசனம்

இவ்விதமாக பிர்மா சரஸ்வதி இருவரும் புறப்பட்டு வரவும், பகவமுனியும் கன்னிகாவும் சம்பாஷணையாகவும் இருப்பது காண்கவும்

பகவமுனி தரு

வாழ்வினிலே ஒருநாளும் கண்மணியே எந்தன்கண்மணியே
தாழ்வில்லாமல் வாழவேண்டும் பெண்மணியே
சுருள் ] தந்தப்பாக்கியம் எந்தனுக்காச்சுது
உந்தனையடைந்தேன் சிந்தையும் களிக்க

கன்னிகா தரு

இழுக்கொன்றுமில்லாமலே எந்தன் மன்னவா கேளும்எந்தன்
அழுக்கருத்த முனிவரே நம்வாழ்க்கையோங்கவே மன்னவா
சுருள் ] ஆரியரின்குலம் பேரிகை முழங்கிட
கோரியே தருமமும் பாரினில்வழங்கிட

பகவமுனி தரு

தீர்த்தக்காவடிக்கட்டி பெண்மயிலே உன்னை பெண்மயிலே
பார்த்துநான் மணம்புரிந்தேன் மாங்குயிலே
சுருள் ] பஞ்சமாப்பாதகம் அஞ்சையு மொழித்தேன்
வஞ்சியே உன்னுடன் வாழ்க்கையும் கழித்தேன்

கன்னிகா தரு

மனையறத்தில் யெந்நாளும் ஒன்றுபட்டுமே நாதாஒன்றுபட்டுமே
மங்களமாய் மக்கள்பெற்று வாழவேண்டுமே
சுருள்] மதியும்கதிர்வன் பதிபுகழ்தன்னில்
விதியின்வினையிது சந்திப்பியானேம்

பகவமுனி தரு

எண்ணெயிட்டு குழல்முடித்தேன் எந்தன்தேவியே தலையில்
எந்தன் தேவியே
வண்ணமான் வடுவுயென்ன சொல்லுமாவியே
சுருள்] வந்தக்குற்றமேன் இந்தக்காயந்தான்
எந்தக்காலத்தில் உந்தனுக்காச்சுது

கன்னிகா கந்தார்த்தம்

கருத்துளங்கனியேமன்ன காசியாத்திரைக்குசெல்ல
பொருத்தமாய் உறையூர்சத்திரம் பொங்கலும் சமைத்தகாலை
திருத்தமாய் தொட்டேனென்று தீட்டினீர்சட்டுவத்தால்
வருத்தமாய் அடித்தக்காயம்

தரு

வடுவாகக் காணுதையனே என்ன மணந்த
வள்ளலே அறிவாய் மெய்யனே
கடுகளவேன் பிசகேன் கன்னிகா யென் சம்மதந்தான்
நடுவழியிலுன்னைக் கண்டு நாயகனாய் நானடைந்தேன்

பகவமுனி கந்தார்த்தம்

வந்தது பெரும் பாவந்தான் வகைகெட்டேன் காமத்தாலே
நொந்திடமதியீனத்தால் நோக்கியே உனை மணந்தேன்
எந்தனை இனி யென்னதே என்பாவம் உன்னைச்சாரும்
அந்நாள் சட்டுவத்தால்

தரு

அடிப்பட்ட ஆதியல்லவா பறையர்குலம்
ஆதியே நான் பதில் சொல்லவா
கெடிப்பெற்ற எந்தன் கீர்த்தி கேலியாக போச்சுதடி
படிதனில் மறையோர்குலம் பாழாச்சுதோடிபோடி
சுருள்] பாதகி உனைவிட்டே காதகி ஓடுறேன்
வேதனைத் துன்பத்தை விலக்கிட நாடுறேன்

க. ஆதி தரு

அய்யரே ஓடாதே நில்லுமே இந்த
ஆதிக்கொரு பதில் சொல்லுமே
பொய்யான வாழ்க்கையை பூமியில் நம்பாதே
வையகம் வசைக்கூற வம்பினையேற்காதே

பகவமுனி தரு

பறையர்குலசாதி யாச்சுதே நான்
பங்கமலடந்திட லாச்சுதே
மறையோர் குலம்கெட மங்கையே நாட்டினிரு
உறைநாளும் கெட்டதே ஊதாரி உன்னாலே

க. ஆதி தரு

சாதிஇரண்டுதான் அய்யனே மறை
சாற்றிடலாச்சுதே நீர்சொன்ன வாக்கியம்
ஆதியைவிடலாமா அந்தண யோர்க்கியம்

பகவமுனி தரு

புலையர்குலமங்கை ஏதடி நீயும்
புகலும் மொழியதும் நீதடி
அலையாதே யென்னிடம் அஞ்ஞானம் பிடிக்காதே
நிலையானம் பெரும்பழி நிந்திக்காலச்சுதே

க. ஆதி தரு

நீக்கிடலாகுமோ சாதியே நீர்
நினைக்காதீர் புலைச்சியென்றேதியே
வாக்கியம் ஆண்பெண்தான் வகுத்திட்ட சாதியே
யோக்கியா பதில்கூறும் பார்க்குறேன் நீதியே

பகவமுனி தரு

மதப்பேதமாகுமே மங்கையே என்னை
மதிக்கவேமாட்டார்கள் நங்கையே
இதமாகப்பேசியே இழுக்கதை வைக்காதீர்
பதனமாய் இருந்திடும் பாரியே தடுக்காதீர்

க. ஆதி கந்தார்த்தம்

தடுக்காதேயென்றுசொன்ன தவமுனியெனதுமன்றை
விடுக்காதே சாதித்தாழ்வு வியாசனுல் வந்தமோசம்
கெடுக்குதே நாட்டிலெங்கும் கேலியென்றெண்ணிடாதே
அடுக்குமோ நீர்சொல்லும் மொழி

தரு

ஆதியைவிட்டுப்போகவே சாதிப்பிரிவினைக்காட்டி
அறிவித்தாய் மனதும் கோகவோ
வாதியான வியாசன் வலைச்சிமகனல்லவோ
சாதிப்பிரிக்க நீங்கள் சக்கிலிக்குடும்பம்பே
சுருள்] சாஸ்திரம்நீதிமறை குஸ்திரமறிந்தால்
கோத்திரமொருகுலம் பார்த்திடலாகும்

பகவமுனி கந்தார்த்தம்

கட்டுரைகளதகன்வேண்டாம் காதலியெனைமறப்பாய்
விட்டுநீர்விலகிச்சென்றால் விதிவினைஒழிந்து என்றும்
கெட்டவன் சுகத்தைக்காண்பேன் கேட்கிறேன்நயந்துடன்னே
தொட்டிதோப் பாவம்துலைக்க

தரு

துரிதமாய் யாத்திரை செல்லவே விதிவினையை
துலைத்து அனந்தங் கொள்ளவே
மரியாதையாகசொன்னேன் மார்க்கமறிவாயேடி
பிரியமில்லாக்கனியும் பிடிக்குமோ ருசியும்
சுருள்] பிள்ளைவராதடி கன்னிகாநில்லுமே
உன்னைவெறுத்திட்டேன் என்னையெண்ணாதே

க. ஆதி சுலோகம்

ருஷியஸ்ருங்கோ! ருகோர்ஸாதபத்தி
கௌசிகோ திரதிநந்தன! சிம்புகோசம்புகோதபத்தி
கோதமோ கௌதசம்பவ! வால்மீகோ பரோர்பத்தி
அகஸ்திய கும்பசம்பவ! வியாஸோ லுப்தா சம்பூதோ
வசிஸ்திர ஊர்வசிசுத நாரதம் சகிபுத்திர
கவண்கின்னியோ முண்டகேசுத! சர்வவம்ஸ
பகவதோத்காரண பிரியாயனம்!

பகவமுனி கவி

என் குலமொன்றேறேதவேனன்றும்வெதநூம்மனதேன்ஓ
இன்றேநான் உணர்ந்தேன்மானே இரகசியம்ஒன்றுகாண்பாய்
என்றுமே பிறக்கும்பிள்ளை எடுத்துமே வரவொண்ணாதே
அன்றன்றே அங்கேபோட்டு அருவையே வந்தால்சேர்ப்பேன்

வசனம்

கேளும் ஆதியே என்னோடு நீ வாழவேண்டுமானால் நம் இருவருக்கும் பிறக்கும் பிள்ளைகள் ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும்சரி குழந்தை பிறந்த இடத்திலேயே வீசியெறிந்துவிட்டு என்பின் தொடர்ந்தே வரவேண்டும் பதியின் சொல் கடவாமல் நடப்பேனென்று சத்தியம் செய்துகொடுத்தால் நான் உன்னையே அடைவேன் கண்ணே முக்கியகிரண சர்வம்ஸத்தையும் விளக்கியதால் ஒருவனே தேவன் ஒக்றேகுலம் என்பது என் அறிவிக்கு ஆனந்தங்காட்டி மகிழச்செய்தால் என் ஆசைக்கிளியே வாரும் செல்லுவோம்

க. ஆதி கவி

அன்பிற்கு மார்க்கமில்லா ஆதியும் மனதுஒத்தேன்
இன்பநல்வாழ்க்கையோங்க இசைத்திட்டேன் கருத்தைபோல
நன்மக்கள்பெற்றால் போட்டு நானுமுன் பின்னேவந்தேன்
என்மனசாக்ஷி சத்யம் எழிலுறத் தந்தேன் மன்னா

பகவமுனி தரு

பாணுசேரிசத்திரம் பார்வையில்தெரியுதே மானேமானே
கோணுமல்வந்திடும் கோதைவென் பின்னாலே தானேதானே

க. ஆதி தரு

நாடியுமசையுதே நடக்கவும் முடியாது நாதாநாதா
கூடியே கர்மத்தை கொற்றவாப்பிடித்திடும் தோதாதோதா

பகவமுனி தரு

இந்தசத்திரத்தில் தங்கியே கண்ணேகண்ணே
வந்தவிதிவசம் வழியினில் தங்காது பெண்ணேபெண்ணே

க. ஆதி தரு

என்னநான் செய்வேனையா மன்னவா மன்னவா
என்வயிறும் நோகுதையோ மன்ன மன்னவா
கன்னியென்தன் கால்கள் ரெண்டும் மன்ன மன்னவா
பின்னியே இழுக்குதென்னை மன்ன மன்னவா

பொது வசனம்

இவ்விதமாக ஆதிக்கு பெண்குழந்தை பாணுசேரி சத்திரத்தில் பிறந்தது அக்குழந்தையை பகவமுனி யெடுத்து ஆசீர்வாதம் கொடுப்பது காண்கவும்

பகவமுனி தரு

பிறந்தப்பெண்குழந்தைமேல் பிரியமும்வைக்காதேமானே மானே
வரம்தந்துபோட்டுமே வஞ்சியே செல்குவோம் தானேதானே

க. ஆதி தரு.

மன்னவா உன்சொல்லை கன்னிகாம்றப்பேனோ நீதாநீதா
பொன்னிறக்குழந்தைக்கு புகழ்ந்திட உன்னருள் நாதாநாதா

பகவமுனி கவி

மங்களமுகவிலாஸம் மாணிக்கம் முத்துபோல
திங்களின் ஒளிபோல்காண தீர்க்காயுள் குறைவில்லாமல்
எங்கிலும் புகழ்விளங்க எழில்குணவதியாள்கீர்த்தி
பொங்கமாய் உலகம்போற்றும் போட்டுமே வருகுவரயே

பொது வசனம்

இவ்விதமாக பசுவமுனிவருக்கும் கன்னிகா யென்ற ஆதிக்கும் பிறந்தப் பெண்குழந்தையை பாறுசேரி சத்திரத்திலே போட்டுவிட்டு சென்றார்கள் முதல் குழந்தையே (ஔவையாகும்) இப்படியே ஏழுக் குழந்தைகளை யீன்று ஏழுஇடங்களில் வீசியெறிந்துவிட்டு சென்றுவிட்டார்கள் இதில் 2வது பிள்ளை (உப்பை 3வது பிள்ளை (அதிகமான்) 4வது பிள்ளை (உருவை) 5வது பிள்ளை (கபிலர்) 6வது பிள்ளை (வள்ளி) 7வது பிள்ளை (திருவள்ளுவர்) இப்படியுள்ள பலபேர்களால்நாம தேயசூட்டி வளர்ந்துவருகின்றக் காலத்தில் உருவைஎன்றப்பெண்ணை வளர்த்துவரும்படியான காந்தமகாரிஷி சபாநாடி வருவது காண்கவும்

காந்தமகாரிஷி கவி

விண்ணுலகோர்கள் மெச்சும் விவேகஞானசோதி
கண்ணுதல் தனைத்துதிக்கும் களங்கமில்லாத யோகி
மண்ணுளோர்ரெனைக்கொண்டாட மலர்சடை முடியிலங்க
வல்லமையாய் காந்தம்காரிஷி வளர்சபை வருகின்றேனே

தரு

நீலகண்டன் நாமத்தை நின்றுத்தினம் பூஜிக்கும்
நித்திய தத்துவ யோகனும் காந்தமகாரிஷி
நித்திய தத்துவயோகனும்
ஸ்தூலமானசரீரம் தோன்றினும் பயனுமில்லை
வேலையே திருமந்திரம் வேண்டியே தினம் துதிப்பேன்
சுருள்] வெஞ்சுடராகிய பஞ்சப்பூதமும்
அஞ்சுருவாகியே அமைந்த சரீரமே
முப்பத்து முக்கோடிதேவர் முனிவர் கின்னரர்போற்ற
முறைப்படி ரிஷிகள் சூழவே வேதக்காமங்களோதி
முறைப்படி ரிஷிகள் சூழவே
நார்ப்பத்தெண்ணயிரவர் நல்லவரென்றெனையே சொல்ல
பார்க்குள் மதுபானத்தை பகர்ந்தேன் தேவர்க்கமிர்தம்
சுருள்] பஞ்சமாபாகம் அஞ்சினில் ஒன்றென
மிஞ்சியே தேவர் கெஞ்சிடயீந்தேன்
ஆதாரம் பன்னிரெண்டில் அடக்கமாகிய காயம்
அரியினால் நடக்கவிட்டுமே சுகபோகமாய்கையை
அடையும்படியாய் விட்டுமே
வேதாகமத்தின் பொருள் வேண்டியே அறிந்துப்பார்த்தால்
பேதாக்காமக்குரோதம் பொருந்தும் லோபமதமாச்சர்யம்
சுருள்] போக்கிடில் சிவனருள் பாக்கியம்கிட்டும்
வாக்கியம் நல்லதி சேர்க்கவுமெட்டும்

கவி

மதுபானபோதைதன்னில் மயங்கியே இருக்குமெந்தன்
சதுர்மறைநீதிமார்க்கம் சகலமும் உரைக்கும் சிஷியா
பதுமையாள் எனது செல்வி பாறையாம் உருவைதன்னை
முதுமறையோதிவைக்க முன்னம்நீர் அழைத்துவாரும்

பொது வசனம்

இவ்விதமாக காந்தமகாரிஷியைக் காணும் படியாக உருவை சபாநாடி வருவதைக்காண்க

உருவைகவி கவி

முனிவர்கள் புகழ்விளங்க முகாரியினருளால்வந்த
கனிமொழிவாதியளான கன்னியின் குழல்முடித்தே

வனிதையும்களபம்பூசி வண்மைசேர் தந்தைப்பாதம்
இனிதுடன் போற்றுமுருவை இசைக்குயில் வருகின்றேனே

தரு

உதிக்கும் கதிரவன்போல் பதிக்குள் ஒளிவிளங்கும்
உருவையம்மனிதோ வந்தேன் சான்றோர்குலத்தின்
பெருமை சிறக்கவும் வந்தேன்
மதிக்கும்தாதியர்கூடி மகிழும் சங்கீதம்பாடி
துதிக்கத் தந்தையர்பாதம் துன்பமகற்றவேண்டி
சுருள்] தூயகுணமுடையாள் சாயல்மயிலென
தேயம்புகழ்குண ஞாயவதியுமென
பெண்களாக பூமியில் பிறப்பதும் பெரியபாபம்
பிறந்தபின் நடக்குமார்க்கமே அன்னைதந்தையும் தெய்வமாய்
பிரியம்போல் தொழுதல்மார்க்கமே
மண்புகழுமோர் வரனைமன்னருக யேற்றுநாட்டில்
கண்ணிமையும் காப்பதுபோல் கணவனொருதெய்வமன்றே
சுருள்] கார்த்திடக்கற்பினை கீர்த்தியுண்டாகுமே
பார்த்தவர் புகழ்ந்திட நேர்த்தியதாகுமே
வாசம் மணக்கும் தமிழ் வளரும் திருப்பாதிரிப்புலியூர்
வாணிவிலாச புத்தகசாலை நல்லப்புகழதும் ன்ங்கிட
வாணிவிலாச புத்தகசாலை
மாசற்றப் பொ. இராமலிங்கம் மகிழ்ந்து இச்சரிதம்கேழ்க்க
தாசன் முனிசாமிக்கீதம் தண்டமிழ் கவிசிறக்க
சுருள்] தையலின்சரணமே கைகூப்பி நின்றேன்
வையத்திலென்னையே வாழ்த்திடுமென்றேன்

தரு

சரோருக வதனமுள்ள தந்தையாரே எந்தன் தந்தையாரே
சருணம் புரிந்தேன்கோடி யென்தந்தையாரே
சுருள்] சந்தனக்களபம் சவ்வாதுகள்பூசினேன்
செந்திருப்பாதமே சேவித்தேன் காருமே

காந்தமகாரிஷி தரு

பிள்ளைக்கலிதீர்க்கவந்த எந்தன்செல்வியே கண்ணே எந்தன் செல்வியே
பிரியம்போலவாழ்ந்திருப்பாய் எந்தன் செல்வியே
சுருள்] பிழையில்லாமலே செழித்துவாழ்ந்திட
அழைத்தேனம்மணி ஆசீர்தந்திட

உருவை தரு

சகலகலை சாஸ்திரமெல்லாம் கற்றேன் தந்தையே யானும்
[கற்றேன் தந்தையே
அகமகிழப்பரமன் பூஜை செய்வேன் எந்தையே
சுருள்] அரனிடம் வரம்பெற்று அவனியில் நானே
திறமுடனரசதும் செய்குவேன் தானே

காந்தமகாரிஷி தரு வேறு

பரமன்பூஜைசெய்யப் போகுமா அம்மா
பஞ்சப்பூதங்கட்டி லாகுமா
திறம்வேண்டும்கண்மணி தீங்குகளாகிடும்
திறம்மாறிதபம்செய்தால் பரலோகமோங்கிடும்

உருவை தரு

ஆரவாரத்தோடு தந்தையே பூஜை
ஆலமுண்டோனிடம் எந்தையே

திறமுடன்வரம் பாரதில் பெற்றுமே
யாரும் மெதிரில்லா ஆளுவேன் முற்றுமே

காந்தமகாரிஷி தரு

சாணார்க்குலமென்றே தங்கமே நம்மை
சகலரும் நகைப்பார்கள் எங்குமே
வீணை பழிச்சொல்லும் விக்கினம் நேருமே
வாணும் யெனதுகண்ணே வாக்கியம் காருமே

உருவை தரு

ஒன்றே குலந்தானே காணுமே தேவன்
ஒருவனேயெங்கிலும் தோணுமே
நன்றாய் மறைநூலும் நாட்டினில் காட்டுதே
என்தன்மனதன்பே ஏகாந்த மூட்டுதே

காந்தமகாரிஷி தரு

சாதிப்பிரிவினைக் காட்டுமே அம்மா
சாதியிரண்டேதான் கூட்டுமே
வாதிக்குத்தமனம் வாழ்நாளைக்கெடுக்காதே
நீதிமொழிக்கேளும் நீ யென்னைத்தடுக்காதே

நாரதர் தரு

மெச்சினேன் மெச்சினேன் அருவையே புகழ்
மேன்மையுமடைகுவாய் உருவையே
நச்சரவம்பூண்ட நாசமில்லோன் சேவை
அச்சமில்லாமலே அடையலாம் கண்பார்வை

காந்தமகாரிஷி தரு

மறைகுலமோங்கிடும் நாரதா என்
மகளுக்கு நீதியும் சேரதா
குறையின்றிப்போதிப்பாய் குற்றமில்லாமலே
நிறைமதிக்கூறுவாய் சிந்தையில்லாமலே

நாரதர் தரு

உலகில்கீர்த்தியோடு உருவையும் நானோ
உம்பர்தேவர்முதல் அருவையும்
கலகமில்லாத்தொழும் காலமும் வருகுதே
மலர்முகவதனிக்கும் மகுமையுமிருக்குதே

காந்தமகாரிஷி தரு வேறு

நாரதாகலகத்தை நாட்டினில் மூட்டாதே நில்லு நில்லு
பாரதில்சாதித்துவேஷமும் மூண்டிடும் சொல்லு சொல்லு

நாரதர் தரு

உருவையின் விரதமும் ஒருபோதுமழியாது அய்யா அய்யா
பெருமையாய் எல்லோரும் போற்றுவாருங்களே மெய்யா மெய்யா

காந்தமகாரிஷி கவி

உருவையே யென துசெல்வி உள்ளத்திலன்புண்டாகி
பருவத்தை நினைத்திடாமல் பரஞ்சோதி யருளைக்காண
அருவையே ஐந்துப்பூதம் அடக்கிநீர் ஒன்றாய்க்கூட்டி
குருவையே நினைத்துப்பூஜை குணமுடன்செய்குவாயே

உருவை தரு

தந்தையிடம் விடைபெற்று விந்தையாய் தபம்முடிக்க
சந்தோஷம் மனதில்கொண்டுமே கானகம் நோக்கி
விந்தையாய் நடந்தேன் கண்டுமே

நாரதர் தரு

போகாதே போகாதே நில்லம்மா பெண்
புத்தி இதுதானு சொல்லம்மா
ஏகாந்தமாகவே எம்பிரான் பூஜைக்கு
எந்தவிதம் செய்வாய் ஏற்றுயுன்னுசைக்கு

உருவை தரு

குற்றம் பொருந்திடும் சுவாமியே புத்தி
கூறியெனக்கதைக் காமியே
வற்றாதப்பொய்கைபோல் வளம்மிகுந்தோங்கிட
வரமெனக்களிப்பாயே வையக மோங்கிட

நாரதர் கவி

அரனிடதபமேசெய்து அவரிடம் உள்ளஜந்து
திறமுள்ள ஆயுதந்தான் தீங்கில்லாப்பெற வேண்டும்
திறம்மாறிக் காளியாகி நீள்புவியுலகந்தன்னில்
வரம்பெற்று துஷ்டர்தம்மை வாட்டியே வதைப்பாயம்மா

உருவை தரு

தபம்செய்ய நடந்தேனே அரனைக்கோரி
தபம்செய்ய நடந்தேனே
தபம்செய்ய நடந்தேனே தாண்டிக்கானகம் நாடி
தையல் உருவையாளும் அய்யமில்லாமலோடி

பொது வசனம்

இவ்விதமாக உருவை கானகத்திலே கண்மூடியாக கடுந்தபம் செய்யவும் இதையறிந்து பரமர் சபாநாடி வருவது காண்கவும்

பரமர் கவி

முப்புரத்தை நகைத்தெரித்த முராரி சோதி
முனிவர்முதல் ரிஷிகள்வரை வணங்குமாதி
துப்புடையா ரெனைத்தொழுதமடியார்க்கன்பன்
துளவணிந்த திருமாலின் மெய்யில்சேர்ந்தேன்
ஒப்புரிமை சத்திக்கிடப்பாகம் ஈந்தேன்
ஒளிவிளங்க மான்மழுவும் கரத்தில்கொண்டேன்
அப்புமதி அரவந்தனை சிரமணிந்தேன்
அரனுமே கொலுவாக வருகின்றேனே

தரு

சிவலிங்கசந்திரசடாதரன் வந்தேன் இந்த
சிந்துசூழுலகினில் வந்தடியார்க்கருள்
சின்மயாநந்தக்காட்சியும் தந்தேன்
தவசிகள் தினம் தினம் தாணடி வணங்கிநிற்க
பவவினையகற்றும் வள்ள பராபரிம்மணம் சிறக்க
சுருள்] பாசபந்தவிசு வாசமும் கொண்டேன்
தேசுலாவும்புகழ் யீசனுய் நின்றேன்
சூரபத்மன் குலத்தைபோக்க நான்
சூட்சமாய் முருகனை காட்சியளித்திட
ஆருப்பொறியதனு லாக்க
பாரந்தாங்கிடும் தாயார் படைக்கம்பிர்மனல் செய்தேன்
கோரமுடையவுணர்க்கொண்ட யெண்ணமழித்தேன்
சுருள்] கொஞ்சிடும்தேவர்கள் சஞ்சலம் தீர்த்தேன்
அஞ்செழுத்ததிபதி அன்பினல் காத்தேன்
செந்தமிழ் கொழிக்கும் தமிழ்நாடு நல்ல

சேகுலாவுமலர் வாடைமணந்திடும்
செகம்புகழ்ந்திடும். அலடிமேடு
முல்லைமணக்கும் தென்றல் முழங்கும் பண்ணித்திட்டுர்வாழ்
சொல்லும் முனிசாமிகீதம் சொற்குற்றம்பிழை பொருப்பீர்
சுருள்] சோதிமூலாதார ஆதியுமானேன்
நீதியாய் காத்திடும் நிரஞ்சபோதன்

கவி

அன்பெனும் சாந்தம்கொண்ட அறிவினில் சிறந்த நந்தி
இன்ப நல்லுரையுங் கேளாய் இனிதுரக்கிரகம் சார்ந்தே
என்னுளம் மகிழும் சக்தி எழில் மதி இமையவல்லி
தன்னை முன்னழைத்துவாரும் தார்புகழ் சபைமுன்பாக

பொது வசனம்

இவ்விதமாக பரமரைக் காணும்படியாக பார்வதி சபாநாடி வருவது காண்க

பார்வதி கவி

முச்சுடரொளி மின் சோதி மூலமந்திரத்தில் நிற்கும்
அச்சுதன் தனக்குத் தங்கை அருங்கோண நிமலிகண்ணுள்
கச்சனியுறவம்பூண்டக் காரிகை மலர்கள் சூட்டி
பச்சை வைடூரியம் மின்ன பார்வதி வருகின்றேனே

தரு

வான்முகில் மேனியொத்த மான்விழித்தனக்கொப்பான்
வஞ்சிப்பார்வதியும் வந்தேன் உலக மக்கள்
வாழ்ந்திடவே வரமும் தந்தேன்
தேன்மொழிக் குயிலாலென்ன தெளிவுரும் மறைநான்கினில்
நான் முதல்நடமாடும் நாரணன் தங்கையாளானேன்
சுருள்] நத்திடுமன்பரின் புத்தியில் நானே
நித்தமும் குடிகொளும் சத்தியுமான
அத்தி முகவன் கந்தன் அய்யப்பன் வீரபத்திரன்
அடைந்தேன் சுதனுமாகவே என்புகழும்பெருக
வெத்திபெற சூரருக்காய் வேண்டியே வராகியானேன்
முத்தித்தரும் கௌரி முக்கோண வட்டத்தில் நின்றேன்
சுருள்] மூலமந்திர உலகாளும் நிரஞ்சினி
கோல்விழியழகி சூலி கபாலியே
சத்தியாள் ஒருருவாய் சமயம் பதினாறி
சற்குண நிமலித் தோன்றியே பலப்பிணிகளைபோக்க
சங்கரியாய் வந்தேன் தோன்றியே
நத்திடும் தேவர்க்குறையை சத்ரு சங்கரியும் தீர்த்தேன்
எத்திசையுலகமக்கள், எழில்பெறவே நின்று காத்தேன்
சுருள்] எங்கிலும் புகழ்பெரும் மங்களக்காரணி
செங்கண் மாலானவர் தங்கை நாராயணி

ஷ தரு

புகழ்மதி சடையோனே பாதம் பணிந்தேன்
புலித்தோலுடையோனே
அகமகிழ்ந் துன்னிரு அடியினைப் போற்றினேன்
சுருள்] அரவப்பூஷணு, ஆதரியென்னை
வரமும் தந்திட வாழ்க்கையே துணை

பரமர் தரு

சோதி சுடர் வடிவே வாராகி வாலை

ஆகிபரம் முடிவே
நீதிமுறைப்படியே பாதி உடலளித்தேன்
சுருள்] நிந்தம் யென்னுடன் ஒத்துக்கூடியே
சத்திவாழ்கவே முத்தித்தந்தனே

பார்வதி தருவேறு

தக்கனிட மருமகளுய் நாதா மருமகளாய்
தழைத்துப்பின்னழித்துக்காத்தாய் ஒருமகளால்
சுருள்] தையலெந்தனை வையகந்தனில்
ஐயா அழைத்தும் மெய்யாக்கூருவீர்

பரமர் தரு

காலமெல்லாம் அரக்கர் துன்பம் பெண்ணே அரக்கர் துன்பம்
கண்டிடத்தேவர்கள் துயர்தீர்க்க இன்பம்
சுருத்] கருத்தின்போலவே பொருத்துக்காக்கவும்

பார்வதி தரு

கேட்டவரம் தான்கொடுத்து மன்னு தான்கொடுத்து
கெட்டபேரெடுக்க வந்தாய் நீரடுத்து
சுருள்] கேலியாகவே மாலும் கூறுவார்
ஜோலியே உந்தன் வேலையாகுமே

பரமர் தரு வேறு

தந்தைக்கும் பிள்ளைக்கும் சண்டையால் இரு
தருதலை சூரரை நிஷ்டையாய்
முந்தியே மகிடனும் மூர்க்கனும் வியாக்ரனால்
தொந்தரையாகுதோ தேராவடிவழகி

பார்வதி தரு

மகிடனைக்கொன்றிட மார்க்கமே சுவாமி
மார்க்க முறைத்திடும் தீர்க்கமே
அகிலத்தில் அரக்கரை அடக்கிட யோசனை
அறிவித்தால் செய்குறேன் அந்தரி நீலியே

பரமர் தரு

உருவை யென்னும்பெண்ணை கண்டுமே தேவி
உண்டான வரமதை இன்றுமே
அருவைக்களித்தாலே அவனியில் காளியாய்
சொருபம் கிடைக்கவே வருகுவாய் கண்மணி

பார்வதி தரு

எந்த ஊரில் உருவையானது காளி
எழில்பெறவளர்ந்திடலானது
அந்தரக்சியம் அறிவிப்பாய் என்னிடம்
எந்தன் கிரியசத்தி ஏற்றதோ முன்னிடம்

பரமர் கவி

ஆவலாய் நமைக்குறித்து ஐம்புலன்தனையடக்கி
தேவரும் துதிக்கயோகம் தேன்மொழி உருவையாளும்
காவிரிப்பூம்பட்டிணத்தின் காட்டகம் தன்னில்தானே
ஜீவனை விட்டுப்பூஜை சிறப்புடன் செய்கின்றாளே

பார்வதி கவி

நாடிநாம் காவிரிப்பூம்நலமுள்ளநகரம் சென்றே
கூடியே மனமகிழ்ந்து குலாவிடும் உருவைதன்னை
தேடியே மனமகிழ்ந்து குலாவிடும் உருவைதன்னை
தேடியே ருபம்மாற்றி தேசத்தோர் மக்கள்போற்ற

ஓடியே அருள்பாவிப்போம் ஓங்காரிக்காளி என்றே

பரமர் தரு

சமைய முதல்வியே விமலையே என்னோடு நீ — வாரும் வாரும்
அமரர் ரிஷிகள் சித்தர் அருந்தவம்செய்வதைநீ — பாரும் பாரும்

பார்வதி தரு

மோனமென்னும் வாசியான நிலையத்தில் — நின்று நின்று
கானகமெங்கிலும் காட்சியும் காணவே — நின்று நன்று

பரமர் தரு

காவேரிப்பூம்பட்டணம் கரையோரம் காடதை — பாரும் பாரும்
பாவையாள்புரிகின்றப் பக்தியின்பூஜையை — நீரும் நீரும்

பார்வதி தரு

கடுந்தபம் செய்கின்றக்கண்மணி யெழுந்திரும் — நீயே நீயே
படுந்துயர் எங்களின் பாசத்தை யெறிக்குதே — தாயே தாயே

உருவை தரு

உலகம்நிரு பலவும் நிறைந்தருள் — ஓம்பஞ்சாக்ஷரதிருபரனே
நிலையும்பதியாகிய சுடரே — நித்தியதத்துவ முத்தியுமதனே
சுருள்] நிறையே சுடரொளி — நீரணிப்பொருளே
இறையே இருளதை — யகற்றிடுமருளே
திங்கள் மான்மழுசெங்கைகுடியாதிகழும் — சுடரொளிமயநிதியே
எங்கள்குலம் காத்திடும்விடையா — ஏகாந்தபரவெளிபதியே
சுருள்) எல்லைப்புகழ் — சொல்லும் விநோதா
தொல்லைபோக்கியே — நல்லருள் தாதா

பரமர் தரு வேறு

கண்மணியே காட்டகத்தில் தாயே — எனைக்குறித்து
கடுமையாய் தவம்புரிந்தாய் நீயே
விண்மணிபோலெங்கிலுமே — விளக்கொளிமயமாம்சோதி
நண்மணியேநாளுமோங்க — நாதாந்தப் பரஞ்சோதியும்
நாடியேவந்தோம் சக்திபதி — கூடி மகிழ்ந்தோம்
சுருள்] நாட்டியவாசியை — கூட்டுவாயம்மா
ஓட்டவும் வேண்டாம் — வாட்டுதே

உருவை தரு

காக்ஷியளித்தாய் சோதியே — நான் கோரியபடியே
காக்ஷியளித்தாய் சோதியே
ஆக்ஷியானத்தந்தை தாயே — அர்ச்சனைசெய்தேன் மலரால்
ஆசீர்வாதம் தந்தருள்வாய் — அன்னையாரே எந்தனுக்கு
அடவியில் நானே கண்டிட — புடவியில் தானே
சுருள்] அம்மையு மப்பனும் — இம்மையில் [illegible]
செம்மையாய் காத்திடும் — செல்வமும் தானே

பார்வதி தரு

என்னவரம்தான் வேண்டுமோ — உன்
எண்ணத்திலிருப்பதை — புண்ணியவதியே
என்னவரம்தான் வேண்டுமோ
கன்னியே தடையில்லாமல் — காரணமுரைத்தாலம்மா
இன்னசர் புகழ்விளங்க — இருந்தரசாள்குவாயே
இட்டதும் என்ன புகழ் — கட்டளைசொன்னு
சுருள்] இடரில்லாமலே — உடனே வரமதை
தடையிலாதருகுவேம் — [illegible]நடமயிலாளே

உருவை தரு

மான்மழுசூலகபாலம் அம்மணி, நீதி
மறைபுகழ் சிலம்பொடு நிறையசன்மார்க்கமாய்
மகிழ்ந்திலங்கிட அம்மணி,
தேன்மொழி வரமளித்தால் தேவர்முதல் போற்றவேண்டி
மான்விழியிருப்பேன் நாட்டில் மக்கள் முன்னே அன்புதாண்டி
மதித்திடயாரும் தாயே துதித்திடப்பாரும்
சுருள்] மாருப்புகழுடன் நேராய் விளங்கிட
தாருயுன்னருள் காராயம்மணி

பரமர் கவி

உருவையே எண்ணம்போல உனக்கு நல்லாசித்தந்தேன்
அருவையே ருபம்மாற்றி ஆங்காரத்தொனியாம்காளி
தெருவையே இருக்கசாபம் தேன்மொழிவரமும்தந்தேன்
கிருபையே அழியாதென்றும் கீர்த்தியோடிருந்திடாயே

வசனம்

தேனும் உருவையே உலகம்க்களை திருத்த எழுபிள்ளைகளை விடுத்திருக்கிறேன் அந்தப்பிள்ளையில் ஒரு அம்ஸமாகிய கிரியா சத்தியே நீதான் உருவையாக அவதரித்தாய் எங்களின் சுடர் வடிவமாகிய சோதிதரிசனம் பட்ட மாத்திரத்திலே உன்ருபமாறி ஆங்காரத்தோடு காளியாக காட்சியளித்தாய் என்னிடமுள்ள சூலம் கபாலம் மான்மழு வேல் எல்லாம் உனக்களித்தேன் இனிமுதல் துஷ்டப் பரிபாலினியாக நிறைந்து துஷ்டர்களை வஞ்சித்து தேவர்மக்கள் இவர்களைக் காப்பாற்றி வருவாயம்மா

பொது வசனம்,

இவ்விதமாக பரமர் உருவைக்கு வரம்கொடுத்துவிட்டு கைலாயம் செல்லவும் உருவையானவள் தன்ருபம்மாறி காளியாக வருவது காண்கவும்:

காளி கவி

சத்திசிவன் அம்ஸத்தினுல் ருபம்மாறி
சராசரமும் நடுநடுங்க அகோரியாகி
வெத்தியுடன் பரமனிடம் வரமும் பெற்றேன்
வெங்கதிரோன் சுடரொளிபோல் வந்தநீலி
எத்திசையில் துஷ்டர்களை கருவறுப்பேன்
எழில்பெருகும் காற்சிலம்புமசைந்துஆட
கத்தியுடன் சூலம் பிண்டி கபாலங்கொண்டேன்
காளியிதோ கொலுவாக வருகின்றேனே

தரு

ஆதிசத்தியின் உருவைப்பெற்றவளாம் அகோரரூபி
ஆங்காரக்காளிப்பேரு முற்றவளாம்
அரனிடம் தபம்புரிந்து இன்றுமே
திறமுடன் வரம்பெற்றே நின்றுமே
திங்கள்சூடியோன்காண என்றுமே
கோரப்பார்வையும் நீண்டசடையிலங்க நீலிகபாலி
ஆரவாரமாய் வந்தேன், படைத்துலங்க
அதிரப்பூமியும் அண்டம்பொடிபட
மதியும் கதிருமே மனதும் துடிபட
பதியில் மக்களும் பயந்துமோடிட
பாலன்முனிசாமி பாடல் புகழ்பட

ஷை தரு

காந்தமகாரிஷியான சாந்தமுள்ள தந்தைதன்னை
காணவே மனமகிழ்ந்துமே சந்தோஷமாக
தோணவே தினம்புகழ்ந்துமே
காலினில் சதங்கைசத்தம் மேலணிப்பணிஜொலிக்க
காளியென்றும் பயந்தோடவே உலகமக்கள்
தாளிணைப்பணிந்துக்கூடவே

ஷை தரு

தந்தையே உன்பாதம் போற்றினேன் இருத்
தாளிணைப்பலமலர் சாற்றினேன்
சிந்தைக்களித்தின்று சிறப்புடன் காத்திடும்
உந்தன் மகிமையே உள்ளதைப் பார்த்திடும்

காந்தமகாரிஷி தரு

என்னையேமிரட்டாதே சத்தியே நான்
ஏகியே ஓடுறேன் முத்தியே
அன்னையே கண்பாரும் அம்மணி மிரட்டாதே

காளி தரு

ஓடாதே தந்தையே நில்லுமே மகன்
ஓங்காரக் காளிதான் சொல்லுமே
வாடாதே உன்குறை வந்தாலும் தீர்க்குறேன்
நாடாமல் எதிரிகள் நமன்பதி சேர்க்குறேன்

காந்தமகாரிஷி தரு

சிவனிடப் பூஜை முடிக்கவே அம்மா
சிறந்த திருமந்திரம் படிக்கவே
தவசிகளிடம் சென்று தான் நிஷ்டை முடித்துமே
புவனாதிகாரியேப் புறப் பட்டு வருகிறேன்

காளி தரு

எண்ணம்போல் சென்று தந்தையே நிஷ்டை
ஏகியே முடித்துவர எந்தையே
கண்ணுதலின் காட்சி கடைத் தேரும் மார்க்கமே
புண்ணியம் கிட்டுமே புகழன்பும் யார்க்குமே

காந்தமகாரிஷி கவி

உந்தனை தனியாய் விட்டு உருவையென் காளிதாயே
தந்தையும் நிஷ்டைசெய்ய தனித்து நானிருக்கும் காலை
எந்தனை மகிடன் வந்து ஏமாற்றி மிரட்டும் போது
அந்தநல் வேளைவந்தே அசுரனை மடிப்பாயம்மா

பொது வசனம்

இவ்விதமாக காளியிடத்தில் உத்திரவு பெற்றுக்கொண்டு காந்தமகாரிஷி நிஷ்டைப்புரிய வகையை நாடி செல்லவும் திருவேலங் காட்டில் வாசமாகிய மகுடாசூரன் சபாநாடி வருவது காண்கவும்

மகிடாசூரன் கவி

ஆதிமால் யாகந்தன்னில் அவதரித்தேன்
அவுணர்குலம் தழைத்திடவே புவியில்நின்றேன்
வாதிளனும் தேவர்களின் கோஷ்டந்தன்னை
வல்லமையின் வீரந்தன்னால் வெற்றிகொள்வேன்
நீதிமறைதவம்புரியும் ரிஷிகள் சித்தர்
நினைவினிலே பயங்கொண்டு ஏங்கிநிற்க

காதினிலோ குண்டலமும் அசைந்தாட
காளையைப்போல் மகிடனுமே வருகின்றேனே

தரு

ஆதிமாலவர் யாகந்தனில் பிறந்தேன் இந்த அகிலம்புகழ்பெற
அவுணர்குலம் தழைத்தோங்கிட நிறைந்தேன்
அண்டம்புவி யெட்டு திசையுமசைபட
அமரர் ரிஷிமனம் தினமும் துடிபட
கொண்டல்மேகமும் குவிந்துகூடிட
கோவிந்தன் திரு நாமம்பாடிட
அழியாபுகழுடன் சாகா வரமும் பெற்றேன் [அகோரஉருவாய்
அதிகபலமுடன் வலுவது முற்றேன்
அதிரமுரசுகள் டமரம் கொட்டிட
ஆழிதிரைகடல் அசைந்துவற்றிட
விதியும் மதிகதிர் விக்கி நின்றிட
விளங்கும் திருவேலங் காட்டிலோங்கிட

ஷை தரு

நிஷ்டைபுரிபவன் யாரடா இப்போ
நிமிர்ந்துயென் முகந்தன்னைப்பாரடா
கஷ்டமடையாமுன் காவலனே யெழுந்திரும்
காரணம் கூறடா கண்டிப்பேன் துண்டிப்பேன்

காந்தமகாரிஷி தரு

அப்புமாமதி அரவம் சூடிய அமலநாதனே
ஒப்பும் வேகத்தின் சோதியே ஒளிரும்பாதனே
மெய்ப்புரும் மடியார்க்கருளீந்திடும் ஞானபோதனே
செப்பரும் சிவலோக சாஸனம் அருளும்வேதனே
எப்போதுன்சேவை எனக்களிப்பீரோ கைலைநாதனே

மகிடாசுரன் தரு

கண்மூடி தவம்செய்யும் கண்டகன்யாரடா நில்லு நில்லு
மண்மூடியாகத்தை மதியாமல் செய்கின்றாய் சொல்லு சொல்லு

காந்தமகாரிஷி தரு

பயங்கரமாகுதே அம்மம்மா இப்போ
பாரெல்லாம் நடுங்குதே காரம்மா
ஜெயங்கொள்ளும்மாரியே ஜெகஜாலி நீலியே
ஜென்மம் கடைத்தேர செல்வியேன் சூலியே

மகிடாசுரன் தரு

ஜெகஜாலியேதடா பகைவனே ஓடாதே மூடா மூடா
அகங்கொண்டபேய்னே ஆணவமென்னடா கேடா கேடா

காந்தமகாரிஷி தரு

அய்யய்யோ பயமாகக் காணுதே இந்த
அரக்கன் யென்முன்னாலே தோணுதே
மெய்யும் நடுங்குதே மேன்மையும் செல்வியே
ஒய்யாரி சத்தியே ஓடிமுன் வருவாயே

காளி தரு

தந்தை பெரியகுரல் சத்தமே காதில்
தானுகேழ்க்குதே நித்தமே
எந்தவிதக்கேடு தந்தைக்கும் வந்ததோ
அந்தக்குறைதீர்க்க ஆங்காரி வந்தேனே

காந்தமகாரிஷி தரு

துரத்தியே வருகிறான் பாரம்மா — வரும்
துஷ்டனைக்கொன்றுநீக் காரம்மா
அறத்தைக்கெடுத்திடும் — அரக்கன் மகிடனை
ஆங்காரிக் கொல்லுவாய் — அவனியில் பெருமையாய்

காளி தரு

கொடுமைப்படுத்திடும் சூரனை — நரன்
கொல்லாமல் விடுவேனோ தீரனை — நான்
அடிமைப்படுத்தியே அடக்கியே — வைக்குறேன்
விடுவிடுதந்தையே வெட்டியே — மாய்க்குறேன்

மகிடாசூரன் தரு

வெட்டியே மாய்ப்பேனோ கள்ளியே — என்முன்
வேடிக்கைக்காட்டுறாய் துள்ளியே
அட்டியில்லையோடி அடித்துமே — வாட்டுவேன்
குட்டியே என்னிடம் குதிக்காதே — ஓட்டுவேன்

காளி தரு

வாட்டுவேனென்றுமே நீட்டிக்கைவீசுறாய் — நில்லடா
காட்டுக்குள் வசித்திடும் கசடனே நீபதில் — சொல்லடா
காரிகை என்றுமே — எண்ணாதே
காளியை கேலியும் — பண்ணாதே
வீரியம் ஒருபோதும் — குண்ணாதே
வீணனே விபரீத — மெண்ணாதே

மகிடாசூரன் தரு

எண்ணமெலென்னிடம் விண்ணணம்பேசுறாய் — யாரடி
மண்ணுலகாண்டிடும் மகிடசென்றறிந்தென்னைப் — பாரடி
மல்லுதில்லுகள் — செல்லாதே
மங்கையே உன்வலு — நில்லாதே
வெல்லலா மென்றுமே — சொல்லாதே
வெந்தணல் கர்வமும் — கொள்ளாதே

காளி தரு

கொள்ளைக்கொண்டிட உள்ளத்தில் நினைத்தேன் — எதடா
துள்ளியே துடிக்காதே வெள்ளத்திலோடுவாய் — நீதடா
துஷ்டரைமடித்திடு — நீலியே
துலைப்பேனே யெமன்பதி — சூலியே
அஷ்டாக்ஷரப்பொருள் — பாவியே
அன்பத்தோ ரக்ஷரக் — காளியே

மகிடாசூரன் கந்தார்த்தம்

அன்பத்தோரக்ஷரியாளென்று அறிந்ததால் சினமிகுத்தேன்
இன்பஉன்உரைநாள்பாழாய் இருக்கவும் புவியில்நீயே
தென்பதும் அழிந்துநாட்டில் தெருத்தெருவாய் நீரலைய
கன்மத்தின் வினையேகாண்பாய்

தரு

கட்டியே அடித்தேன் — காளியே உன்னை
சமுத்தையே பிடித்தேன்
வெட்டியெறியுமுன்னே — வேகமாய் ஓடிப்போடி
சுருள்] பட்டிமுண்டையே — விட்டுவிலகடி
எட்டி உதைப்பேண்டி — குட்டிக்காளியே

காளி தரு

ஆதிபராபரனே என்னை யாளும் தயாபரரனே
சோதிசுடர்வடிவே காரும் ஆதிபரம்முடிவே
சுருள்] சொல்லை நம்பியே எல்லைதன்னிலே
வல்லமகிடனால் தொல்லையானனே
காரும் காருமே விடை யேறிவாருமே
தாரும் சேவையே கண்ணால் பாரும் கிருபையே
சுருள்] தன்னந்தனிமையாய் வன்னகாட்டினில்
சின்னப்பின்னமாய் என்னைவாட்டுறான்
அந்திவண்ணனே ஆதி கமலக்கண்ணனே
சந்திரசேகரா என்முன் வந்துமேகாரா
சுருள்] சண்டன் மகிடனை கண்டுகொல்லநான்
அண்டர்பூமரி கொண்டு சாற்றவே

நாரதர் தரு

அழுதுபுலம்பியே ஓடாதே நீ
யாருக்கும் அஞ்சினி வாடதே
பழுதொன்றும் நேராது பாக்கியமடைகுவாய்
தொழுதக் குரல்கேட்டு தோகைமுன் வந்தேனே

காளி தரு

வந்தக்குருமுனி நில்லுமே எனக்கு
வழிகாட்டி பதிலொன்று சொல்லுமே
எந்தன் குறைதீர ஏகாந்தங் காட்டுவாய்
சிந்தைக் களித்திட சீர்புகழ் நாட்டுவாய்

நாரதர் கவி

வந்திட்ட மகிடன் தன்னை வாட்டியே கொல்வதற்கு
உந்தனின் எண்ணம் போல் உடன் வாளைக் கரத்திலேந்தி
அந்தமாய் அருகில் சென்று அரக்கனின் மகிடன் ரத்தம்
சிந்திடப் புசிப்பாயாகில் சீக்கிரமாள்வான் தானே

வசனம்

கேளும் தாயே பராசக்தி மகிடன் பலரூபமெடுப்பவன் ஆனால் அவனை உன்வாளாயுதத்தால் வெட்டி அவன் உதிரமானது பூமியில் விழாமற்படி நீகுடித்தாயாகில் அவன் உயிர் போகும் அதுசமயம் அவன் வயிற்றைக் கீரி படிகலிங்கத்தை யெடுத்துக் கொள்வாயாகில் மகிடன் மடிந்து விடுவான் உடனே தேவர்கள் எல்லாம் புஷ்பங்களை மழை பொழிவதுபோல் கொட்டுவார்கள் இதுதான் மர்மம் பிறகு வந்து சந்திக்கிறேன் தாயே

காளி தரு

கொல்லவும் உந்தனை வல்லமைக்காரியே அடா மகிடா சூரா
வெல்லவும் உந்தனைக் கொல்லவே வந்திட்டேனே
அடா மகிடா சூரா

மகிடாசூரன் தரு

கெட்டிக் காரியென்றும் குட்டியே துள்ளாதே அடியே காளி
வெட்டி யெறிகுவேன் திட்டமும் சொல்லாதே அடியே காளி

காளி கந்தார்த்தம்

அடிமுடியை காட்டாநின்ற அரன் தந்த வரத்தைபோல
படிமிசையில் காளியானேன் பார்த்தவர் பயமும் கொள்ள
முடியவே உந்தனவி மூண்டது மகிடா போடா
மடியவே இன்று நாளில்

தரு

மகிடனே உனைப் பிடித்தேன் சூலாயுதத்தால்
மடியவே தினம் மடித்தேன்
அகிலம் கிடுகிடென்ன அண்டர் மலர் வாரித் தூவ
மகிழ உதிரந் தன்னை மண்டியிட்டு நான் குடித்தேன்
மாறாதே கோபம் ஆறுலே
ஏறுதே வெறி தீருதே
சுருள்] எல்லை புகழ்காளி என்று நல்ல மனதோடுரைய
மெல்லியும் படிகலிங்கம் சொல்லியே எடுத்தேன்பாரும்

நாரதர் தரு

ஆனந்த சந்தோஷம் கொண்டேனே தயயே
அசுரன் மடிந்ததை கண்டேனே
மானங் காத்த தந்தை மகாரிஷி கோத்திரம்
தீனம் தயாபரன் திருவருள் சூஸ்திரம்

காளி தரு

துரத்தியே கடிப்பேனே நில்லடா பேய்
துன்மார்க்கா யென்னிடம் சொல்லடா
வரம் தந்த யீசனும் வந்தாலும் விடமாட்டேன்
கூரம் தட்டிக் கொட்டியே கடித்துமே குடிப்பேனே

நாரதர் தரு

வெறிப்பிடித்தலைகின்றாள் காளியே தேவா
விரட்டியே துரத்துறாள் கூவியே
அரியறன் பிர்மாதி அடியார்களொரு போதும்
தெரியறன் இருக்கவிம் நேர்ந்திடாதொரு போதும்

ாந்தமகாரிஷி தரு

மகளும் வெரிபிடித்தாடுறாள் சுவாமி
மார்க்கமின்றிக் கூத்தும் ஆடுறாள்
அகமெல்லாம் குருதியும் அலங்கோலமாகவே
சிகையாடி வருகின்றாள் சிவனிடம் கூறுவோம்

காளி தரு

ஆகாகா நீலுமே தந்தையே
அலங்கோலம் பார்த்திடும் விந்தையே
வீ ஙி கி ரத்தமும் ஊ கு கு ஓடாதே
ஓகோ: கோ விடமாட்டேன் ஓங்காரக் காளியே

பொது வசனம்

இவ்விதமாக மகிடாசுரனை மடித்து காளியானவள் உதிரத்தை குடிக்கவும் காளிகாதேவிக்கு வெரி பிடித்து தேவர்கள் எல்லோரையும் துரத்தவும் இதன் சேதி உரைக்கும் படியாக நாரதர் பரமரிடம் வருவது காண்கவும்

பரமர் தரு

சத்தியுமை தேவியாளே சாமுண்டியே கண்ணேசாமுண்டியே
சண்டாளியாயல் தேவரெல்லாம் வாரார் ஓடியே
சுருள்] சண்டிக்காளியால் அண்டதேவர்கள்
கண்டொடுங்கியே கொண்டார் பயமதும்

பார்வதி தரு

காளிக்கும் வெரி பிடிக்கவந்தகாலமோ மன்னு வந்தக்காலமோ
கஷ்டப்படதேவரெல்லாம் வாரூர் ஓடியே

சுருன்] காத்திடயிருவரும் கீரத்தியதாமே
பூர்த்தியாயவளிடப் புகழ் வரமாமே

நாரதர் தரு வேறு

தாத்தரவே உன்னிரு தாளினைப் போற்றினேன் காரும் காரும்
பார்த்தாலே காளியை பரிகாசம் செய்குவாய் நீரும் நீரும்

பரமர் தரு

என்னபாக்காரணம் ஏளினம் செய்கின்றாய் போரா போரா
தன்னை யின்னமெதன முன்னம் முறைப்பதில் கூரா கூரா

நாரதர் தரு

மகிடாசூரன் தன்னை மடித்துமே ரத்தத்தை பாட்டி பாட்டி
நனைத்துமே குடித்திட்டாள் நல்லக் கரமதை நீட்டி நீட்டி

பார்வதி தரு

ரத்தவெறி மோகம் பத்தியே தேவத்தை நீலி நீலி
சித்திரவதை செய்வாள் சித்தம் கடித்துமே சூலி சூலி

நாரதர் தரு

வீரபத்திரரை விட்டுமே அனுப்புவாய் வெல்ல வெல்ல
கோர ரூபியாளின் கொடுமையை நீக்கிட செல்ல செல்ல

பரமர் தரு

நாரதா ஓடியே கல முள்ளப் பாலனைக் கூட்டி கூட்டி
நேரதாய் காளியை நெட்டியே தள்ளுவாய் வாட்டி வாட்டி

பொது வசனம்

இவ்விதமாக காளியின் கோஷ்டத்தை யடக்க பரமர் உத்திரவின் படியே வீரபத்திரசுவாமி சபா நாடி வருவது காண்கவும்

வீரபத்திரர் கவி

தக்கனிட தவமழிக்க அகோரமாக
தரணிதனில் பரமனிட வியர்வை தன்னால்
திக்குள்ளோர்கள் போற்றிடவே மதலை யானேன்
திருக்கரத்தில் பிண்டிப் பாலா சூலம் தாங்கி
அக்கறையாய் தேவர்க்குறை தீர்க்க வேண்டி
அரக்கர் குல யெமனாக அவதரித்தேன்
வெக்கிடவே வீரபத்திரன் வருகின்றேனே

தரு

வீரபத்ர சுவாமியிதோ வந்தேன் என்னை
வேண்டியே தொழுகுமடியார்க்குவரம் தந்தேன்
கோரபற்களோடு மீசை முருக்கி
கொடியதோர் அரக்கர்தனை படியிலே நருக்கி
ஆரவாரங் கொண்டவீர திறன் இந்த
அவனிதிசை எட்டிலுமே புகழும் சிங்காரன்
தாரணியில் கொன்றையணி பரமன் சத்தி
தந்தளித்த புத்திரனாய் வந்துதித்த உக்கிரன்
யாரதில் புகழ் படைத்த வீரன் நல்ல
பத்திரைக் கேள்வனெனும் மாரனும் மெய்யாரன்

கவி

அருகினில் யேவல் செய்யும் அன்புள்ள கணங்களே கேள்
வரும் பழிதனையோக்கி வையத்தில் எனைப்படைத்தார்
பெருகிடும் துஷ்டர் கோஷ்டம் பெருகாமல் தடுக்கவேண்டி
குருமொழி தந்தைபாதம் குனிந்து முன் வணங்குவோமே

நாரதர் தரு
தந்தைக்கு சிறங்குனிந்த அந்தமுள்ள வீரப்பத்ர
வாருமே குறையை தீருமே
தீருமே உன்தந்தை குற்றம் நீருமுன்மனதும் வைத்தால்
ஓடுமே காளி யாடுமே

வீரபத்திரர் தரு
ஆடுமென்று யென்னிடத்தில் வேடிக்கையாய் கூறவந்தீர்
அறியவே சேதிப் புரியவே
புரியவே விபரம் சன்றாய் உரையும்மொழி தன்னைக்கான
சிந்தனை என்ன சிந்தனை

நாரதர் தரு
சிந்தனைகளொன்றுமில்லை தந்தையாலே நேர்ந்த விந்தை
கோரியே காளி சீரியே
சீரியே யெல்லோரின் ரத்தம் வாரியே குடிக்கவெரியும்
ஆச்சுதே மானம் போச்சுதே

வீரபத்திரர் தரு
போச்சுதென்று என்னிடத்தில் ஆச்சரியம் கொள்ளலாமா
காரணம் உதாரணம்
உதாரணத்தைக்காட்டுவீரே விதானமாக யென்னிடத்தில்
கூறுமே பதில் தாருமே

நாரதர் தரு
தாரும் பதில்கேட்டுநீயும் கூறும்காளியோடு சண்டை
போட்டுமே வெற்றி காட்டுமே
காட்டுவாய் எங்களின் முன்னே காளியாள் கொட்டமடக்க
செல்லுவோம் அவளை வெல்லுவோம்

வீரபத்திரர் கந்தார்த்தம்
மதங்கொண்ட காளிதன்னை மாநிலந்தன்னில் தானே
அதம்செய்துசிறைபிடித்து அரனிட சபையின்முன்னே
கதறவே செய்வேன் பாரும் கருத்துரைதந்தசுவாமி
பதனமாய் என்பின்னே வாரும்

தரு
பாரில்காளியாள் தன்னையே மதமடக்கி
பார்க்கசெய்குவேன் அன்னையே
வாரியேரத்தம்குடித்து வஞ்சின்யெடோளித்தன்னை
நேரில்சிறைப்பிடிப்பேன் காரும் முனிவரென்னை

காளி தரு
நல்லஇளங்காளையோடா மெல்லிக்குமிறை யானையோடா
சொல்லிசொல்லி ரத்தம் குடிப்பேன் வல்லியாளின்விவகாரம்தீர

வீரபத்திரர் தரு
ஓடியே வருபவள் சுவாமி வாரும்
ஒளிவதைப்பார்த்திடும் நேமி
வேடிக்கைக்காட்டுருள் வேஷங்கள் போட்டுமே
ஆடியேவருகுருள் அலங்கோலம் பட்டுமே

காளி தரு

எல்லே எங்கும் அலரிடவே ஏந்திழையாள் திரிசூலியும்
பொல்லாதவன் மூர்க்கமுண்டியான் போக்கிரியைக் கடித்தெறிவேன்

வீரபத்திரர் தரு

கெதையதை யெடுத்துமே சிதைத்திட மோதினேன் பாரடி
உதைப்படக்காலமே உந்தனுக்காச்சுது தேரடி
இன்னிடம் வருமெல்லாம் காட்டாதே
உக்ரபாரிவை யென்மேலோட்டாதே
கன்னியே ஆடிக்கை நீட்டாதே
கரமதால் சுத்திவைத் திட்டாதே

காளி தரு

ஆறடா போறவன் ஆறவா உன்
ஆங்காரம் என்னிடம் பேசாதே
கூறடா பயலே குருதியும் குடிக்கவே
பாரடா யிப்போதே பிரீதனில் அடிக்கவே

வீரபத்திரர் தரு

வீசிடும்ரம்பத்தை வெட்டியே யெறிகுவேன் நில்லடி
காசிக்காசையிட்டுக் காளிப்போல் நடித்தாயே சொல்லடி
கத்தியும் கலங்கிடும் நேரமே
கர்வம்பிசேரபி போர்மே
வெற்றியன்யருவேன் தீரமே
வெருங்களமாக்குவேன் வீரமே

காளி தரு

கொடிப்பெற்றக்காளியும் முடியத்திறமானேன் மூட்டனே
அடிப்பட்டுசாகவும் அம்பலங்காணதே கேட்டனே
அகோரக் காளி என்றுசொல்லுமே
அலறியே ஒடிப்போய் நில்லுமே
திகோ திகோ வென்ன செல்லுமே
திரிசூலி யென்னாணம் கொல்லுமே

வீரபத்திரர் தரு

வெறிப்பிடித்திட்டக் காளி வெகுண்டு யெனையடித்தாள்
மரியாதை யற்றுப்போனேன் தந்தையாரே
அறியாமை தனத்தால் யான் அடிபட்டு வீழ்ந்தேனே
அபயம் அபயம் காப்பாற்றும் தந்தையாரே

பொது வசனம்

இவ்விதமாக வெறிபிடித்தக் காளியிடம் வீரப்பத்திரசுவாமி சண்டை செய்து தோல்வியடைந்து புலம்பிக்கொண்டிருக்கும் சமயம் இதன் கருத்தை பரமர் இடம் நாரதர் கூறுவது காண்கவும்

நாரதர் தரு

தாமதம் செய்யாதே தாத்தா
தத்தளித்திடுமே பார்த்தா

மாமதங் கொண்டதோர் மாகாளியம்மையும்
மைந்தன் வீரப்பனை மடித்தாளைக் காட்டியும்

பார்வதி தரு

நீட்டிடும் காளியை நானே பேரா
நிமிஷத் திலடக்குறேன் தானே
வாட்டியே வதைக்குறேன் வஞ்சியாள் இரத்தை
நாட்டி லழிக்குறேன் நங்கையின் வீரத்தை

நாரதர் தரு

தாத்தாவே வேடிக்கைப் பார்க்கவே ஓடி
தனிமையாய் வருகுவாய் காக்கவே
ஆத்திரத்தோடும் அவளே துடிக்குறாள்
காத்திடும் தேவரை கண்டிப்பாய் மடிக்குறாள்

பரமர் தரு

துள்ளும் இடம் போதி சும்குமா இப்போ
துலைத்திட வருகிறேன் மாரிக்கம்மா
கொள்ளைக் கொள்ளக் காலன் கொஷ்டித் தேடிருக்குறான்
வெள்ளியம் பலனுலே வேண்டமென்றிருக்குறான்

காளி தரு (திரிபுடைசம்பை)

பேயாண்டிப் போலொருவனின்றே பேசியே வருகின்றானே
தீயக் குணமுள்ளோரன் ரத்தம் திரிசூலியும் குடிப்பேன் நன்றாய்
எந்தன் பசிதாகம் தீர வந்ததும் சந்தோஷமானேன்
பந்தப் பாசமற்றுப் போச்சே பார்தனிலே நான் திரிய

பரமர் தரு வேறு

வெறிப் பிடித்தாடும் காளியே இது
வேண்டாம் நிறுத்திடும் காளியே
சரியல்ல உலகுக்கு சங்கரிப் போக்கெடும்
மரியாதை வைத்துமே மக்களை காத்திடும்

காளி தரு

ஓகோ கேள் ஓடியே வந்தாயா என்
ஓங்காரம் தனைப்பார்க்க நொந்தாயா
ஆகா கா உதிரமும் அரிவை நான் தப்பாதே
அவனியில் குடிப்பேனே அகப்பட்டாய் இப்போதே

பரமர் தரு

வரம்தந்த ஈசரைப் பிரம்மா தேவர்
வாடியே வதைக்கின்றார் காரம்மா
திறம்மாறி இவ்வேட நிந்தைக்குள்ளாக்குறாய்
பரம்பொருளுரைத்தேனே பதஷ்டனே துள்ளுறாய்

காளி தரு வேறு

எடுத்தேன் வாளை வீசியெறிந்துமே
ஏகியே உதிரமும் குடித்திடவே
கடுத்த சின்முகத்துடன் உலகினில்
காளியென்னும் பயர்தேடிடவே
கருள்] கத்திக்கரம் குத்திக்கொண்டிட
வெற்றிப்பெற சத்திநின்றிட

பரமர் தரு

தந்தவரம்தன்னை மதியாமல்
தடுத்துவாளைவீசி யெதிர்த்து நின்றாய்
சந்திரசடாதரன் சூலமும்
தாக்கிட உன்மீதுப் போக்கும் நன்றாய்
சுருள்] தத்திகனை வெத்தித்தர
பத்தித்திரு முத்திப்பெர்

காளி தரு

சூலகபாலமும் வேலதும் பிளந்திட நாட்டினேன்
கோலமாரியுலகாளும் பரமனே ஓட்டினேன்
கொடுமைசெய்யவந்தாய் சூதடா
கொல்லுமே யென்கனை வாதடா
அடுமைசெய்வதும் ஏதடா
அருவையை ஜெயிப்பதும் நீதடா

பரமர் தரு

திட்டினக்கூர்மரம் பாய்ந்திடும் வாக்கியம் மெய்யடி,
நீட்டியக்கணைகளை வாட்டியே யெறிந்தே மெய்யடி
நீவியே உன்வலும் செல்லாதே
நீலக்கண்டனிடம் நில்லாதே
காலமும் கெட்டதும் பொல்லாதே
கணைகளும் யென்னையும் கொல்லாதே

காளி கந்தார்த்தம்

அப்பணிபரனே தேவா ஆணவம்கொண்டாய் நீயும்
முப்புரம் தனையெரித்த முக்கண்ணனென்று கெர்வம்
எப்போதும் கொள்ளவேண்டாம் எண்டோளி இடத்தில்வந்து
தப்பாக மாட்டிக்கொண்டாய்

தரு

தண்டிக்கவே வாளுமெடுத்தேன் அகோரகாளி
கண்டிக்கவே மேலும் விடுத்தேன்
அண்டர்முனிதேவர்களும் தென்னனிட்டுத்தாள்பணிய
கொண்டலிடித்தானதிர தண்டதரன் கண்டொடுங்க
கொட்டினேன் கரம் தட்டினேன்
வெட்டினேன் உனை வெட்டினேன்
நேரு நேரு பாரு பாரு கூறு கூறு வாரு வாரு

பரமர் தரு (புலம்பல்)

அண்டமுண்டவா முராரி கொண்டல்மேனியா
விண்டுமாயவா தினம் கண்டுகாக்கவா
சுருள்] விதியும் வினையதும் கதியும் போனதே
சதியும் காளியால் பதியிலாதே
கொடுமையாச்சுதே வரம் கெடுக்கலாச்சுதே
தொடுக்கப்பாணமே காளி விடுக்கலாச்சுதே
சுருள்] தொந்தரைதன்னை வந்துக்காருமே
எந்தன்குறைதனை முந்தித்தீருமே

நாரர் தரு

தாத்தாவே அழவேண்டாம் தைரியம்சொல்லுறேன் நில்லு நில்லு
பார்த்தாயா உன்மகன் வீரபத்திரனிடம் சொல்லு சொல்லு

வீரபத்திரர் தரு

தந்தையே இக்கோலம் வந்துசுமந்திட ஏனோ ஏனோ
இந்தக்கொடும்பழித் தாங்கிடலாமோ தானோ தானோ

நாரதர் தரு

திருமாலினிடம் சென்றுவருகிறேன் காத்திடதானேதானே
ஒருமனதாகவேக்காளியை வெல்லலாம் கோனே கோனே

பொது வசனம்

இவ்விதமாக பரமர்காளியிடம் சண்டையிட்டு தோல்வியுடன் வரவும் இதையறிந்த நாரதர் திருமாலிடம் சொல்ல வேண்டுமென்று வரவும் இப்பால் திருமால் கொலுவாக வருவது காண்கவும்

திருமால் கவி

மறைநான்கும் மகிழ்ந்தளிக்க மச்சமானேன்
மாய்கையினல் சோமுகனை மடித்து காத்தேன்
நுல்றதிரம்பக்கடலமிர்தம் கடைந்தமாயன்,
நுண்ணறிவும் மயங்க மோகினியாய் நின்றேன்
குறை பரிவும் வந்திடாம் மக்கள் சேவை
கொடுக்குந்திருச் செங்கலக் கண்ணனுதி
பறை தனக்கு சகோதரனை விளங்கும் வாமன்
பரந்தாமன் கொலுவாக வருகின்றேனே.

தரு

அச்சுதா. முகுந்தா நந்தன் தானே
சச்சிதானந்த சர்வேஸ்வரன் நானே
பச்சை திருமேனியன் பாகவதர்க்கன் பனுனேன்
லச்சை செய்த சோமுகனே மச்சமாகி கொன்ற மாயன்
சுருள்] நாரணனும் பரிப் பூரணன் கரியோன்
வாரணம் காத்த தாயபரனறியோன்
பஞ்சாயுதம் தரித்தக் கையன் பலபத்த கோடிகள்
சஞ்சல மகற்றும் திரு மெய்யன்
வஞ்சகமுள்ள ராவணன் வலுமைக் கண்டு ஒழித்தேன்
கெஞ்சிடப் பத்மாசுரனே கேலிசெய்துமே அழித்தேன்
சுருள்] கேஸவனுகிய நேசப் பீதாம்பரன்
தாஸருக் கருளிய வாசன் சக்ராயுதன்
வாமன ரூபமெடுத்து சென்றேன் மாபலியிடம்
வாங்கிடமன் தானங்கேட்டு நின்றேன்.
தாமதமின்றித் தருக தாரணி யளந்தப் பாதன்
மாமதங் கொண்டப்பலியின் மமதையழித்த சூதன்

அருள்] மதியும் சூழுலகினில்     துதிபெற மக்களும்
பதினைந்து அவதாரம்     படைத்த சிங்காரன்
நீல நிறக் கடலின் ஓரம்     பண்ணிதிட்டூர் வாசன்
நிந்தாஸ்த் துதிப்புகழ் சிங்காரம்
கோலம் தரும் புலவர்     கோவெனும் புகழ் பறக்க
பாலன் முனிசாமி கவி     பாடலெங்கும் சிறக்க
அருள்] பதும நாபன் வரம்     பார்தனில் தந்தேன்
மதுமலர் துளவணி     மார்பனும் வந்தேன்

கவி

மனதிற்கு இசைந்துனாவும் மாதவி சொல்லைக் கேளாய்
எனதுளம் இன்றுநாளில் என்னமோ பித்தனை போல்
நினைவதும் மாருதப்பா நீரண் தங்கை மாமன்
தனக்குதான் என்னவாச்சோ தயங்குதெனுள்ளந்தானே

நாரதர் தரு

அச்சுதா முராரி நந்தா     சச்சிதா நந்தப் பொருளே
அடியேன் பாதம் பணிந்தேன் காரும் காருமே     தாத்தா
கெடிபெறவே யெனக்கு புகழ் தாரும் தாருமே

திருமால் தரு

நாடெல்லாம் திரிந்துசென்று     வீடு வீடாய் கலகம் செய்யும்
நாரத முனியே நாட்டில் மேன்மையாகவே

நாரதர் தரு

பரமரும் காளியும்     தாத்தா     சண்டை
பரிகாசமாகுமே     பார்த்தா
வரம் தந்த யீசரும்     வாடியே தவிக்குறர்
வந்திடும் காக்கவே     வைகுந்த வாசரே

திருமால் தரு

சண்டையை விலக்கிட     போரா     நீயும்
கண்டோடி வந்தாயே     நேரா
அண்டர் புகழ் தேவர்     அலட்சியம் செய்வாரே
துண்டத்தனக் காளி     தூஷித்தும் வைவானே

நாரதர் தரு

பரமரைப் பரிகாசம் செய்யவே     மக்கள்
பார்த்து நகைத்துமே வையவே
புறங் கூறலாகுமா     புண்ணியா இப்போது
வெறிகொண்டாள் காளியும்     வேதனைத் தப்பாது

திருமால் தரு

திரிசூலி கபாலி காளி     வெறிப் பிடித்தலைந் தாலென்ன
நாரதா     எந்தன்     போரதா
அறிந்துரைத்தாய் என்னிடத்தில்     புரிந்தேன் நன்றாய் இந்தவேலை
ஏதுக்கு     வந்தாய்     வாதுக்கு

நாரதர் தரு

வாதுக்காய் நான் வரவில்லை பாதுகாக்க வேண்டும் தாத்தா
பாசமாய் விசு வாசமாய்
தீது யென்று எண்ணவேண்டாம் ஓதும்மொழிகேட்டு வாரும்
காக்கவே குறை தீர்க்கவே

திருமால் தரு

தீர்க்கமா சென்று வானும் பாருகுள்ளே பரமர் தன்னை
மீட்டிட துன்பம் ஓட்டிட
மார்க்கமாயுன் தந்தை பிரமா மகிழ்ந்து முன்னழைத்து வாருய்
நாரதா ஓடி சீரதா

நாரதர் தரு

தந்தையை கூட்டியே வாறேன் பரமர்
தாத்தாவை நீப் போய் பாரேன்
அந்தயிடம் சென்று அரனுக்கு உற்சாகம்
சிந்தை களிக்கச்செய் சீக்கிரம் வருகிறேன்

பொது வசனம்

இவ்விதமாக திருமாலை பரமரிடம் அனுப்பிவிட்டு நாரத முனிவர் பிர்மாவை காண வருவது

பிர்மா தரு

திருவேலக் காட்டிலே திகைத்துமே பரமரும் வாட வாட
வந்தியே தேவர்கள் வாக்கியம் முரைத்தாரே கூட கூட

நாரதர் தரு

தந்தையே உன்னிருத் தாளினை போற்றினேன் காரும் காரும்
சிந்தை களித்திட சிறப்புற ஆசியும் தாரும் தாரும்

பிர்மா தரு

சினத்தமுகத்தோடு எனைத்தேடி வந்ததை கூறும் கூறும்
கனத்தமொழியென்று கண்டுரைதந்திடும் நீரும் நீரும்

நாரதர் தரு

பரமர் திருமாலும் பார்தனில் காளியால் ஓட ஓட
திறமற்றுப்பூமியில் சிந்தைகலங்கினர் வாட வாட

பிர்மா தரு

காளியோடிருவரும் கஷ்டமதைந்திட ஏது ஏது
நாளினிலேர்ப்பட்ட கோளிகளென்னமோ ஓது ஓது

நாரதர் தரு

வெறிகொண்டு அலைகிருள் வேதாந்தக்காளியும் ஓடி ஓடி
தெருவில்போகும் மக்கள் துரத்தியே கடிக்கிருள் தேடி தேடி

பிர்மா தரு

இப்போதே காத்திட தாமல் செல்குவோம் நாடி நாடி
அப்பணி யீசன்திருமாலவரிடம் கூடி கூடி

பொது வசனம்

இவ்விதமாக பிர்மாவும் நாரதரும் வருவதைக்கண்டு பரமரும் திருமாலும் எதிர்நோக்கி அழைப்பது காண்கவும்

பரமர் தரு
பேரனே ஓடியே வந்திடும் சீக்கிரம் பார்க்க பார்க்க
கோரமானக்காளி கொடுமையை நீக்கியே காற்க காற்க

திருமால் தரு

சத்திப்பெரிதென்று வெத்திப்பெறக்காளி இன்று இன்று
கத்தியே அலைகிருள் காரியவெறிகொண்டு நின்று நின்று

வீரபத்திரர் தரு

பட்டத்துன்பம்போதும் பாவைக்காளியாலே மாமா மாமா
கட்டியேப் பிடித்திடக் காரணம் கூறுங்கள் பூமா பூமா

திருமால்

வந்திடும் பிர்மனே எந்தவிதமென்று கேளும் கேளும்
குந்தகம் நீக்கிடக் கூறுவார் விபரத்தை நாளும் நாளும்

வீரபத்திரர் தரு

மாமாக்காளிதன்னை மடக்கியே பிடித்திட நீரும் நீரும்
பூமா ஒருமாற்கம் புகலும்மொழிந்தந்துக் காரும் காரும்
பிர்மா தரு
மைந்தன் நாரதனே இந்நாள்கேட்டுமே பாற்க பாற்க

நாரதர் தரு
கும்பலாய் எல்லோரும் கூத்தாடிப்போலவே தாத்தா தாத்தா
நம்பவேஷம்போட்டு நாட்டில் நடித்திடப் பார்த்தா பார்த்தா

திருமால் தரு
பார்த்தால் நகைப்பாரே பாரினில் மக்களும் பேரா பேரா
தோத்திரம் செய்கின்ற தொண்டர்கள் நகைப்பாரே சீரா சீரா

நாரதர் தரு

வெறிகொண்ட காளியை வேண்டியே ஜெயித்திட வேஷம் வேஷம்
அரிப்பிர்மா யீசரும் ஆத்திரம்கொண்டாரே ரோஷம் ரோஷம்

எல்லோரும் பாடுதல் தரு

கூத்தாடிப்போல் வேஷம்போட்டோம் குற்றம் கண்டால் [விட்டுமாட்டோம்
பார்த்தவா சங்கீதம்பாட பரமன் திருநடனமாட
கீர்த்தியான காளியிடம் கிட்டியே ஜெயிக்கத்திடம்
தோத்தரித்தோம் பஜனைகேதம் தோல்வியில்லா வெற்றிப்ரசாதம்

காளி தரு

சூலமாட வேலுமாட சுருதிமறையு மாடவே
காலகாலன் தண்டுலாட கங்கைமதியு மாடவே
நீலகண்டன் நின்றுஆட நினைத்தப்பேர்களாடவே
பாலராட சிலராட பாரில் காளியாடவே

திருமால் தரு

ஆடும் சேதியானறிவேன் அருவையுந்தன் கூடவே
அம்பலத்தில் பந்தயமும் அடிமையென்றும் நாடவே
கூடும்தேவர் மூவர்பார்க்க குற்றம் நீக்கி யாடவே
குறையில்லாமல் பந்தயமும் குறித்துவைத்து ஆடவே

காளி தரு

எல்லைப்புகழ்கொண்ட மூவர் நடனம்
என்னோடு ஆடலாம் தேவரே
மெல்லியடிமையே மேதினில் பந்தயம்
சொல்லியே வைத்தேனே சோர்வென்று நித்தியம்

பிர்மா தரு

அரனோடுக் காளியே ஆடலாம் நல்ல
ஆனந்த சங்கீதம் பாடலாம்
திறமாக நாட்டியம் திருவேலங் காட்டிலே
உரங்கொண்டு ஆடியே உன்வலும நாட்டிலே

காளி தரு

மாலும் பிர்ம நாதியாட மங்கை காளி யாடவே
மறையுமாட திரையுமாட புகிழும் மக்களாடவே
காலும் சதங்கை கொஞ்சியாட கருத்தக் கூந்தலாடவே
காளி யடிமை யென்று ஆட கனிமுனிவராடவே

நாரதர் தரு

தாளம் கொட்டி நாதம் வீணை தரையில் தட்டியாடவே
தத்தி தத்தி யென்று மாட சதங்கைசத்தம் போடவே
மேளங் கொட்டி தொனியுங் காட்ட மெல்லி காளியாடவே
மேவும் தேவர் பரமன் சேவை மெய்யென்று கூத்தாடவே

காளி தரு

எதிரிஇல்லை எந்தனோடு எதிர்த்து ஆடக் கூடவே
எனக்கு ஜெயம் கொடுத்து வெற்றி எல்லாக் கும்பல் கூடவே
துதித்து அடிமை என்று ஆட தூய சிவனுமாடவே
துணைவராக திருமாலாட வேலும் சூல மாடவே

பரமர் தரு

நடனமாடினேன் திரு
நாரணனுடன் காரணப் பொருளான
அரனும் காளியோடு திரு
நாதம் முழங்கிட வேதம் மறையொலி நடன
கீதம் வழங்கிட மாது காளியுடன்
நத்தியே தாம் தாமென நிர்த்தன மாடிய பசுபதி நடன
தாம் தாம் தத்தரிகிட தகா தீம் தீம்
இத்தரிகிடதகா தீம் தா மென நடன
தளாங்குதக திமித்திங்கண தத்தரிகிதக தாம் தாம் நடன
தரிகிட கிடதக தாம் தரிகிட கிடதக தாம்
தத்தளாங்கு தக ளாங்கு தகதிங்கிண தோமென நடன
நடனமாடும் திருச்சபையில் நான்முகன் மத்தளக் கொட்ட
நாரத முனியும் வீணை நாரணனும் தாளம் தட்ட
கடலலைபோல் கீதம் நாதம் காணுவோர்கள் மனதிலெட்ட
காலைதூக்கி ஆடி நின்றேன் காளிகையினிடத்தில் கிட்ட

கவியுரை முனிசாமி கீதம்
புவியினுரையும் பிரசாதம்
தவசிகள் புகழ் பெறும் வேதம்
தளாங்குதக ததிங்கிண தோமென நடன

நாரதர் தரு

நன்றாக மெச்சினேன் தாத்தா உன்
நாட்டியம் கண்டவர் பார்த்தா
என்றும் விடாமலே எல்லோரும் தேடுவார்
கன்று மானேந்திய காத்திடும்

திருமால் தரு

காளியை காட்டடா வீரப்பா அந்த
கன்னியாள் நாட்டியம் பாரப்பா
நாளினில் விலங்கிடும் நல்ல இவ்வேளையே
காரணன் சொன்னனே நம்புமின்னாளையே

வீரப்பத்திரர் தரு

கால்கரம் விலங்கினைப் பூட்டியே மாமா
காளியை உன்னிடங் கூட்டியே
ஆல்போல் தழைத்திட அற நெறி ஓங்கவும்
அரன் வெற்றிப் பெற்றாரே அவஸ்த்தைகள் நீங்கவும்

காளி தரு

விலங்கிட்டாலென் குற்றம் மாறுமா வினை
வந்ததும் ஒருபோதும் தீருமா
துலங்கிட நாட்டினில் துளவணி திருமாலே
துயரத்தை மாற்றுவாய் துன்பமில்லாமலே

காந்தமகாரிஷி தரு

உங்களாசிர்வாதம் நாட்டிலே நான்
உடன் சேவைப் பெற்றேனே காட்டிலே
தங்கப்பாதசேவை தந்துமகிழ்ந்தாயே
எங்கள் குலமோங்க ஏகாந்தம் கொண்டாயே

நாரதர் தரு

உங்கள் குலதெய்வம் காளியே இனி
உள்ளத்தில் தொழுகுவாய் நீவியே
மங்களமாய்வாழ மகாராசிப்பாக்கியம்
திங்கள்போல் நாட்டினில் திரிகுவாள் வாக்கியம்

காளி தரு

என்னிட ஆயுதம் தந்தையே நீர்
எடுத்துமேக்கொள்ளுவாய் எந்தையே
மன்னுதிமன்னர்போல் மாநிலந்தன்னிலே
நன்னயமார்க்கமாய் நலமுடன் வாழ்குவாய்

பிர்மர் தரு

வீரப்பசுவாமிக்குத் தந்தையே காளி
விவாகம் செய்யலாம் யெந்தையே
பாறப்புவி சுமை பார்த்துமே இருவரும்
தீரயிக்காட்டினில் திருவருள் தருகுவோம்

பரமர் தரு

நல்லமுறைப்படி யாச்சுது காளிது
எல்லைபிடாரியாய் போச்சுது
வல்லவீரபத்திரன் வதுவையும் புரிந்திட
இல்லறமேற்கவும் இன்பநாள் தெரிந்திட

வீரபத்திரர் தரு

தந்தையே உன்னிஷ்டம் போலவே கொடிய
தையலை மணந்திட மேலவே
எந்தன் வினைப்பயன் எண்டோளி காளியை
அந்நேரர் போற்றவே அருமணம் செய்குவாய்

திருமால் தரு

தங்கை காளியாளே வாருமே காலில்
தரித்த விலங்கினைப் பாருமே
மங்களமணமாலை மகிழ்ந்துமே முடித்திட
தான் வீரபத்திரன் மனமதும் களித்திட

காந்தமகாரிஷி தரு

திருமூர்த்தி சேவையுங்கண்டேனே சுவாமி
தீரப் பேரானந்தங் கொண்டேனே
பெருமையாய் மகளுக்கு பேசியே மணமாலை
ஒருமையாய் செய்குவாய் ஓங்காரி காளியை

திருமால் தரு

கோவிந்தா என்றுலே காதமே ஜனம்
கொண்டாடும்வேளை நன்விதமே
சேவிக்கசெய்குறேன் செல்வியென்முன்னிலே

காந்தமகாரிஷி தரு

நல்லப்பெயரோடு செல்வியே நாட்டில்
நடத்தையும் நல்லதாய் கல்வியே
எல்லையதிகாரி என்றுமே மக்களும்
சொல்லியே போற்றுவார் சொற்குற்றம் காத்திடும்

நாரதர் தரு

உலகிலென்கலத்தின் போக்கு காளி
உண்டானவகையதை நோக்கு
இலகும் திருமணம் இப்போதே நன்றாக
துலங்கு வீரப்பற்கு துரிதமால் முடிக்கணும்

பரமர் தரு

கலியாணம் முடித்தேனே சந்தோஷமாக
கலியாணம் முடித்தேனே
கலியாணம் முடித்தேனே காளிகா தேவியற்கும்
கண்மணி வீரபத்திரன் கண்டுகளிப்பதற்கும்

திருமால் கவி

பெருமையுடனிருவருமே ஒன்றுகூடி
பேசும்மறை நான்கினிலே புகழ்கொண்டாட
வருமையின்றி சுகமுறவே வாழ்வுமோங்க
வண்ணமெழில் கவிப்புலவர் மகிழ்ந்துபோற்ற
ஒருமனமாய் ரிஷிகள்முனி தேவர் சித்தர்
ஒளிரும் திருதேவகணம் புடையும்சூழ
திருவேலங் காட்டிலே குடியிருப்பாய்
திங்கள் ரவி ஒளிபோல வாழ்தவாயே

சுபம்

பொது வசனம்

இவ்விதமாக காளியிடம் பரமர் நடனமாடி ஜெயித்துவீரப்பத்திர சுவாமிக்கு காளியை திருக்கல்யாணம் செய்து கொடுத்து திருவேலங் காட்டில் இருக்கும் படியாக உத்திரவிட்டு தேவர்கள் முதல் மூவரும் தங்கள் தங்கள் இதாஸ்தானமடையவும் இந்த நாடகத்தை ஆடினப் பேர்களும் பாடினப் பேர்களும் செவியூன்றிக் கேட்டப் பேர்களும் இதனை அச்சிட்டு வெளியிட்டோரும் சுகபோக சுகவாழ்வு அடைவர்களா வாழ்த்துகின்றோம்.

வாழி மாமறை வானவர் தேவரும்
வாழி மக்களும் வையகம் நான் மறை
வாழி தாயிழகம் வளர் கவிப் புரிவரும்
ஸ்ரீ வாணி விலாஸம் பிரஸ்ஸுமே
வீரப்பத்திர சுவாமி திருக்கல்யாண மென்னும்
பரமன் காளி சண்டை நாடகம்
முற்றிற்று.

வெற்றிவேல் அச்சகம் கடலூர்-2.

## எமது அடுத்த வெளியீடு.

தேவநகர். நாடக ஆசிரியர் R. ராஜகோபால்

இயற்றியது

## தக்ஷனின் யாகம்

சண்டை நாடகம் விலை ரூ. 1—50

---

பண்ணித்திட்டு V. J. முனுசாமியின்

## கற்புக்கரசி மகுத்தவமென்னும்

காலன் கர்வபங்க நாடகம்

விலை ரூ. 1—50

---

## துரியோதனன் கர்வபங்கமேனும்

கிருஷ்ணதூரன் சண்டை நாடகம்

விலை ரூ. 1—50

---


## மனைவியின் உயிரைக்கார்த்த-

## -காமசுந்தரன் எமதர்மன்

சண்டை நாடகம்

விலை ரூ. 1—50

# மகிடாசூர
# சம்மார நாடகம்



ஸ்ரீ சண்பகாதேவி அச்சகம்
நெ. 5, அருணாசலமுதலி தெருவு,
சௌகார்பேட்டை போஸ்டு, சென்னை-1.

உ

கடவுள் துணை

# பார்வதி இடபாகம் பெற்ற

# மகிடாசூர சம்மார நாடகம்

இது

கூடலூர் தாலூக்கா

செம்மங்குப்பம் சான்றோர்குலம்

ரா. சுப்பராய நாடார் அவர்கள் குமாரர்

**S. ஷண்முகம் உபாத்தியாயரால்**

இயற்றப்பட்டதை,

---

அமரம்பேடு. அ. அண்ணாமலை முதலியார்

சண்பகாதேவி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்] 1967 [விலை ரூ. 1

# ரிஜிஸ்டர் காபிரைட் அறிவிப்பு

இதனால் சகல அச்சுக்கூடத்ததிபர்கட்கும் மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில்:—ம-ா-ா-ஸ்ரீ, கூடலூர் தாலூக்கா செம்மங்குப்பம் சான்றோர்குலம் S. ஷண்முகம் உபாத்தியாயர் அவர்களால் இயற்றிய 'பார்வதி இடபாகம்பெற்ற மகிடாசுர சம்மார நாடகம்' ஆகிய இப்புத்தகத்தை, ஷெயாரிடம் யான் சர்வ சுதந்தரமும் பெற்று, அடியிற்கண்ட என்பேரால் ரிஜிஸ்டர் காபிரைட் செய்து அச்சிட்டு வெளிப்படுத்தி யுள்ளேன். ஆகையால் இப்புத்தகத்தை என்னுத்தரவின்றி யாரும் அச்சிடக்கூடாது என்பதைத் தெரியப்படுத்தி யிருக்கிறேன்.

இப்படிக்கு.

அ. அண்ணாமலை முதலியார்

5. அருணாசலமுதலி தெரு, சென்னை-1.

# சாற்றுக்கவி

கூடலூர் தாலூக்கா செம்மங்குப்பம்

தமிழ் வித்வான்

மு. கோபால்சாமி நாடார்வர்கள் இயற்றிய

நேரிசை ஆசிரியப்பா

கடல்புடை சூழுங் கார்பொழி நனந்தலை
பாரகப் பகுப்பாம் பற்பல வற்றுள்
சீர்பெருஞ் செந்தமிழ் சிவணிய தொண்டை
நாட்டின் தென்பால் நனிசிறந் தொளிருங்
கானலந் தண்டுறை கழிசூழ் காவும்
மீனினந் திரிதரு மேதகு வாவியுஞ்
சாலையுஞ் சோலையுஞ் செந்நெல் வயல்சூழ்
சீர்சால் செம்மங் குப்பம் வாழுஞ்
சான்றவர் குலத்துத் தமனிய வைப்பெனத்
தோன்றிய சண்முக நாடன் பாடிய
மகிடனைச் செற்றகௌ மாரியின் நாடகம்
புகழுடன் நிலவ வேண்டி
அகமகிழ்ந் தேற்ப ரவனி யோரே.

உ

பராசக்தி துணை

## பார்வதி இடபாகம் பெற்ற

# மகிடாசூர சம்மார நாடகம்

### விநாயகர் காப்பு விருத்தம்

சீர்நிறைந்த வெள்ளியம்பலந் தன்னில்
சிறந்தோங்கும் சிவபெருமான் திருவிழியை
ஏர்நிறைந்த உமையவளும் பரிசோதிக்க
இருகரத்தால் மூடியே சாபம்பெற்ற
பேர்நிறைந்த சரிதைதனை நாடகமாய்
பூவுலகில் யான்பாடி யுளம்மகிழ
பார்நிறைந்த குஞ்சரவன் திருவடியை
பத்தியுடன் யான்தொழுது வணங்கினேனே.

### கலைமகள் துதி

அத்தியையுரித்தணிந்த ஆண்டவன் திருவிழியை
சத்தியும்கரத்தால்மூடி சாபத்தைபெற்றுஇட
பத்தியாயிடபாகம்பெற்ற பரிவுள்ளசரிதைபாட
நித்தியக்கல்யாணி நின்றாள்போற்றினேனே.

### திருமால் துதி

ஆலையத்தையள்ளியுண்ட ஆதிசிவபெருமான்றன்
சீலமாய்திருமுகத்தை சத்தியும்தான்மறைத்து
சாலவேசாபம்பெற்ற சரிதையையான்பாட
மூலமென்றழைத்ததிரு மாலின்றாள்போற்றினேனே.

### பரமசிவன் துதி

அப்புமாமதியணிந்த ஆதியும்சோதியான
முப்புரம்எரித்தநாதா மூலமாயொடுங்கும்நீதா
கர்ப்புள்ளபார்வதிக்குக் கதிக்கஇடபாகந்தந்த
துப்புள்ளசரிதைபாட திருவடிபோற்றினேனே.



## தேவேந்திரன் வருகிற கவி

அவனிமுதலுலகுக்கெல்லாம் அதிபனாய்விளங்குந்தீரன்
நவரத்தினமிழைத்த நல்லதோர்மகுடம்பூண்டு
கவசகுண்டலங் காதினில்தகதகென்ன
தவமுனிதேவர்சூழ தேவேந்திரன்வருகின்றானே.

### தேவேந்திரன் தரு

எத்திசைதேவரெல்லாம் நத்திவணங்குந்தீரன்
இந்திரன்கொலுவதாகினன் பொன்னுலகத்தையாளும்
இந்திரன்கொலுவதாகினன்

அத்தியையுரித்தணிந்த ஆண்டவன்பாதந்தன்னை
சுருள் அந்தமாய்தினம் சிந்தையில்துதி
சுந்திரதீரன் பொன்னுலகபதி எத்

சென்னில்மணிமகுடம் உன்னிதபணிஜொலிக்க
கன்னிகடனமாதர் காரிழையர்களிக்க
சுருள் கவசகுண்டலங் காதினில்மின்ன
கரமதில்செங்கோல் பளபளவென்ன எத்

விண்ணோர்பூமாரிபெய்ய விருதுகொடிபறக்க
விந்தையுள்ளமேனகை மாதர்மிகநடிக்க
சுருள் வீணைகின்னரி தாளமுரசுடன்
வாத்தியம்பல நேர்த்தியாய்முழங்கிட எத்

நல்லதோர்மந்திரிமார் நீதிகளுரைத்திட
நற்றவமுனிவர்கள் ஆசிர்வதித்திட

சுருள் நலமிகும் வச்சிராயுததீரன்
கலைமுகஇந்தி ராணியின்மாரன் எத்

தேவேந்திரன் கவி

வந்தடிபணிந்துநின்ற மந்திரிமாரேகேளீர்
அந்தமாய்பொன்னுலோகம் ஆண்டுமேவருவதாலே
சுந்திரமுனிவர்தேவர் சீர்பெருஞ்சபையைநாடி
விந்தையாய்வந்ததாலே மன்னனும்மகிழ்கொண்டேன்.

வசனம்

ஆனால் கேளும் மந்திரிமார்களே! எந்தன் திருவடியைப் பணிந்தபடியால் சுகமாக வாழ்ந்திருப்பீர் மந்திரிமாரே.

தேசவிசாரணை தரு

மாதமும்மாரி மழைகளும்பொழிந்து
மானிலம்சுகந்தானு மந்திரி
பூதலம்சுகந்தானு

தேவாலயபூசை தினந்தினம்தவறுமல்
சரிவரநடக்கின்றதா மந்திரி
நெறியாய்நடக்கின்றதா

கற்பதுதவறாமல் கன்னியர்யாவரும்
கணவனைதொழுகின்றுரா மாத

தேவேந்திரன் கவி

அருமைஎன்மந்திரிமாரே ஆலயபூசையாகவும்
பெருமையாய்நடப்பதாலே புரவலன்மகிழ்கொண்டேன்
ஒருமையாய்முனிவர்தேவர் உத்தமர்சூழ்சபையில்
சுருதிகள்தன்னைப்பேசி சுகமுடன்வீற்றிருப்போம்.

வசனம்

ஆனல் கேளும் மந்திரிமார்களே! பூலோகத்திலுள்ள சிவாலயம் விஷ்ணுவாலயம் யாவும் பூசை சரிவர நடப்பதால் சந்தோஷங் கொண்டேன் கொலுவாக வீற்றிருப்போம் மந்திரிமாரே.

பொது வசனம்

அகோதெப்படியென்றுல் தேவேந்திரன் கொலுவாக வீற்றிருக்க நீலகிரியில் வாசமாகிய மகிடாசூரன் கொலுவாக வருகிற விதங் காண்க.

### மகிடாசூரன் வருகிற கவி

அண்டர்முனிதேவரெல்லாம் திகைத்துவாட
அழியாதவரமதை பெற்றதீரன்
திண்டோள்மணிமுடி யலங்கரித்து
திருமுகத்தில்வெண்ணீறும் பிரகாசிக்க
தண்டுகெதைவாள்சூலம் கரத்தில்தாங்கி
தக்கதோர்மந்திரி மார்கள்சூழ
மண்டலமும்விண்டலமும் கிடுகிடென்ன
மகிடாசூரனிதோ வருகின்றனே.

### மகிடாசூரன் தரு

அகிலங்கிடுகிடென்ன திகைத்துஅமரர்வாட
மகிடாசூரன்வந்தேன் திடமுள்ளதீரன்கெடியபெரும்சூரன்
மகிடாசூரன் வந்தேன்
திகழும்மணிமகுடம் சென்னில்தகதகென்ன
சுருள் தீரரும்சூரரும் வீரரும்சூழ
காரிழைதேவி கன்னியர்தாழ அகி
காரிடிபோல்முரசு பேரிகைமுழங்கிட
கரத்தில்தனுவும்ஏந்தியே கெம்பீரதீரன்சம்ப்ரமதாக
கரத்தில் தனுவும்ஏந்தியே
ஆரவாரமாய்சூர அரக்கரும்நெருங்கிட
சுருள் அந்தமாய்கவரி அரிவையர்வீச
மந்திரிமார்களும் விந்தையாய்ப்பேச அந்
மேருகிரியையொத்த மிகுந்தபுஜங்கள்ரெண்டும்
மின்னும்பணிஜொலிக்கவே கெம்பீரதீரன்சம்ப்ரமதாக
மின்னும் பணிஜொலிக்கவே
தீரன்கும்பன்மந்திரி நீதிகள்தானுரைக்க
சுருள் திக்குபாலர்கள் கண்டுமேவாட
மிக்கவேமன்னர் பயந்துமேயோட அந்
கத்திகட்டாரிசட்டி கனத்தபிண்டிபாலா
கரத்தில்தனுவும்ஏந்தியே சந்திரதீரன்சந்தோஷமாக
கரத்தில்தனுவும் ஏந்தியே
சத்தாசித்தானந்த சங்கரன்பிர்மன்தன்னை
சுருள் சாடேவெகெதையால் ஓடவேயடிப்பேன்
தேடியேசண்டன் தன்னையேயடிப்பேன் அந்

### மகிடாசூரன் கவி

மந்திரிகும்பாய்கேளாய் மாயவன்தேவர்தன்னை
சிந்தையுந்தான்கலங்க சிறையதாபிடிக்கவேண்டும்
விந்தையில்மிகுந்ததேவி மங்களவதியாள்மாதை
சந்திரனழைத்தேனென்று சீக்கிரம்கொண்டுவாரும்.

வசனம்

ஆனல் கேளும் மந்திரிமார்களே! தேவர்களை ; சிறைபிடிக்க வேண்டும் ஆதலால் என் தேவியாகிய மங்களவல்லியை அழைத்து வருவீர் மந்திரிமாரே.



மங்களவல்லி வருவது

விருத்தம்

மன்னவரழைத்தசேதி மங்கையாள்காதில்கேட்டு
உன்னிதபணிகளோடு உயர்ந்தமுத்தாரம்பூண்டு
சென்னியில்பிறைதரித்த சிவபிரான்பாதம்போற்றி
பன்னியேசேடிசூழ பாவையும்வருகின்றாளே.

தரு

பங்கையவதனந்துன்ன கங்கணவளையல்மின்ன
மங்களவல்லிஎன்னும் மாதுமேவாருள்
குங்குமகளபம்வீச நங்கையர்கவரிதூச
திங்களை பழித்தநல்ல சேயிழைவாருள்
காலினிலணிந்ததண்டை கலகலகலவென்ன
சேலைதகதகென்ன சேயிழைவாருள்
நெத்தியில்திலர்தம்சூட்டி நேர்த்தியானகொப்பும்மின்ன
புத்தியில்மிகுந்தநல்ல பூவையும்வாருள் பங்

மங்களவல்லி கவி

மன்னமன்னரெல்லாம் மணிமுடிதான்வணங்கும்
தென்னவூர்மதனைபோன்ற சுந்திரபிராணனுதா
உன்னிதபாரிஜாத உயர்ந்ததோர்மலரைகொண்டு
கன்னியாளுந்தன்திரு கழலடிபோற்றிசெய்தேன்.

வசனம்

ஆனுல் கேளும் பிராணபதியே! திவ்யபொற்பாத கமலங்கட்கு அடியாள் தீர்க்கவந்தனம் நாதா.

மகிடாசூரன் தரு

வந்தனம்செய்துநின்ற சுந்தரபசுங்கிளியே
பெண்ணே அடி கண்ணே
எந்தநாளுங்கீர்த்தியாக இவ்வுலகில்வாழ்ந்திருப்பாய்
மாதே நல்ல கோதே

மங்களவல்லி தரு

சுந்திரந்தனில்மிருந்த எந்தனிடபிராண திவ்ய
நாதா கேளும் நீதா
எந்தனையழைத்தசேதி சந்தேகமில்லாமலே
கூறும் நாதா நீரும்

மகிடாசூரன் தரு

கூறுமென்றுதானுரைத்த கொஞ்சுங்கிளிமாமயிலே
கேளும் பெண்ணே நாளும்
சீருடன்எந்தனேடு காரிழையேவீற்றிருப்பாய்
மானே அடி தேனே

மங்களவல்லி தரு

நல்லதுமன்னவரே வில்லைதகையிலேந்தி
நாதா மிக நீதா
வல்லமையாய்சண்டைசெய்ய எல்லைதாண்டிஎங்கேபோறீர்
சொல்லும் நாதா நில்லும்

மகிடாசூரன் கவி

கருத்தைதயுரைப்பேன் கன்னியேகேளாயிப்போ
அருந்தவமுனிவர்தேவர் அஷ்டதிக்குபாலரோடு
பெருத்தகோர்சண்டைசெய்து புரவலர்தன்னைவென்று
திரும்பியேவருகிறேன் தேவியேவிடையளிப்பாய்தானே.

வசனம்

ஆனுல் கேளும் பெண்ணே! அஷ்டதிக்குபாலகர் பிரமன் விஷ்ணு சிவன் இவர்களோடு எதிர்த்து யுத்தம்செய்து சிறை பிடிக்க போறேன் பெண்ணே.

மங்களவல்லி தரு

என்னுமதியுனக்குநாதா எந்தன்நாதா
இந்தபுத்திகொண்டீர்நீதா பிராணநாதா

உன்னிதபஞ்சணையில் கன்னியாள்எந்தனோடு
மன்னவாகூடியே இன்பங்கள் தந்திடு

மகிடாசூரன் தரு

இன்பங்கள் தந்திட்டேன் மானேபசுந்தேனே
இருப்பாய்அரண்மனையில் தானேமடமானே
உன்னிததேவலோகம் மன்னனும்சென்றுமே
பன்னியதேவரை பின்னஞ்செய்வேன்இன்றுமே இ

மங்களவல்லி தரு

தேவரைவதைக்காதே நாதாபிராணநாதா
தீங்கதுநேருமே நீதாபின்னால்தீதா
பாவிவாணசுரன் மதத்தாலேஅழிந்தானே
தாவிசெல்லவேண்டாம் தடுத்தேனேசுகந்தானே தே

மகிடாசூரன் கவி

தேவரைபகைத்திட்டால் தீங்கதுநேருமென்று
பாவிநீசொல்லவந்தாய் பழிகாரிஎட்டநில்லு
மேவியேஇந்திரனோடு மிக்கவேபோர்புரிந்து
தாவியேசிறைபிடித்து சனுதியாய்வருகுவேனே.

வசனம்

ஆனால் கேளும் பெண்ணே! தேவரை சிறைபிடித்தால் குற்றம் நேருமென்று சொல்லவந்தாய் என்முகத்தில் விழிக்கவேண்டாம் அப்புரஞ் செல்லடி பெண்ணே.

மகிடாசுரன் தரு

அண்டபுவனங்கிடுகிடென்றிடவே மகிடாசுரன்
அன்பாய்ரதத்திலேறிசென்றானே பொன்னுலகம்
பிண்டிபாலாகரத்தில் தாங்கியே கெதைவாளுடன்
சண்டைசெய்யதான்நடந்தானே மகிடாசுரன்
தேவர்மூவர்கண்டுவாடவே உலகம்சுற்றி
திக்குவிஜயம்செய்து வருவானேவிந்தையதாக
பொன்னுலோகந்தன்னைநாடியே மகிடாசுரன்
மண்ணுவின்னுமதிரவந்தானே-தந்தான தான அ

மகிடாசூரன் கவி

பொன்னுலோகஇந்திரனுக்கு பயந்துமேஏவல்செய்யும்
மன்னரேமந்திரிமாரே மகிடாசுரன்வந்தேன்
என்னிடதிருவடியை இந்திரன்பணிந்துகொள்ள
பண்ணுவீர்மந்திரிமாரே பாகமாய்இந்திரனுக்கே.

வசனம்

ஆனல் கேளும் மந்திரிமாரே! உங்கள் அரசனுகிய இந்திரனிடம் மகிடாசுரன் வந்தேனென்று வசனங்கூறி என் பாதத்தைப் பணிந்துகொள்ளச்சொல்வீர் மந்திரிமார்களே.

தேவேந்திரன் கவி

வரத்தினில்மிகுந்தோனென்று மனதினில்கெர்வங்கொண்டு
திரமையாய்சண்டைசெய்ய தீரன்நீவந்ததாலே
சிரமதுபணியமாட்டேன் தேவர்க்கதிபன்யானே
விரைவினில்சண்டைசெய்ய வீரனேவருகுவாயே.

வசனம்

ஆனல் கேளடா மகிடாசூரனே! உந்தன் திருவடியை யான் பணியமாட்டேன். வரத்தில் மிகுந்தவனென்று கெர்வங் கொள்ளாதே. சண்டைசெய்ய வாடா மகிடாசுரனே.

மகிடாசூரன் தரு

எந்தனை மதிக்காமல்இந்திரா கெர்வங்கொண்டுமே
எதிர்த்துவினையவாதுகள் பேசுருய்விண்டுமே
கந்துகம்போல வெகுண்டுமே
கரத்தில்கெதை யெடுத்தேன்கண்டுமே
அந்தகன்பதிக்கு யுன்னைபாரடா
அனுப்புவேன் இன்றுமேசீரடா எந்

தேவேந்திரன் தரு

வீரதீரங்கள்பேசுருய் மகிடாசுரனே
விட்டுவிடுவேனோஉந்தனை மடிக்காமல்தீரனே
விண்டலமுமண்டலமு மொடுங்கவே
வில்லதைஎடுத்தேனே நடுங்கவே
கண்டவர்பயந்தொடுங்க மீறியே
காலனைப்போல்வந்தேனே சீறியே வீர

மகிடாசூரன் தரு

உந்தனை விடுவேனே இந்திராசற்றுபாரடா
உம்பர்கோமானென்றுமே பேசுருய்மல்லடா
உறியவேயுன்படையை வாட்டுவேன்
ஓடாதேவீரதீரங் காட்டுவேன்
ஒருகோடிசரமதை பூட்டுவேன்
ஓங்கியேகொடியதை நாட்டுவேன் உந்

தேவேந்திரன் தரு

வச்சுராயுதமெடுத்து விடுத்தேன்பாரடா
வீரிடசிரமதையறுக்கிறேன் இன்றுசீரடா

வானவரும்தானவரும் நடுங்கவே
வருஷித்தேன்கணைகளை ஒடுங்கவே
வாடாதேபதி யோடாதே
ஓடாதேசும்மா விடாதே வச்

மகிடாசூரன் கந்தார்த்தம்

சுந்திர அகலிகையை சேர்ந்திடஎண்ணங்கொண்டு
பந்தமாய்கோழியாக பாதியிரவில்கூவிநீயும்
அந்தமுள்ளகௌதமரால் ஆயிரம்யோனியாக
இந்திராசாபம்பெற்றாய்,

தரு

எதிர்த்துமேவாடா அமர்செய்ய
குதிக்காதேமூடா
வதைக்குறேனுந்தனை பதைக்கவேஇன்றுமே
கதிக்கவேபேசுறாய் பதிக்குள்ளேநின்றுமே எதி

தேவேந்திரன் கந்தார்த்தம்

எருமைகிடாமுகம்வாய்ந்த இந்ததோர்சூரன்தன்னை
திரிமூர்த்திதேவரானும் செயித்திடாவரத்தைப்பெற்றான்
சரிசரிஇவனோடுஇனி சண்டையும்செய்யொண்ணாது
தெரியாமல்மேகத்தில்,

தரு

தேவனும்ஓடிமறைந்தேன் சண்டைசெய்யாமல்
தாவிபயந்துஒளிந்தேன்
பாவிஅசுரன்கண்டால் ஆவியைபோக்குவான்
மேவியேஆகாயம் தாவியேஓடினேன் தே

மகிடாசூரன் கவி

என்னோடுசண்டைசெய்ய இந்திரனால்முடியாமல்
மன்னியேமேகத்தில் மன்னனும்போய்மறைந்தான்
பன்னியேயுலகத்தை படைத்திடும்பிரமன்தன்னை
அன்னவன்தன்னைநாடி அமரதுசெய்குவேனே.

வசனம்

ஆனால் கேளுங்கள் மந்திரிமார்களே! தேவேந்திரன் சண்டை செய்யமுடியாமல் ஓடிவிட்டான். சத்தியலோகம்சென்று பிரமனை புரமுதுகிட்டோட அடிப்போம் மந்திரிமாரே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் தேவேந்திரன் தோல்வியடைந்த பின்பு மகிடாசூரன் சத்தியலோக பிரமனை நாடி வருகின்றபோது பிரமதேவன் கொலுவைநாடி வருகிறவிதங் காண்க.



## பிரமன் வருகிற விருத்தம

திறைகடலுலகிலுள்ள சீவனைபடைத்துகாக்கும்
மறையவன் தானெழுந்து மணிமுடியலங்கரித்து
கறைகாணுவேதமோங்கும் கலைவாணியருகில்சூழ
வறைதனைஎடுத்தோன்மைந்தன் வேதனும்வருகின்றானே.

### பிரமதேவன் தரு

ஜீவஜெந்துக்கள் தன்னை சிருஷ்டிக்கும்கர்த்தனை
சதுர்முகதேவனும்வாறேன் கொலுவைநாடி
சகலதேவரும்சூழவே ஜீவ

சென்னியில்மணிமகுடம் சித்திரபுஜங்கள்துன்ன
சேயிழையர்ஆலம்ஏந்தவே சதுர்முகதேவன்
சம்ப்ரமுடன் கொலுவதாகினான் ஜீவ

அகிலத்தோர்கண்டுவாட அன்னவாகனமேறி
அன்புடனேவந்துமேவினான் சதுர்முகதேவன்
அமைச்சர்கள் அடிபணியவே ஜீவ

கல்விக்கரசியான கமலக்கோதையர்சூழ
கன்னவில்மதனைப்போலவே சதுர்முகதேவன்
கனகசபை நாடிவாரானே ஜீவ

### பிரமன் கடவுள்துதி-தேவாரம்

கங்கைவார்சடையாய்போற்றி கருணையங்கடலேபோற்றி
மங்கையைசிரைமீட்கொண்ட மான்மழுதரித்தாய்போற்றி
துங்கவெள்ரிஷபமேரும் துளிர்மதியணிந்தாய்போற்றி
அங்கையற்கண்ணிநாதா அடிதனைபோற்றிபோற்றி.

வசனம்

சம்போ சங்கரா மகாதேவா காலகண்டா திருநேத்திரா சோதிசொரூபனே எனை யாட்கொள்வாய் கருணையங்கடலே.

மகிடாசூரன் தரு

சத்தியலோகந்தன்னைநாடியே மகிடாசூரன்
எத்திசையும்நடுங்கவாரானே வேகமாக
வேதன்தனைசிறைபிடித்துமே இன்றையநாளில்
வேதன்கெர்வமதனையடக்குறேன் தேவர்வணங்க
தேவலோகந்தனைகடந்துமே சத்தியலோகம்
சூரனும்வந்துசேர்ந்தானே விந்தையதாக சத்

மகிடாசூரன் கவி

ஆரடாஏவல்செய்யும் அமைச்சரேசொல்வேன்கேளீர்
சீரடாமகிடாசூர சுந்திரன்வந்தேனென்று
பேரடாபிரமனுக்கு பிரியமாய்தானுரைத்து
நேரடாஎன்பாதத்தை நாடியேபணியச்சொல்வாய்.

வசனம்.

ஆனல் கேளடா மந்திரிமார்களே! மகிடாசூரன் வந்தேனென்று பிரமனுக்குரைத்து என்பாதத்தை பணிந்துகொள்ளச் சொல்லடா மந்திரிமார்களே.

பிரமன் கவி

எருமைமுகம்வாய்ந்த இழிகுலஅசுராகேளாய்
ஒருமையாயுன்பாதத்தை உத்தமன்பணியமாட்டேன்
பெருமையாயுலகந்தன்னை படைத்திடும்பிரமன்எந்தன்
திருவடிதனைபணிந்து செல்லுவாய்அசுராநீதான்.

வசனம்

ஆனல் கேளடா மகிடாசூரனே! உன்பாதத்தை நான் பணிய மாட்டேன் செல்லடா மகிடாசூரனே.

மகிடாசூரன் தரு

பாதம்பணியாதபிரமனே சற்றுநில்லடா
பார்க்குறேன்உந்தன்சாமர்த்தியந்தன்னை புல்லடா

பாணத்தைகைதனில் எடுத்தேனே
பாராய்தூபதீபங் கொடுத்தேனே
பண்ணவமுனிவரெல்லாங் கண்டுமதிமயங்க
பாணத்தைவிட்டேனே யுலகமாந்தர்தியங்க பாத

பிரமன் தரு

உலகத்தைபடைத்துகார்க்கும் வேதனென்றறியாமல்
சிலைதனைவளைத்துபாணத்தை விட்டால்தெறியாமல்,
சிறிஎழுந்துவில்லை வளைத்தேதனே
சிங்கமுகபாணங்களை தொடுத்தேதனே
வீரியம்பேசி ஓடாதேசூரனே
விடுவேனோயுந்தனை நமன்பதிசேர்ப்பேனே

மகிடாசூரன் தரு

வேதனேயுன்னைவிட்டு போவேனோபாரடா
வெகுண்டுசிங்கம்போல்வந்து எதிர்த்தேதன்நேரடா
விண்டலமும்மண்டல மும்பொடிபடவே
விட்டேன்பாணத்தை இடிபடவே
வேதனேயுந்தன் சூதுகளறிவேனே
விண்டலத்திலொளிக்காதே கண்டதுண்டம்செய்வேனே

பிரமன் தரு

கண்டதுண்டஞ்செய்வே னென்றமகிடவே
உண்டோஎந்தனைசெயிப் பவருலகில்கேடனே
உந்தனைப்படைத்த பிரமனடா
ஒளியாமல்சண்டை செய்வாய்தானடா
அந்தகன்பதிக்குஇப்போ அரைநொடிதன்னிலே
அனுப்புவனுந்தனை பாரடாமுன்னிலே க

மகிடாசூரன் கந்தார்த்தம்

அரனிட்முடியைகாண ஐயனேநீயன்னமாகி,
பரந்தாயேபிலமாய்நீயும் பையவேமெய்யும்சோர்ந்து
உரகணிஈசன்முடி உண்மையாய்கண்டேனென்று
திரமுடன்பொய்யுரைத்த,

தரு

தீரனேவர்டா சண்டைசெய்ய
தியங்காமல்அடா
பாரினில்ஆலயம் பாவிஉனக்கேது
பாதகனேவீணாய் பேசுராயேதீது

பிரமன் கந்தார்த்த கவி

வரமனதபெற்றதால்சூரன் வாட்டுறான்தேவர்தன்னை
எரிமழுமானேந்தும் ஈசனைகைலைவாசா
அரக்கனோடுசண்டை அயனுமேசெய்வேனாகில்
சிறைய்துபிடித்துக்கொண்டு,

தரு

செல்லுவான்போல்தோணுதே எந்தனிட
சிந்தைகலங்கிவாடுதே
மல்லதுசெய்யாமல் மகிடனுக்கும்பயந்து
மாயமாயுலகத்தில் மறைந்தேனோபயந்து செ

மகிடாசூரன் கவி

என்னோடுசண்டைசெய்ய ஏலாமல்வேதந்தானும்
மன்னியேமாயமாக மறைந்துமேஒளித்தான்பாவி
புன்னகைஜயனன்பதி பாங்குடன்தானுஞ்சென்று
அன்புடன்விஷ்ணுவோடு அமரதுசெய்குவேனே.

வசனம்

ஆனால் கேளடா மந்திரிமார்களே! பிரமன் எந்தனோடு சண்டை செய்ய பயந்து ஒளித்துக்கொண்டான் வைகுந்தம் செல்லவேண்டும் மந்திரிமாரே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் சூரன் பிரமதேவனை ஜெயித்து வைகுந்தம் நாடிவர திருமால் கொலுவாக வருவது.



திருமால் வருகிற கவி

மண்ணுவிண்ணு மூன்றடியாய் தானளந்து
மாபலியின் கெர்வமதை யடக்கிவைத்தேன்
குண்ணவே இரணியனை நரசிங்கமாய்
கற்றாணில் உதித்துமே கிழித்தனன்

வண்ணமுள்ள தசரதற்கு சுதனுய்தோன்றி
வீரமுள்ள ராவணனை கொன்றநீதன்
விண்ணிலோர் மனமகிழ்ந்து பூசொரிய
விஷ்ணுவும் கொலுவாக வருகின்றாரே.

திருமால் தரு

வந்தார்வைகுந்தவாசுதேவர் திரு
மூவரிலொரு தேவனுய்வந்த
சுந்திரம்மிகுந்த பரந்தாமன்

சிந்தைதம்கிகூியாக தேவர் பூமாரிபெய்ய
அந்தமுள்ளபக்தர் அடிபணிந்துஉய்ய
ஆரியர்பாட மாதர் கௌரிகள்போட

சுருள் அதிபலகெருட வாகனம்ஏறி
அன்பருக்கருள் தந்தமுராஹரி வா

அதிகபலம்படைத்ததீரன் ஆயிரத்தெட்டு
அண்டத்தையாண்ட இரண்யவீரன்
உதித்துகற்றூணில் குதித்துநரசிங்கமாய்

மிதித்துஇரணியனை கிழித்துளமனிட
பதிக்குமேசேர்த்தேன் தேவர் பயமதைதீர்த்தேன்

சுருள் பாலன்பிரக லாதனை கார்த்தேன்
பத்தர்சித்தருக்கு முத்தியையளித்தேன் வந்

மாபலிவாணசூரன் தன்னை தானம்கேட்க
வாமவதாரங்கொண்டேன்முன்னே

தாவியேமூன்றடிமண் தானமாகவாங்கி
தியங்கிடமாபலி சிரசைமிதித்தேன் ஓங்கி
தேவர்கள்கூடி அமிர்தம் கடையவேநாடி

சுருள் சுந்தரமோகினி ரூபமும்எடுத்தேன்
அந்தமாய்தீர அசுரரைமடித்தேன் வந்

கம்சன்தனைமடித்தநேயன் ஆயர்பாடியில்
கன்னிகோபியர் தயிர்பால்வெண்ணை
இன்பமாக யுண்டமாயன்

அம்புவிதன்னில்செம்மங் குப்பம்நகரில்வாசன்
அனுதினந்துதிசெய்யும் அன்பன்ஷண்முகதாசன்
அருங்கவிபாட வரம் அளித்தேனேதேட

சுருள் அன்புடன்மார்பில் லட்சுமிதரித்தேன்
ஆழியைதாங்கி கரமதில்பிடித்தேன் வந்

திருமால் கவி

திருவடிபணிந்துநின்ற துவாரக்பாலா கேளும்
பெருமையாயுலகந்தன்னில் பலகோடிகாலம்வாழ்வாய்
அருந்தவபக்தர்சித்தர் அனைவரும்சூழ்மிந்த
திருவோங்கும்வைகுந்தத்தில் திருமாலும்வீற்றிட்டேனே.

வசனம்

ஆனால் கேளும் துவாரகையில் காவல் காக்கும் காவலனே சுகமாக வாழ்குவாய் கொலுவாக இருக்கின்றேனடா மாதவா.

மகிடாசுரன் தரு

வைகுந்தம்தன்னை நாடியே மகிடாசூரன்
வாரான் திருமால்தன்னை தேடியேவேகமாக
அண்டபுவனம்தானடுங்கவே ரதத்திலேறி
அடித்துபுரவியைதட்டிவாரானே மகிடாசூரன்
காடுசெடிமலைகள்தாண்டியே விந்தியதாக
கண்ணன்பதிவந்துசேர்ந்தானே மகிடாசூரன் வை.

மகிடாசூரன் கவி

அந்தமாய்காவல்செய்யும் அதிபலஏவல்காரா
விந்தியாமகிடாசூர வீரனும்வந்தேனென்று
சுந்திரதிருமாலுக்குசேதிகள் தானுரைத்து
எந்தனைபணிந்துகொள்ள ஏகியேவரச்செய்வாயே.

வசனம்

ஆனால் கேளும் வைகுந்தத்தில் காவல்புரியும் ஏவலாளிகளே! மகிடாசூரன் வந்தேனென்று திருமாலுக்குரைத்து என்பாதத்தை பணிந்துகொள்ள சொல்வாய் சேவகனே.

திருமால் கவி

சிரமதைவணங்குமென்று சிந்தையில்பயமில்லாமல்
கரமுடன்சொல்லவந்த கசடனேகேளடாநீ
திரமுடனுன்னைப்போல்இன்னம் சூரர்கள்வந்தபோதும்
ஹரிநான்வணங்கமாட்டேன் அப்புறஞ்செல்வாய்நீயே.

வசனம்

ஆனால் கேளடா மகிடாசூரனே! கடவுள் என்று பயமில்லாமல் படிக்கு உந்தன் திருவடியை பணியும்படி சொன்னாயே இன்னும் உன்னைப்போல் அனேகசூரன் வந்தபோதும் சிரம்வணங்கமாட்டேன் செல்லடா அசுரனே.

மகிடாசூரன் தரு

உந்தன்சமர்த்தையே பார்க்குறேன் இன்று
இந்தவைகுந்தத்தை யழிக்குறேன்
எந்தனேடுசண்டை எடுத்துமேசெய்யவே
எழுந்துவருகுவாய் பரந்தாமாஉய்யவே உ

திருமால் தரு

எருமைமுகம்வாய்ந்தசூரனே வீணய்
கெர்வங்கொள்ளாதேதீரனே
திருமால்என்று சிந்தையிலெண்ணுமல்
பெருஞ்சண்டைசெய்யவே பேசுருய்குண்ணுமல் எ

மகிடாசூரன் தரு

பரந்தாமாஉன்சேதி தெரிகுவேன் எனக்கு
பயந்துஓடாதேநில்லு அறிகுவேன்
திறமையுனக்கேது செயித்திடஎந்தனை
கரமதில்கோதண்டம் கொண்டாயேசிந்தனை ப

திருமால் தரு

ஏதடாகெர்வங்கொண்டுமே அமருக்கு
இழுக்குருய்எந்தனைவந்துமே
வாதானஅரக்கரை வதைக்கஏமனுக
சீதரனுதித்தேனே சொல்லவந்தாயேநோக ஏ

மகிடாசூரன் கந்தார்த்தம்

அரக்கர்களைகருவறுக்க உதித்தேனென்று
ஆலிலைமேற்பள்ளிகொண்ட வண்ணுகேளாய்
திறமையில்லாஇரணியன் றனைமடித்தாய்
தெரிகுவேன்உன்வீரம் நில்லுநில்லு
மரலியும்எனைக்கண்டால் பயந்தொளிப்பான்
மாதவமுனிவர் தேவர்கண்டொளிப்பார்
கிரிதனைகுடைபிடித்த மாய,

தரு

கண்ணனேவாரும் அமர்செய்ய
வண்ணனேநீரும்
விண்ணுலோகமதில் மாய்கையாய்மறைந்தாலும்
சண்டன்நமன்பதி கொண்டுசேர்ப்பேனே

திருமால் கந்தார்த்தம்

முன்னளில்வரமுனியாய் அவதரித்து
மகிமையுள்ளஅகஸ்தியரை ரமதியாதாலே

அன்னவரின்சாபத்தால் அசுரனுனன்.
ஆதலாலிவனைகொல்ல முடிந்திடாது
இன்னுனில்பார்வதியும் தவமேசெய்ய
ஈசனைவிட்டருணையம் பதிக்குபோமுள்
கன்னியால்மடியவே போமுனென்று,

தரு

கண்டுமேதெரிந்தேன் இவனுயுள்
கணக்கதையறிந்தேன்
சண்டையும்இவனோடு செய்யவேமுடியாது
அண்டத்தில்மாய்கையாய் ஒளித்தாலேதெரியாது

பொது வசனம்

அகோதெப்படியென்முல் மகிடாசூரன் தேவர்களை அதம் செய்து நீலகிரிக்குச்செல்ல பரமசிவன் கொலுவைநாடி வருகிற விதங் காண்க.

பரமசிவன் வருகிற கவி

சோதியும்சுடரொளியாய் நின்றநாதன்
சுத்தமெய்ஞ்ஞானியாய் துலங்குமீதன்
வேதனைசிரமதை கொய்தோன்மிக்க
வீரிடமுயலகனை மிதித்தபாதன்
நீதியாய்பூசைசெய்த மார்க்கண்டனுக்காய்
நமன் தன்னைப்பாசத்தாலுதைத்தநாதன்
பாதிமாமதிதன்னை சிரமணிந்த
பரமனும்கொலுவாக வருகின்றுரே.

பரமசிவன் தரு

பாதிமதியணிந்த சோதிசொரூபனுன
பரமசிவனும்வந்தனர் கைலாசநாதர்
பரமசிவனும்வந்தனர்

பூதலந்தன்னிலுள்ள பலஜீவஜந்துகட்கும்
படியளந்துஉலகம் படைத்துகார்க்கும்நாதன்
சுருள் பண்ணவமுனிவர்கள் போற்றியேதாழ
வண்ணமாய்தேவர் வந்தடிசூழ பாதி
தவமதில்சிறந்த தாருகாரிஷிபத்னி
தையல்கற்பையழித்தேன் பிச்சாண்டியாகி
தவமுனியாகத்தை யொழித்தேன்

கவசகுண்டலம்மிக்க காதில்தகதகென்ன
கற்றிடுமடியவர் சுற்றியருகில்பன்ன
சுருள் காலனைபூமியில் கவர்ந்திடவுதைத்தேன்
பாலன்மார்க்கண் டனைகார்த்தேன் பாதி

திரிபுரத்தை எரிக்க மேருகிரி தன்னை
சிலையாய்வளைத்துப்பிடித்தேன் முப்புர
சூரர் தன்னை எரித்தேன்

கரத்தில்மான்மழு கபாலம்மிகஇலங்க
கங்கையுஞ்சடையில் திங்கள்மிகதுலங்க
சுருள் காரிழைநில்லே காளியைஜெயித்தேன்
வீரிடமுயலகா சூரனைமிதித்தேன் பாதி

மாலயன் தேடிபடி முடிதன்னைகாணமல்
மலையாய்ஓங்கியேவளர்ந்தேன் சோதிசொரூப
களங்கமில்லாமல் நிறைந்தேன்

ஆலவிஷத்தையள்ளி பாலமுர்தம்போ லுண்டேன்
பாலன்ஷண்முகம்கவி பாடவரமுந்தந்தேன்
சுருள் பாசமாய்பூத கணங்களும்சூழ
நேசமாய்மிகுந்த நந்தியும்தாழ பாதி

## பரமசிவன் விருத்தம்

வந்தனம்செய்துநின்ற விந்தைசேர்நந்திகேளாய்
விந்தையாயுலகந்தன்னில் வெகுகோடிகாலம்வாழ்வாய்
சிந்தையிலோரெண்ணங்கொண்டேன் தேவியாள்தனக்குரைக்க
சுந்திரபார்வதியை சீக்கிரமழைத்துவாரும்.

## வசனம்

ஆனல் கேளும் நந்தியே! என் பாதத்தைப் பணிந்தபடியால் அநேககாலம் சுகமாக வாழ்குவாய். பார்வதியை சீக்கிரம் அழைத்து வாரும் நந்திதேவனே.

## பார்வதி வருகிற கவி

ஆதியா யுலகுக்கு வந்தசத்தி
அகில புவனமும் நிறைந்தசத்தி
நீதியாய் அன்பர்கள் தொழுகும்சத்தி
நீங்காத இருள்மாய்கை யானசத்தி
கோதிலா வேதமுத லானசத்தி
குஞ்சர முகத்தோனை ஈன்றசத்தி
யாதிமா மதியணிந்த சிவசத்தி
பார்வதியும் தொலுவாக வருகின்றுளே.

## பார்வதி தரு

திங்களணிந்தசிவ சங்கரன்பாரியான
மங்கைபார்வதியும் வந்தாள் உலகமாதா
மங்கைபார்வதியும் வந்தாள்



குங்குமகளபவாடை கமிழுங்கதம்பம்வீச
சுருள் கங்கணவளையல் கரமதிலிலங்க
காதினில்கச்சித கம்மலும்துலங்க தி
முல்லையரும்பைபோன்ற பல்வரிசைபவழ
வல்லிசாதக்கொடிபோல் மெல்லஇடைதுவள
சுருள் வானவர்சித்தர் வணங்கிடும்சாது
வண்மையில்மிகுந்த கன்னியாள்மாது

பார்வதி விருத்தம்

மாலயன்தேடியடி முடிதனைகாணாததிரு
ஆலத்தைபள்ளியுண்ட அண்ணலேபிராணநாதா
சாலவேமல்லிகைமுல்லை சவ்வாதுபுனுகும்கொண்டு
வேலொத்தவிழியாளான மெல்லியும்போற்றிசெய்தேன்.

வசனம்

ஆனால் கேளும் பிராணபதியே! தங்கள் பொற்பாத கமலங்கட்கு மலர்களை சாற்றி அடியாள் வந்தனம் நாதா.

பரமசிவன் விருத்தம்

அருந்தவமுனிவர்தேவர் அன்புடன்தொழுதுபோற்றும்
பெருமையில்மிகுந்தபெண்ணே பூவுலகில்எந்தநாளும்
ஒருமையாய்வாழ்ந்திருப்பாய் உம்பர்கள்தான்மகிழ
இருவரும்கைலைதன்னில் இன்பமாய்வீற்றிருப்போம்.

வசனம்

ஆனால் கேளும் பார்வதியே! திருவடி பணிந்தபடியால் ஆசீர்வதித்தேன் அமருவாய் பெண்ணே பார்வதியே.

பார்வதி தரு

வெள்ளியம்பலந்தன்னில் வள்ளலேஇன்றுநாளில்
தானே திரு வோனே

கள்ளமில்லாவேதத்தை உள்ளபடிஎந்தனுக்கு
உரைப்பீர் வேதம் உரைப்பீர்

பரமசிவன் தரு

வேதமதைவிவரமாக போதித்தாலேயுந்தனுக்கு
மானே பசுந் தேனே
பேதகப்பட்டுமிக வேதனையடைகுவாய்
தானே மட மானே

பார்வதி தரு

தில்லைகாளியோடு வல்லமையாய்நடித்த
நாதா நடன பாதா
நல்லதோர்வேதமதை மெல்லியர்க்குரைத்திட
வேண்டும் நாதா வேண்டும்

பரமசிவன் தரு

சுந்திரகந்தனை ஈன்ற விந்தையுள்ளபார்வதியே
கேளும் இன்று கேளும்
சிந்தையும்மகிக்ஷியாக உந்தனுக்குவேண்டும்வேதம்
கேளும் பெண்ணே நாளும்

பார்வதி வேறு தரு

பொன்பொருள்பூஷணம்இருக்க நாதா
பித்துகொண்டவரைப்போல்வெறுக்க
பன்னரவமதை உன்னிதசடையிலே
என்னமதியாலே ஏனோஅணிந்தீர்சொல்லும் பொ

பரமசிவன் தரு

சொல்லுவேன்உந்தனிடஅண்ணன் பெண்ணே
சுந்திரத்தில்மிகுந்தகண்ணன்
நல்லபஞ்சமெத்தை எல்லாம்இருக்கும்போதே
நச்சரவசயனம் அச்சுதன்கொண்டார்மாதே சொ

பார்வதி தரு

சுந்திரந்தனில்மிகுந்தநாதா நீரும்
சொன்னவேதம்உண்மைநீதா
விந்தையுள்ளசூரிய சந்திரர்இவர்யாரு
சந்தேகமில்லாமல் சிவபெருமானேகூறு சுந்

பரமசிவன் தரு

சூரியசந்திரர்கள்பெண்ணே அவர்
சொல்லுவேன்இன்னரென்றுகண்ணே

நாரியேகேளாய்எந்தன் நேத்திரம்இருவரும்
பாரினில்தெய்வமென்று போற்றுவார்யாவரும் சூரி

பார்வதி விருத்தம்

சுந்திரபிராணநாதா சூரியர்சந்திரர் தானும்
உந்தனிடநேத்திரமென்று உறுதியாய்உரைத்ததாலே
சந்தேகந்தெரியவேண்டி தையலுந்தானெழுந்து
விந்தையுள்ளஇருகரத்தால் விழியதைமூடினேனே.

வசனம்

ஆனல் கேளும் பிராணபதியே! சூரியர் சந்திரர் உம்முடைய நேத்திரம் என்றதால் பரிசோதிக்க இருகரத்தால் நேத்திரத்தை மூடினேன் பிராணபதியே.

பொது வசனம்

பரமசிவம் நேத்திரத்தை பார்வதி மறைக்க உலகம் இருண்டு ஜீவாத்மாக்கள் கஷ்டமடைய பரமன் பார்வதிக்கு சாபம் கொடுப்பது.

பரமசிவன் கவி

பார்வதியே எந்தனை நீ பரிசோதிக்க
படர்விழியை இருகரத்தால் மூடிவிட்டாய்
ஏர்பெருகும் உலகமெல்லாம் இருண்டுபோச்சு
எறும்புமுதல் பல்லுயிரும் இறந்துபோகும்
பேர்மிகுந்த பாவமதை செய்துவிட்டாய்
பேதையே காஞ்சிமா நகரந்தன்னில்
சீர்பெருக தவமிழைத்து சார்புநீக்கி
சிறந்தோங்கு மிடபாகம் பெற்றுக்கொள்வாய்.

வசனம்

ஆனல் கேளும் பார்வதி! என் நேத்திரத்தை பரிசோதிக்க மூடினதால் உலகிலுள்ள ஜீவஜந்துக்கள் கஷ்டப்பட்டு நிந்தித்தார்கள் அதனால் உலகில் சிறந்தநகர் காஞ்சிபுரி அந்நகரில் தவத்தை செய்து இடபாகம் பெற்றுக்கொள் மாதே.

பார்வதி தரு

ஐயோநான்என்செய்வேன் ஈசாஜெகதீசா
அரிவையும்பணிந்தேனே வாசாகைலாசா
தையலாள்எந்தனுக்கு சாபத்தைத்தந்தீரே
தவிக்குதேஎன்நெஞ்சம் தையலைமறந்தீரே ஐ

பரமசிவன் தரு

ஆபத்துவருமென்றெண்ணி பார்க்காமல்அடிபார்க்காமல்
அகங்காரங்கொண்டாயே கேட்காமல்சொல்லைகேட்காமல்
சாபத்தைபெற்றுமே தையலேஇருக்காதே
பாவத்தைதுலைத்துமே பதிக்குவாசெருக்காதே ஆப

பார்வதி தரு

திரிபுரம்எரித்திட்டதேவனே சுவாமிதேவனே
தேவியாளும்பாவியானேனே பாவியானேனே
அரியயன்தேடிக்காணு ஆண்டவரேஉம்மை
அரிவையாளும்விட்டுப்பிரிய மனம்வல்லையே திரி

பரமசிவன் தரு

மாதுநீமறுத்துமேபேசாதே அடிபேசாதே
மதிகெட்டுவீணுகபேசாதே பதில்பேசாதே
பேதையாளுனக்கு வேதத்தையுரைத்ததால்
பூதலத்தில்மிக பாவங்கள்நேர்ந்ததே மா

பார்வதி விருத்தம்

பங்கையனைசிரங்கொய்த பரிவுள்ளபிராணநாதா
நங்கையாள்எந்தன்மீது நீருமேகோபிக்காதீர்
பொங்கியேதழைத்துயோங்கு புண்ணியகாஞ்சிநகர்
அங்கையற்கண்ணிசென்று அருந்தவம்செய்குவேனே.

வசனம்

ஆனல் கேளும் பிராணபதியே! என்மீது கோபம் வேண்டாம் காஞ்சிநகர் சென்று தவம்புரிகிறேன் உத்தரவு தாரும் நாதா.

பரமசிவன் கவி

அருந்தவம்செய்வேனென்ற அங்கையற்கண்ணிகேளாய்
பெருமையில்மிகுந்தகாஞ்சி புரமதுயேகியங்கே
ஒருமையாய்நதியில்தவம் உறுதியாய்செய்துமிக்க
விரும்பியேஇடபாகம் மெல்லியேபெற்றுக்கொள்வாய்.

வசனம்

ஆனல் கேளும்பெண்ணே! பூவுலகில் காசி மதுராபுரி அயோத்தி மாயாபுரி துவாரகைபுரி இவற்றுள் காஞ்சிமாநகரம் சிறந்தநகர் அங்கு தவம்செய்து இடபாகம் பெற்றுக்கொள்ளும்.

பார்வதி சிந்து

எரிமழுமானேந்தும் பரமனவர்
இட்சாபமந்த யரிவையும்பெற்று

அரிவையும் தான் நடந்தாள் காஞ்சிநகர்
அந்தரதேவர்கள் சிந்தைமகிழ
கைலைநகரைவிட்டு மாது
கம்பாநதியில் தபம் செய்யவே தொட்டு
குயில்மயில்சங்கீதமிடும் பூஞ்சோலை
கோதையாளும்வந்தாள் தவம்புரிய தந்தினம்

பார்வதி விருத்தம்

அருத்தனார் ஈசருக்கு அரிவையும்பூசைசெய்ய
கருத்ததுகொண்டுமிக கம்பைநதிநடுவில்மங்கை
பெருமணல்தன்னையள்ளி பிடித்துமேலிங்கமாக
ஒருமனதாகப்பூசை உமையவள்செய்குவாளே.



பார்வதி பரமனைக்கோரி பூஜைசெய்கிறது

தரு

பூசைபுரிந்தேனே பரமனை
போற்றித்தொழுதேனே
பூசையும்செய்தேனே புண்ணியநதிதன்னில்
வாசனைமலர்களை வண்மையாய்சாற்றியே பூ

மரலியையுதைத்தவரே கரமதில்
மழுவைத்தரித்தவரே
அரியயன்தேடிக்காணு அகண்டபரஞ்சுடரே
அரிவைசெய்தபக்திற்கு அருளதுதருவீரே பூ

மூலாதாரப்பொருளே ஞான
முடிவிலாடுங்குருவே
ஆலத்தையுண்டவா அரவத்தைப்பூண்டவா
சிலமாய்க்காளியை, செயித்திட்டதாண்டவா பூ

பரமசிவன் கவி

இப்படியாகத்தவம் ஈஸ்வரிசெய்யும்போது
அப்புமாமதியணிந்த அரனவர்மனம்சோதிக்க
துப்புள்ளநந்திகேளாய் சீக்கிரம்சென்றுநீயும்
கப்பியேகெங்கைதன்னை கனகசபைகொண்டுவாராய்.

வசனம்

ஆனல் கேளடா நந்தியே! பார்வதி செய்கிற தபத்தைப் பரிசோதிக்க கெங்கையை அழைத்துவாரும் நந்தியே.

கெங்கை வருகிற விருத்தம்

திரைகடல்புவனமெல்லாம் திகைதப்பப்பொங்கும்கங்கை
பரமனுமழைத்தசேதி பாசமாய்காதில்கேட்டு
சரப்பளிமாலைபூண்டு சவ்வாது அத்தர்வீச
கரமதில்வளையல்மின்ன கெங்கையும்வருகின்றளே.

கெங்கை தரு

சங்கரன்செஞ்சடையில்தங்கும் ஞானப்பிரகாசி
கங்காபவானியென்னும் கன்னியும்வாருள்

குங்குமகளபவாடை குமுகுமுவென்றுவீச
மங்களமொழிபேசி மாதிதோவாருள்.

மல்லிகைமுல்லைரோஜா நல்லமல்லிகைசூடி
நல்லதோர்பணிகள்பூண்டு நங்கையும்வாருள்

சன்னல்பின்னல்சடையில் உன்னதராக்கடிமின்ன
சின்னஇடைதுவள சேயிழைவாருள்

வண்மையுள்ளசெம்மங்குப்பம் வாழுஞ்சிறுபாலனை
சண்முகம்செந்தமிழ்பாடி தையனும்வாருள் சங்

கெங்கை தரு

நாதாஎனக்கிசைந்த நீதாஉந்தன் திரு
பாதம்தனிலே கோதையும்
கோதில்லாபாரிஜாத கோங்குமந்தாரைகொண்டு
பூதலம்ஓங்கும்கெங்கை பாதம்பணிந்தேன்தொண்டு நா

பரமசிவன் தரு

மங்கைபாதம்பணிந்த கெங்கைதேவர்தொழுகும்
நங்கைசந்தோஷம் கொண்டேனே
தங்கும்உலகமதில் எங்கும்நிறைந்தமாதே
திங்கள்வடிவழகி சிறப்பாய்வாழ்குவாய்கோதே மங்

கெங்கை தரு

தேவிஎந்தனை இன்றுமேவி யழைத்ததென்ன
பாவை தனக்குரைப்பீரே
ஆவிக்குஆவியான அண்ணலேபிராணநாதா
அரிவைக்கின்னதென்று அறிவிப்பீரேநீதா தே

பரமசிவன் தரு

கம்பைநதிதன்னிலே அம்மைதவமேசெய்யும்
கன்னிமனதறியவே
உம்பர்புகழ்நதியில் செம்மையாய்நீபெருகி
செம்மையாய்பார்வதி தவத்தையழிப்பாயருகி கம்

கெங்கை விருத்தம்

சுந்திரபிராணநாதா சொல்லியவிதத்தைப்போல
அந்தமாய்தவமேசெய்யும் உமையவள் தபசுக்கு
குந்தகம்வருவதற்குக் கோதையும்பெருக்கெடுத்து
விந்தையாய்வருகின்றேன் விமலனேஇருப்பீர்தானே.

வசனம்

ஆனால் கேளும் பிராணபதி! பார்வதி செய்யும் தபநிலையைக் கெடுத்து சீக்கிரம் வருகிறேன் நாதா.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் பரமனிடம் கெங்கை விடைபெற்று பூலோகம் வரும்போது பார்வதி பூசைசெய்கிறவிதம் காண்க.

பார்வதி தேவாரம்

கல்லால்கீழ்அமைந்தமுக் கண்ணுபோற்றி
காலனையேபாதத்தா லுதைத்தாய்போற்றி
பொல்லார்வாழ்திரிபுரத்தை எரித்தாய்போற்றி
பிரமனிடசிரமதைக் கொய்தாய்போற்றி
எல்லார்தம்மனத்தினுளே இருப்பாய்போற்றி
எழுகடலும்புவனமெல்லாம் நிறைந்தாய்போற்றி
நல்லார்தொழுதேற்றுங் காஞ்சிவாசாபோற்றி
நாயகியைக்காத்திடாய் போற்றிபோற்றி.

கெங்கை சிந்து

விந்தையுடன்காவெழுந்தாள் கெங்கையவள்
விண்ணுலகம் மண்ணுலகம் அதிர்ந்திடவே
கந்தமலர்வாடைவீசும் பூஞ்சோலை
காடுசெடிமலை தான்நிறைய

அரிவையுய்தான்பெருகி கம்பைநதி
அடங்காமல்ஜலமது புரண்டுவர
பெருக்கதுதானெடுத்து கெங்கை
பார்வதிதபசிலே தான்கலைத்தாள் தந்தினம்

### பார்வதி விருத்தம் முகாரி

ஐயோநான்என்னசெய்வேன் ஆலத்தையுண்டஈசா
னைதயஜும்நெடுநாளாய் சார்பிழைத்ததவங்குலைய
பையவேகெங்கையவள் பெருகியேலிங்கத்தோயே
னையவேஅடித்துக்கொண்டு நாரியும்போறுளேயோ.

### வசனம்

பரமக்கடவுளே! நான் நெடுநாளாக செய்த தவம் வீணுகப் போனதோ? கெங்கையானவள் பெருக்கெடுத்து இலிங்கத்தை அடித்துக்கொண்டு போகின்றுளே, உன் சூதோ அறியேன் தெய்வமே.

### பார்வதி தரு

சந்திரனையணிந்தஈசா உந்தனுக்குஇந்ததுன்பம்
வரவோ இன்று வரவோ
எந்தனிடசக்களத்தி உந்தனையடித்துக்கொண்டு
போக மனம் நோக

### கெங்கை தரு

தாண்டிவழிமறித்து ஏண்டிஎந்தனிட
அரனை கெங்கா தரனை
ஆண்டவனைப்பிடித்து வேண்டிஇழுக்கசொந்தம்
ஏது அடி வாது

### பார்வதி தரு

சொந்தமில்லைஎன்றுஎன்னை நிந்தனையாய்ப்பேசவந்த
செருக்கி அடி செருக்கி
உந்தனை விடுவதில்லை எந்தனிடநாதனை
இழுக்க வழி மறிக்க

### கெங்கை தரு

மறிததுபேசவந்த செருக்கியேஅப்புறம்
செல்லடி அடி நில்லடி
அரியயன்தேடிக்காணு ஆண்டவன்எந்தனிட
நாதனே பிரிய நாதனே

பார்வதி வேறு தரு

தொட்டுத்தாலிகட்டிநீயும் வந்தாயா அடிவந்தாயா
சொந்தமாய்பேசுறாய் நிந்தையாநீயும்வந்தாயோ
தட்டுவானிசிரிக்கியே சாதனையாபேசாதே
விட்டுமேநாதனை எட்டசெல்வீசாதே தொ

கெங்கை தரு

வலையர்குலத்தில்நீ பிறந்தாய்அடிபிறந்தாய்
வாதுபேசிநாதனை மணந்தாய்நீயும்மணந்தாய்
நிலைக்காதேஉன்வாழ்வு குலைக்காதேநாயைப்போல்
நங்கையாளறிகுவேன் நாயத்தைதநிறுத்துமேல் வ

பார்வதி தரு

பாவிசக்காளத்திநில்லடி அடிநில்லடி
பலுக்காதேதாசிபோல்சொல்லடி வீண்மல்லடி
ஆவிக்குஆவியான அண்ணல்பரமனை
அடித்துமேபோகாதே பிடித்தேனேபூமனை பா

கெங்கை தரு

விடுவிடுஎந்தன்நாதனை அன்பநாதனை
வீணுகபிடிக்கரதேநீதனை திவ்யபோதனை
மடமடவென்றுமே மங்கையாள்பெருகியே
திடமுள்ளலிங்க சுவாமியைதிருகியே விடு

பார்வதி கந்தார்த்தம்

சொல்லதுதடுத்துக்கெங்கை சேயிழைபெருக்கெடுத்து
நல்லதோர்கம்பை நதியதுபிரண்டுமேதான்
தில்லைகாளியைசெயித்த சுவாமியைபடித்துபோறாள்
மெல்லியாள் என்னசெய்வேன்,

தரு

மார்பில்அணைத்துப்பிடித்தேன் சிவலிங்கம்
மெழுகாமல்சேர்த்து பிடித்தேன்
வீரசடைவிமலவள்ளலே என்னுசெய்வேன்
கார்த்துரக்ஷிப்பீரே கன்னியாள்போற்றிசெய்தேன்

பரமன் கந்தார்த்தம்

சத்தியும்லிங்கம்தன்னை தழுவியேமார்பினேடு
பத்தியேயணைத்ததாலே பொற்குடஸ்தனமேல்பட்டு
மெத்தவேதழும்புண்டாக மனமதுஉருகிமெத்த
சத்துசித்தானந்த,

தரு

சதாசிவனும்தோன்றினார் விடையின்மீது
சோதிசொரூபன்தோன்றினா
பூதலமுள்ளதேவர் புஷ்பம்பூமாரிபெய்ய
பூவைபார்வதி தாவிபணிந்துஉய்ய ச

பார்வதி தரு

நாதாவந்தனம்தந்தேனே உந்தன்
திருவடிதன்னிலே அரிவையாள்தானும்
நீதா வந்தனம்தந்தேனே
வேதன்சிரமதை வெகுண்டுகொய்தநாதா
வித்தகமுனிவர்க்கு முத்தியளிக்கும்நீதா நா

பரமசிவன் தரு

பாதம்பணிந்ததேவியே இங்கு
பூதலந்தன்னிலே சுகமாகவாழ்குவாய்
பாசம்மிகுந்தபூவையே
பேதைகுணத்தினாலே பெருந்தவம்செய்தாயே
பின்னப்பட்டதால்மெய் வின்னங்கள்நேர்ந்ததே பா

பார்வதி தரு

தேவாவந்தனம் செய்தேனேநான்
தெரியாமல்செய்த பிழைபொறுத்தருளுவீர்
அரிவைவந்தனம் தந்தேனே
தாவியேஇடபாகம் தையலர்க்குத்தருவீர்
தேவிமனமகிழ்ந்து தருவேன்இன்பம்பெருவீர் தே

பரமசிவன் தரு

பெண்ணேஇன்பம தாகவேஉனக்கு
பெருமையாய்இடபாகம் தருகமுடியாதிங்கே
கண்ணேஇன்பமதாகவே
வண்ணமுள்ளஸ்தனம்பட்டு புண்ணாகநோகுதுமெய்
மண்ணில்தவமது மாதேஇன்னமும்செய் பெ

பார்வதி விருத்தம்

இன்னமும்தவம்புரிய ஈசனேசொல்லவந்தீர்
கன்னியாள்என்னகுற்றம் கர்த்தனேஉமக்குசெய்தேன்
மன்னிப்பீர்பிழையிருந்தால் மங்கையும்போற்றிசெய்தேன்
பன்னுவீர்விவரமாக பரமனேகோபம்வேண்டாம்.

வசனம்

ஆனால் கேளும் பிராணபதியே! இன்னம் பூலோகத்தில் தவம் புரியும்படி வாக்களித்தீரே நான் என்ன குற்றம் செய்தேன் சொல்ல வேண்டும் பிராணபதியே.

பரமசிவன் கவி

கருநிறகூந்தல்வாய்ந்த கன்னிபார்வதியேகேளாய்
மருகியெனை தழுவினதால் மார்புஸ்தனம்பட்டுருகி
பெருந்தளும்பான தாலே பின்னப்பட்டுபோச்சுது தவம்
அருணையம்பதியைநாடி அன்புடன் தவஞ்செய்வாயே.

வசனம்

ஆனால் கேளும் பெண்ணே! என்னை நீ அணைந்து மார்போடு தழுவினபடியால் உந்தன் ஸ்தனம்பட்டு தளும்பேறி பின்னமடைந்துபோனபடியால் அருணையம்பதியைநாடி தவம் செய்குவாய் மாதே.

பார்வதி தரு

சத்துசித்தானந்தத்திரு உத்தமரேகேளுமே
பத்தினியாள்போற்றிசெய்தேன் எந்தனைநீயாளுமே
எத்திசையில்காஞ்சிபுரி மெத்தசிறப்பென்றுமே
அத்தனேயுரைத்ததாலே இடபாகம்தாருமே சத்

பரமசிவன் தரு

நாடுகாஞ்சிசிறப்பென்று நானுரைத்தேன்மானே
நாரியேஅதனால்குற்றம் நாளுமில்லைதானே
ஆடும்பரஞ்சோதியொளி அண்ணாமலைதானே
தேடிஇடபாகந்தாரேன் தவம்புரிவாய்மானே நா

பார்வதி தரு

பாதிமதிதானணிந்த ஜோதியொளிநாதனே
கோதைதமீறிகேட்டேனென்று குற்றமாகநீதனே
பேதகம்நினைக்கவேண்டாம் பிரியமுள்ளபோதனே
மாதுயாளும்போற்றிசெய்தேன் மன்னிப்பீரேநாதனே பா

பரமசிவன் தரு

பெண்ணேஎந்தன் கண்ணேநீயும் வண்ணமாகஓடியே
பெற்றபாவந்தீரச்செய்தாய் பூசைஇங்குநாடியே
அண்ணாமலைஏகிதவம் வண்ணமாகச்செய்திடு
திண்ணமாகஇடபாகம் தேடிதாறேன்உய்திடு பெ

### பார்வதி கவி

அரியயன்தேடிக்காணு அருணையம்பதிக்குளகி
பரமனைக்கோரிதவம் பத்தியாய்ச்செய்யவேண்டும்
திறமுடன்காவல்காக்க சிவசுப்பிரமண்யன் தன்னை
பிரியமாய்அழைத்தேனென்று பாலனைக்கொண்டுவாரும்.

### வசனம்

ஆனால் கேளும் ஏவலாளிகளே! எனது மைந்தனாகிய சுப்பிரமணியனை அழைத்துவருவீர் ஏவலாளிகளே.



### சுப்பிரமணியர் வருகிற கவி

அன்னையாளழைத்தசேதி அறிந்திடவேண்டுமென்று
மன்னியேபலவித மணிமுடியலங்கரித்து
உன்னிதசத்திவேலு உத்தமன்கையில்ஏந்தி
கன்னவில்மதனைப்போன்ற கந்தனும்வருகின்றாரே.

### சுப்பிரமணியர் தரு

ஆலமுண்டோன்பாலன்ஷண்முகனும் சரவணையில்
ஆறுமுகமாய் யுதித்தவேலனும்
கோலமார்மணி மாலைபூண்டவர்
குஞ்சரவன் தனக்கிளையவர்
சீலமாய்கையில் வேலைக்கொண்டவர்
சிவகிரியெனும் பழனியாண்டவர்
சிரசில்ரத்தினமகுடமின்னிடவே தகதகென்று
செவியில்சோதி கவசம்துன்னிடவே
அரக்கர்களைக்கு வலுக்கயுதித்தவர்
ஆணவமாயை சிக்கறுத்தவர்

கிரௌஞ்சகிரி தன்னையுடைத்தவர்
கீர்த்தியாய்மயில்வா கனம்பிடித்தவர் ஆ

தாளங்கின்னரிபேரி டங்காவும்விந்தையதாக
சங்கீதநாக சுரங்களூதிடவும்
தாருகாசூரன் தன்னைமடித்தவர்
தீரபத்ம சூரனைக்கிழித்தவர்
சதுர்முகனைச் சிறைபிடித்தவர்
சங்கப்புலவர் தன்னைசெயித்தவர் ஆ

அன்னையாளழைத்தசேதி யறிந்திடவேசந்தோஷமாக
அன்பாய்பாலும்கண் டறிந்திடவே
ஆதிசிவன் தன்னை நாடியே
அன்னையாளும் கண்ணைமூடியே
அருஞ்சாபம் தன்னைத்தேடியே
அரிவையாளும் அழைக்கநாடியே ஆ

சுப்பிரமணியர் கவி

திருவேங்குகெங்கையாளைத் தரித்தஎன் தந்தையோடு
பெருமையாய்வீற்றிருக்கும் புண்ணியஅன்னையாளே
நருமலர்பாரிஜாத நல்லசோர்புஷ்பங்கொண்டு
சிறுவனும்போற்றிசெய்தேன் சேயனைக்காத்திடாயே.

வசனம்

சரணம் சரணம் தாயே! என்னை அழைத்த சேதி இன்ன
தென்று தெரிவிக்கவேண்டும் அன்னையே.

பார்வதி தரு

சுந்திரம்மிகுந்தகண்மணி சுகமாகநீவாழ்வாய்
சுந்திரமிகுந்தகண்மணி

இந்தயுலகமதை விந்தையுடன்படைத்த
சருள் எழில்பெரும்பிரமனைச் சிறையினிலடைத்தாய்
பழுதில்லாவேதத்தைப் பிரியமாயுரைத்தாய் தந்
பகவா
ஆராப சுப்பிரமணியர் தரு

அன்னையேயுன்முகம்வாடியே நொந்துஇருப்பதென்ன
அன்னையேயுன்முகம்வாடியே

என்னவிசனமம்மா உந்தன்மனதில்கொண்டாய்
சருள் எந்தனுக்கோதுவாய் சுந்திரதாயே
சந்தேகமில்லாமல் விந்தையாய்நீயே அன்

பார்வதி தரு

அருணையம்பதியைநாடியே தவமேசெய்ய
அருணையம்பதியைநாடியே
திரிபுரம்எரித்தவுந்தன் தந்தைதந்தாரேசாபம்
சுருள் சேயிழைபெற்று சிந்தையும்வாடினேன்
சேயனேகாவல் புரிகுவாய்தேடினேன் அரு

சுப்பிரமணியர் தரு

அன்னையேவிசனங்கொள்ளாதே மைந்தனன்இருக்கவே
அன்னையேவிசனங்கொள்ளாதே
உன்னிததவத்திற்கு பின்னங்கள்நேராவண்ணம்
சுருள் உத்தமன்காவல் பத்தியாய்புரிவேன்
சித்தங்கலங்காதே நத்தியேவருவேன் அன்

பார்வதி விருத்தம்

அரக்கர்களை கருவறுக்க ஆறுமுகமாயுதித்த
திறமையில்மிகுந்தபாலா திருவண்ணமலைக்குஏகி
கரமதில்மான்மழு கமண்டலந்தரித்தசிவ
பரமனைக்கோரிதவம் பாவையும்செய்குவேனே.

வசனம்

ஆனல் கேளும் கண்மணி! அண்ணமலை நகருக்குச் சென்று தவம் செய்யவேண்டும் வாரும் மைந்தனே.

சுப்பிரமணியர் தரு

நடந்துவாரும்அன்னையே அண்ணமலை
நாமும்போவோம்அன்னையே
அடர்ந்தபுதர்வனம் திடமுடன்தாண்டியே
அன்னையேவருகுவாய் அரனைவேண்டியே ந

பார்வதி தரு

வெற்றிவேல்பிடித்தபாலா காஞ்சிநகர்
விட்டோமேநாமும்சீலா
கற்பாறைகுன்றுகள் கானகம்நடந்துமே
கந்தனேவருகிறேன் கன்னியாள்தொடர்ந்துமே வெ

சுப்பிரமணியர் தரு

சந்தேகம்மிகப்பட்டு என்தாயேநீ
தந்தையைவேதம்கேட்டு
இந்தப்படிசாபம் என்தாயேபெற்றுமே
இனிமீதுவாடாதே ஏகிவாசற்றுமே சந்

பார்வதி தரு

நீலமயில்ஏறும்வேலா வனங்களை
நாமுங்கடந்துமேலா
சீலனேவந்ததால் திடவெளிதன்னிலே
சேயிழையும்தங்கி செல்லுவேன்பின்னாலே நீ

சுப்பிரமணியர் கவி

இந்ததோர்திடவெளியில் என்தாயேநீ தங்கியிருக்க
சிந்தையும்கொண்டதாலே சீர்பெறத்தாயேகேளும்
விந்தையதாகபந்தல் மைந்தனும்போட்டுவைத்தேன்
அந்தமாய்வீற்றிருப்பாய் அன்னையேபிரியமாக.

வசனம்

ஆனால் கேளும் தாயே! இந்த திடவெளியில் தங்கியிருக்க ஆசைகொண்டபடியால் வாழையிலையினாலே விநோதமான பந்தல் அலங்கரித்து வைத்தேன், தாயே.

பார்வதி கவி

கன்னியாள்தங்கியிருக்க கதலியின்தழையினாலே
உன்னிதமாகப்பந்தல் ஓங்கியேபோட்டதாலே
பன்னியேசந்தியாவந்தனம் பாவையுமுடிக்கவேண்டும்
சன்னமாய்கிரியுடைத்து ஜலமதுகொண்டுவாரும்.

வசனம்

ஆனால் கேளும் கண்மணி! நான் சந்தியாவந்தனம் செய்ய ஜலம்வேண்டும். உன் சத்திவேலால் மலையைக்கீறி ஜலம் கொண்டு வாரும் மைந்தனே.

சுப்பிரமணியர் சிந்து

அன்னையாருரைத்தபடி வேலவர்
அன்பாய்ஜலமது கொள்ளவேண்டி
குன்றுகளதிரில்தோன்றும் மலைகளை
கூறானசத்தி வேலால்கிழித்தார்
சத்தசமுத்திரம்போல் ஜலமது
ததும்பிதிரண்டு நதியாகவரவே
முத்தையன்தான்பார்த்து இரத்தமதை
மாதாவைகேட்கவே கருத்துக்கொண்டான் தந்தினம்

சுப்பிரமணியர் கவி

அரியதவம்செய்துபெற்ற அன்னையேகேளாயம்மா
கிரிதனையுடைத்தேன்வேலால் கெங்கையும்உதிரமாக

பெரியதோர்நதியாக பிரண்டுமேவருகுதிங்கே
பிரியமாய்கருத்ததைப் புகலுவாய்தாயேநீயும்.

வசனம்

ஆனல் கேளும் தாயே! இதோ எதிரில் தோன்றிய மலைகளை சத்திவேலால் உடைத்து கெங்கை வரும்படி செய்தேன். அதில் உதிரம்பெருகி ஜலத்துடன் வரவேண்டிய காரணமென்ன? சந்தேகம் தெளியச்சொல்லும் தாயே.

பார்வதி கவி

சத்திவேல்கையிற்கொண்ட சரவணபவனேகேளாய்
மெத்தவேபிரமனலே மறையவர்எழுபேரும்
சுத்தமாய்சாபம்பெற்று தோன்றினர்மலைகளாக
வெற்றியுள்ளவேல்பட்டு முனிவரும்சாபம்தீர்ந்தார்.

வசனம்

ஆனல் கேளும் வடிவேலனே! அனந்தமாபுரம் என்ற நகரில் ஏழு பிராமணர்கள் தீவினைகளைச்செய்து பிரமனைக்கோரி தவஞ் செய்ய, பிரமன் தவத்திற்கிரங்கி நீங்கள் கொடிய பாவத்தைச் செய்தபடியால் நீங்கள் ஏழுபேரும் ஏழுமலைமீதில் முறைதவருமல் தவத்தைச் செய்வீர்களானல் அப்போது பார்வதிக்கு ஜலம் வேண்டி சுப்பிரமணியர் வேல்விடுவார். அந்தவேல் பட்டதும் உங்கள் சாபம்நீங்கி பாவம் தொலைந்துவிடுவீர் என்று சொன்னபடி அந்த முனிவர் தங்கிய மலையை துளைத்தபடியால் உதிரம் பெருகி நதியாக வருகிறது மைந்தனே.

சுப்பிரமணியர் கரு

சந்தேகம்தெளிந்தேனம்மா சுந்திரவேலனும்
சந்தியாவந்தனம் மிகமுடித்துதாயே
சாற்றுவாய்நதிக்கு பெயரெடுத்து

பார்வதி கரு

சேயாறு என்றுநாமதேயம் செப்பினேன்நதிக்கு
சிந்தையதுகளிப்பாய் மைந்தனே இதில்
செபதபங்களைச் செய்தேனே

சுப்பிரமணியர் கரு

அங்கையற்கண்ணியேஅம்மா தங்கியேநீபந்தலுக்கு
அன்பானபெயர்வைப்பாய் தாயே இந்த
அகிலத்தோர்அறிந்திட நீயே

பார்வதி கரு

வண்ணமாய்இந்தகருக்கு வாழைப்பந்தல்என்றுபெயர்
வஞ்சியாளுரைத்தேன் மைந்தனே உந்தன்
சஞ்சலத்தைநீக்குவாய் கந்தனே.

சுப்பிரமணியர் கவி

சிரோங்கநகரத்திற்கு சிறப்பானபெயரைவைத்த
ஏரோங்கும்அன்னையாளே இவ்விடம்தன்னைவிட்டு
தாரோங்கும்அருணாகிரி தவமதுசெய்யஅங்கே
பேரோங்கநாம்பரிவுடன் செல்வோம்தாயே.

வசனம்

ஆனால் கேளும் தாயே! இந்நகருக்கு வாழைபந்தல் என்று நாமதேயம் வைத்தாய் அண்ணமலை செல்லுவோம் வாரும் தாயே.

பார்வதி கவி

அப்பனேமகனேபாலா அழகியநகரைவிட்டு
செப்பியேபிரமனரி தேடிக்காணாநகரம்வந்தோம்
துப்புள்ளமுனிவர்கூடி தவமதுசெய்வதாலே
கப்பியேஆசிர்மத்தில் கன்னியும்செல்லுவேனே.

வசனம்

ஆனால் கேளும் மைந்தனே! வாழைப்பந்தல் நகரைவிட்டு அண்ணமலை நகர்வந்தோம் இதோ கூடிதவம் செய்யப்பட்ட முனிவர் ஆசிர்மம் செல்வோம் மைந்தனே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் பார்வதி திருவண்ணமலை நகரம் வந்து முனிவர்கள்கூடி தபஞ்செய்யும் ஆசிர்மம் செல்லும்போது கௌதம முனிவர் வருவது.



கௌதமமுனிவர் வருகிற கவி

அத்தியையுரித்தணிந்த ஆண்டவன்பாரியான
சத்தியும்தவமேசெய்ய தையலும்வருகும்போது
சுத்தமாய்காவிபூண்டு துலங்கும்நற்சடைமுடித்து
கர்த்தனைமனதில்கோரி கௌதமர்வருகின்றாரே.

கௌதமர் தரு

காவியாடைபூண்டு கமண்டலம்கையிற்கொண்டு
கௌதமரிஷியும்வந்தார் கொலுவைநாடி
கௌதமரிஷியும்வந்தார்

தாவிநடைநடந்து தவமுனிவர்கள்போற்ற
சுருள் தத்துவமறைகளை மெத்தயுணர்ந்தவர்
முத்திக்குநல்வழி மெத்தவிதிப்பவர் கா

சென்னில்சடைகுலுங்க செவியில்குண்டலம்மின்ன
பன்னியேசீஷர்கள் பரிவுள்ளவேதம்பன்ன
சுருள் பாசமாய்ஈசன் பதத்தைவேண்டி
பரிவுடன்வருகிறேன் முனிவனும்தாண்டி செ

கௌதமர் கவி

மண்ணுவிண்ணுமளந்த மாயன் தங்கையான
புண்ணியதாயேயுந்தன் பொன்னடிகமலங்கட்கு
வண்ணமாய்மல்லிகைமுல்லை வேணதோர்மலரைக்கொண்டு
தொண்டனும்போற்றிசெய்தேன் துணையதுபுரிகுவாயே.

வசனம்

ஆனால் கேளும் தாயே! உன் திருவடிக்கு முனிவன் மலர்களை சாற்றி வந்தனம் செய்தேன் தாயே.

பார்வதி தரு

வந்தனம்செய்துநின்ற விந்தையுள்கௌதமரே
இந்தயுலகமதில் என்றுமேசுகமாக
சுருள் குந்தகமில்லாமல் வாழ்குவாய்முனியே
தந்தேன் ஆசீர் வாதமும்முனியே வ

கௌதமர் தரு

அன்னையேயுனைக்காண என்னபுண்யம்செய்தனோ
அருந்தவன் ஆசீர்மம் பெருமையாய்உய்துமே
சுருள் அங்கையற்கண்ணியே வந்தசேதியை
அறிவிப்பாயம்மா பிரியமாயோதியே அன்

பார்வதி தரு

ஆதிசிவனைக்கோரி அருந்தவம்செய்யவேண்டி
துதிபுரியும்முனிவர் துதிக்கும்பதிக்குத்தாண்டி
சுருள் தையலும்நாடியே வந்தேனே முனியே
தவமதுசெய்குவேன் தையலுந்தனியே ஆதி

கௌதமர் தரு

உந்தன்பெருமைதன்னை உலகோர் அறியாரம்மா
அந்தமாய்க்கோரிபரனை அருந்தவம்செய்வாயம்மா
சுருள் இந்தணிந்தஈசன் இடபாகந்தருவார்
சுந்திரதாயே சுகமதுபெறுவாய் உந்

பார்வதி கவி

திரிபுரம்தனையெரித்த திக்கண்ணன்பாதம்கோரி
அரிவையும்தவமேசெய்வேன் அன்புள்ளமைந்தாநீயும்
பரிவுள்ளதபத்திற்கு பின்னங்கள்நேராவண்ணம்
நெறியுடன்காவல் நாடியேசெய்வாய்தானே.

வசனம்

ஆனால் கேளும் மைந்தனே! பரமக்கடவுளைக்கோரி அரிதாகிய தபத்தை செய்கின்றேன் யாதேனும் குற்றமில்லாமல் காவல்செய்கு வாய் மைந்தனே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் பார்வதி தவம் செய்யும்போது சுப் பிரமணியர் காவல்புரிய தேவேந்திரன் மகிடாசூரனை சம்மாரம் செய்யும்பொருட்டு பிரமனைநாடி வருவது.

தேவேந்திரன் தரு

வேதாயுந்தன்பாதந்தன்னில் போற்றிசெய்தேனே இந்த
விண்ணவரைகார்த்திடுவாய் வாணிநாதனே

பிரமன் தரு

அந்தணம்செய்துநின்ற இந்திராவாழி உனக்கு
வந்தெதென்னஆபத்து சொல்லுவாயோதி

தேவேந்திரன் தரு

வரம்பெற்றமகிடாசூரன் தேவர்தன்னையே அவன்
வாட்டுறானேதினம்வந்து தாவிமுன்னையே

பிரமன் தரு

தேவரைவதைசெய்யும் சூரன்தன்னையே மடிக்க
திருமாலைகேட்டறிவோம் வாருமுன்னையே

தேவேந்திரன் தரு

சத்தியலோகம்தன்னைவிட்டு நாமுங்கூடியே இப்போ
சீக்கிரம்வைகுந்தம் வந்தோம்நாடியே

பிரமன் கவி

அந்தமாய்வைகுந்தத்தில் அரவசயனம்கொண்ட
தந்தையேயுந்தன்பாதம் தனையனும்போற்றிசெய்தே.

தேவேந்திரன் கவி

சுந்திரமதனைப்பெற்ற சுவாமியேயுந்தன்பாதம்
இந்திரன்போற்றிசெய்தேன் எந்தனைக்கார்த்திடாயே.

வசனம்

சர்ப்பசயனங்கொண்ட கடவுளே! உந்தன் திருவடிக்கு சரணம் சரணமையா சுவாமி.

திருமால் குருங்கவி

எந்தனைப்பணிந்துநின்ற இந்திராபிர்மாவாழி
வந்ததோர்சேதிதன்னை வகுத்துரைசெய்குவீரே.

வசனம்

என் திருவடியை பணிந்த பிர்மனே இந்திரனே இருவரும் சுகமாக வாழ்குவீர் வந்தசேதி சொல்லுவீர்.

பிரமன் தரு

மகிடாசூரன் தினம்வந்து அய்யா அய்யா அவன்
வதைக்குறானே எங்களையும் துய்யா துய்யா

திருமால் தரு

அகிலத்திலே அவனைக்கொல்ல பாலா பாலா வீரர்
ஆருமேகிடையாதோ மேலா மேலா

தேவேந்திரன் தரு

துன்பஞ்செய்யும்மகிடனைக் கொல்லகொல்ல மாலே
தந்திரம்செய்குவீர் வெல்லவெல்ல

திருமால் தரு

பரமனிடம்நாம்கூடி சென்றுசென்று அவரை
பணிந்துகேட்போம்வாரும் இன்றுஇன்று

பிரமதேவன் தரு

தந்தையேமூவருமாய் கூடிகூடி இதோ
வந்தோமேகைலநகர் நாடிநாடி

மூவர் பொது கவி

அப்புமாமதியணிந்த ஆதியும்சோதியான
முப்புரம்தனைஎரித்த முக்கண்ணாஉந்தன்
பொற்பாதகமலங்கட்கு பலவிதமலரைக்கொண்டு
தப்பிதமில்லாமல் தாளடிபோற்றினோமே.

வசனம்

பரமக்கடவுளே! உந்தன் திருவடிக்கு மூவரும் அனேக நமஸ்காரம் செய்தோம் காத்து ரக்ஷிப்பீர் கடவுளே.

பரமசிவன் தரு

பாதமதைப்போற்றிசெய்த பத்தியுள்ளமூவரே
பாரினிலேசுகமாக வாழ்ந்திடுவீர்தேவரே

திருமால் தரு

மைத்துனரேஎன்னசெய்வோம் மகிடாசூரன்பாவியே
மாதவதேவர்களை வதைக்குறானே தாவியே

பரமசிவன் தரு

தேவரைவதைத்தசூரன் ஆவிதன்னை வாங்கவே
திருமாலேமுடியாமல் சொல்லவந்தீர்ஏங்கவே

பிரமன் தரு

ஆலமுண்ட ஈசனே அடிபணிந்தேன்நடராஜனே
அன்னை பார்வதியாலே அரக்கன்மடிவான்நேசனே

பரமசிவன் தரு

சத்தியிங்குயில்லையே சதுர்முகனேதொல்லையே
சங்கரனுர்என்னசெய்வேன் பேசவந்தாய்சள்ளையே

தேவேந்திரன் தரு

தில்லைநடராஜனே சிவகாமிஎங்கேநேசனே
தேவர் துயரம்தீர்க்க சொல்லுவீர்கைலாசனே

பரமசிவன் தரு

திருவண்ணுமலைநாடியே தேவியாரும்வாடியே
தவமதுசெய்கின்ருளே செல்லுவீரேதேடியே

திருமால் தரு

தங்கைதன்னைத்தேடியே தேவரும்செல்வோம்கூடியே
தாவியேவழிநடந்து வருகுவீரேதேடியே

பிரமன் தரு

அப்பாஇதோவந்தோமே அண்ணுமலையைக்கண்டோமே
அத்தைபார்வதியை காணுமிங்கேவிண்டேனே

சுப்பிரமணியர் தரு

மாமாயுந்தன் பாதமே
மருகன்பணிந்தேன் பாருமே

திருமால் தரு

அடிபணிந்தமருகனே ஆசீர்வதித்தேன்முருகனே
அன்புள்ளஎந்தன் தங்கைஎங்கே அறிவிப்பாயேமருகனே

சுப்பிரமணியர் தரு

தந்தைதன்னைக்கோரியே தவமதுமீறியே
அந்தமாகஅன்னையாளும் செய்கின்ருளேகோரியே

பார்வதி வேறு தரு

அண்ணா உந்தன் திருப்பாதமே மாது
அடிகளைப்பணிந்தேன் நீதமே
விண்ணுமண்ணுமளந்த கண்ணனே வாருமே
வண்ணமாகவந்த சேதியைக்கூறுமே அ

திருமால் தரு

பாதம்பணிந்திட்ட தங்கையே இந்த
பாரினில்வாழ்குவாய்மங்கையே
தீதுசெய்யும்மகிடா சூரனைமடித்துமே
மாதவமுனிவர்கள் துயரத்தைதீருமே பா

பார்வதி தரு

சூரனைமடித்திட அண்ணா உன்னால்
தீரங்களில்லையோ கண்ணா
நாரியாலாகுமோ நானென்னசெய்குவேன்
நாரணா பூரணா காரணம்உய்குவாய் சூ

திருமால் தரு

உந்தனால்சூரன் மடியவே வரம்
தந்தாரே முனிவர்கள்கூடியே
சுந்திர தங்கையே துர்க்கைரூபங்கொண்டு
சூரனைமடித்துமே துயரம்தீர்ப்பாய்கண்டு உந்

பார்வதி கவி

அப்படியானால்சரி அண்ணாவுன் வாக்குபோல
துப்புள்ள துர்க்கையாகி சூரனைத்தான் மடித்து
கப்பியேதேவரிட கஷ்டத்தைதீர்த்துவைப்பேன்
ஒப்பியேதேவரோடு உத்தமாசென்றுவாரும்.

வசனம்

ஆனால் கேளும் அண்ணாவே! தங்களிட வாக்குப்படி மகிடா சூரனைமடித்து தேவர் துயரத்தை தீர்த்துவைக்கிறேன் அண்ணாவே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் தேவர்களும் விஷ்ணு பிரமன்முதலானபேர்களும் பார்வதியாளிடம் மகிடாசூரனை சம்மாரம் செய்யும்படி வாக்குபெற்று சென்றிருக்க, மகிடாசூரன் தன் தேவியைப் பார்தது சொல்லுகிறவிதம் காண்க.

மகிடாசூரன் கவி

அரிவையேசொல்வேன்கேளாய் அரியபன்தேவர்முதல்
பெரிகியகெங்கைதாங்கும் பரமனும்எனக்கடக்கம்
திறமையுள்ளபடைகளோடு தீரனும்சென்றுவேட்டை
பிரியமாயாடிவாரேனின்று பூவையேவிடையளித்திடாயே.

வசனம்

ஆனால் கேளும் பெண்ணே மங்களவல்லியே! இன்றையநாளில் ரதகஜதுரகபதாதிகளுடனே கானகம் சென்று வேட்டையாடி மாமிச பக்ஷணங்களைத் தின்று பசியாறி வருகிறேன் விடைதாரும் பெண்ணே.

மங்களவல்லி தரு

கானகத்தில்வேட்டையாட கண்ணாளனேபோறேனென்றீர்
கன்னியாள்கெட்டசொர்ப்பனம் என்நாதாபோதா
கண்டேன் போகவேண்டாமே கா

மகிடாசூரன் தரு

போகவேண்டாம்என்றுரைத்த பூங்கிளியேமாமயிலே
பொல்லாங்குஎனக்குவாராதே அடிபெண்ணேகண்ணே
பூவைநீ தடுத்துபேசாதே பே

மங்களவல்லி தரு

பொல்லாதசொர்ப்பனங்கள் பூவைநான்கண்டதாலே
போகவேண்டாம்வேட்டையாடவே என்மன்னா மன்னா
பூவைஎந்தன் வார்த்தைகேளுமே பொ

மகிடாசுரன் தரு

பாரில்எனைஜெயிக்க வீரர்களுண்டோபெண்ணே
பரமனும்எனக்கடக்கமே அடிமானேதேனே
பழுதெனக்கு நேராதுபோடிநீயே பா

மங்களவல்லி சிசபத்தியம்

மன்னவா இன்றிரவில்தானும்
மங்கையாள் நித்திரைசெய்யும்போது
உன்னிதமதில்கோட்டை இடியக்கண்டேன்
உலகோர்கள்வணங்கும் செங்கோலழியக்கண்டேன்
கன்னியும்மங்கிலியம் அறுக்கக்கண்டேன்
கங்கணவளையல்களை உடைக்கக்கண்டேன்
இன்னமும்அனேக கினவுகண்டேன்
என்நாதாவேட்டைக்குப் போகவேண்டாம்.

மகிடாசூரன் தரு

இந்தவுலகமதில் பெண்ணேஎதிரி
எனக்கொருவரில்லை கண்ணே
சந்தேகமாகவே தையலேபேசாதே
எந்தனைநமன் கண்டால் வணங்குவான்வீசாதே இ

மங்களவல்லி தரு

கேடுவரும்பின்னே நாதாமதி
கெட்டுப்போகும் முன்னேநீதா

வாடுதேஎன்மனம் வஞ்சியாள்என்செய்வேன்
தேடியேகானகம் செல்லவேண்டாம்நைவேன் கே

மகிடாசூரன் தரு

போபோபயித்தியக் காரியேநீ
புத்திசொல்லவந்தாய் மீறியே
இப்பாருலகத்தில் எனைஜெயிப்பாரில்லையே
எந்தனைத்தடுக்காமல் ஏகுவாய்தொல்லையே போ

மங்களவல்லி தரு

கன்னியாள்வார்த்தையைத் தட்டியேநீரும்
கானகம்சென்றலே கெட்டியே
துன்பங்களடைகுவீர் தோகைவார்த்தைகேளும்
சுகமாகவாழ்கலாம் சுந்திரனேநாளும் க

மகிடாசூரன் கவி

நல்லதோர்நீதிகூறும் கன்னியேஎட்டநில்லு
நாடியேதுதித்துநிற்கும் நிகும்பனேமந்திரிகேளாய்
எல்லையோர் புகழ்பெற்றோங்க
எண்ணில்லா சேனையோடு
கல்மலைவனங் கடந்துநாமும்
கரடிபுலிசிங்கம் தன்னைக்கொல்ல
வில்லதைக்கரத்தில் தாங்கிமிக
வேட்டைகளாடி இன்றுவருகுவோமே.

வசனம்

ஆனல் கேளும் மந்திரியே! இன்றையநாளில் சதுரங்கசேனைகளோடுசென்று கரடிபுலிசிங்கம் இவைகளை வேட்டையாடி மாமிசங்களைப் புசிக்கவேண்டும் சீக்கிரம்படைகளோடுவாரும் மந்திரிமாரே.

நிகும்பன் கவி

சண்டனும்பயந்தொடுங்கும் சுந்திரமன்னுகேளாய்
அண்டர்மாமுனிவர்தேவர் அபனரிதிகில்பட்டஞ்ச
துண்டரீகப்படையைக்கூட்டி தீரனும்வந்துசேர்ந்தேன்
எண்டிசையோர்துதிக்க ஏறுவீரதத்தில்தானே.

மகிடாசூரன் தரு

வாருங்கள்வாருங்கள்வீரரே ரதத்தில்
ஏறுங்கள்ஏறுங்கள்தீரரே
காரிடிபோல்முரசுபேரிகை நல்ல
கனத்தமல்லரிகொட்டகாரிகை
கரடிபுலிதன்னைக்கொல்லுவோம் இந்த
கானில்எதிர்த்தோரைவெல்லுவோம்

வில்லை தகைதனில்எடுப்பீரே இந்த
உலகத்தில்எதிர்த்தோரைவதைப்பீரே வா

பார்வதி கவி

அந்தமாய்காவல்செய்யும் அஷ்டவயிரவமூர்த்தி
சுந்திரகந்தாகேளாய் சீர்பெரும்தபச்சாலையில்
குந்தகம்நேர்ந்திடாமல் கடினமாகக்காவல்
விந்தையாய்ச்செய்குவீரே மெல்லியும்தவமேசெய்வேன்.

வசனம்

ஆனால் கேளும் வயிரவமூர்த்தியே! கந்தப்பெருமாளே! நான் தவம் செய்வதில் பின்னம் வருகாவண்ணம் காவல்புரிவீர் மைந்தர்களே.

மகிடாசூரன் தரு

வேட்டையாடுவோம் வாருங்கள் நல்ல
வீரசூரமந்திரிமார்களே நாமும் வே
வேட்டையாடுவோம்நாமும் காட்டதையடைந்துமே
கூட்டங்கூட்டமாயோடும் குஞ்சரம்கரடியை
கொட்டிஅடர்ந்தவனம் எட்டிஅதிலேநாமும்
கிட்டியேமிருகத்தை வெட்டிஎறிவீர்களே வே

பொது வசனம்

அகோதெப்படி என்றால் மகிடாசூரன் வேட்டையாடி வருகின்றபோது ருத்திரன் சோமன் கபாலி ஒத்தசங்கரன் கோதண்டன் விதன் சித்ராங்கதன் என்னும் எட்டுவயிரவரும் தாக்கணங்கு நோக்கணங்கு என்னும் இருவரும் மகிடாசூரன் மந்திரியாகிய நிகும்பன் இன்னும் அனேகசேனைகளை மடித்துப்போட அப்போது மகிடாசூரன் அதிககோபத்தோடு வருகும்போது முனிவர் பார்வதியைக் கண்டு சொல்கிறவிதங் காண்க.

முனிவர்கள் கவி

அருந்தவம்தன்னைச்செய்யும் அன்னையேகேளாயம்மா
எருமைமுகம்வாய்ந்த இழிகுலமகிடாசூரன்
கரிமலைபோலவான் கண்டுமேபயந்துவந்தோம்
பெருமையில்மிகுந்ததாயே புனிதரைக்கார்த்திடாயே.

வசனம்

ஆனால் கேளும் தாயே! மகிடாசூரன் இதோவந்து முனிவர்களைப் பிடித்து அதாகதம் செய்கிறான் எங்களைக் கார்த்து ரக்ஷிப்பீர் தாயே.

பார்வதி கவி

அஞ்சவும்வேண்டாமப்பா அன்னைநான்இருக்கும்போது
கொஞ்சநாள்தினத்துக்குள்ளே குண்ணவேசூரன்தன்னை
பஞ்சுபோல்பரக்கடித்து பாரோர்கள்துயரம்தீர்ப்பேன்
வஞ்சியாள்துர்க்கையாக வடிவமும்கொள்கின்றேனே.

வசனம்

ஆனல் கேளுங்கள் முனிவர்களே! மகிடாசூரனை சம்மாரம் செய்கிறேன் பயப்படாமல் இவ்விடத்தில் இருப்பீர்கள் முனிவர்களே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் முனிவர்களுக்கு திடம்சொல்லி பார்வதி, சூலி, நீலகண்டி, வருகி, திரிகையாள், இந்திரைமறையாள் என்கிற சத்தியாகவும் துர்க்கையாகவும் கொலுவாக வருகிறவிதம் காண்க.

துர்க்கை வருகிற கவி

அரனுக்குபாரியாகி அகிலத்தில்நிறைந்தரூபி
சிரமதிமகுடம்பூண்டு சிங்கவாகனம்ஏறி
கரமதில்சூலம்ஏந்தி கண்டவர்பயந்துவாட
துரகணபடையைக்கூட்டி துர்க்கையும்வருகின்றாளே.

துர்க்கை தரு

ஆதியாயுலகி லுதித்தவளாம்பராசத்தி
ஆங்காரரூபி துர்க்கை வந்தனளே
சோதிமாமணி மகுடம்மின்னிட
சுந்திரப்பணி மார்பிலிலங்கிட
காதினில்வொளி கவசம்குலுங்கிட
கழுத்தில்ரத்தின மாலையிலங்கிட ஆ
காலருத்திரிநீலி யானவளாம்துஷ்டர்களை
கண்டுமடிக்கசூலி யானவளாம்
ஆலமுண்டோன் தேவியானவள்
அண்டர்துயரம் தீர்க்கவந்தவள்
வேலும்சூலமும் கையில்கொண்டவள்
வேண்டுமடியார் வினையைத்தீர்ப்பவள் ஆ

துர்க்கை கவி

அருமையும்பெருமைவாய்ந்த அன்னபூரணியேயுந்தன்
திருவடிதன்னில் தையலும்போற்றிசெய்தேன்
விரும்பியேஇன்றுநாளில் மெல்லியைத்தானழைத்த
கருத்ததையின்னதென்று கன்னியர்க்குரைத்திடாயே.

வசனம்

சரணம் சரணமம்மா என்னை அழைப்பித்த காரணம் இன்னதென்று தெரியச் சொல்லவேண்டும் அம்மணி.

பார்வதி கவி

வந்தனம்செய்துநின்ற வஞ்சியேவாழிவாழி
உந்தனையழைத்தசேதி உமையவளுரைப்பேன்கேளாய்
அந்தமாய்மகிடாசூரன் அமர்புரியவந்ததாலே
சிந்தையும்கலங்கிடாமல் சூரனைமடித்துவாராய்.

வசனம்

ஆனால் கேளும் துர்க்கையே! நீ சென்று மகிடாசூரனை சம்மாரம் செய்து வாருமடி நீலிகளே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் துர்க்கையோடு இன்னும் பலசத்திகளும் சென்று மகிடாசூரன் சேனைகளோடு யுத்தம் செய்து அபிராமி என்பவள் அருசிகன் என்பவனைக் கொன்றாள். வாரணி என்பவள் கந்தன் என்பவனைக் கொன்றாள். அருணாசலை என்பவள் அக்கினிக்கண்ணனை கொன்றாள். சுந்தரி என்கிற சத்தி கயிடவனையும் புகக்கண்ணனையும் கொன்றாள். துர்க்கை மகிடாசூரனைப் பார்த்து சொல்வது.



துர்க்கை சிந்து

கண்டாள்சூரன் தன்னை நீலியவள்
கடுங்கோபங்கொண்டுமே அடும்புலிபோல்
கொண்டாள்கரத்தில்சூலம் தேவர்நடுங்க
கொக்கரித்து உக்ரமுடன் தானெழுந்து
விடுத்தாள்பாணந் தன்னை சரசரவென்று
வீறிட்டு சூரன்சேனை தான்மடிய தந்தினம்.

மகிடாசூரன் சிந்து

ஆரடிநீலியாளே எந்தன்படையை
அதரப்பதரவே தான்மடித்தா
பாரடியுந்தனையே விடுவதில்லையே
படைகளை மடிக்குறேன் நொடிக்குள்ளவே

வில்லை தக்கையில்எடுத்தேன் அக்கினிக்கணை
வில்லில்சரங்கொடி தான்தொடுத்தேன்
அல்லேகல்லேபட்டிடவே பூதகணங்கள்
அடித்தேனே சேனைகளை சின்னபின்னமாய் தந்தினம்.

துர்க்கை சிந்து

ஆலமுண்டோன்தேவிஎன்று அறிந்துமே
அக்கினிகணைகளை தாக்கஎறிந்தாய்
காலன்பதிசேர்க்குறேன்பார் உந்தனையே
கக்கியேஅக்கினி சுடர்மிக்கஎழும்ப
எரிமழுசூலம்எடுத்தேன் கபாலினீலி
ஈரேழுபுவனமும் தத்தளிக்கவே
கரகரவென்றுசுழன்று உந்தனிட
கணையேவும் வில்லேதான்முறித்தேன் தந்தினம்.

மகிடாசூரன் சிந்து

வில்லை தயொடித்தெறிந்தாய் துர்க்கையாளே
வல்லமையைபறிகிறேன் சற்றுநில்லடி
தொல்லேபுவனமெல்லாம்கிடுகிடென்ன நான்
தோன்றினேனே மதயானையாக
அரியயன் தானொளிப்பார் எந்தனைக்கண்டால்
ஆங்காரம்கொண்டநீலி யகப்பட்டாயே
சீறியேதானெழுந்து நீலியாளை
துரத்தினேனே வேகமாய் கலங்கிவாடவே தந்தினம்.

துர்க்கை சிந்து வேறு தரு

அண்டமுங்கிடுகிடென்ன எண்டிசையும்தத்தளிக்க
ஆளியைப்போலரூபம் எடுத்தேனே
கண்டவர்பயந்தொடுங்க கடுங்கோபம்கொண்டுமீதி
கர்ச்சித்துயானைமீது பாய்ந்தானே
கடித்துமேமண்டைதன்னை துடிக்கத்தம்குடித்து
காரிழைசந்தோஷம் கொண்டாளே தந்தினம்

மகிடாசூரன் சிந்து

அக்கினிப்பொறிஎழும்பி திக்குதிக்காய் தான்சிதற
அரக்கனும்அக்கினிரூபங் கொண்டானே
பக்கென்றுதான்எழும்பி கக்கியே அக்கினிதன்னை
படைகளைநொடிக்குள் மடித்தானே
பாதிமதியணிந்த ஆதிசிவனும்
பயங்கொள்ள அக்கினியை சொரிந்தானே.

துர்க்கை விருத்தம்

முப்புரம்எரித்தநாதா மொய்குழல்என்னசெய்வேன்
துப்புள்ளசூரன்தன்னை துடிக்கவேமடித்துப்போட்டேன்
கப்பியேபலரூபங்கள் கொண்டுமேவருகின்றானே
அப்புமாமதியணிந்த ஆண்டவாகார்த்திடாயே.

வசனம்

சம்போசங்கர மஹாதேவா! நான் என்னசெய்குவேன் அரக்கனை சிரசை அறுத்தெறிய மறுபடியும் பலரூபங்கொண்டு வருகின்றானே எப்படி மடிப்பேன் தெய்வமே.

அசரீ வாக்கு கவி

அரிவையேவிசனம்வேண்டாம் அரக்கனும்கறுமையான
எருமைக்கிடாமுகத்தோடு ஏகியேவருகும்போது
சிரசதையறுத்துத்தள்ளி சிகையதைமிதித்துக்கொல்வாய்
இறந்துமேபோவான்சூரன் ஏந்திழைவிசனம்வேண்டாம்.

வசனம்

ஆனால் கேளும் துர்க்கையே! சூரனானவன் எழுந்து எருமைக்கடா முகத்துடனே சண்டை செய்யும்போது அவன் சிரசை யறுத்து தள்ளிமிதித்து நின்றுகொண்டால் சூரன் இறந்து விடுவான் துர்க்கையே.

மகிடாசூரன் கந்தார்த்தம்

இந்தஓர்யுலகந்தன்னில் எந்தனைச்செயிப்பாரில்லை
அந்தமாய்எனைசெயிக்க அரிவைநீவந்ததாலே
உந்தனைவிடுவதில்லை ஓடியேஒளித்திட்டாலும்
கந்துகம்போல்வெகுண்டு,

தரு

கரத்தில்வில்லைவளைத்தேன் அநேகபாணம்
சரசரவென்றுதொடுத்தேன்
திறமையுள்ளதேவர் மூவர்கள்வந்தாலும்
சுருள் தேடவேநமன்பதி போடவேஅடிப்பேன்
திடமுள்ளபடைகளை நொடிக்குள்ளேமடிப்பேன் கா

துர்க்கை கந்தார்த்தம்

நல்லதுசூராயுந்தன் நியாயத்தைநிறுத்திவையும்
தொல்லுலகில்உன்னைக்கொல்ல தீரர்களில்லைஎன்று
துள்ளியேகுதிக்கவந்தாய் துர்க்கைநான்இருக்கும்போது
வல்லமைதன்னைப்பார்க்க,


தரு

வாளதைகையில்பிடித்தேன் உந்தன்சிரசை
வெட்டித்தள்ளியேமிதித்தேன்

வானுலகதேவர்கொண்ட வருத்தத்தைநீக்கினேன்
தானவாயுந்தனிட ஆவியைப்போக்கினேன் வா

பொது வசனம்

அகோதெப்படியென்றல துர்க்கை சூரன் சிரசையறுத்து கீழேதள்ளிமிதித்து சூரன் மார்பைக் கிழித்துப் பார்க்கும்போது லிங்கமிருக்க அதையெடுத்து பார்வதி கண்டு சொல்வது.



துர்க்கை கவி

அந்தமாய்தவமேசெய்யும் அரிவையேகேளாயம்மா
உந்தனிடபாதம்தன்னில் உத்தமிபோற்றிசெய்தேன்
விந்தையுள்ளசூரவீரன் மார்பைக்கிழித்துப்பார்த்தேன்
இந்தநோர்படிகலிங்கம் இருந்ததேகண்ணால்பாரும்.

வசனம்

ஆனல் கேளுமம்மா மகிடாசூரன் மார்பைக்கிழித்துப் பார்த்த போது இந்த லிங்கம் இருந்திட எடுத்துவந்தேன் கண்ணால் பாரும் உமையவளே.

பார்வதி கவி

தேவரைவதைத்திட்ட திடமுள்ளமகிடாசூரன்
ஆவியைவிட்டதாலே அரிவையும்சந்தோஷித்தேன்

பாவையாள்லிங்கம்தன்னை பற்றியேபிடித்தபோது
தாவியேபிடித்திட்டதே தவமுனிவிவரம்கூறும்.

வசனம்

ஆனால் கேளும் கௌதமரே! மகிடாசூரன் மார்பிலிருந்த லிங்கத்தை நான் தொட்டபோது கரத்தைப் பிடித்த காரணம் தெரிவிப்பீர் முனியே.

கௌதமர் சிந்து

சொல்லுவேன் கேளுமம்மா மகிடா
சூரனவன் இன்னாரென் றுந்தனுக்கே
நல்லதோர் வரமுனியே இவன்பெயர்
நாளுமேதவம்செய்து வருகும்போது
அகஸ்திய முனிவருமே அவரோடு
ஐம்பதுமுனிவர்கள் கூடியேபோனார்

அருந்தவ முனிவரைக்கண்டு வரமுனி
அடிபணியாமலவன் தானிருக்க
பெருஞ்சாபம் தான்கொடுத்தார் முனிவனுக்கு
பிறக்கமகிடாசூர னாகவென்றுமே

வரமுனி தான்பயந்து முனிவர்களை
வணங்கியேசாபமதை தீர்ப்பீரேஎன்றான்
எருமைமுக அசுரனாக நீபிறந்து
இருக்கின்றகாலத்தில் பார்வதியும்

இடபாகம் பெறவேதவம் செய்யும்போது
ஈஸ்வரியால்மடிவா யென்றுஉரைத்தார்
அந்தசாபம் தன்னைப்பெற்று வரமுனி
அவதரித்தான்மகிடா சூரனாகவே

விந்தையா யிருக்கும்போது பசியால்வாடி
வேட்டைக்குஅசுரனும் போகும்போது
திறமுள்ள மன்னவரிஷி லிங்கத்தைவைத்து
சிவசிவாஎன்றுதவம் செய்யும்போது

கண்டுமே சூரனவன் லிங்கத்தோடு
கடும்பசியால்விழுங்கினான் முனிவன்தன்னை
துஷ்டனிட மார்பினிலே லிங்கமது
செறிக்காமல்இதுநாளாய் இருந்ததுவே

சூரனைக்கொன்ற தினாலேயே பாவமது
சூழ்ந்துகொண்டதே இன்றுமுதலே
பாரினில் நவதீர்த்தம் ஸ்நானம்செய்தால்
பற்றியலிங்கம்விட்டு சாபந்தீருமே தந்தினம்.

பொதுவசனம்

அகோதெப்படியென்றால் கௌதமர் பார்வதிக்கு மகிடாசூரன் வரலாற்றைக்கூறி பாவந்துலைய ஒன்பது நவதீர்த்தம் ஆடவேண்டு மென்று சொல்ல, அசரீரிவாக்கு தீர்த்தம் இவ்விடத்தில் ஒன்பது தீர்த்தமும் வரும்படிசெய்யென்று சொல்ல, பார்வதி துர்க்கையைப் பார்த்து உன் கைவாளால் பூமியைபிளந்து ஜலம் கொண்டுவா என்று சொல்ல, துர்க்கை அவ்விதம்செய்ய ஒன்பது தீர்த்த முண்டாயிற்று. அதில் பார்வதி தீர்த்தமாடியபோது கையில் பிடித்திருந்த லிங்கம்விட்டது. அதன்பிறகு பார்வதி பரமனைக் கோரி பூசைசெய்து மலையைச்சுற்றி தோத்திரம் செய்கிறவிதங் காண்க.

பார்வதி விருத்தம்

சோதியேசுடரேபோற்றி சூழொளிவிளக்கேபோற்றி
பாதிமாமதியணிந்தாய்போற்றி பரப்பிரம்மசொரூபாபோற்றி
ஆதிமுக்கண்ணாபோற்றி அம்பலத்தரசேபோற்றி
வேதனரிகாணாய்போற்றி வஞ்சிக்கிடபாகம்தருவாய்போற்றி.

வசனம்

சம்போ சங்கர மகாதேவா திரிநேத்ரா மான்மழுசூலா கபாலா நான் செய்யும் தவத்திற்கிரங்கி இடபாகம்தருவாய் பரமக்கடவுளே.

பரமசிவன் கவி

செய்யாழிகரமேந்தும் சீதரன் தங்கையான
தையல்பார்வதியேயுந்தன் தவத்திற்குமெச்சிக்கொண்டேன்
பையவேதேவர் துயர் பாவைநீ தீர்த்ததாலே
மைவிழிமாதுனக்கு மகிழ்ந்திடபாகம்தந்தேன்.

வசனம்

ஆனால் கேளும் பார்வதியே! நீ பாசபந்தங்களைநீக்கி ஒரே மன உரிமையாய் இந்த மலையைச் சுற்றிவந்தபடியால் உன் தவத்திற்கு மனமிறங்கி இடபாகம் தந்தேன் பார்வதியே.

வாழி விருத்தம்

வார்சடைவிமலனுமை வானவர்முனிவர்வாழி
பார்படைத்தபிரமன் பரிவுள்ளவாணிவாழி
கார்படைத்தகோதண்ட கண்ணன்திருவும்வாழி
சீர்படைத்தமுருகன் தெய்வானைவள்ளிவாழி.

பார்வதி இடபாகம்பெற்ற மகிடாசூர சம்மார நாடகம்

முற்றிற்று.

---

சண்பகாதேவி பிரஸ், சென்னை—1.

ஸ்ரீ சண்பகாதேவி பதிப்பின்

# நாடக புத்தக விளம்பரம்

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் :— இதன் அடியிற்கண்ட புத்தகங்களும், இன்னும் அநேகவிதமான புத்தகங்களும், எமது சண்பகாதேவி விலாச அச்சுக்கூடத்தில் தகுந்த வித்வான்களைக்கொண்டு பிழையறச் சீர்திருத்தி அச்சிட்டு வருவதால் யாவரும் சண்பகாதேவி பதிப்பை கவனித்து வாங்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(ரிஜிஸ்டர் காபிரைட் செய்தது)

| | ரூ. | பை. |
|---|---|---|
| வள்ளி கலியாண நாடகம் | 1 | 00 |
| ஸ்ரீராமர் அஸ்வமேதயாகமென்னும் குசலவநாடகம் | 1 | 00 |
| தாருகாவனரிஷி சரித்திர நாடகம் | 1 | 00 |
| நரகாசுர சம்மார நாடகம் | 1 | 00 |
| சந்திரன் கர்வபங்கமென்னும் சந்திராம்பாள் நாடகம் | 1 | 00 |
| மணிமாலன் சண்டை நாடகம் | 1 | 00 |
| வீமன் அர்ச்சுனன் யுத்த நாடகம் | 1 | 00 |
| ஸ்ரீராம ஆஞ்சநேய யுத்த நாடகம் | 1 | 25 |
| சுபத்திராபரிணய நாடகம் (மாசிலாமணி கவிராயர்) | 1 | 50 |
| சிறுத்தொண்டபக்தன் நாடகம் | 1 | 50 |
| நல்லதங்காள் நாடகம் | 1 | 50 |
| இலட்சுமணதேவி மாலையிடு நாடகம் | 1 | 00 |
| அருந்ததி கலியாண நாடகம் | 1 | 00 |
| வல்லாள மகாராஜன் நாடகம் | 1 | 00 |
| பார்வதி இடபாகம்பெற்ற மகிடாசூர சம்மார நாடகம் | 1 | 00 |
| சகுந்தலை நாடகம் | 1 | 00 |
| சித்திரசேனன் சரித்திர நாடகம் | 1 | 00 |
| வாணாசூரன் சண்டை நாடகம் | 1 | 00 |
| புனந்திரன் தூதென்னும் சின்ன அர்ச்சுனன் சண்டை | 1 | 00 |
| கௌரி என்னும் காந்தாரி நோன்பு நாடகம் | 1 | 00 |
| துரியோதனன் கெர்வபங்கமென்னும் அர்ச்சுனன் சண்டை | 1 | 00 |
| சுந்தரராஜன் பாபவிமோசன கிருஷ்ணார்ச்சுனன் சண்டை | 1 | 00 |
| கெம்பீரனசூரன் வதை துரோபதைகல்லாய்சமைந்த நாடகம் | 1 | 00 |
| கடோர்கஜன் சண்டை என்னும் துரோபதை நாடகம் | 1 | 00 |

எமது விலாசம் :—

அமரம்பேடு. அண்ணாமலை முதலியார்

சண்பகாதேவி விலாச அச்சுக்கூடம்

5. அருணாசலமுதலி தெரு, சென்னை-1.